# சரபேந்திர வைத்திய முறைகள்

(விஷ ரோக சிகிச்சை)



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்


## சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 72

# சரபேந்திர வைத்திய முறைகள்

## (விஷ ரோக சிகிச்சை)

பதிப்பாசிரியர்:

**Dr. S. வெங்கட்டராஜன்,** L. I. M.,

முன்னாள் ஆயுர்வேத பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

2005] [விலை : ரூ. 90

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : விஷ ரோக சிகிச்சை |
| பதிப்பாசிரியர் | : Dr. S. வெங்கட்டராஜன், L. I. M., |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : 72 |
| மொழி | : தமிழ் |
| முன்பதிப்புகள் | : 1956, 1966, 1980, 1989 |
| பதிப்பு | : ஐந்தாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஜூன், 2005 |
| தாள் | : TNPL 18.6 kgs. |
| நூல் அளவு | : 24 x 14 c.m. |
| பக்கங்கள் | : 280 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. 90 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி மருத்துவ அறிஞர்கள் பலரை ஆதரித்து, அவர்கள் வழி நம் பாரம்பரிய வைத்திய முறைகளை எல்லாம் ஏட்டுச் சுவடிகளில் தொகுக்கச் செய்து நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படுமாறுசெய்தார். அவர் சேகரித்த பல நூற்றுக்கணக்கான வைத்திய சுவடிகள் வரிசையில் குறிப்பிடத்தக்கதாக விளங்குவது **விஷரோக சிகிச்சை** எனும் தொகுப்பாகும். இந்த அரிய சுவடி நூலை பாடல்கள் வடிவில் படைத்தவர் காருக்குறிச்சி அய்யாக்கண்ணுப்பிள்ளை மகனார் வேலாயுதக் கவிஞனார் என்பவர் ஆவார். அவர் 342 வகையான விஷரோக வைத்திய முறைகளை இந்நூலில் கூறியுள்ளார். ஏட்டுச்சுவடியாக இருந்த இந்த நூலினை மருத்துவர் எஸ். வெங்கட்டராஜன் அரிதின் முயன்று பதிப்பித்துள்ளார். மருத்துவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் பயன்படக்கூடிய இந்நூல் ஐந்தாம் பதிப்பாக மீண்டும் மலர்ந்துள்ளது.

இந்நூலினைப் பதிப்பிக்கத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு.இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீர சண்முக மணி**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
*19- 6 - 2005*

# INTRODUCTION

This is the 12th publication in the Sarahbendra Vaidya Muraigal series containing the tested recipes selected by Raja Serfoji for all kinds of posions, after actual administration to patients in Dhanvantari Mahal. Raja Serfoji had an extraordinary versatality and he was quite at home both in the Eastern and Western arts and sciences. Medicine was his favourite study and he has successfully synthesised the Eastern lore with the scientific methods of the West.

The present publication contains recipes for poisons of animal, vegetable and mineral origin. They are versified at the special command of Raja Serfoji. The versifier in this case in one Mr. Velayuda Kavignar, son of Ayyakkannu Pillai of Karukurichi and this work containing 342 recipes was finished by him in May 1828.

The recipes have been carefully edited with prose version by the Editor. Dr. S. Venkatarajan. who has already edited our previous publications in this series as well. The introduction which is the result of a careful study of Tamil. Sanskrit and English books on this subject, gives valuable information about the sources of poisons, their effect and their general treatment with easily available drugs. It is hoped that this publication will be found useful as the previous ones.

Our thanks are due to our learned Editor who has spared no pains in editing the book in a manner serviceable to the doctors and the lay public alike.

Our thanks are due to the Government Madras, for their timely grants that have helped us to publish this and other manuscripts of this library.

Sarasvati Mahal Library,
Thanjavur
30-11-56

**S. Gopalan,**
Honorary Secretary.

# முகவுரை

நமது வைத்ய சாஸ்திரத்தின் எண்வகைப் பிரிவுகளில் "அகத தந்திரம்" (விஷசித்ஸை) என்பது ஒன்றாகும். அம்ருதத்திற்காகப் பாற்கடலை கடையும் போது அம்ருதம் எழுமுன்னர் இவ்விஷமானது உண்டாயிற்று என்பது புராண வரலாறு.

**விஷ புருடனின் ஸ்வரூபம்**

"அதிக தேஜஸோடு கூடியவனும், 4 பற்களுடன், பச்சை நிறமான மயிருடன், சூடு பொருந்திய பார்வை யுடன் கூடியவனாகவும்,' இருந்தான். அவனைக் கண்டு மூன்று லோகங்களும் பயந்தன. ப்ரும்மாவின் "ஹுங்" காரத்தினால் விரட்டப்பட்டு அவன் உலகையடைந்தான் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

உலகில் இவ்விஷம் 'ஸ்தாவரம்,' 'ஜங்கமம்' என்று இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதனை யன்றி "க்ருத்ரிம விஷம்" என்றும் "அகிருத்ரிம விஷம்" என்றும் பேதங்களும் உண்டு. பற்பல ஸ்தாவர ஜங்கம விஷயங்களின் சேர்க்கையால் "கரம்" என்ற பெயரில் செய்யப்படும் விஷ பதார்த்தங்கள் உடலை நாளாவட்டத்தில் அழிக்கும் தன்மையையுடையன.

அவற்றுள் "தாவரம்", கிழங்குகள் வேர் வகைகள் முதலியவைகளை உண்பதாலும், "ஜங்கம விஷம்", பாம்பு, தேள், சிலந்தி, பூரான், மூஞ்சூறு, எலி முதலிய பிராணிகளால் கடிக்கப்பட்டாலும் வெவ்வேறு அளவில் உடலைப் பாதிக்கின்றன.

பழமையானதும், விஷத்தைப் பரிஹரிக்கும் சரக்குகளின் சேர்க்கையாலும், காட்டுத்தீ, புயல், காற்று, வெய்யில் இவைகளினால் பாதிக்கப்பட்டதும், ஸ்வபாவமாக வீர்யம் குறைந்ததாகவும் இருக்கும் ஸ்தாவர, ஜங்கம விஷங்களுக்குத் "தூஷீவிஷம்" என்று பெயர். இவ்வகை விஷம் உடனே மனிதரைக்

கொல்லாது, பலவருஷங்கள் உடலிலேயே தங்கி, பேதி, சோகை, தாகம், மூர்ச்சை, வாந்தி முதலியவைகளை ஏற்படுத்தும்.

ஸ்திரீகள் புருஷர்களைத் தங்கள் நன்மைக்காக வசப்படுத்தவும், விரோதிகளால் தூண்டப்பட்டு அரசர்களை வச்யப்படுத்தவும் செய்யப்படும் செயற்கை மருந்துகள் "கரவிஷம்" என்பதிலடங்கும். இதுவும் மேற்கூறிய தூஷீ விஷத்தின் தன்மையைப் பெற்றிருக்கின்றன.

**விஷத்தின் பொதுவான குணங்கள்**

தீக்ஷ்ணம், உஷ்ணம், வறட்சி, எளிதில் தேகத்தில் வியாபிக்கும் தன்மை (வ்யவாயம்), இலேசு, ரஸம் புலப்படாமை முதலிய குணங்களைப் பெற்றிருக்கும். ஓஜஸின் விபரீதமான குணங்களையும் உடையது. வாதத்தையும் பித்தத்தையும் அதிகரிக்கச்செய்து, பிராணனையும் போக்கும்.

**ஸ்தாவர விஷ நிதானம்**

முதல் வேகம்

நாக்கில் கருமை நிறம், நாக்கை அசைக்க முடியாமை, மூர்ச்சை, மனதில் பீதி, சரீர சிரமம், வாந்தி முதலியவை.

2-வது வேகம்

நடுக்கம், வியர்வை, எரிச்சல், கழுத்தில் வேதனை இருதயத்தில் வலி முதலான குறிகளினால் விஷம் இரைப்பையை அடைந்துவிட்டதாகத் தெரிந்துகொள்ளவும்.

3-வது வேகம்

வாயில் வறட்சி, வயிற்றுவலி, கண்களில் பச்சை நிறம், வீக்கம், மேல்மூச்சு, இருமல், இரைச்சல் முதலானவை உண்டாகும்.

4-வது வேகம்

தலைபாரம் ஏற்படும்.

5-வது வேகம்

வாயில் கபம் வெளிவரல், உடலில் நிறவேற்றுமை, மூட்டுகளில் வலி, திருசோஷ கோபம், அடிவயிற்றில் வலி, இவைகளுண்டாகும்.

6-வது வேகம்

ஸ்மரணை தப்பும், அதிகக் கழிச்சலுண்டாகும்.

7-வது வேகம்

தோள்பட்டை, பின்பாகம், தொண்டையிடுக்கு முதலான.

**விஷத்தில் தோய்த்த சஸ்திரத்தினால் தாக்கப்பட்டால்**

உடலில் வர்ண வேறுபாடு, சிறுபூச்சிகள் ஊறுவது போன்ற உணர்ச்சி, பின்பாகம், சிரஸ், கை, மூட்டுகள் இவைகளில் வேதனை, முதலிய குறிகள் உண்டாகும். மேலும் கருநிற இரத்தம் வடிதல், வறட்சை, மூர்ச்சை, ஜ்வரம் இவைகளுண்டாகும். வாந்தி, இருமல் இவைகளும் ஏற்படும். குத்தினதாலுண்டான வ்ரணத்தின் நடுபாகம் கருப்பாகவும், பக்கங்கள் சிவப்பாகவும், அதிக வலியுடனும் இருக்கும். வெகு எளிதில் மாம்ஸ தாதுக்களை அழிக்கும் தன்மையுடையது. தடிப்பான சீழும் வெளிவரும்.

**கரவிஷத்தை உட்கொண்டவனின் குறிகள் (மருந்தீடு)**

இதனால் சோகை, தேக இளைப்பு, பசியின்மை, இருமல், ஜ்வரம், வாதம் மேல் நோக்குதல், எப்போதும் தூக்கம் சிந்தனை முதலியவைகளோடு இருத்தல், மகோதரம் வயிற்றுக்கட்டி பலஹீனக்குரல், கழிச்சல், வீக்கம், வயிற்றுப்பொருமல், க்ஷயம், ஸ்வப்பனத்தில் உடும்பு, பூனை, கீரி, சிறுத்தை, குரங்கு, வரண்டகுளம் முதலியவைகளைக் காணல் உடம்புபாரம் முதலானவை உண்டாகும். பஞ்ச ஞானேந்திரியங்களும் சிறுகச் சிறுகப் பழுதடையும்.

**ஜங்கம விஷ நிதானம்**

உலகில் விஷந்தீண்டியது பாம்பு விஷமே உடனே ஞாபகத்திற்கு வரும். இவ்விஷ ஸர்ப்பங்கள் வெகு காலமாகவே நமது புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் திவ்ய சர்ப்பங்களை ஆராதனை செய்வதால் நாம் கோரிய நற்பயன்களைப் பெறுவதும் கண்கூடு. பூவுலகை ஆதிசேஷன் தன்னுடைய 1000 தலைகளாலும் தாங்கி வருகின்றான். ஸர்ப்பங்களுக்கு கண்களும் காதுகளும் ஒன்றேதான். ஆகையினாலேயே

இவைகளுக்குக் "கட்செவி" என்ற பெயர் வழங்குகிறது. திவ்ய ஸர்ப்பங்களுக்குத் தனியாகவே "நாகலோகம்" என்று இருக்கிறதென்றும் புராண வரலாறு. அம்ருதத்தைக் கடைந்தபின் அந்த அம்ருதத்தின் துளிகள் தர்ப்பையில் தெரித்திருக்கிறது. அதனை இந்த ஸர்ப்பங்கள் நக்க, அதனாலேயே நாக்கு பிளவுபட்டதாகவும் ஆயிற்று என்று புராணங்கள் வாயிலாகப் புலப்படுகின்றன. "பாம்பின்கால்" பாம்பு அறியும் என்றபடி பாம்பிற்குக் கால்கள் கிடையாது. அது தனது வயிறு பாகத்தினாலேயே ஊர்ந்து செல்கிறது. நல்ல பாம்பு (நாகப்பாம்பு) வகைகளுக்கே படம் உண்டு. சாரை வழலை, இவற்றிற்குப் படம் கிடையாது. ஆதியில் காச்யபர் பத்னி கர்த்ருவிடமிருந்து ஜனித்தவை இந்த ஸர்ப்ப வகைகள்.

இம்மாதிரி ஸர்ப்பங்கள் மூன்று வகைப்படும்.
1) தர்வீகம் 2) மண்டலீ 3) ராஜீமந்தம்

1. தர்வீகரம்

ரதம், குடை, அங்குசம் இவைகள் படத்தில் இருக்கும். சீக்கிரமான நடையுடையது. இதன் விஷம் உஷ்ணத்துடன் புளிக்கும். இதன் விஷத்திற்கும் வேகங்கள் 7 வகைப்படும்.

1. கடித்த இடம் கருமை நிறமாகி, இரத்தம் வெளியாகும். முகம், கண்கள் இவைகளையும் கருநிறமாக்கும். பூச்சி ஊறுதல் போன்ற உணர்ச்சி உண்டாகும்.

2. உடம்பில் கிரந்திகளுண்டாகும்.

3. தலையில் பாரமேற்படும்.

4. கடித்த இடத்திலிருந்து நாற்றம், வாந்தி இவைகள் உண்டாகும்.

5. மூட்டுகள் நழுவுதல் போன்ற உணர்ச்சி, சோம்பல் மூட்டுவலி இவைகள் ஏற்படும்.

6. மூர்ச்சை, கழிச்சல் முதலிய குறிகளுண்டாகி விஷம் சுக்ர தாதுவை அடைகிறது. மூட்டுகள், பின்பாகம் இடுப்பு முதலியவைகள் வீழ்ந்து உடம்பு போட்டபடியே ஆகும்.

தருண வயதிலும், மழைக் காலத்திலும் இந்தவகைப் பாம்புகளுக்கு விஷம் அதிகமிருக்கும். இதுவே "நல்ல பாம்பின்" வகையாகும்.

2. மண்டலி

மந்த நடையுடன், சிரஸிலும் உடம்பிலும் கருநிறமுள்ள புள்ளிகள் இருக்கும். இதன் விஷம் மஞ்சள் நிறத்துடன் காரமாக இருக்கும். இதன் விஷவேகங்கள் வருமாறு :-

1. கடித்தவன் தேகத்திலுள்ள ரத்தம் மஞ்சள் நிறமாகிறது. உடம்பும் மஞ்சணித்துப்போம். எரிச்சலும் உண்டாகும்.

2. உடம்பு வீக்கம் ஏற்படும்.

3. உடலில் அழற்சி, வியர்வை, நாவறட்சி முதலானவை யுண்டாகும்.

4. ஜ்வரம் அதிகரிக்கும்.

5. உடம்பில் எரிச்சல் அதிகமாயிருக்கும்.

இது வழலை, சாரை இனத்தைச் சேர்ந்தவைகளாகும். குளிர்காலத்தில் விஷத்தின் வேகம் அதிகரிக்கும்.

3. ராஜீமந்தம்

மெதுவான நடையுடன், உடம்பு, சிரஸ் முதலான இடங்களில் மினுமினுப்புடன், பற்பல நிறங்களைப் பெற்றிருக்கும். விஷம் குளிர்ச்சியுடன் தித்திப்பாய் இருக்கும். இது கடித்தால் கீழ்கண்ட குறிகள் காணும்.

1. இரத்தம் வெளுப்பாகி உடம்பும் வெளுக்கும்.

2. உடம்பில் பார உணர்ச்சி உண்டாகும்.

3. கடித்த இடத்தில் அழற்சியேற்படும். மூக்கு, கண், வாய் முதலான இடத்திலிருந்து நீர் வடியும்.

4. தலைபாரமேற்படும்.

5. பிடரி ஸ்தம்பித்துப்போய் கழுத்தைத் திருப்ப முடியாமல்போம்.

இதன் விஷ வேகம் வெயில் காலத்தில் அதிகரிக்கும். பாம்புகளின் கிழப்பருவத்திலும் விஷம் மிகுதியாகக் காணப்படும்.

4. கால்களுடன் கூடிய "கௌதேரம்" (உடும்பிலிருந்து பிறப்பது) என்ற வகைப்பாம்பின் விஷம் தர்வீகர ஸர்ப வகைகளின் விஷ வேகங்களை ஒத்தது.

பொதுவாக ஸர்ப விஷம் ரத்தம் முதலான தாதுக்களைக் கெடுத்து விருத்தியாவதில்லை. இந்த விஷம் கடித்த இடத்தில் 100 மாத்திரை நின்று உடனே தேகத்தில் அனுப்பிரமாணம் சென்றாலும், நீரில் எண்ணெய் போல் தேகம் முழுவதும் வியாபிக்கின்றது.

### பாம்புக் கடிக்கக் காரணம்

1. ஆஹாரத்திற்காக
2. பயத்தினால்
3. மிதிபடுவதால்
4. அதிக விஷத்தால்
5. கோபத்தால்
6. பாபச் செயலைப் புரிவதால்
7. பகையால்

8. தேவர், ரிஷி, யமன் இவர்களின் தூண்டுதல் முதலிய காரணங்களால் நல்ல ஜாதிப் பாம்புகள் மனிதனைக் கடிக்கின்றது. இவைகளுள் ஒன்றைவிட ஒன்றிற்கு விஷம் அதிகமாக இருக்கும். வ்யந்தர ஸர்ப்பங்களோவெனில் கடிப்பதற்கென்றே வழியில் படுத்திருந்து கடிக்கிறது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

### விஷப்பரீக்ஷை

பாம்பு கடித்தவுடன், கசப்பு வஸ்த்துக்களைத் தின்றால் அச்சுவை மாறுபடும். விரல், நகம், தலைமயிர் முதலியவைகளைப் பிடித்திழுத்தால் வலி தெரியாது. காதை அடைத்துக்கொண்டு கேட்டால் "அந்தர் தொனி" இராது. சூரியன், அக்கினி, சந்திரன் முதலியவை புலப்படாமல் இருண்டுபோம்.

### பாம்புக்கடியிலுள்ள பேதங்கள்

துண்டாஹதம்:- பாம்பின் எச்சில் மாத்திரம் பட்டுப் பதியாமலிருத்தல்.

வ்யாவீடம்:- ஒரு பல்லோ அல்லது 2 பற்களோ பட்டு இரத்தம் வராது.

வ்யாலுப்தம்:- 2 பற்கள் பட்டு இரத்தம் வெளிவரும்.

தம்ஷ்ட்ரகம்:- 3 பற்களும் பதிந்து மாம்ஸத்துடன் இரத்தக்குழாய்களும் வெளிவந்திருக்கும்.

தஷ்டநபீடிதம்:- 4 பற்களும் பட்டு முன்போல இருத்தல்.

இதையன்றி பாம்பு கடிக்காமல், அது உடலில் பட்ட மாத்திரத்திலேயே சிலர் மிகவும் பயந்து விடுகின்றனர். அதனால் அவனது தேகத்தில் வாயு பிரகோபமடைந்து வீக்கத்தை உண்டாக்குகிறது. இதற்கு "ஸர்ப்பாங்காபிஹிதம்" எனப்பெயர்.

சங்கா விஷம்:- இருட்டு வேளையில் வேறு ஜந்துக்களால் தீண்டப்பட்டு விவேகம் அதிகமாகி ஜ்வரம், வாந்தி, மூர்ச்சை, எரிச்சல், பலஹீனம், மயக்கம், கழிச்சல் முதலானவை ஏற்படும். இதற்குச் "சங்கா விஷம்" எனப்பெயர்.

**விஷகடிக்கும் விஷமற்ற கடிகளும் உள்ள பேதங்கள்**

கடித்த இடத்தில் குத்துவலி, அரிப்பு, வீக்கம்,வலி, எரிச்சல், அழற்சி முதலானவை உண்டானால் அது விஷ குணமுள்ள கடியாம். மேற்கூறிய குறிகள் இல்லை எனில் விஷம் இல்லை என்றறியவும்.

**பாம்பிற்கு அல்ப விஷமுள்ள நிலைமைகள்**

1) தண்ணீரில் மூழ்கியிருந்த ஸர்ப்பங்கள், 2) சம்போகத்தினால் க்ஷீணமடைந்தவை, 3) பயந்த சுபாவமுள்ளவை, 4) கீரியுடன் சண்டை செய்தவை 5) குளிர்காற்று, வெயில் வியாதி, பசி, தாகம், சிரமம் இவைகளால் பீடிக்கப்பட்டவை. 6) ஒரு இடத்திலிருந்து புதிதாக வேறொரு இடத்திற்குச் சென்றவை. 7) சட்டை யுரித்தவை. 8) தர்பை, ஔஷதி இவைகளுள்ள காடுகளில் சஞ்சரிப்பவை முதலான காரணங்களால் ஸர்ப்பங் களுக்கு "விஷவீர்யம்" குறைவடைகின்றன.

**கஷ்ட ஸாத்யமான நிலைமைகள்**

சுடுகாடு, மடம் முதலான இடங்களில் வசிக்கும் ஸர்ப்பங்களுக்கு விஷ வேகம் அதிகம், பஞ்சமி, அஷ்டமி, நவமி, ஸந்தியா காலங்கள், நடுராத்திரி, பரணி, மகம், திருவாதிரை, விசாகம், புனர்பூசம், பூசம் முதலான திதி, நக்ஷத்திர வேளைகளில் விஷம் தீண்டினால் அவன் பிழைக்கமாட்டான்.

விஷக்கடியுண்டவனை எரியும் வீட்டில் இருப்பவனை எவ்வளவு சீக்கிரம் வெளியேற்றுகிறோமோ அதேபோல் அவ்வளவு சீக்கிரமாகக் காப்பாற்ற வேண்டும்.

நிற்க, சர்ப்பாரூடம், சித்ராரூடம் முதலான நூல்களில் காணப்படும் விபரங்கள்.

பிரும்மா செய்த வேள்வியிலிருந்து உதித்தவர்கள் 9 வகைப்பட்ட ஸர்பராஜாக்கள். இவர்களுக்குத் திவ்ய ஸர்பங்கள் என்றும் வேறு பெயர்களுண்டு. இவர்களை வழிபட்டால் நமக்கு வேண்டிய இஷ்டங்களைப் பூர்த்தி செய்விக்க வல்லவர்கள்.

1. ஆதிசேஷன் - 1000 தலையும் படமுமாக இருந்து பூமியைத் தாங்குகின்றது.

2. அனந்தன் - பிராமணர்
3. குளிகன் - பிராமணர்
4. வாசுகி - க்ஷத்திரியர்
5. சங்கபாலன் - க்ஷத்திரியர்
6. தக்ஷன் - வைசியன்
7. மகாபத்மன் - வைசியன்
8. கார்க்கோடகன் - உழவன்
9. பத்மன் - உழவன்

வாசுகி:- உடம்பெங்கும் கருங்குவளை நிறமுள்ள புள்ளிகளுடன் கிழக்கு திக்கில் வாசமாக இருக்கும். திங்கட்கிழமைதான் இரை சாப்பிடும்.

அனந்தன்:- வெண்தாமரை நிறமுள்ள புள்ளிகளைத் தாங்கி தென்கிழக்கு திக்கில் வசிக்கும். ஞாயிற்றுக்கிழமை இரை எடுக்கும்.

தக்ஷன்:- துவஜம் (கொடி) வடிவான புள்ளிகளுடன் தோத்திரத்திற்கு வசப்பட்டுத் தெற்கு திக்கை இருப்பிடமாகக் கொண்டது. செவ்வாயன்றுதான் ஆகாரம் எடுக்கும்.

சங்கபாலன்:- திரிசூலம், பிறை இவைகளையொத்த புள்ளிகளை உடலெங்கும் பெற்று தென்மேற்கில் நிற்கும். சனிக்கிழமை பகல் நேரத்தில் இரையெடுக்கும்.

குளிகன் :- சங்குகள் போன்ற புள்ளிகளைப் பெற்று மேற்கு திக்கில் வசிக்கும். சனிக்கிழமை இரவில் இரை எடுக்கும்.

பதுமன்:- படத்திலும் முதுகிலும் பஞ்சகோணப் புள்ளிகளுடன் வடமேற்கில் இருக்கும். வியாழக்கிழமையன்று இரை தின்னும்.

மகாபதுமன்:- படத்திலும் முதுகிலும் ராஜவர்த்திக் கற்களையொத்த புள்ளிகளைப் பெற்று வடக்கு திக்கிற்கு அதிபதியாக இருக்கும். வெள்ளிக்கிழமை இரை எடுக்கும் நாளாகும்.

கார்க்கோடகன்:- முதுகிலும் படத்திலும், மூன்று கண்களைப் போன்ற புள்ளிகளுடன் வடகிழக்கு திக்கில் இருந்துவரும். புதன்கிழமை இரை தின்னும்.

**ஸர்ப்ப உற்பத்தி**

ஸர்ப்பங்களுக்கு ஆனி மாதத்தில் சூலுண்டாகி ஆடியில் அவைகள் ஒன்று சேர்ந்து 5 மாதங்கள் (புரட்டாசி முதல் கார்த்திகை) சென்றபின் ஒரு பாம்பு 248 முட்டைகளை இடும். அவைகளை 7 நாட்கள் அடைகாக்கும். அப்போது அப்பாம்பிற்கு அதிகமான பசி உண்டாவதால் 228 முட்டைகளைத் தின்றுவிடும். 4 முட்டைகள் காற்று, வெயில் முதலியவைகளினால்

அழியும். ஆக 16 முட்டைகளும் 21 நாட்களில் பொரித்துக் குட்டிகளாகும். வாகைப்பூ (சிறுமஞ்சள்) நிறமுள்ள முட்டைகள் பெண் முட்டைகளாகும். எருக்கம்பூ நிற முட்டைகள் ஆண் முட்டைகளாகும். சிறு குட்டிகளுக்கு மயிர் இழைபோல் 24 கால்களிருக்கும். 24 நாட்கள் சென்றபின்னர் அவை சூரியனை நோக்கி ஆடும். இவ்வாறு 7 நாட்கள் ஆட விஷம் ஜனிக்கும். 60 நாட்கள் சென்றபின் இவை முதன் முறையாகத் தோலுரிக்கும். 6 மாதங்களான பின் கண்களும் கேட்கவாரம்பிக்கும். அப்போதுதான் பாம்பிற்குக் "கட்செவி" என்ற பெயர் பொருந்தும். பொதுவாக ஸர்ப்பங்களுக்கு வயது 120.

**ஸர்ப்பங்களுக்கு எதிரிகள்**

செந்நாய், மழை, காகம், மயிர், கூகை, குரங்கு ஆந்தை, பருந்து, பன்றி, கீரி, செய்போத்து, மூஞ்சூறு, மான், மின்னல், இடி முதலானவைகள் சத்துருக்களாம். மனிதர்களும் சத்துருக்களாவர்.

**விஷத்தின் இருப்பிடம்**

பாம்புகளின் சரீரத்தில் விஷம் பூராவும் பரந்து நிற்கும். உண்ணும் பால் சுரப்பது போலவும், சுக்கிலம் ஊறுவது போலவும் இருந்து படம் விரித்தாடும்போது கடைக்கண் பக்கங்களிலும், கடிக்கும் தருவாயில் விஷப்பற்களின் அடியிலும் தங்கும். கடிவாயில் 98 மாத்திரை காலம் நிற்கும்.

**ஸர்ப்பங்களின் ஜாதிகள்**

பிரும்ம ஸர்ப்பம்:- உடலின்மேல் வெளுப்பு, சிகப்பு கறுப்பு என்னும் நிறங்களையும், படத்தில் சங்கு வடிவான புள்ளிகளையும் பெற்றிருக்கும்.

நாபி, தாமரைப்பூ, வெட்டிவேர், குங்கிலியம் இவைகளின் வாசனையைப் பெற்றிருக்கும். அநேகமாக ஆலயங்களில் தங்கும். படம் எடுத்து ஆகாயத்தைப் பார்த்து ஆடும். காற்றையும், பூமணத்தையும், புற்றாஞ் சோறையும் புசிக்கும். சனிக்கிழமையிலும் ஞாயிற்றுக்

கிழமையிலும் உதய முதல் 10 நாழிகை வெளியில் திரியும். வலப்புறத்திலேயே கடிக்கும். வாதம் அதிகரிக்கும்.

க்ஷத்திரிய ஸர்ப்பம்:- பேரீச்சம்பழ நிறம், திராக்ஷைப்பழம், நாகப்பழம் முதலான நிறங்களையும் படத்தில் சங்கு, சக்கரம், கலப்பை முதலான வடிவங்களுள்ள புள்ளிகளையும் பெற்றிருக்கும்.

சாதிப்பூ, சண்பகம், தாழம்பூ, புன்னைப்பூ முதலான பூக்களின் மணங்களைப் பெற்று, மரப் பொந்துகளில் வசித்து வரும். படம் எடுத்து ஆடும்போது சமபார்வையுடன் ஆடும். அருகங்கிழங்கு, வண்டுகள், எலி, முதலியவவைகளைத் தின்னும். சனி, திங்களில் பகல் 10 நாழி முதல் 20 நாழிகை வரை வெளியில் சஞ்சரிக்கும். அநேகமாக இடப்புறத்திலும் சில சமயங்களில் வலது புறத்திலும் கடிக்கும். பித்தம் அதிகரிக்கும்.

வைசிய ஸர்ப்பம் :- ஸர்ப்பங்களின் உடலின் மேல் புறம் வைரம், கோமேதகம், புறா இவைகளின் சாயலையும் உடம்பில் சிவப்பு, வெளுப்பு, மஞ்சள், புகை முதலியவைகள் சேர்ந்த விருத்தாகாரம், வில்லுருவம் முதலான புள்ளிகளையும் பெற்றிருக்கும். இது மனைகளில் வாசம் செய்யும்.

பாதிரி, பால், நெய், வெள்ளாடு, செம்மறியாடு முதலியவைகளின் மனத்தைப் பெற்றிருக்கும். படம் எடுத்து ஆடும்போது நான்கு திசைகளிலும் பார்க்கும். ஓந்தி, எலி, தவளை இவைகளைத் தின்னும். வெள்ளி, செவ்வாய் முதலான தினங்களில் பகல் 20 நாழிகை முதல் 30 நாழிகை வரை வெளியில் திரியும். இடது கைப்புறம் பின்புறம் இவைகளில் கடிக்கும்.

சூத்திர ஸர்ப்பம்:- உடல் கரி, கோதுமை நிறங் களையும், உடம்பெல்லாம் குளம்புகளையொத்த நீண்டபுள்ளிகளையும் பெற்றிருக்கும்.

இலுப்பைப்பூ, ரத்தம், காட்டெருமை இவற்றின் மணத்துடன் புற்றில் வாசம் செய்யும். படமெடுத்து

ஆடும்போது பூமியை நோக்கி ஆடும். தவளை, மீன் இவைகளைச் சாப்பிடும். சனிக்கிழமை வியாழக் கிழமைகளில் எலியை இரைகொள்ளும். வைசிய சர்ப்பத்தைப் போலக் கடிக்கும்.

**ஸர்ப்பங்களில் ஆண், பெண் அறிய**

இருபுறங்களிலும் சம அகல படத்துடன், சீறல் அதிகம் இருக்கும். மேல்நோக்கிய பார்வையிருக்கும். அது ஆணாகும்.

பெண் ஸர்ப்பத்தின் படத்தில் ஒரு பாகம் குறைந்திருக்கும். அற்பமாகச் சீறும்.

**விஷப்பற்களின் கடி லக்ஷணம்**

காளி:- என்னும் ஒரு பல் பட்டால் புள்ளடிபோல் காயமுண்டாகிப் பனிநீர்போல் சலம் வடியும். விஷம் தோலில் வியாபிக்கும். இது "கால்கடி"யாகும்.

காளாஸ்திரி :- முக்கோணம்போல் காயமேற்படும். மஞ்சள் நிற ஜலம் வடியும். விஷம் மாமிச தாதுவைப் பற்றிவிட்டது என்று அறியவும். இது "அரைக்கடி" யாகும்.

யமன் :- மூன்றாவது பல்லான இதுபட்டால், அங்கு தொட்டிபோல் காயம் ஏற்பட்டுச் செந்நீர் வடியும். விஷம் எலும்பையடைந்துவிட்டது என்று அறிந்து கொள்ளவும். இது "முக்கால் கடி"யாகும்.

யமதூதன்:- வில்லைப் போன்றும், பிறையைப் போன்றும், காயம் உண்டாகும். கழுநீரையொத்த சலம் வடியும். விஷம் மூளைக்கு ஏறும். இது "முழுக்கடியாகும்."

**விஷப்பரீக்ஷை**

கடித்தவுடன் கசப்புச் சுவையுள்ள வஸ்துக்களைத் தின்றால் அச்சுவை மாறுபடும். விரல், நகம், தலைமயிர் இவைகளை இழுத்தால் வலி தெரியாது. சூரியன், சந்திரன், அக்கினி இவைகளின் பிரகாசம் தோன்றாது.

**பாம்பு கடிக்கக் காரணம்**

பசியினால் பயத்தால் நொந்தால் பல்விட மிகுந்தால் கோப
விசையினால் வினையால் முன்னைப்
பகையினால் விண்ணோர்மற்று
மிசையுடன் முனிவர் கால னேவலா லீரைந்தென்ன
வசையுடையரவந் தீண்டுநஞ் சொன்றுக் கொன்றதிகந்தானே.
அகஸ்தியர் ஸர்ப்ப ஆரூடம் (37)

செய்நன்றி குன்றினாரை செம்மமுற் பகையினாரை
மெய்நின்ற பசியிறாலு வேட்கையால் விஷமிருந்தோர்
கையுரை மிதித்தால் சேரும் கருத்துறைவிடத்தும் மத்தும்
நையவே நமனோரேவல் கடித்ததென்றிதனை நாடே. (38)

பசியினாலும், பயத்தினாலும், மிதிபடுவதினாலும், பற்களில் விஷம் மிகுந்தாலும், கோபத்தின் வேகத்தாலும், பூர்வ வினையினாலும், பகையினாலும், தேவர், ரிஷி, யமன் இவர்களின் ஏவலினாலும், பாம்பு ஜனங்களைக் கடிக்கிறது.

செய்த நன்றியை மறந்தவர்களையும், ஏற்கனவே யுள்ள பகையினாலும், அதிகமான பசியினாலும், விஷம் பற்களில் அதிகரித்து நின்றாலும், காலினால் மிதிபட்டாலும், யமனால் தூண்டப்பட்டாலும் பாம்பு கடிக்குமென்று அறியவும்.

**மரண லக்ஷணம்**

கங்கைக்கரை, மலைப்பொந்து, தேவாலயம், சுடுகாடு, நந்தவனம் இவைகளில் சஞ்சரிக்கும் பாம்புகள் கடித்தால் மரணமுண்டாகும். விஷகலையில் கடித்தாலும் மீளாது.

**அம்ருதகலை**

பெருவிரல், புரவடி, கெண்டை, முழங்கால், துடை, குறி, தொப்புள், விலா, கையடி, கழுத்து, பல், அதரம் கண், நெற்றி, உச்சி ஆக இவ்விடங்களில் பூர்வ பக்ஷ பிரதமை திதி முதல் 15 நாட்கள் புருஷர்களுக்கு வலப்புறம் ஏறும். அமர பக்ஷத்தில் உச்சியில் தொடங்கி இட பாரிசத்தில் பெருவிரல் வரை இறங்கும். அம்ருதகலை இருக்கும் எட்டாமிடத்தில் விடகலை ஏறி முன்போல இறங்கும்.

## இன்னின்ன தினங்களில் கடிக்கும் பாம்புகளின் பேதமும், விஷம் இருக்கும் இடமும்.

| | |
|---|---|
| சனி இரவு 30 நாழியும்<br>ஞாயிறு 30 நாழியும் | அனந்தன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் காலில் நிற்கும் |
| ஞாயிறு இரவு 30 நாழி<br>திங்கள் 60 நாழி | வாசுகி ஏவலால் கடிக்கும்<br>விஷம் முழங்காலில் தங்கும் |
| செவ்வாய் 50 நாழிகை | தக்ஷன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் நாக்கிலிருக்கும் |
| செவ்வாய் இரவு 10 நாழி<br>புதன் பகல் 30 நாழி | கார்க்கோடகன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் நெஞ்சிலிருக்கும் |
| புதன் இரவு 30 நாழி<br>வியாழன் 50 நாழி | பற்பன் ஏவலால் தீண்டும்<br>விஷம் கண்டத்தில் நிற்கும் |
| வியாழன் விடிய 10 நாழி<br>வெள்ளி 60 நாழி | மகாபற்பன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் முகத்தில் தங்கும் |
| சனி 15 நாழிகைக்குள் | சங்கபாலன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் நெற்றியிலிருக்கும் |
| சனி பகல் 15 நாழிகைக்கு<br>மேல் 30 நாழிகை வரை | குளிகன் ஏவலால் கடிக்கும்<br>விஷம் உச்சியிலிருக்கும் |

இதனை நன்றாக அறிந்து வைத்யம் செய்தால் விஷம் அக்கினியிலிட்ட துரும்புபோல் பறக்கும். இதையே உபதேசமாகவும் கொள்ளவும்.

## நல்ல பாம்பு கடித்தால் அதிலிருந்து உண்டாகும் வேகங்கள்

முதல் வேகம் - உடம்பு வியர்க்கும்
2 ,, - உடம்பு வெதும்பு
3 ,, - உடம்பு சோர்ந்து விழும்
4 ,, - எதிரெடுக்கும்
5 ,, - செயலைக்கட்டும்

| | |
|---|---|
| 6 வேகம் | - அறிவு தடுமாறும் |
| 7 ,, | - உடல் விறைக்கும் |
| 8 ,, | - பல் கிட்டும் |
| 9 ,, | - உள்ளொடுங்கும் |
| 10 ,, | - பட்டு விழுதல் |

தூதன் தொடுகுறி :

| | |
|---|---|
| முகத்தைத் தொட்டால் | - நல்ல பாம்பு |
| மூக்கை ,, | - மூக்கம்பாம்பு |
| கழுத்து ,, | - கண்டங்கருவழலை |
| வயிறு ,, | - மண்டலி |
| முதுகு ,, | - வீரியன் |
| கை ,, | - காட்டார் |
| முழங்கால் ,, | - நட்டுவாய்க்காலி |
| கால்விரலைத் தொட்டால் | - தேள் |
| கைவிரலைத்தொட்டால் | - செய்யான் |

ஸர்ப்பங்களில் இருக்கும் தேவதைகளின் விபரம்

| | |
|---|---|
| பிராமண ஸர்ப்பங்களுக்கு | - அக்கினி |
| க்ஷத்திரிய ,, | - இந்திரன் |
| வைச்ய ,, | - வாயு |
| சூத்ர ,, | - பிரும்மா |
| காளி பல்லில் ,, | - பிரும்மா |
| காளாத்திரியில் ,, | - விஷ்ணு |
| யமன் ,, | - ஈசன் |
| யமதூதன் ,, | - யமன் |
| இடக்கண் ஸர்ப்பங்களுக்கு | - இந்திரன் |
| வலக்கண் ,, | - பிரமரீ |
| நாக்கில் ,, | - கணேசன் |
| இடச்செவி ,, | - பிராமணி |
| வலச்செவி ,, | - வைரவி |
| கடிக்கும் தறுவாயில் | - யோகினி |
| கடித்தபின்னர் | - பைரவன் |

பாம்புக்கடியில் சாத்யாசாத்யம்

ஒரு பல் பட்டால் மந்திரத்திற்கு மீளும்
2 பற்கள் பட்டால் தியானத்திற்கு மீளும்
3 பற்கள் பட்டால் ஔஷதத்தால் மீளும்
4 பற்கள் பட்டால் தியானம், மந்திரம், மருந்துகள் ஆக இம்மூன்றும் தேவைப்படும்.

கடிவாய்க்குறி

| | |
|---|---|
| வழலைப்பாம்பு | - கடித்தால் விறுவிறு என்று கடிவாய் வழுவழுக்கும் |
| வீரியன்கடி | - குருதியுடன் நிணம் பொசியும் |
| காற்றடியன்கடி | - கடிவாய் அழற்சியுறும் |
| சிறுசெய்யான்கடி | - கடிவாய் அழற்சியுறும் |
| அரா | - மஞ்சள் நீர் பொசியும் |
| மண்டலி | - மயிர்க்கால்தோறும் குருதி வரும் |
| பெருஞ்செய்யான் | - விறுவிறுத்துச் சுடும் |
| பெருஞ்சிலந்திக்கு | -விறுவிறுத்து எரித்து ஏறும் |
| தேள்கடி | -கடுத்து ஏறும் |
| நண்டுவாய்க்கலி | - விஷம் தினவுடன் கரகரக்கும் |

தேள் விஷ நிதானம்

இதன் விஷம் அதிக தீக்ஷ்ணமாகும். கொட்டின இடத்தில் நெருப்புச்சுட்டது போலிருக்கும். விஷம் மேலே ஏறுந்தன்மையுடையது. பின்னர்க் கொட்டின இடத்தில் நிற்கும். கொட்டுவாயில் அதிகமான கடுப்பு உண்டாகும்.

## விளக்க அட்டவணை

பாம்புக்கடியின் லக்ஷணம்:-

| விஷப்பல் | கடித் தலம் | கடி விபரம் | விஷநீர் | விஷம் ஏறும் விதம் | சிகிச்சை விபரம் |
|---|---|---|---|---|---|
| காளி | புள்ளடி போல் | $\frac{1}{4}$ கடி | பனி நீர் போலும் | தோலில் ஏறும் | மந்திரம் |
| காளாஸ்திரி | முக் கோணம் | $\frac{1}{2}$ கடி | மஞ்சள் நீர் பொசியும் | மாம்சத்தை பற்றியது | தியானம் |
| யமன் | துறட்டி போல் | $\frac{3}{4}$ கடி | செந்நீர் பொசியும் | எலும்பைப் பற்றியது | மருந்து |
| யமதூதன் | வில் | முழுக் கடி | கருநீர் பொசியும் | மூளையைப் பற்றியது | மூன்றும் |

ஸர்ப்பங்களின்பேதங்கள்

| திவ்விய ஸர்ப்பங்கள் | இரையெடுக்கப் போகும் நேரம் | ஜாதிகள் |
|---|---|---|
| 1. அனந்தன் | ஞாயிறு | பிராமணன் |
| 2. வாசுகி | திங்கள் | க்ஷத்திரியன் |
| 3. தக்கன் | செவ்வாய் | வைசியன் |
| 4. காற்கோடகன் | புதன் | உழவன் |
| 5. பற்பன் | வியாழன் | உழவன் |
| 6. மகாபற்பன் | வெள்ளி | வைசியன் |
| 7. சங்கபாலன் | சனி (பகல்) | க்ஷத்திரியன் |
| 8. குளிகன் | சனி (இரவு) | பிராமணன் |

## விளக்க அட்டவணை

ஸர்ப்ப வகைகளின் அடையாளங்கள்:-

| ஜாதிகள் | ஆகாரம் | இருப்பிடம் | நிறம் | படத்தில் குறி | ஆயுள் | வாசனை | படம் ஆடுகையில் குறி |
|---|---|---|---|---|---|---|---|
| பிராமணன் | பூ புற்றாஞ்சோறு | கோவில் | சிகப்பு | சங்கு | 100-ஆண்டு | புனுகு | அண்ணாந்து ஆடும் |
| க்ஷத்திரியன் | அறுகு, வண்டு | மரப் பொந்து | பொன் நிறம் | சக்கரம் | 500-ஆண்டு | பாதிரிப்பூ | சமபார்வை |
| வைசியன் | எலி, மூஞ்சூறு | வீடு | பச்சை | வில் | 500-ஆண்டு | தாழம்பூ | இரு திக்குகள் |
| உழவன் | தவளை, மீன் | புற்று | கறுப்பு | புள்ளடி | 300-ஆண்டு | இலுப்பைப்பூ | பூமியைப் பார்த்து ஆடும் |

### சரபேந்திரர் வைத்திய முறைகள்

# விஷ ரோக சிகிச்சை

#### 1. சகல விஷங்களுக்கும் வேர்

ஆதித்த வாரமதிற் கூவிளக்கி
 பான்பாக மஞ்சள்காப் பதுவுங் கட்டி
.........ராமல் பச்சையரிசிப்பொங்கல்
 நெய்வேத்திய முந்தூப தீபஞ்செய்து
.........தியானித் தேவடக்கு
 யதிற்போற வேரதையும் வெட்டிக்கொண்டு
.........தவராம லெட்டிதரு வுக்குங்காப்
 பேகட்டி முன்போல்வேர் வெட்டிக்கொள்ளே. 1

வெட்டிக்கொண் டிரண்டுவே ரையும்வைத்துக்கொள்
 விடந்தீண்டித் தென்றுவந்து சொன்னகாலே
அட்டியில்லா மலிரண்டுஞ் சரியதாக
 வருந்திடவே கொடுசகல விடமுந்தீரும்
நட்டிவரா திம்மூல சித்தர் சொன்ன
 நன்னூலை நாள்தோரு முணர்ந்தா ராய்ந்து
அஷ்ட திசை யிலுங்கீர்த்தி பெற்றதஞ்சை
 யரசன்சர பேந்திரனுரை யதுதப்பாதே. 2

(இதன் பொருள்) ஞாயிற்றுக்கிழமையன்று வில்வ மரத்திற்கு மஞ்சள் காப்புக்கட்டி, பச்சையரிசிப் பொங்கல் நிவேதனஞ் செய்து தூபதீபங்கள் காட்டி (ஈச்வரனை) தியானித்து வடக்கு நோக்கிப் போகும் வேரை வெட்டிக் கொள்ளவும்.

இவ்வாறே எட்டி மரத்திற்கும் காப்புக் கட்டி வடக்கு நோக்கிப் போகும் வேரை வெட்டி பத்திரப்படுத்தவும்.

எந்த விடம் தீண்டினாலும். இவ்விரண்டு வேரையும் சரியளவெடுத்துச் சந்தனக்கல்லில் இழைத்து வந்த விழுதை உட்கொள்ளக் கொடுக்கவும்.

பற்பல விஷங்களும் தீரும்.

### 2. சகல விஷத்திற்கும் வாயிலடக்க வேர்

வேலைசூழ் புவியதன்னில்
வெள்ளைக்குன் றிமணி வேரை
சாலவே நசுக்கி வாயிற்
றனடக்கு மனிதன் தன்னைச்
சீலமா யுள்ளுக்குங் கொள்
தினமெட்டு நாளுக்குத் தான்
ஞாலமீ தினில் விஷந்தா
னடந்திடு முண்மையாமே. 3

(இ–ள்) வெள்ளைக் குன்றிமணி வேரைக் கொண்டு வந்து சிறு சிறு துண்டாக நறுக்கி வாயிலடக்கி வந்த உமிழ் நீரை உள்ளுக்கு விழுங்கவும். இவ்வாறு 8 நாட்கள் செய்யவும். விஷங்கள் தீரும்.

### 3. விஷத்திற்கும் பேய்க்கும் கண்ணிலிட மாத்திரை

காயங் கார மரிதாரங்
கனிவா யிரத மிந்துப்பு
பேயன் பீர்க்கு மிலைச்சாறும்
பேணியரைத்து வுண்டை செய்து
மாயம் போல விடந்தீண்டி
வருவார் கண்ணி லிடுவீராய்ப்
பேயுந் தீரும் விடமீளும்
பெருத்த சன்னி முறிந்திடுமே. 4

(இ–ள்.) பெருங்காயம்
சுத்திசெய்த அரிதாரம்
சுத்திசெய்த பாதரசம்
பொரித்த இந்துப்பு
பொரித்த வெங்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பேய்ப்பீர்க்கிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சிறு சிறு மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். விடம் தீண்டியவரின் கண்களில் இந்த உருண்டையைத் தண்ணீருடன் இழைத்துப் பயறளவு இடவும்.

பேயும் தீரும், விஷம், சந்நி முதலானவைகளும் முறியும்.

### 4. விஷத்திற்கும் பேய்க்கும் மருந்தும் கலிக்கமும்

பேய்ப்பீர்க்கம் விரையதனைப் பொடியதாக்கி
பிசறிவெத்தி லைச்சாற்றிற் கலத்திற்றப்பி
வாய்ப்புடனே ரவியினுட புடத்திற்றனே
வைத்திடற் றயிலம்வரு மதையெடுத்து
தேய்ப்புள நற் பரணிதனில் வைத்துக்கொண்டு
சீறிவிடந் தீண்டில்வெற் றிலையிலப்பி
தாப்பிரிய மாகவுங்கொள் விழியிற்போடு
சருகும்விடந் திலதமிடப் பேயும்போமே. 5

(இ—ள்.) பேய்ப்பீர்க்கம் விரையைச் சூரணித்து வெத்திலைச் சாற்றுடன் பிசறி ஒரு வெங்கலத் தாலத்தில் அப்பிக்கடும் வெயிலில் சாய்த்து வைக்கவும். இதிலிருந்து தைலம் வடியும். இதனை ஒரு ஜாடியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

விஷம் தீண்டிவிடில் இத்தைலத்தில் (10 சொட்டுகள்) விட்டு வெத்திலையில் தடவி உட்கொள்ளவும். இத்தைலத்தையே ($\frac{1}{2}$ பயறளவெடுத்து) விழியிலும் இடவும். விஷங்கள் நீங்கும்.

### 5. விஷத்திற்கு அரித்ராதிச் சூரணம்

மஞ்சள் கோட்ட மிரண்டதுஞ் சூரண
மாக்கிற் றேனு நறுநெய்யு மேசலந்

துஞ்சிளந் தியினி லுண்ணவு மேலிடந்
    தோர்த்து மூரைவிட் டோடுஞ் சகலமுந்
தஞ்ச மென்று மடைந்தவர்க் கன்புசெய்
    சக்கிர வர்த்தி நிகராய் மனுநீதி
தஞ்சை மானகர் தன்னில் வளர்விபு
    சரப பூபதி சொல்சித்தர் மூலியே. 6

(இ-ள்.) மஞ்சள், உயர்ந்த கோஷ்டம் இரண்டையுஞ் சமனெடையெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதனை மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனும் நெய்யும் கலந்து சாயங்காலத்தில் உட்கொள்ளவும். உடலில் ஊறிய நாட்பட்ட விடங்கள் தீரும்.

### 6. விஷக்கடிக்கு லேபம், அஞ்ஜனம், நசியம்.

புத்திரசீ வியின்வித்தைத் தண்ணீர் விட்டுப்
    பூசிதமா யரைத்துவிடங் கடித்தவாயில்
பத்திரமாய் லேபஞ்செய் தர்லுங்கண்ணிற்
    பழுதறவே யஞ்சனமிட்டாலு மூக்கி
நத்திநசி யங்கள்செய் திடினும் மீளும்
    புத்திரன் சரபோசிரா சாதிராசன்
நலமிகுந்த தஞ்சைதுள சேந்திரபூபன்
    புத்தியிஞ லுணர்ந்த திந்த மூலியாமே. 7

(இ-ள்.) புத்திரசீவி விதையை (கடற்பாலைவிதை)த் தண்ணீர் விட்டு நன்ருக இழைத்து விஷந்தீண்டிய இடத்தில் லேபனமாக இடவும். இதனையே ஒரு பயறளவெடுத்துக் கண்ணில் அஞ்ஜனமாகவும் இடவும். மூக்கில் நஸ்யமாகவும் பிரயோகிக்கவும்.

### 7. விடத்திற்குப் பூச்சி

அமுக்கிராக் கிழங்குசிறு கீரை குக்கி
    லதுமொட்ட டையுஞ்சரியாய்க் கோசலத்தி
லமுக்கியரைத் தேயதையு மேலே பூசி
    லவ்விடமு மீளுமிது சித்தர் சொன்ஞர்

நமக்குமிது வாகுமென்றே யந்நூ றன்னை
நாள்தோரு முணர்ந்து ணர்ந்து சரபபூபன்
றமக்குலத்தி னிர்ணயித்த வழுக்கிராதி
தன் கிழங்கின் விடமருந்து தான் கண்டாயே 8

(இ-ள்.) அழுக்கிராக்கிழங்கு சிறுகீரை
குக்கில் ஒட்டடை

இந்நான்கையுஞ் சமனெடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்ருக அரைத்து விடந்தீண்டிய இடத்தில் பூசவும்.

விஷங்கள் தீரும்.

### 8. விஷத்திற்குக் கடிவாய்ப் பூச்சு

பாதிரிவேர் நற்கார்த்தி கைக்கிழங்கு
பலத்தமிள குடனேதிப் பிலியிந்நாலும்
நீதமுடன் சமநீரா காரம் விட்டு
நேகவரைத் தேகடியின் வாயில்பூசு
சாதகமா விடமீளுந் தக்கோர் சொன்ன
தகுதியுடன் பகுதியுட னுணர்ந்தா ராய்ந்து
சோதனைசெய் துரைத்ததிது தஞ்சை யாளுஞ்
சொற் பிசகா விபுவுணர்ந்த பூச்சதாமே. 9

(இ-ள்.) பாதிரிவேர் சுத்திசெய்த கலப்பைக் [கிழங்கு
மிளகு திப்பிலி

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு நொறுக்கி நீராகாரம் விட்டு நன்ருக வரைத்துக் கடிவாயில் பூசவும்.

### 9. விடக்கடிக்குப் பூச்சு

மஞ்சள்மர மஞ்சளரி தாரத்தோடு
மனோசிலைகுங் குமப்பூவும் மருதம்பட்டை
இஞ்சொ லறு வகைமருந்து நற்சலத்தி
லேயரை த்துக் கடிவாயின் மேலும்பூச
சஞ்சலமி லாமல்விட ந் தீரு முன்னோர்
தானுரைத்த நூல்களெல்லா முணர்ந்தாராய்ந்து

தஞ்சை நக ரனேச்செங்கோ னடத்தி வாழுஞ்
சரபேந்திர னுரைத்தமுறை தான்கண்டாயே. 10

(இ-ள்.) மஞ்சள் மரமஞ்சள்
சுத்திசெய்த அரிதாரம் சுத்திசெய்த மனேசிலே
குங்குமப்பூ மருதம்பட்டை

இச்சரக்குகளேச் சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டு நன்ருகவரைத்து நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொண்டு விஷத்தின் கடிவாயில் பூசவும். விஷங்கள் தீரும்.

## 10. நசியம்

பூவந்திப் பழத்தோலு மிலுப்பைக் கட்டி
புதியவெண் காரமூன்றுஞ் சரியாய்க் கூட்டி
ஆவலுடன் பொடிசெய்து சிறுநீர் தன்னி
லப்பொழுதே நசியஞ்செய் விடங்கள் தீண்டிச்
சாவிடினு முயிருமிகுந் திடினு நசியந்
தான்செய்து பாரிரண்டு மூக்கிலுந்தான்
ஆவிவருந் திரும்பியெழுந் திருப்பான் கண்டா
யப்புரமும் பிரமன்விதிப் படியதாமே. 11

(இ-ள்.) பூவந்திப்பழத்தோல் அரப்பு
பொரித்த வெங்காரம்

இம்மூன்றையுஞ் சமனெடுத்துப் பொடி செய்து உலகவாசனேயறியாத சிறு குழந்தைகளின் சிறுநீருடன் சேர்த்து நஸ்யமிடவும்.

விஷங்கள் தீண்டி நோயாளி இறந்திருந்தாலும் இம்மருந்தின் பிரயோகத்தால் பிழைத்துவிடுவான்.

## 11. விஷத்திற்குச் சாறடைவேர்

மங்கள தினத்திற்சா
ரணேக்கிக்காப் புக்கட்டியே
பொங்கமாக வேரடியிற்
சுத்திபண்ணிக் கொண்டுமே

வங்கனம் தாகயெட்டு
நாளுமும் மூன்றுதிற
முங்கவன மாகவும்
பிரதட்சிணங்கள் பண்ணியே 12

பண்ணியும் பலிகொடுத்து
வேரதனைப் பிடுங்கியே
நண்ணிவேர் கறணையாய்
கறணையாய் நறுக்கியே
கண்ணுமவ் விடங்கடித்த
மாத்திரத்தி லோர்நறுக்
குண்ணவுங் கொடுவிடமு
மூரைவிட்டு மோடுமே. 13

(இ-ள்.) செவ்வாய்க்கிழமையன்று சாறணைச் செடிக்குக்காப்புகட்டி, அதன் வேரடியைச் சுத்தம் செய்யவும். 8 நாட்களுக்குத் தினந்தோறும் மூன்று தடவை பிரதட்சிணங்கள் செய்து, பலி கொடுத்து அதன் வேரைப் பிடுங்கி வைத்துக்கொண்டு கறணை கறணையாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

விஷங்கள் தீண்டினுல் இதில் ஒரு கறணையெடுத்து உண்ணக்கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

### 12. விரியன் பாம்பிற்கு

அவுரியுத்தா மணியிரண்டு வேருஞ்சிறு நீரணி
லுவர் வசம்பு முள்ளிசேர்த் துரைத்துளுக்கு மேகொடு
கவனமாக வுந்துவாலே யும்மிடுவி ரியனு
மவமதான சிறுவுரகக் கடியுமீளு முண்மையே. 14

| | |
|---|---|
| (இ-ள்.) அவுரிவேர் | வசம்பு |
| உத்தாமணிவேர் | பூண்டு |

இவைகளைச் சமனெடுத்து உலகமறியாப் பிள்ளையின் சிறுநீர் விட்டரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இம் மருந்தையே மேலுக்கும் அரைத்துப் பூசவும்.

விரியன் பாம்புக் கடிகள் தீரும்.

## 13. விஷத்திற்கு மாத்திரை

வெள்ளைக்குன்றி விரைமையக்குப்பை மேனியிலையாலுமே
மெள்ளவேசு ருட்டுக்குப்பை தன்னிலெட்டு நாட்புதை
கொள்ளுமேற் புரந்தோலெடுத் தேபருப்ப தாக்கியே
விள்ளுவிரி யனிறைச்சி கூட்டியு மரைத்திடே. 15

அரைத்துகுன்றி மாத்திரமுருண்டை செய்நிழலுலர்த்தி
துலர்த்திநீரி லஞ்செனஞ்செ யுமிரண்டு கண்ணிலும் [வைத்
வருத்தமாங் கடிவிடந்தெரித்துமீளுஞ் செந்தமி
ழுரைத்தவர்க்க ருள்சரபப் பூபதிசொல் முறையிதே. 16

(இ-ள்.) வெள்ளைக்குன்றிமணி விதையை வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு, குப்பைமேனி இலையில் வைத்துச் சுருட்டிக் குப்பைக் குழிக்குள் புதைக்கவும். 8 நாட்கள் சென்ற பின்னர் அதையெடுத்து மேல் தோலை நீக்கிப் பருப்பாக்கிக் கொள்ளவும். இதனையொரு கல்வத்திலிட்டு விரியனின் இறைச்சி கூட்டி நன்ருகவரைத்துக் குன்றி நிகரான மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்தவும். இம் மாத்திரையைத் தண்ணீரில் இழைத்துக் கண்களிலிடவும்.

கடிவிஷங்கள் தீரும்.

## 14. விரியன் பாம்புக் கடிக்குப் பூச்சு

அருகன்வே ரெடுத்துரலி லிட்டுமேந றுக்கியே
இறுகவும்பி ழிந்தசாறை ரைப்படியென் ளெண்ணெயு
மருவுகாற்ப டிவசம்பு கூட்டியுமெ ரித்துமே
விரியனுங்க டிகள்மீளு மேலுமதைப் பூசிடே. 17

(இ-ள்.) அருகன் வேரையெடுத்து உரலிலிட்டு நன்ருக இடித்துப் பிழிந்து சாறு ½ படியுடன் சுத்தமான நல்லெண்ணெய் ¼ படி கூட்டி, வசம்பு சிறு துண்டு இவைகளைச் சேர்த்து ஒன்றுகூட்டி யெரித்துப் பதத்தில் இறக்கவும்.

விரியன் கடிக்கு இத்தைலத்தைக் கடிவாயில் பூசவும்.

### 15. நல்லபாம்பு, தகண்டு கடிக்குப் பூச்சு

புங்கம்வேரை யும்நெருஞ்சிக் காயுஞ்சம மதையுவிட்
டங்கமாக வுமதைத் தைவிடங் கடித்தவர்க்
கங்கமீதிற் பூசு நல்ல பாம்புடன் றகண்டுமே
சங்கையாங்க டிவிடங்கள் தானுமீளு முண்மையே. 18

(இ-ள்.) புங்கம்வேர் நெருஞ்சிக்காய்

இவ்விரண்டையும் வேண்டிய அளவெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாகவரைத்து உடம்பின்மேல் பூசவும். நல்ல பாம்பு விஷம், தகண்டு விஷம் முதலானவை தீரும்.

### 16. விஷத்திற்கு உள்ளுக்கு

புளித்தகா டியுமுழக்கு பூமிதன்னி லேபடர்ந்
துளித்திடும்பா கலிலையின் சாறதுமு ழக்கதாம்
வளப்பமா யிரண்டுசாறுங் கூட்டியே விடகடிக்
குழப்பியே கொடுக்கமீளு மேவிடக் கடியுமே: 19

(இ-ள்.) புளித்தகாடி ஒரு உழக்கு
மிதிபாகலிலைச்சாறு ,,

இரண்டு சாறுகளையும் ஒன்றுகூட்டி உட்கொள்ள விஷக்கடிகள் தீரும்.

### 17. பாம்பு கடித்த புண்ணாறாதிருந்தால் அதற்குப் பூச்சு

பாம்பது கடித்தபுண் ணாறாமலே யிருந்திடில்
காம்புளநெ ருஞ்சிகையா ந் தகரையோ டிரண்டிலை
நாம்புகல் படியும்வேது வைத்துமேலும் பூசிடு
போம்பல விடமும்புண்ணு மாறுஞ்சித்தர் மூலியே 20

(இ-ள்.) பாம்பு கடித்த புண் ஆறாமலே இருந்தால் அதற்கு நெரிஞ்சியிலை, கையாந்தகரை இலை இவ்விரண்டை

யும் வெதுப்பிச் சாறுபிழிந்து புண் ஆருத இடத்தில் பூசவும். விஷங்கள் தீர்ந்து புண்களும் ஆறும்.

### 18. விஷத்திற்குக் குட்டித் தக்காளி நஸ்யம் துவளை, உள்ளுக்கும் மருந்துகள்

குட்டித்தக்கா ளியினிலை கொணர்ந்துசாற துபிழிந்
துட்டமான பாம்பது கடித்திட நசியமு
மிட்டிடு துவளையுமுள் ளுக்குமிதை யீந்திடு
கட்டமாம்வி டங்கள்மீளுங் கைகள்கண்ட முறையிதே. 21

(இ-ள்.) குட்டித்தக்காளி இலையைக் கொண்டுவந்து சாறுபிழிந்து விஷந்தீண்டியவரின் நாசியில் நசியமிடவும். இதனையே துவளையும் இட்டு, உள்ளுக்கும் இச்சாற்றை கொஞ்சம் செலுத்தவும். விஷங்கள் தீரும். கைகண்டது.

### 19. விஷத்திற்கெல்லாம் உள்ளுக்கு

காலில் வணங்குங் குழலூதுங் காளைமுகிலொன்
வேலிப்பருத்தி வேரதனை விரையக்காடி தனிலரைத்து
சாலவுழக்குக் காடியினிற் றேனேயருந்தக் கொடுப்பீராய்
கோலவிடங்க ளானதெல்லாங் குதித்தேயோடுங் கண்டீரே.

(இ-ள்.) வேலிப்பருத்தி வேரைக் கொண்டுவந்து காடி விட்டு அரைத்து ஒரு உழக்குக் காடியுடன் குழப்பி உட்கொள்ளவும். பற்பல விஷங்களும் நீங்கும்.

### 20. சகல விஷத்திற்கும் மை

நாவியொன்று வெள்ளைப்பா ஷாணமிரண்
டிரதமிரண்டு நந்நேர்வாள
மாவலுட னுல்வகையுங் கூட்டியொரு
தேங்காயி லடைத்து நல்ல

பாவமுடன் சாணியப்பிச் சுட்டெடுத்துத்
தேங்காயின் பாலைவார்த்துத்
தாவிநன்று யரைத்துவொரு சிமிழதனிற்
பத்திரமாய் முன்வைப்பாயே. 23

வைத்துயெந்த விஷங்கடித்து தென்றுவரி
னுமவர்க்கு மன்பதாக
அத்திமுகன் பாதமதை துதித்தமருந்
திற்குன்றி யளவெடுத்து
நத்துவமாய் கொடுமெந்த விடங்களெல்லாங்
கடிந்தோடும் நன்மையுள்ள
சத்தியவான் சரபேந்திர பூபதிசொல்
முறையிதுவுந் தப்பாதின்றே. 24

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| எருமை மூத்திரத்தில் சுத்திசெய்த வத்ஸநாபி | — 1 | விரா. |
| சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் | — 2 | ,, |
| ,, பாதரசம் | — 2 | ,, |
| ,, நேர்வாளப்பருப்பு | — 2 | ,, |

இவைகளையொரு கல்வத்திலிட்டு நன்கு மையாக அரைத்து ஒரு முற்றிய தேங்காயின் கண்களைத் திறந்து இளநீரை ஊற்றிவிட்டு அதனுள் ஷை விழுதை அடைக்கவும் பின்னர் தேங்காயின் கண்ணையொரு ஆப்பிட்டு அடைத்து சாணியப்பிப் புடம் இடவும், ஓடு சிறிது கறுகியவுடன் புடத்தைப் பிரித்துத் தேங்காயை உடைத்து அதனுள் இருக்கும் மருந்துகளை ஒரு கல்வத்தில் வைத்துத் தேங்காய்ப் பால் விட்டு நன்றாக அரைக்கவும். இதனையொரு சிமிழில் பத்திரப்படுத்தவும். எவ்வகை விஷக்கடிகளானாலும் இதில் ஒரு குன்றியளவெடுத்து உட்கொள்ளக் கொடுக்கவும். நன்கு பேதியாகி விஷங்கள் தீரும்.

## 21. விஷக்கடிக்கு நாபிக் குழம்பு

பச்சை நா பியிரதம் நேர்வாள
    மூன்றுஞ்சுத்தி பண்ணிக்கொண்டு
இச்சையுடன் வகைக்கு வரா கனெடைரெண்டு
    பனைவெல்ல மேயிரண்டு
உச்சிதமாம் வராகனெடை யிதுநாலு
    முதிர்தேங்கா யொண்பால்விட்டு
தச்சன்செய் கல்வத்தி லரைத்துதயி
    லமாக்கிற் ருன்கொள்வாயே. 25

கொண்டுபர ணியிலடைத்து வைத்துக்கொள்
    விடங்கடித்துக் குவலயத்துன்
னண்டையில்வந் துடன்மிளகு பிரமாண
    மெடுத்துக்கொடுத் தவனுந்தானு
முண்டவுடன் விடமீளுஞ் சிவகிருபை
    தன்னுலே முக்கியசோழ
மண்டலத்தை மனுநீதி தப்பாம
    லாளும்விபு வருளதாமே. 26

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த நாபி | 2 | வராகனெடை |
| | ,, பாதரசம் | 2 | ,, |
| | ,, நேர்வாளம் | 2 | ,, |
| | பனைவெல்லம் | 4 | ,, |

இதனைக் கல்வத்திலிட்டு முற்றிய தேங்காயின் பால் விட்டு நன்ருகத் தைலம்போல் அரைத்துக் கொள்ளவும். இதனை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விடம் தீண்டப்பட்டவர்களுக்கு ஒரு மிளகுப் பிரமாணம் இதனைக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

## 22. விஷக்கடிக்கு ரஸாதி மருந்து

இரதங்கெந் தகந்துருசு கத்திரிநா
யகம்விரை நீ ரெட்டிக்கொட்டை
அரிதாரம் பூவந்திப் பழமும் வெண்கா
ரமும்பெருங்கா யத்தோடேதா
னுரையொன்ப திவ்வகைக்கோர் வராகனெடை
நேர்வாளத் தொண்பருப்பு
சரியாக வராகனெடை யைந்திதெலாங்
குப்பைமேனிச் சாற்றிற்றூனே. 27

குப்பைமேனிச் சாறுமுன்பின் தேங்காய்ப்பால்
விட்டரைத்துக் குணமதாக
செப்பியவேப் பெண்ணெய்விட்டுக் குழைத்துயிரும்
பாற்செய்த சிமிழிலேதா
நொப்புடனே வைத்துவிடங் கடித்தவர்க்கு
மிரண்டுகுன்றி யும்மாத்திரமீ
யப்பவே விடமீளு மனிதருக்குக்
குதிரைமாட் டுக்குந்தானே. 28

மாடுகுதி ரைக்குன்றி மூன்றுமாத்
திரம்வெந்நீர் வைத்துக்காய்ச்சி
நீடனிலே கரைத்துமதைப் புகட்டிவிட
மீளுமிது நிமலர்சொன்னார்
நாடனிலே வருந்தவத்தோ ரதைச்சொன்னா
ரிதைத்தஞ்சை நகரையாளு
மாடவர்சி ரோமணியாஞ் சரபேந்திர
னுணர்ந்துரைத்த வருளிதாமே. 29

(இ-ள்.) சுத்திசெய்த கெந்தகம்
,, துருசு
,, கத்திரிநாயகம் விரை
,, தாளகம்
,, ரஸம்

நீரடிமுத்துவிதை
பூவந்திப்பழம்
பொரித்த வெங்காரம்
" பெருங்காயம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு 5 வராகனெடை

இவைகளை ஒன்றன்பின்னொன்ருக ஒரு கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச் சாறுவிட்டு நன்ருகவரைத்துப் பின்னர் தேங்காய்ப்பால் விட்டு நன்ருக அரைக்கவும். இவ் விழுதுடன் வேப்பெண்ணெய் விட்டுக் குழைத்து ஒரு இரும்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும். விடத்திஞல் தீண்டப்பட்டவர்களுக்கு 2 குன்றி நிறையெடுத்து உட் கொள்ளக் கொடுக்கவும்.

விஷங்கள் தீரும்.

குதிரை மாடு முதலியவைகளையும் விடந் தீண்டிஞல் 2 குன்றி நிறையெடுத்து வெந்நீரில் கரைத்துப் புகட்டவும். விஷங்கள் தீரும்.

நன்கு பேதியாகும்.

## 23. தேளுக்கும் பாம்பிற்கும் பயிற்சி

எட்டிவே ரவுரிவேரு மித்தநெய் கொட்டைவேறு
மட்டத்தக் கானில்வாழும் வாய்த்தபொன் முசுட்டைவேருந்
தோட்டுறச் சமஞய்க்கூட்டித் தூடனைக் கொடுப்பீராகில்
கொட்டிய தேளும்பாம்புங் குறிப்புடன் போகுந்தானே. 30

(இ-ள்.) எட்டிவேர்
அவுரிவேர்
பூந்திக்கொட்டை வேர்
பொன்முசுட்டை வேர்

இவைகளைத் தனித்தனியே சமனைகவெடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளக் கொடுக்கவும் தேள் பாம்பு இவைகளின் விஷங்கள் தீரும்.

## 24. விடத்திற்கு இரதாதி அஞ்ஜனம்

இரதங்கெந் தகமிளகு காயத்தோ
    டிந்துப்பு பச்சோந்தி பச்சைப்பாம்பு
அரிதான மயில்பிச்சு பவழக்குன்றி
    யழிஞ்சில் பத்துங்கருடன் முட்டைக்
                    கருவைவார்த்துத்
துரிசாக வரைத்துநீள மாத்திரைசெய்து
    தொல்லுலகில் விடங்கடித்து வந்தபேருக்
குரமான கண்ணிலஞ் சனமேசெய்ய
    வோடுமெந்த விடமிரதஞ் சனமுமாமே. 31

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த | பாதரஸம் | பச்சோந்திப் பிச்சி |
| | ,, | கெந்தகம் | பச்சைப்பாம்பு |
| | ,, | மிளகு | மயில்பிச்சு |
| | ,, | பொரித்த | பெருங்காயம் |
| | | இந்துப்பு | பவழக்குன்றியிலை |
| | அழிஞ்சில்கொட்டை | | |

இவைகளைச் சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டு கருடன் முட்டையின் வெள்ளைக்கருவை விட்டு நன்றாகவரைத்து நீளமான மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும். விஷந்தீண்டியவருக்கு இம்மாத்திரையைத் தண்ணீருடன் இழைத்துக் கண்களிலிடவும். எவ்வித விஷங்களும் தீரும்.

## 25. சகல விஷத்திற்கும் இரஸத்தின் மை

இரதம்வரா கனெடைநாலு நேர்வாள
மிருபதுகெந் தகம்வராக னெடையொன்று
அரிதாரம் வராகனெடை ரெண்டுநாபி
யதிரண்டு வராகனெடை சாதிலிங்க
மொருவராக னெடைவெள்ளைப் பாஷாணந்தா
னுற்பனமா யிரண்டுவரா கனெடைநல்ல
துருசுவரா கனெடைநாலுந் தேங்காய்க்கீத்
தும்மிரு பதுமதனிற் கூட்டிக்கொள்ளே. 32

கூட்டிமுற்றி லுத்தாமணிச் சாறுவிட்டுக்
குணமான மைப்போல வரைத்துப் பின்பு
நாட்டின்வேப் பெண்ணெய்காற் படியும்விட்டு
நன்ருகப் பின்னுமதை யரைத்துக்கொண்டு
வாட்டமிலாச் சிமிழிதனில்வை ரஸத்தின்மையை
மருவுவிடங் கடித்தவர்க்கு மிளகின்மாத்திர
நீட்டவிடஞ் சகலமும்போம் பத்தியந்தா
நேரான பச்சரிசிக் கஞ்சிதானே. 33

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த | பாதரசம் | 4 | வராகனெடை |
| ,, | நேர்வாளம் | 20 | ,, |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | 1 | ,, |
| ,, | தாளகம் | 2 | ,, |
| ,, | நாபி | 2 | ,, |
| ,, | லிங்கம் | 1 | ,, |
| ,, | வெள்ளைப் பாஷாணம் | 2 | ,, |
| ,, | துருசு | 4 | ,, |
| | தேங்காய்க்கீத்து | 20 | எண்ணிக்கை |

இவைகளைக் கல்வத்திலிட்டு, நசுக்கி உத்தாமணிச்சாறு விட்டு நன்ருக மையாகும்வரை அரைத்து வேப்பெண்ணெய் ¼ படி விட்டு மறுபடியும் அரைத்துக் குழம்பாக்கிக்

கொள்ளவும். இந்த மருந்தை ஒரு சுத்தமான சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். விஷந்தீண்டிய வருக்கு இந்த மெழுகில் ஒரு மிளகளவெடுத்துக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

**பத்தியம்:** பச்சையரிசிக் கஞ்சி மாத்திரமே உட்கொள்ளக் கொடுக்கவும்.

### 26. சகல விஷத்திற்கும் ரஸாதிக் குடோரி

இரதமரைப் லம்நெல்லிக்காய் கெந்தகந்தா
வரிதமாக வரைப்பலமாம் பச்சைநாபி
யொருபலமாம் நேர்வாளம் பத்தும் பச்சை
யாகத்தா னிறைச்சிபல மொன்றுநல்ல
தருமகிழங் கொட்டை பருப் பதுவுமூன்றுந்
தப்பாமற் கௌரிபா ஷாணந்தானும்
வரிசையுடன் பலமொன்று வெண்பாஷாண
மதுவுங்காற் பலமிதெட்டும் பொடிகள்செய்யே. 34

பொடிசெய்து யிரண்டுபங்கு செய்துபாதி
புனவெள்ளை யெருக்கம்பால் வார்த்தரைத்து
மடவுடைய கயிறுபோ லுண்டைபண்ணி
மறுபாதி யும்பழச்சா றுவிட்டரைத்து
வடிவான வுண்டைசெய்து வுலர்த்தியேதான்
வைத்துக்கொள் வெகுபதன மாகவேதான்
திடமுடைய வுண்டையிது விடங்கள் தானுந்
தீண்டித்து தெனவந்தாற் குடோரியோடே. 35

ஆடியபின் னெலுமிச்சம் பழச்சாருத
லரிவைமுலைப் பாலினிலா குதலுரைத்து
நாடுமுச்சந் தலையதைக் குடோரியாடு
நல்லபாம் பதுக்குத்தான் மற்றதுக்கு

வூடுமுன்சொ லெருக்கம்பால் வார்த்தரைத்து
வுண்டைவிரி யன்கடிக்கு மற்றமற்ற
நாடதனிற் பலவிடத்துக் குமெருக்க
நற்பாலி லுரைத்துச்சந் தலையிற்றுனே. 36

தலையினிற் குடோரியது மாடிமத்தித்
ததிலும்விடம் மூண்டெழுந்தி ராவிட்டாலே
வலுயெருக்கின் குடோரியது வாடுகின்ற
வாயில்வைத்துச் செங்கடனைக் காயப்போட்டு
நலுவுச்சந் தலையில்வைக்கக் கடிவிடாந்தா
நழுவிவிடம் வாயிலிறங் கிடிலப்போதே
வுலவியகோ ழியினீரல் வைத்துக்கட்டு
முடனேயவ் வீரலது கனக்கும்பாரு. 37

கருத்தமட்டி லேயதையு மெடுத்துப்போட்டுக்
கட்டிகுடோ ரியாடி மருந்தைப் பாய்ச்சு
உரத்தயிந்த ரஸாதிக் குடோரிதன்னை
உலகத்தின் மனிதருக்கா யுண்மையாக
அருந்தவத்தோர் சொன்னமுறை யெல்லாமிந்த
அழகைபதி கெசபதிநர பதிநற்றேக
துரகபதி சரபேந்திர பூபதிசொல்
சுகமாக வுணர்ந்ததிம் முறையதாமே. 38

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த பாதரஸம் | ½ பலம் |
| | சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | ½ பலம் |
| | சுத்திசெய்த நாபி | 1 பலம் |
| | சுத்திசெய்த நேர்வாளம் | 10 பலம் |
| | பச்சை (ஆட்டின்) இறைச்சி | 1 பலம் |
| | மகிழம் விதை | 3 பலம் |
| | சுத்திசெய்த கௌரீபாஷாணம் | 1 பலம் |
| | சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் | ¼ பலம் |

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூளாக்கி வைத்துக் கொண்டு. இருகூறுகளாச் செய்து கொள்ளவும். ஒரு

பங்கில் வெள்ளெருக்கம்பால் விட்டு நன்ருக அரைத்துக் கயிறுபோல் நீண்ட மாத்திரைகளாகச் செய்துகொள்ளவும். மறுபாதியில் எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்ருகவரைத்து நீண்ட மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும். இவைகளைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு நல்ல பாம்பின் விஷந்தீண்டி மயக்கமானவன் தலையுச்சியில் கீறி எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்த மாத்திரையை எலுமிச்சம்பழச் சாற்றிலோ அல்லது முலைப்பாலிலோ இழைத்து உட்செலுத்தவும்.

விரியன் கடியாகில் எருக்கம்பால் சேர்த்தரைத்த மாத்திரையை உபயோகிக்கவும். தலையில் குடோரி செய்தும் எழுத்திருக்காவிடில் செங்கல்லைப் பழுக்கவைத்து உச்சந்தலையில் வைக்கவும். விடங்கள் கடிவாயில் இறங்கும். அப்போது கோழியின் ஈரலை வைத்துக் கட்டவும். ஈரல் கனத்துக் கறுத்துவிடும். அப்போது அதையெடுத்துவிட்டு ரஸாதிக் குடோரியைப் பாய்ச்சவும். விஷங்கள் தீரும்.

## 27. விடத்திற்குச் சாறடையாதிப் பூச்சு

சாறடைவேர் பிரண்டைவேர் நாளைவேருஞ்
சாற்றுசிறு கருக்காவேர் செம்மணத்தி
கூறுடைய வேருள்ளி வசம்புதானுங்
கூட்டிரைத் தேசிறுநீர் தனிற்கரைத்து
வீரமுடன் கொதிக்கவைத்துக் கடிவாய்நாலு
விரற்கெடைவிட் டதைப்பூசு விடத்தின்வீக்கம்
தீருமிது தப்பாது விபுவுணர்ந்த
திம்முறைசா றடையாதிப் பூச்சுதாமே. 39

(இ-ள்.) சாறடைவேர் பிரண்டைவேர்
நாளைவேர் சிறுகருக்காவேர்
செம்புளிச்சை பூண்டு
வசம்பு

இவைகளை உலகமறியாச் சிறுகுழந்தையின் மூத்திரம் விட்டு நன்ருகவரைத்துக் கொதிக்கவைத்து விஷம் கடித்த இடத்தில் 4 விரற்கெடை விட்டுவிட்டுச் சுற்றிலும் வீக்கம் இருக்கும்வரை பூசவும். விடங்கள் தீரும்.

### 28. விடத்திற்குக் கடுகாதிப் பூச்சு

விடங்கடித்த வர்க்குமொரு பூச்சதனை
மேன்மையுடன் கேளுசித மாகவுந்தான்
கடுகுதனை யரைத்துச்சா ராயந்தன்னிற்
கனலிலே கொதிக்கவைத்துப் பூசிப்பாரு
அடவுடனே வீக்கமது வாடுந்தஞ்சை
யண்ணல்சர பேந்திரபூ பதியுணர்ந்த
கடுகாதிப் பூச்சுமிது வுடனேசெய்து
கடுகவே பூசிவிடந் தீருந்தானே. 40

(இ-ள்.) கடுகைச் சாராயத்துடன் அரைத்து ஒரு இரும்புக் கரண்டியிலிட்டு கொதிக்கவைக்கவும். இதனை விடந்தீண்டிய வாயைச் சுற்றிலும் பூசவும். வீக்கம் வாடும்.

### 29. விஷத்திற்குத் தூள்

பாந்தள்கடித் தோடிவரும் பேர்க்குநாட்டுப்
பன்னியிரனீ ரற்குலையி லுசிதமான
காந்தலிலைக் கிழங்குக்கொடி சமூலமுந்தான்
கல்வத்தி லிட்ட ரைத்து முன்சொலீரல்
வாய்ந்ததனி லடைத்துலர்த்தித் தூளதாக்கி
வகையாகத் விரண்டுபண வெடைதூடன்னை
சார்ந்தவெந்நீ ரிற்கலக்கிக் கொடுதீராட்டால்
சதிரான தூளைநாசி யினிலூதே. 41

(இ-ள்.) பாந்தளினுல் கடிக்கப்பட்டு ஒடிவரும் பேர்களுக்கு, நாட்டுப்பன்னியின் ஈரற்குலையைக் காயவைத்து இடித்தத்தூள் 2 பணவெடையுடன கார்நீத்ள் இலை, கிழங்கு

முதலியவைகளைச் சமூலமெடுத்து இடித்த சூரணத்தையும் கலந்து வெந்நீருடன் கலக்கி உட்கொள்ளவும். இப்படியும் விஷம் இறங்காவிடில் இத்தூளை மூக்கில் நஸ்யமிடவும.

குறிப்பு: 'காந்தள்' என்பது கலப்பைக்கிழங்காகும்.

### 30. விடத்திற்குக் காஞ்சிரைப் பூச்சு மருந்து

அடவியுரை காஞ்சிரையின் பழத்தைவசம்
புடன்காய மதுகள்மூன்றுந்
திடமுளகள் ளிப்பாலே விட்டரைத்து
வுண்டையது செய்துலர்த்தி
விடங்கடித்து னண்டையினில் வந்தவர்க்கு
வெந்நீரை விட்டுரைத்துத்
தடவிவிட மீளுங்காஞ் சிரையாதி
விடமருந்து தான்கண்டாயே. 42

(இ-ள்) எட்டிப்பழம் வசம்பு
பெருங்காயம்

இவைகளையொரு சுத்தமான கல்வத்திலிட்டுக் கள்ளிப் பால் விட்டு நன்ருக அரைத்து மாத்திரையாகத் திரட்டி வைத்துக்கொண்டு நிழலில் காயவைக்கவும். விடங்கள் தீண்டினல் இம்மாத்திரையை வெந்நீரில் இழைத்துக் கடி வாயில் தடவவும் விஷங்கள் தீரும்.

### 31 சகல விஷத்திற்கும் இராதிக் குழம்பு

சகலவிடத் திற்குமிர தாதிகுழம்
பொன்றுசொல்வேன் ருனீகேளு
தகுமிரசங் கெந்தகந்துத் தந்துருசு
விதுநாலுஞ் சரிவராகன்
வகையுடனே பூவந்திப் பழக்கொட்டை
தள்ளிவரா கனெடையொன்று
புகளுநேர் வாளமத் தின்னஞ்சு
யிதுவாறும் புதியதானே. 43

புதியகொட்டாங் கச்சிசுட்ட கரிநாலு
வராகனெடை புகலுந்தேங்காய்
யதினெண்ணெ யாதல்வேப் பெண்ணெயாகு
தல்விட்டு மரைத்துக்கொண்டு
சதமான மெழுகுபதங் கண்டுவழித்
தேசிமிழிற் ருனடக்கி
ததியாயு தேளரணை நண்டுவாய்க்
காலிக்குற் ருனீவாயே. 44

(இ-ள்.) சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய்க் கெந்தகம்
,, துத்தம்
,, துருசு
இவைகள் வகைக்கு 1 வராகனெடை

| | | |
|---|---|---|
| பூவந்திப்பழச்சதை | | 1 வராகனெடை |
| சுத்திசெய்த நேர்வாளம் | | ,, |
| புதிய கொட்டாங்கச்சி சுட்டகரி | 4 | ,, |

இவைகளை ஒரு கல்வத்திலிட்டுத் தேங்காயெண்ணெயோ அல்லது வேப்பெண்ணெயோ விட்டு நன்ருக மையாகும் வரையரைத்து மெழுகுபதமான பின்னர் இதனை வழித்து ஒரு சிமிளில் பத்திரப்படுத்தவும்.

தேள்கொட்டு, அரணைகடி, நண்டுக்கடி இவைகளின் விஷத்திற்கு இம்மெழுகில் 1 மிளகளவெடுத்து உட்கொள்ளவும்.

### 32 சகல விஷத்திற்கும் கலிக்கம் பூச்சு

மாவலிங்கை வேரவுரி சாறதன்னி
லூறவுமே வைத்து நன்ருய்த்
தாவுவெயி லினிநிழலி னுமுலர்த்தி
நற்காற்றுத் தான்படாம

லேவைத்து யெந்தவிடங் கடித்துவரி
ஹுங்கலிக்க மிடுவுள்ளுக்குத்
தீவிரமாய்க் கடிவாயி லும்பூசுச்
சகலவிடந் தீருந்தானே. 45

(இ-ள்.) மாவலிங்கவேரை, அவுரிச்சாற்றில் நன்ருக ஊறவைத்து, வெயிலிலும் நிழலிலும் உலர்த்திக், காற்றுப் புகாத ஒரு குப்பியினுள் வைத்துக்கொண்டு, எவ்வித விஷங்கள் தீண்டினுலும் இதனைத் தண்ணீரில் இழைத்து ½ பயறளவு இரு கண்களிலும் இடவும். இதனையே உள்ளுக்குங் கொடுக்கவும்.

### 33. விரியன் பாம்பிற்கு நஸ்யம், அஞ்ஜனம்

துட்டவிரி யன்கடித்தால் மூக்குரட்டை
சமூலமுமே துவைத்துக்கொண்டு
சட்டியினி லேவதக்கி யுள்ளங்கால்
முதலாகச் சரீரமெங்கு
மட்டியில்லா மற்றுவளை யிட்டுவந்த
யிலமிள கதுவுமுப்புஞ்
சட்டமுள்ள வுள்ளியுங்கூட் டியுமரைத்து
வுண்டைபண்ணிற் ருன்வைப்பாயே. 46

வைத்தந்த வுண்டைதனை யுலர்த்திநன்ருய்
விரியனுக்கு வண்மையான
வெத்திலைச்சாற் றினிலுரைத்து நசியமிடு
யஞ்சனமு மேசெய்கண்ணில்
பத்தியம்பூ சினிக்காயும் புளியுடனே
கடுகதுமும் பதுமாகாது
நித்யகல் யாணகுண சரபேந்திர
னுணர்ந்தமுறை நீசெய்வாயே. 47

(இ-ள்.) மூக்குரட்டை சமூலமெடுத்து நசுக்கி ஒரு சட்டியிலிட்டு வதக்கி உள்ளங்கால் முதல் சரீர முழுவதும் பூசித்துவளையிடவும்.

2) பூண்டு 1 மிளகு
உப்பு

இவைகளைச் சமனெடுத்து, ஒரு கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு நன்ருகவரைத்து மிளகளவுள்ள உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, விரியன் கடித்ததனல் ஏற்பட்ட விஷமாகில், வெத்திலைச் சாற்றுடனே உரைத்து நஸ்யமிடவும். இதனையே கண்ணில் கலிக்கமாகவும் உபயோகிக்கலாம்.

**பத்தியம்:** பூசனிக்காய், புளி, கடுகு, உப்பு முதலியவைகளை நீக்கிவிடவும்.

### 34. விடத்திற்கு நாசியிலூதத் தூள்

எருக்கிலையின் புரத்துகணை யோர்கழஞ்சு
மிளகதுவு மேகழஞ்சு
திருத்தவிபூ தியுங்கழஞ்சு மூன்றுமெருக்
கம்பால்விட டேமையாக
வரைத்துகுழா யினிலடைத்து மாறிநாசி
யினிலூது மடங்கிப்போன
வுரைத்தபடி விடமீளுந் தப்பாது
சரபேந்திர னுணர்ந்ததாமே. 48

(இ-ள்.) எருக்கிலையின் பின்புறத்தில்

| | | |
|---|---|---|
| காணப்படும் கணை | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| மிளகு | $1\frac{1}{4}$ | ,, |
| விபூதி | $1\frac{1}{4}$ | ,, |

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்ருகத் தூளாக்கி வைத்துக்கொண்டு மூக்கினில் நஸ்யமிடவும், விஷங்கள் தீரும்.

இடதுபுறம் விஷத்தீண்டினல் வலது நாசியிலும் வலது புறம் விஷந் தீண்டினல் இடது நாசியிலும் ஊதவும்.

## 35. விடத்திற்கு நிம்பாதி மருந்து

கசப்புள்ள வேப்பிலையை நேகவரைத்
தேசதூரக் கள்ளிப்பாலை
யசவாக விட்டிரவி தனிற்கிளறிக்
கிளறிநா லஞ்சுநாள்வை
நிசமான சளப்போலே யாம்பதத்தி
லேயெடுத்து நீவைத்துக்கொ
ளுசிதாக சகலவிடத் துக்குமிதைக்
கொடுக்கும்வகை யோதக்கேளே. 49

ஓதியவேப் பிலைநாலி னுடனேசுழற்
கோடியுள வும்மருந்து
மேதுவுடன் கூட்டியரைத் தேநாழி
நீரனிலு மேகலக்கி
யேதுரித மாகவுங்கொள் ளுப்பின்றி
யன்னப்பா லேகொள்பத்தியம்
சாதுவாய் விடமீளும் நிம்பாதி
மருந்திதென்றே சாற்றலாமே. 50

(இ-ள்) வேப்பிலையைக் கல்வத்திலிட்டு சதுரக்கள்ளிப் பால்விட்டு நன்ருக அரைத்துக் குழப்பி வெயிலில் வைத்துக் கிளறவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்கள் வைத்தால் கலகலப்பாக லேகிய பதத்தில் இருக்கும், இதனை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி ஒரு கழற்சிக்கொட்டையளவு எடுத்து நான்கு வேப்பிலையுடன் சேர்த்து நன்ருக அரைத்து தண்ணீருடன் கலக்கி உட்கொள்ளவும்.

**பத்தியம் :** உப்பை நீக்கி வெந்நீர் சாதம் அல்லது பால் சாதம் மாத்திரமே உட்கொள்ளவும், விஷங்கள் தீரும்.

## 36. விஷத்திற்குத் துருசாதி மருந்து

எருக்கம்பா லுரியிற்றுரு சியுமைந்து
கழஞ்சதுவு மேதுத்தந்தா
னுருக்கமுட னேங்கழஞ்சி ரண்டுமுன்சொற்
பாலதனி லூறப்போட்டு
வருக்கமுள்ள மிளகுள்ளி விழுதிவேர்
மூன்றில்பலம் வகைக்கேயொன்று
திருத்துவசம் பதுபலங்கால் நாலுமுன்சொல்
மருந்ததையும் சேர்த்திடாயே. 51

சேர்த்துமுசு முசுக்கைச்சாறு விட்டரைத்து
வாறுபங்காய்ச் செய்துகொண்டு
சாத்தியசொற் படிமுன்று நாளாறு
பொழுதுவெந்நீர் தனிற்கலக்கி
ஆத்தமுடி யாவிடங்கள் கடித்தவர்க்குக்
கொடுமீளு மதுக்குத்துவாலே
வாய்த்தசின்னி யவுரிகுப்பை மேனிவசம்
பதுநாலு மரைத்துப் பூசே. 52

அரைத்துப்பூ சிடுமுப்புமாகாது
முருங்கிலேச்சா ருகுஞ்சோறு
முரைத்திடுபா லும்பிசைந்து கடிவாயிற்
கட்டுவிட முடனேதீரு
முரத்ததுரு சாதிமருந் திதுதஞ்சை
நகரதனே யுசிதமாக
துரைத்தனஞ்செய் சரபேந்திர பூபதியு
முணர்ந்ததிது வுந்தப்பாதே. 53

| | |
|---|---|
| (இ.ள்.) எருக்கம்பால் | ½ படி |
| துருசு | 6¼ வராகனெடை |
| துத்தம் | ,, ,, |

இவ்விரண்டையும் முன்கூறிய எருக்கம்பாலில் ஊறப் போட்டுச் சுவறியபின்

| | | | |
|---|---|---|---|
| மிளகு | 1 பலம் | விழுதிவேர் | 1 பலம் |
| பூண்டு | 1 பலம் | வசம்பு | ¼ பலம் |

இவைகளையும் கூட்டி முசுமுசுக்கைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து 6 பங்குகளாகச் செய்துகொள்ளவும். தினம் 2 வேளை வெந்நீருடன் கலந்து பருகவும்.

விஷத்தால் தீண்டப்பட்டவர்களுக்கு கொடுக்கவும்.

(2) மேலுக்குப் பூச்சு மருந்து

| | |
|---|---|
| அவுரி | குப்பைமேனி |
| சின்னி | வசம்பு |

இவைகளை நன்றாக அரைத்து மேலுக்குப் பூசவும் ஆறாத விஷக்கடிகள் தீரும்.

**பத்தியம்:** உப்பு நீக்கி, முருங்கிலை தாளித்த ரஸம் பால் முதலானவைகளை உட்கொள்ளவும்.

(3) பால் சாதத்தை நன்கு பிசைந்து கடிவாயில் கட்டினாலும் விஷங்கள் தீரும்.

## 37. விடத்திற்கு ஒத்தடம்

பாந்தளவிடந் தலைக்கேறி லொத்தடமொன்
றுண்மையதாய்ப் பகரக்கேளுஞ்
சீந்தில்சமூ லமுமுள்ளி வசம்புடன்மூன்
றதுங்கூட்டித் திடமதாகப்
பாந்தமுட னேதுவைத்துச் சட்டியினில்
வதக்கிநன்ருய்ப் பதமதாக
வாய்ந்தவொத்தி டமிடுமண் டைக்கொண்ட
விடமீண்டு வண்மையாமே. 54

(இ-ள்.) பாந்தளப் (பெரும்பாம்பு) பாம்பினால் கடிக்கப்பட்டு விஷம் மண்டைக்கேறில், சீந்தில் கொடியைச் சமூலமெடுத்துப் பூண்டு, வசம்பு இவற்றையுஞ் சேர்த்து நசுக்கியொரு சட்டியிலிட்டு வதக்கி ஒரு துணியில் வைத்து உடம்பு முழுவதும் ஒத்தடமிடவும். விஷம் மீளும்.

## 38. நிலவாகைக் கற்பம்

நிலவாகை யதுபோது கொடுவந்து நலமான
 நிழல்மீதி லேயுலர்த்தி
பலமான வுடல்மீதி லிடிதூளைப் பொடியாகப்
 பணிசீரை வடிகட்டியே
நல்பேயன் சுரையோடு வுடையாம லதில்வைத்துச்
 சதமான சூர்ணமதையும்
நலவெரு கடிதூளைச் சுடுநீரில் விடுநீயும்
 நயமாகும் கடிவிடமுமே. 55

கடிபெருச் சாளிக்கு சிறுசெருப் படிச்சாற்றில்
 கடிதூளை கலந்துண்டிடு
துடிபெருஞ் சாரணை யதன்ரசத் தினிற்கலந்
 தொருகடிப் பிரமாணம்
படியினிற் றிடமுமூஞ் சுறுகடித் திடுவிடம்
 பறக்குமே சிறுபாம்பதற்
கடவுமுத் தாமணி யிலைரசத் தினிற்கொளுங்
 கடிவிட மதுதீருமே. 56

அதிதீரு விழுமியிலை ரசமீதிற் கொடுநாக
 மதின்விட மதுதீருமே
விதமான சிறுகுறிஞ் சாரத்தி னிற்கொளு
 விரியனின் கடிமீளுமே
சதமான யெலுமிச்சை யிலைரசத் தினிற்கொளுஞ்
 சாற்றரவின் விடமெலாம்போம்
பதபாக விலைரசத் தினிற்கொளு நிலமீதிற்
 படர்செய்யான் கடிதீருமே 57

தீருமஞ் ஞண்டுவாக் களியின் விடங்கூட
 சேப்பவுரி ரசத்தினிக்கொ
ளுருசெவ் வட்டைபேய் நாய்நரி வண்டரணை
 யோந்திதவ ளைக்குரங்கு

யூருமெக் கடிவிட மோடுங்கை யாந்தகரை
யுறுசாற்றி னிற்கொண்டிட
சாருமீ ளேயிருமற் றீருமே சொன்னதுவுந்
தவருது செய்துபாரே. 58

பாருநொச் சியினிலேச் சாறதிற் கொடுகுளிர்
பறக்குமே குளிர்காய்ச்சலு
மீருநல் லெண்ணெயிற் கொடுக்கவும் விக்கலும்
வெள்ளேயோக் காளமுமறுங்
கூறுமா வெண்ணெயிற் கொடுவெதுப் பதுமுதற்
கொண்டிடிற் றேனிற்கொள்
சாருமா நெய்யினிற் கொடுமுடம் பூறியே
சரீரமும் புஷ்டியாமே. 59

ஆகும்வெள் ளாட்டினிற் கோமியந் தனிற்கொள
வச்சோகை காமாலேயு
மேகுமா கோமியங் கொள்ளகவை பெருவயிறு
விப்புருதி நீர்க்கோர்வையும்
போகுமக் குடல்வாதம் வயிற்றினிற் கெண்டையும்
பொல்லாத கவுசையுமறும்
வேகதிப் பிலிபொடி மீதினிற் கொடுபித்த
மேகுமின் னமோதவே. 60

ஓதுசுக் கதுசூர்ண மோடதைக் கொடுவாத
மோடுமே தப்பாமலே
சாதகக் குளிருவெந் நீரினிற் கொடுதீருஞ்
சார்சுரப் பான்கிரந்தி
பூதலக் குறுவைதண் டூலமீ திருபது
போதுய்ய வைத்துநீகொள்
ளூதல்விப் புருதிபுண் படுவனுஞ் சிலந்தியு
மோடுமின்ன முஞ்சொல்வேனே 61

இன்னமுங் கண்ணினிற் காணுத பிளவையு
மிசைமாவைக் கட்டுமுதலாம்
சொன்னது சூனிய மின்னம்வெகு வியாதியுந்
துரத்துமனு பானமதனுல்
அன்னமுஞ் சொர்ணமும் பன்னுதமிழ் வாணருக்
கன்பாய்க் கொடுக்கவல்ல
மன்னர்மன்ன வன்சர பேந்திரனுணர்ந் தநில
வாகையின் கற்பமிதுவே. 62

(இ-ள்.) நிலவாகையைச் சமூலமாக எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனையொரு பூணில்லா உலக்கையினுல் இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒரு பேய்ச்சுரைக் குடுக்கைக்குள் பத்திரப்படுத்தவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் கொடுக்கக் கடிவிஷங்கள் தீரும்.

பெருச்சாளிக் கடிக்குச் சிறுசெருப்படிச் சாற்றில் கொடுக்கவும்.

மூஞ்சூறு கடியாகுல் பெருஞ்சாரணை ரசத்தில் உட்கொள்ளவும்.

உத்தாமணிச் சாற்றில் கொடுத்தால் சிறுபாம்பின் விஷம் தீரும்.

நாகம் கடித்த விஷமாகுல் விழிதி இலைச்சாற்றுடன் உட்கொள்ளவும்.

சிறுகுறிஞ்சான் சாற்றில் கொடுத்தால் விரியன்கடி தீரும்.

மற்ற எவ்வித பாம்பாகுலும் எலுமிச்சை இலைரசத்தில் கொடுக்கவும்.

செய்யான் கடிக்குப் பாகல் இலைச்சாற்றுடன் நல்கவும்.

நட்டுவாய்க்காலிக் கொட்டிற்கு அவுரி இலைச்சாற்றில் இச்சூர்ணத்தைக் கொடுக்கவும்.

கையாந்தகரைச்சாற்றில் இதை உட்கொண்டால் செவ்வட்டை, பேய்நாய்கடி, நரிக்கடி, வண்டுகடிகள், அரணை, ஓந்தி, தவளை, குரங்கு இவைகளின் கடிவிடங்கள் தீருமென்பதற்கையமில்லை.

ஈளை, இருமலும் தீரக் கையாந்தகரைச் சாற்றுடன் இச்சூரணத்தைச் சாப்பிடவும்.

குளிர் ஜ்வரமாகில் நொச்சிச் சாற்றில் கொடுக்கவும்.

நல்லெண்ணெயில் குழைத்துக் கொடுத்தால் விக்கலும் வெள்ளோக்காளமும் தீரும்.

பசு வெண்ணெயில் இதனைக் கொடுத்தால் உஷ்ணம் தீரும்.

உடம்பு அதிகமாகப் பருத்திருந்தால் தேனில் கொடுக்கவும்.

இளைத்த உடம்பு புஷ்டியாக வேண்டுமானால் இச்சூரணத்தைப் பசுவின் நெய்யுடன் குழைத்துச் சாப்பிடவும்.

சோகை, காமாலை முதலியவைகட்கு ஆட்டு மூத்திரத்துடன் உட்கொள்ளவும்.

அகுவை, பெருவயிறு, விப்புருதி, நீர்க்கோர்வை குடல்வாதம், வயிற்றில்வலி, கவுசை முதலான ரோகங்களுக்குப் பசுமாட்டு மூத்திரத்தில் கொடுக்கவும்.

திப்பிலிச் சூரணத்துடன் கொடுத்தால் பித்தங்கள் தீரும்.

சுக்குச் சூரணத்தில் கொடுக்க வாதரோகங்கள் மாறும்.

கரப்பான், கிரந்தி முதலானவைகளுக்கு ஆறிய வெந் நீரிலிட்டுக் கொடுக்கவும்.

குறுவையரிசியுடன் கலந்து 20 வேளைகள் உட் கொண்டால் விப்புருதி, புண், கடுவன்' சிலந்தி, முதலான வைகள் தீரும்.

பிளவை, அவைக்கட்டு, சூனியம் முதலானவைகளும் தக்க அனுபான உபயோகத்தால் தீரும்.

### 39. விஷத்திற்கு ஆடுதீண்டாபாளைக் கற்பம்

ஆடுதீண் டாப்பாளை யேசமூலங்
கொண்டதைநி ழலுலர்த்தி
நாடிநன் ருயிடித்தேசூர ணங்கள்செய்
நன்ருகப் பேய்ச்சுரையினின்
கூடுவொன் றதிலடைத் தேய்ந்த தூள்தனை
கொடுபுள்ள டிப்பி ரமாணம்
நீடுவெந் நீர்தன்னி லேகலந் தேகொள்ளன்
னேரமும் வாந்தியாமே. 63

ஆகும் வாந்தியு மெந்தப் பாந்தளுங்
கடிவிட மறுமேதப் பாமலே
தேக சாந்தியு மாகுமா டுதின்ருய்
பாளைசேர் சூர்ணங்க ளிதுவே
வாகுதஞ் சாபுரி யையாளுசுந் தரசந்
திரவதன துளசேந்திர பூபன்
ருகசந் ததியிந்தி ரபோக முந்தன
தனதன்சர பேந்திரனுணர் கர்பமே. 64

(இ-ள்.) ஆடு தீண்டாப்பாளையைச் சமூலமாக எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒரு பேய்ச்சுரைக் குடுக்கையில் பத்திரப்படுத்தவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் கலந்து உட்கொள்ளவும். வாந்தி எடுக்கும். பாந்தளப் பாம்பு விஷங்கள் தீரும், தேகமும் புஷ்டியாகும்.

## 40. விடத்திற்கு மருக்காரைச் சூரணம்

மருக்காரை வேராதிச் சூரணமொன்
றோதக்கேள் வன்மையாக
மருக்காரை பேய்த்துமட்டி குட்டிவிளா
வீழிநில வாகைவேருங்
கருப்பிடா மிளகரணை பொன்முசுட்டை
நன்னாரி கானில்மேவும்
வருக்கமுள்ள வாடுதின்னைப் பாலையழிஞ்
சில்வேரும் வகைசொல்வேனே. 65

வகையான தலைச்சுருளி சிவனார்வேம்பு
டவேரு வன்மையான
புகலுமந்த வெள்ளருகு கருஞ்சீர
கப்பட்டை புனத்தில்மேவுந்
தகுங்கொல்லங் கோவையப்பைப் பழுபாகல்
தலைமுறுக்கிச் சாற்றின்னாவி
னுகுங்கிழங்கு வாகவகை பத்தொன்ப
துஞ்சரியா யொக்கக்கொள்ளே, 66

சரிகொண்டு நிழலுலர்த்த லாயுலர்த்திப்
பின்பிரவி தன்னில்வைத்துத்
துரிசாகவிடித்து நன்றாய் வஸ்திரகா
யம்பண்ணுஞ் சூரணத்தை
உரமான பேய்ச்சுரைக்காய் கூட்டிலதை
யடைத்துவைத் துன்னிடத்தி
லாவமுத லெதுகடித்து வந்தாலுங்
கொடுக்கும்வகை யதுசொல்வேனே. 67

அதுகேளு கைலாஸ நாதரையுந்
  தியானித்து வன்பதாக
இதமாக வெருகடிப்பி ரமாணஞ்சூ
  ரணமெடுத்து ஈய்ந்துபாரு
யிதமாகு மெவ்விடமு மீளுஞ்சிவ
  கிருபையினு லெழிலாந்தஞ்சை
பதியான சரபோசி மகாராஜ
  னுணர்கூர்ணம் பலனுண்டாமே. 68

(இ-ள்.)

| | |
|---|---|
| மருக்காரைவேர் | பேய்த்தும்மட்டிவேர் |
| குட்டிவிளாவேர் | வீழிவேர் |
| நிலவாகைவேர் | மிளகரணைவேர் |
| பொன்முசுட்டை | நன்னாரிவேர் |
| ஆடுதீண்டாப்பாளைவேர் | அழிஞ்சில்வேர் |
| தலைச்சுருளி(பெருமருந்து) | சிவனார்வேம்புவேர் |
| வெள்வறுகு வேர் | அப்பைகோரைகிழங்கு |
| கொல்லங்கோவைக்கிழங்கு | |
| கருஞ்சீரகம் | பழுபாகல் கிழங்கு |
| முலைமுறுக்கிக்கிழங்கு | நாபிக்கிழங்கு |

இவைகளைச் சமனெடையெடுத்து நிழலில் உலர்த்திப் பின் வெயிலில் நன்ருகக் காயவைத்துக் கல்லுரலில் இட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தைப் பேய்ச்சுரைக்காய் கூட்டிற்குள்ளடைத்து வைத்துக் கொண்டு வேண்டும்போது மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தண்ணீருடன் உட்கொள்ளவும். எவ்வித விஷகடிகளும் தீரும்.

### 41. விடத்திந்கு ரஸமருந்து

நாவியரி தாரகெந் தகம்மனே
  சிலைதுருசு நவிலுமைந்திற்
கோர்வரா கனெடையிர தமதுவ
  ராகனெடை யொன்றேகாலே

யாவதெலாந் தேங்காய்ப்பால் விட்டரைத்து
மைப்போல யானவாறே
ஆவலுடன் மருந்ததனி நிறைபாதி
பனைவெல்ல மதுவுங்கூட்டே. 69

கூட்டி நன்றாய் மத்தித்துச் சிமிழதனி
லேவைத்துக் கொண்டுபாம்பு
நாட்டினிற்றேள் முதலான துக்குங்குன்றி
யெடையுண்ணு நன்மையாம்பார்
ஆட்டெடுத்துக் காளியைவென் றிடுதில்லை
யம்பலவ ரருளினாலே
நாட்டினிற்கீர்த் திகள்பெற்ற சரபேந்திர
பூபனுண்ட ரஸமருந்தே. 70

(இ-ள்.) சுத்திசெய்த நாபி
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, மனோசிலை
,, துருசு
,, தாளகம்
இவைகள் வகைக்கு 1 வராகனெடை
சுத்திசெய்த பாதரஸம் 1¼ ,,

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தேங்காய்ப்பால் விட்ட ரைத்து, மைபோலாகிய பின் இதற்குச் சரியளவு பனை வெல்லம் கூட்டி நன்கு அரைத்து ஒரு சிமிழில் பத்திரப் படுத்தவும்.

தேள், பாம்பு இவை தீண்டினவர்களுக்கு ஒரு குன்றி அளவெடுத்து உட்கொள்ளக் கொடுக்கவும். குணமுண் டாகும்.

## 42. விடத்திற்கு கெந்தக மருந்தக

கெந்தகமி ரசந்துருசு மிளகுமகி
ழம்விரையுங் கொடியதான
யிந்துப்புப் பூவந்திப் பழமுடன்திப்
பிலியெட்டு மெழிலதாக
பந்தமுட னெவ்வொரு பலம்நேர்வா
ளப்பருப்புப் பலமூவைந்தா
மிந்தவகை யெல்லாம்வேப் பெண்ணெய்விட்டே
யரைத்துசிமி ழினில்வைப்பாயே. 71

வைத்துகண்ட விடக்கடிக்கும் புளியங்கொட்
டையிற்பாதி மாத்திரந்தான்
வெத்திலையிற் றடவியுண்ட மாத்திரத்தி
லுடனேவிட மீளும்பேதி
யுத்திடிற்பா லிற்பயறு போட்டுக்கஞ்சி
காய்ச்சிக்கொடு வுசிதவன்ன
சத்திரபதி சரபேந்திர பூபதியு
முணர்ந்திடுகெந் தகமருந்தே. 72

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம் மகிழம்விதை
,, துருசு பொரித்த இந்துப்பு
,, மிளகு பூவந்திப்பழம்
,, திப்பிலி
இவைகள் வகைக்கு ஒரு பலம்
சுத்திசெய்த நேர்வாளம் 15 பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டு வேப்பெண்ணெய்விட்டு நன்றாகவரைத்து ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும், விஷ கடிகளுக்கு இம்மருந்தில் அரைப் புளியங்கொட்டையளவு எடுத்து வெற்றிலையில் தடவி உட்கொள்ளவும். நன்கு பேதியானுல் பயற்றங் கஞ்சியைப் பசுவின் பாலுடன் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

## 43. விடத்திற்கு ரஸமருந்து

சுத்திநேர் வாளம்வரா கனெடைபத்து
கருநாபி சுத்திபண்ணி
யுத்தவரா கனெடையொன்று மரையுமி
ரஸந்தானு மோதக்கேளு
சத்துவபா யேழுவரா கனெடைமுதிர்
தேங்காய்க்கீத் தநுவுந்தானும்
யுத்தியுடன் வராகனெடை யைந்தும்ரசத்
தைத்தேங்கா யொண்பால்விட்டே. 73

பாலைவிட்டு முன்னேயரை பின்புநாவி
யைச்சேர்த்துப் பலமதாக
சாலவரை பின்புநேர் வாளஞ்சேர்த்
தரையுங்கொட்டாங் கச்சிசுட்டே
கோலமுள்ள கரியாறு வராகனெடை
சேர்த்தரைத்துக் கொண்டுவெல்லாஞ்
சீலமிள்ள மைப்போலே யானவுடன்
புட்டிவெல்லஞ் சேர்த்துக்கொள்ளே, 74

புட்டிவெல்ல மொருபலஞ்சேர்த் தரைத்துசிமி
ழினில்வைத்துப் பிறகுகேளு
துட்டபேய்நாப் பாம்புஷூமத்தங்கா
யைத்தின்ற தற்குத்தேத்தான்
கொட்டைசிறு சமமாத்திர மொருவேளைக்
கீவிடங்கள் கூவியோடு
மட்டதிசை யிலுங்கீர்த்தி பெற்றசர
பேந்திரனுண ரஸமருந்தே. 75

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த நேர்வாளம் | | 10 | வராகனெடை |
| ,, | கருநாபி | 1 | ,, |
| ,, | பாதரஸம் | 7 | ,, |
| தேங்காய்க்கீத்து | | 5 | ,, |

இவைகளுள் முதலில் பாதரஸத்தைக் கல்வத்திலிட்டுத் தேங்காய்ப்பால் விட்டு நன்ருகவரைத்துப் பின்னர் நாபியையும், பின்பு நேர்வாளத்தையும் அரைத்துக்கொள்ளவும், இதனுடன் கொட்டாங்காச்சி கரி 6 வராகனெடையையும் பனைவெல்லம் 1 பலமுங் கூட்டி மைபோலரைத்து வைத்துக் கொண்டு ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பாம்பு கடி, ஊமத்தங்காயை தின்றதினுல் உண்டான விஷங்கள் முதலியவைகளுக்குத் தேத்தான் கொட்டையள வெடுத்து ஒரு வேளை உட்கொள்ளக்கொடுக்கவும். விஷங் கள் தீரும். நன்கு பேதியாகும்.

## 44. விடத்திற்கு வெள்ளைக் காக்கணம்வேர்

கள்ளவிடங் காணுமற் கடித்தவர்க்கு
மோர்மருந்து கருதக்கேளு
வெள்ளைக்காக் கணம்வேரைக் கொடுதின்ற
வுடனேயந்த விடமுமீளு
முள்ளபடி யிதுசித்தர் சொன்னமுறை
யதைநெடுநா ளுணர்ந்தா ராய்ந்து
வள்ளல்தஞ்சை சரபோஜி மகராச
னிர்ணயித்த மருந்திதாமே. 75

(இ-ள்,) காணுக்கடி விடங்களுக்கு வெள்ளைக் காக்கண வேரை உட்கொள்ளக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

விஷத்தின் நிலமைக்குத் தக்கபடி மருந்தின் அளவை நிர்ணயித்துக் கொள்ளவும்.

## 45. விடத்திற்கு வேறு

சளமுடைய விடத்திற்குச் சித்தர்சொன்ன
முறையொன்று சாற்றக்கேண்மோ
மிளகரணை வேரதனைக் கொடுதின்ற
வுடனேயெந்த விடமுமீளும்

வளமுடைய தஞ்சை நகர் மன்னவர்கோன்
சரபேந்திரன் மனதுணர்ந்த
களிவுடைய மருந்தி துவே விடமருந்து
அதுக்குத்தக் கனையீவாயே, 77

(இ-ள்.) மிளகரணை வேரை எடுத்து உட்கொள்ள எவ்விதமான காணுக்குடி விஷமும் தீரும்.

**46. விஷத்திற்கு வாளமருந்து**

வாளஞ்சா ணியிலவித்து3 சுத்திபண்
ணினதுவரா கனெடைமூன்று
நீளமுள கடுகுரோ கணிவராக
னெடைரெண்டு நீழல்தானுஞ்
சூளுமிலுப் பைப்பூவும் வராகனெடை
யொன்றிதெலாஞ் சுப்பிரமான
கோளில்கையாந் தகரைச்சாறு விட்டொருசா
மமரைத்துக் கொண்டிடாயே. 78

கொண்டுவிடங் கடித்தவர்க்கு யெருக்கம்பா
லிற்கொடுநீ குன்றிமாத்திரம்
வண்டவிட மீளுமிது வாளாதி
மருந்திதுவே வையத்தோர்க்கா
யண்டினரைக் கார்க்குந்தயா நிதி தஞ்சை
துளசேந்திர வண்ணலீன்ற
எண்டிசையெ லாங்கீர்த்தி பெற்றசர
பேந்திரனரு ளிதுவுமாமே. 79

(இ-ள்.) சாணியில் அவித்துச் சுத்திசெய்த

| | | |
|---|---|---|
| நேர்வாளப்பருப்பு | 3 | வராகனெடை |
| கடுகரோகிணி | 2 | ,, |
| இலுப்பைப்பூ | 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறு விட்டு நன்ருக ஒரு சாமம் வரை அரைக்கவும். பின்னர்

குன்றிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். விஷக்கடிகளுக்கு ஒரு மாத்திரையை எருக்கம் பாலில் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

### 47. விஷத்திற்கு அஜமூத்ராதி மருந்து

நாலுமரக் கால்பிடித்த பானையிலே
யசமூத்திரம் நாற்படிவிட்
டோலமிட வடுப்பினிலே வைத்துநன்ருய்க்
காய்ச்சிடு நுரையடங்குஞ்
சீலமுள்ள நாகவல்லி யிலைநூறு
நறுக்கியதிற் சேர்த்துப்போட்டு
சாலவதை மூன்றத்தொன் ருய்க்காய்ச்சி
யிறக்கியந்தத் தழையைத்தானே. 80

அத்தழையைப் பிழிந்தெரித்து போட்டுவடிக்
கட்டிக் கொண்டடுப்பில்வைத்து
நந்துவமாய்க் காய்ச்சிலது பாகுபதத்
தில்வரச்சே நன்னேர்வாளஞ்
சுத்தமுள்ள பருப்புவரா கனெடையொன்று
மரையுமரைத் துக்கரைத்து
பத்தியுட னடுப்பேத்தி யொருபொங்கல்
வந்தவுடன் பதங்கள்கேளே, 81

பதங்கேளு யிரதம்கால் வராகனெடை
முறித்துவிட்டு பக்குவங்கண்ட
பதக்கிறக்கிப் பிறகுவச மூத்திரந்தான்
சேர்த்ததற்குப் படியொன்றுக்கு
விதங்கண்டு கெந்தகமோ ரரைவராக
னெடையுந்தான் வெண்பாஷாண
மிதங்கொள்ளக் கால்வராக னெடைரெண்டுந்
தூள்பண்ணி யேநீபோடே.

போட்டுநன்ருய் வழித்துவொரு சிமிழதனில்
வைத்துக்கொள் பொல்லாப்பாம்பு
மாட்டுவிட மதற்கும்வெத் திலையினிலே
தடவிகுன்றி மாத்திரமீ
போட்டும்விட மீளுந்தஞ்சை நகர்தனில்வாழ்
சரபேந்திர னுணர்ந்ததிந்த
ஆட்டின்மூத் திரமோதி விடமருந்து
யிதைநீயு மன்பாய்ச்செய்யே. 83

(இ-ள்) 4 மரக்கால் கொள்ளுமளவுள்ள ஒரு பானை யில் வெள்ளாட்டு மூத்திரம் 4 படிவிட்டு அடுப்பின்மேல் ஏற்றிக் காய்ச்சி நுரையடங்கும்போது, நூறு வெற்றிலையை நறுக்கிப்போட்டு மூன்றில் ஒன்று ஆக்கிக்கொள்ளவும். பின்னர் வெற்றிலையைப் பிழிந்து எரிந்துவிட்டு வடிக்கட்டி மறுபடியும் அடுப்பில் வைத்துக் காய்ச்சவும்.

இது பாகுபதத்தில் வரும்போது சுத்தியான நேர் வாளம்பருப்பு 1 வராகனெடை எடுத்து அரைத்துக் கரைத்துக்கொள்ளவும். இது ஒரு கொதி வந்தவுடன் சுத்தி செய்த பாதரசம் $\frac{1}{4}$ வராகனெடை சேர்த்துக்கொள்ளவும். பின்னர் சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் $\frac{1}{2}$ வராக னெடை, சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம் $\frac{1}{4}$ வராக னெடை இவ்விரண்டையும் தூள்செய்துபோட்டு ஒன்ருகக் குழப்பி வைத்துக்கொண்டு. ஒரு சிமிழில் பத்திரப்படுத்த வும்.

பாம்பு விஷங்களுக்கும் இந்தக்குழம்பில் ஒரு குன்றியன வெடுத்து வெத்திலையுடன் தடவி உட்கொள்ளக் கொடுக்க வும். விஷங்கள் மீளும்.

### 48. கரு வழலை முதலான விடத்திற்கு பூவந்திப்பழ மருந்து

கருவழலை முதலான பாம்பினுக்கு
மோர்மருந்து கருதக்கேண்மோ
தருவிலுரை பூவந்திப் பழத்தையரைத்
தேசுடுநீர் தன்னிற் கொள்ள
வருவிடமு மீளுமவ் விடமறிந்து
கொடுசென்னல் வயல்சூழ் தஞ்சைப்
புரவலனுஞ் சரபேந்திர னுணர்ந்ததிந்த
பூவந்திப் பழமருந்தே. 84

(இ-ள்.) பூவந்திப் பழத்தை வெந்நீரில் அரைத்து உட்கொள்ளக் கொடுக்கவும். கருவழலைப்பாம்பு கடிகளும் தீரும்.

### 49. சிலந்தி கடிக்கு மருந்து

காரமுள்ள பெருங்காய மோடுநல்
கனத்தவுள்தி வசம்புடன்
தேருமஞ்ச ளும்பாதி நாலையுஞ்
சேர்த்தரைத்து யுள்ளுக்குமீ
கூறுகின்ற சிலந்தியின் விடமுங்
குறையிலாம லேமீளுமே
தாரணிப் புயனுநீதி பெற்றதுரை
சரபபூப னுமுணர்ந்தே. 85

(இ-ள்.) பெருங்காயம் வசம்பு
பூண்டு மஞ்சள்

இவைகளைச் சமனெடுத்து நன்றாக அரைத்து உள்ளுக்குக் கொடுக்கச் சிலந்தி கடித்ததாலுண்டான விஷங்கள் தீரும்.

## 50. சிலந்தி கடிக்குச் சுக்காதி மருந்து

விடமிகுந்த சிலந்தி யின்கடி
    மேவிடிற்கடி வாயினி
லிடமருந்து சுக்கது மஞ்சளு
    றுனியதாமிள கிதுகள்முன்
றிடமுளக் கலினம்மி யிலரைத்
    தேயிடுக்கடி வாயினிற்
றுடருமவ்விட மீளுமேயிது
    சுக்குமாதி மருந்திதே. 86

(இ-ள்.) சுக்கு மஞ்சள்
மிளகு

இவைகளைச் சமமெடுத்து அம்மின்மேல் வைத்து நன்றாக அரைத்துச் சிலந்தி கடித்தவாயில் பூசவும். விஷங்கள் தீரும்.

## 51. சிலந்தி கடிக்கு அத்தி ரஸப் பூச்சு

இன்னமொன்று சிலந்தியின்கடிக்
    கிதமுடன்கடி வாயினில்
நன்னயமுள வத்தியின் ரசம்
    நல்லயெண்ணெயுங் கூட்டியே
சொன்னதும்பிச காமலேயிடு
    துடறுமவ்விட மீளுமே
மன்னர்கேசரி சரபபூபனும்
    வகுத்த வத்தியின் மூச்சதே. 87

(இ-ள்.) அத்திப்பட்டைச் சாற்றையும் நல்லெண்ணெயும் சேர்த்துக்குலுக்கிச் சிலந்திகடித்த இடத்தில் தடவவும். சிலந்தி கடிகள் தீரும்.

### 52. சிலந்தி கடிக்குக் குன்றியாதிப் பூச்சு

செப்புகுன்றி யிலைநன் ஞரிவேர்
    சேரும்வட்டத் திருப்பிவேர்
தப்பிலா யிலாமிச் சுசந்தனந்
    தாமரை யினல்வளையமு
மப்பவே கறந்தாவின் பாலைவிட்
    டரைத்துமக் கடியினிலிடு
செப்பமாகச் சிலந்தி யின்கடி
    தீருங்குன்றியின் பூச்சதே. 88

(இ-ள்.) செப்புக்குன்றியிலை இலாமிச்சம்வேர்
நன்ஞரிவேர் தாமரையிலைனுட்
வட்டத்திருப்பிவேர் சந்தனம் [சுருள்

இவைகளைச் சமனெடுத்து அப்போதே கறந்த பசுவின் பால் விட்டு நன்ருக அரைத்துச் சிலந்தி கடித்த இடத்தில் போடவும். விஷங்கள் தீரும்.

### 53. சிலந்திக் கடிக்குக் குன்றியாதித் துவாலை

நொச்சிகுன் றியழிஞ் சியினிலை
    நுக்குமிந்த முன் யிலையதை
வச்சுவம் மியிலே நறுக்கிநீர்
    வார்த்த டுப்பினிற் காயவைத்து
ஏச்சித் தந்துடன் முழுகவிட்டிட
    வுடன சிலந்தியின் விடமாறும்
பச்சை மால்சர பேந்திரபூபதி
    பகரு குன்றிலை துவாலையே. 89

(இ-ள்) நொச்சி அழிஞ்சில் இலை
குன்றி

இம்மூன்று இலைகளையுங் கொண்டுவந்து அம்மியின் மேல்வைத்து நறுக்கி நீர்வார்த்து அடுப்பின்மேல் ஏற்றிக் கொதிக்கவைத்து அக்கஷாயத்திஞல் ஸ்நானஞ்செய்யவும். சிலந்தி விஷங்கள் தீரும்.

### 54. சிலந்திக் கடிக்குப் புகை

துட்ட மாஞ்சிலந் திக்கடிக் குப்புகை
சொல்லு வேன்மயி லிறகுடன்
சட்ட மாய்நிலப் பனைக்கி ழங்குவ
சம்புடன் பெருங் காயமுங்
குட்ட மும்வில குமிளகுடன்
கோட்ட முங்கடு குடனேநெய்ச்
சட்டி யினிலை கூட்ட யும்புகை
சட்ட மாய்க்கொள மீளுமே. 90

(இ-ள்.) மயிலிறகு மிளகு
நிலப்பனைக்கிழங்கு கோஷ்டம்
வசம்பு கடுகு
பெருங்காயம் நெய்ச்சட்டியிலை

இவைகளைச் சமனெடுத்துக் காயவைத்துக் கல்லுரலில் இட்டு இடித்துச் சூரணஞ் செய்துகொண்டு நெருப்பில் இட்டுப் புகைக்கவும். சிலந்தி கடிகள் தீரும்.

### 55. சிலந்திக் கடிக்கு உள்ளுக்கு மருந்து நசியம், துவாலை.

வருத்த முற்றிசி லந்தி யின்விட
மான துக்கோர் மருந்துகேள்
திருத்தி டுஞ்சறிபுலனிக்கி ழங்கி
லரைத்தேயும் பாக்கினிற் பாதியே
உரைக்கும் வெத்தி லையொன்று முள்ளியி
லும்பல மீரைந்ததாந்
தரைக்குனும்வசம் பதுவின்கொம்பு வொன்
றருமிளகது மிருபது. 91

இதுவெலாமரைத் தேவெந்நீரினி
லேகொளு மிதுநசியறும்
பதமுடன்விடு துவாலையொன்றுகேள்
பார்பிரண்டை விளாகிளா

துதிகம் பந்தமாய் சமூலமுங்கொளு
துப்புவன் டவா சியினின்வேர்
அது வுடன்சிறுக் கீரையுமுஞ் சமூ
லமுமிளகரணை வேரதே. 92

இதுவெலா மரைத் தேமரப் புளியி
வேகுழப்பிக்குழம் பாகவே
கவன மாய்ச்சுட வைத்துப் பூசிடு
கால் முதல்சிர மட்டுமே
தவமிகுந்தவர் சொன்ன தைத்தினஞ்
சரபப் பூபனு முணர்ந்துமெ
நவமதாகவே நிர்ண யித்தயின்
னலம் பெரும் விடமருந்ததே. 93

(இ-ள்) சிறு புலனிக் கிழங்கை அம்மியிலிட்டு அரைக் கொட்டைப் பாக்களவெடுத்து அதனுடன்.

| | |
|---|---|
| வெற்றிலை | ஒன்று |
| வெள்ளைப் பூண்டுப்பல்லு | 10 பலம் |
| வசம்பு | 1 பலம் |
| மிளகு | 20 (எண்ணிக்கையில்) |

இவைகளை வெந்நீர்விட்டு நன்ருகவரைத்து அதிலேயே உட்கொள்ளவும். இதனைப் பிழிந்து நசியமாகவும் இடவும்.

### மேலுக்குப் பத்து

| | |
|---|---|
| பிரண்டைச் சமூலம் | வண்டவாசி வேர் |
| விளா .. | சிறுகீரைச் சமூலம் |
| கிளா ... | மிளகரணை வேர் |
| கம்பந்திராய் | |

இவைகளைச் சமனெடுத்து அரைத்து அதனுடன் புளியையும் கரைத்துக் குழம்பாகுமட்டும் வற்றவைத்து

கால்முதல் சிரசுவரை பூசிவிடவும். சிலந்தி விஷங்கள் தீரும்.

### 56. சிலந்தி வண்டுகடி, போத்திகடிக்குக் குளி மருந்து

பேய்க் குமட்டியின் சாறுழக் குயெள்
  புரியு மெண்ணே யுழக்கதாம்
தாக்கி ரெண்டுங் கலந்து பானுவில்
  தானே வைத்தெடுத் தேயதை
தீர்க்க மானவண் டுகடியுள்ள துஞ்
  செப்பு போத்தியின் கடியதுக்
கேற்குமிட்டுக் குளிக்க வும்விட
  மேகு மானுமு ணர்ந்ததே. 94

(இ-ள்) பேய்க்கும்மட்டிச்சாறு ஒரு உழக்கு
எள்ளெண்ணெய் ,,

இவ்விரண்டையும் சமனெடுத்து ஒன்று கலந்து வெயிலில் வைத்து வண்டு கடிகளுக்கும், போத்தி கடிகளுக்கும் மேலே தடவி ஊறவைத்துக் குளிக்கவும். விஷங்கள் தீரும்.

### 57. பூரான் கடிக்கு மருந்து

காட்டிலுதை பூவந்திப் பழமிரண்
  டதற்குச்சரி கணக்காய்தானே
நாட்டிலுரை மிளகுசம னிரண்டு மைப்போ
  லேயரைத்து நாடிக்கொள்ளு
போட்டிடிதற் குப்பத்தியங் கசப்புமுத
  லானவுப்புப் புளிப்புமாகா
கோட்டி செய்யும் பூரானின் கடிதீரு
  மறுபத்தியங் கொண்டிடாயோ. 95

(இ-ள்.) பூவந்திப்பழம் 2 (எண்ணிக்கையில்)
மிளகு ஷை நிறைக்குச் சரிஎடை

இவ்விரண்டையும் நன்ருக மைப்போல அரைத்து உட்கொள்ளவும்.

**பத்தியம் :** புளிப்பு, கைப்புச் சுவையுள்ள பண்டங்களையும், உப்பையும் நீக்கிவிடவும்.

**மறு பத்தியம் :** உப்பை வறுத்தும், புளியைச் சுட்டும் உபயோகிப்பது நமது நாட்டு வழக்கமாகும்.

## 58. சிலந்திகள் போத்திகளுக்கு "இண்டந்தைலம்"

துள்ளியசி லந்திகடி கண்டுகடி
போத்திகடித் துற்றவர்க்கு
முள்ளையுஞ்சி வித்தள்ளி வெள்ளிண்டங்
கழியுந்தான் மூன்றுசாணே
கொள்ளும் நெருப் பினிற்போடற் றயிலம்விழு
மதைப்பூசு குணமதாகும்
வள்ளல்சர போசிமகா ராசாதி
ராசனுணர் மருந்திதாமே. 96

(இ-ள்.) வெள்ளை இண்டங்கழியை 3 சாண் நீளம் இருக்கும்படியாகக் கொண்டுவந்து அதன் மேலுள்ள முள்ளைச் சீவிவிட்டு அடுப்பில்போட மற்றொரு முனையில் இருந்து தைலம் வெளிப்படும். அத்தைலத்தைச் சிலந்திக்கடி, வண்டு கடி, போத்திகடி முதலான விஷக்கடிகளுக்குத் தடவவும், குணமுண்டாகும்.

## 59. செவ்வட்டைக்கடி முதல் சகல கடிகளுக்கும் பூச சிலாஜித் எண்ணெய்

அரைப்பலஞ் சிலாசித்து யெலுமிச்சம்
பழச்சாற்றி லரைத்துக் கொண்டு
வுரைக்கும் வெள்ளைப்பாஷாண மொருபலத்தை
கவசங்கட் டியுமேல்வைத்து
வரைத்ததுற்ற மொருவராக னெடையதின்
பேற்பொதிந்து வளவதாக
வுரைத்தபடி விரண்டுசே லையுமண்ணுஞ்
செய்துமண லுக்குள்வையே. 97

வைத்துமேல் வரளிநெருப் பிட்டுயெரித்
 தேமேலின் மணல்கறுக்கச்
சுத்தமுள நெருப்பசினைத் தள்ளிவிட்டு
 வதனுடைய சூடுமாற
வித்தெடுத்துப் பொடிசெய்து நாழியெண்
 ணெயில்விட் டேகலக்கி
பத்தியுடன் வாலைபதம் போற்றியதைச்
 செய்யும்வகை பகருவேனே, 98

பகருசிலா சித்தெண்ணெய் செவ்வட்டைக்
 கடிக்கிண்ணம் பலகடிக்கும்
அகலாம லிட்டிருந்த யிளவெந்நீ
 ரிற்குளிநீ யரப்பையிட்டுச்
சகலகடி மீளுமுயர் தஞ்சைநக
 ரனையாளுஞ் சரபபூபன்
புகலுமிந்த முறையதனை நம்பிச்செய்
 படரும்விடம் போகுந்தானே. 99

(இ-ள்.) சிலாஜித் $\frac{1}{2}$ பலம் எடுத்து எலுமிச்சம் பழச் சாறுவிட்டு நன்ருக அரைத்து வைத்துக்கொண்டு வெள்ளைப் பாஷாணம் 1 பலத்தை முன்போல் அரைத்துச் சிலா ஜித்திற்குக் கவசம் கட்டவும். துத்தம் ஒரு வராகனெடை எடுத்து அரைத்த விழுதையும் முன்சொல்லிய உருண்டைக்கு மேல்பொதிந்து, இரண்டு தடவை சீலைமண் கட்டவும். ஒருசட்டியில் $\frac{1}{4}$ வாசி சுத்தமான மணல்போட்டு, அதன்மேல் சீலைசெய்த மருந்தை வைத்து மறுபடியும் மணல் போட்டு அதன்மேல் எரிமூட்டைகளையடுக்கிக் கொளுத்திவிடவும். மேல்மண் கருகியவுடன் நெருப்பைத் தள்ளிவிட்டு சட்டியை அப்படியே சூடாற வைக்கவும். பின்னர் மருந்தை எடுத்துச் சீலைமண்ணை நீக்கிவிட்டுச் சுத்தமான நல்லெண்ணெயுடன் ($1\frac{1}{4}$ சேர் குழப்பி) அடிப்பின் மேலேற்றிப் பக்குவமாகக் காய்ச்சி இறக்கவும்.

இந்த எண்ணெயை செவ்வட்டைக்கடி முதலான பற் பல விஷ கடிகளுக்கும் உடம்பில் தேய்த்துக்கொண்டு இளஞ்சூடான வெந்நீரில் முழுகவும். அரப்பைத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்யவும்.

### 60. செய்யான் கடிக்குப் புளியிலை எண்ணெய்

களிவுடைய மனிதருக்குத் தரைதனிலே
ஊறுசெய்யான் கடித்திட்டாலே
புளியிலைச்சத றுடநல்ல யெண்ணெய்கலந்
தேமூன்று போதுகொள்ளு
அளியினங்கள் கீதங்கள் பாடமண்
டுகங்க ளதுகொர்ஜிக்க
வளமிகுந்த தஞ்சைநகர் சரபோஜி
ராஜனுணர் மருந்திதாமே. 100

(இ-ள்.) தரையின்மேல் ஊறும் கடித்தால் புளியிலைச் சாறுடன் நல்லெண்ணெய் கலந்து மூன்றுமுறை உட்கொள் ளவும். செய்யான் கடிகள் தீரும்.

### 61. செய்யான் கடிக்குக் குப்பைமேனி மருந்தும் பூச்சும்

குப்பைமேனிச் சமூலமுமே பிடுங்கிநன்று
யரைத்துளுக்குக் கொடுநீயிப்போ
செப்புமிதை யுந்தானேகடிவாயி
லும்பூசு செய்யான்றுனு
மொப்புடனே கடிவிடமு மீளுஞ்சிவ
கிருபையினு லுசிதத்தஞ்சை
செப்புமுட னுளுஞ்சர பேந்திரனுணர்ந்
தகுப்பைமே னிமருந்தே. 101

(இ-ள்.) குப்பைமேனியைச் சமூலமாகப் பிடுங்கிக் கொண்டு வந்து தண்ணீர் விட்டரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலேயும் பூசவும், செய்யான் கடிகள் தீரும்.

**62. செய்யான் கடிக்குப் பூச்சும், மருந்தும்**

விஞ்சைமிகு மருந்தொன்று செய்யானின்
கடியதற்கு விளம்பக்கேண்மோ
மஞ்சள்கொத்தா னிரண்டரைத்துக் கடிவாயிற்
பூசுனுக்கு மருந்துகேளு
சஞ்சலமி லாமல்சிறு மூலகத்தைச்
சிறுநீரிற் குனரைத்து
சஞ்சீவிப்பால் கொள்ளுமவ் விடந்தீரு
மானுவுணர் சதிரிதாமே. 102

(இ-ள்) மஞ்சள் கொத்தான்

இவ்விரண்டையும் சமனெடுத்து நன்ருக அரைத்துக் கடிவாயில் பூசவும். திப்பிலியை உலக வாசனையறியாத குழந்தைகளின் சிறுநீரில் அரைத்து உட்கொள்ளவும். செய்யான் கடிகள் தீரும்.

**63. செய்யான் கடிக்குப் பூச்சும், மருந்தும்**

மணித்தக்கா ளியினிலையுள் ளிவசம்பு
மரைத்துக்கடி வாயிற்பூச
வுணர்த்தவுப நாமுடன் குருந்திலையுங்
கடிவாயி லுடனேகட்டு
தணற்றமிர்ந்த செய்யானின் கடிதீருஞ்
சிவகிருபை தன்ஞல்மெத்த
மணத்தபுகழ் பெற்றவிபு வுணர்ந்தமணித்
தக்காளி மருந்திதாமே. 103

(இ-ள்.) மணித்தக்காளியிலை பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் நன்ருக அரைத்துச் செய்யான் கடிக்குப் பூசவும்.

2) குருந்தியிலையைத் துவைத்துக் கடிவாயில் கட்டவும். செய்யான் கடிகள் தீரும்.

### 64. செய்யான் கடிக்குப் பூச்சு மருந்து

ஒட்டடையும் நாய்வேளை யிலையுள்ளி
வசம்புமிள கினுடனிவ்வைந்துந்
திட்டமுட னரைத்துப்பழம் புளியதனிற்
குழைத்துகொதி பித்துத்தானே
சட்டமுள்ள சுண்ணாம்பிற் சாரித்துக்
கடிவாயிற் ருனேபூசு
அட்டியிலா மற்புடையன் செய்யானின்
கடிதீரு மருமருந்தே. 104

(இ-ள்.) ஒட்டடை நாய்வேளை இலை
வெள்ளைப்பூண்டு வசம்பு
மிளகு

இவைகளைச் சமனெடுத்து நன்ருகவரைத்துப் பழம் புளியுடன் குழைத்துக் கொதிக்கவைத்துச் சுண்ணும்பிற் சாரித்துச் செய்யான் கடிவரயில் பூசவும். விஷங்கள் தீரும் புடையான் பாம்பு தீரும்.

### 65. செய்யான் கடிக்குக் குக்கிலாதிப் பூச்சு

குக்குலொட்டி யிலைபவழக் குன்றிநல்ல
குன்றியிலைக் குணமாமுள்ளி
லொக்கவசம புடனுறு மறைத்துச் செய்யான்
கடிவாயி லுடனேபூசு
பக்குவமா யவ்விடமுஞ் சிவகிருபை
தன்னாலே பதறியோடு
மிக்கபுகழ் படைத்தசர பேந்திரனுணர்
பூச்சதுவும் மெய்யிதாமே.

(இ-ள்.) குக்கில் ஒட்டியிலை
பவழக்குன்றியிலை குன்றியிலை
பூண்டு வசம்பு

இவைகளைச் சமனெடுத்து அரைத்துச் செய்யான் கடி வாயில் பூசவும். விஷங்கள் தீரும்,

## 66. செய்யான் கடிமுதல் படிகளுக்கும் கொடிவேலியாதிக் களி

கொடிவேலி முருங்கைசெங்கத் தாரிபுங்கு
பாவட்டைக் குணமதான
வடவிளா மாவலிங்கை யில்வகைக
ளாங்கணக்கி லாறுவேருந்
திடமுடைய சிற்றவரைக் கிழங்கினுட
னெழுசாறுஞ் சேர்தண்டூல
முடனிடித்துக் களிகிண்டி நல்லெண்ணெ
யுடனதையு முண்பீர்தானே. 106

அதைத்தின்னு மூன்றுநா ளந்திசந்தி
யுந்தான்செய் யான்றகண்டும்
பதைக்குங்கா ஞக்கடியும் பலகடியுந்
தீருமிது பாருநல்ல
ததிக்குதவு கின்றவுத்தா மணிக்களியா
மிதுவுமன்பத் தாறுதேசப்
பதிக்கிறைவன் சரபேந்திர பூபதியும்
நிர்ணயித்த பண்பதாமே. 107

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கொடிவேலிவேர் | முருங்கை |
| | செங்கதாரி | புங்கு |
| | பாவட்டை | காட்டுவிளா |
| | மாவலிங்கை | |

இவைகளைச் சமனெடுத்து, அரிசியுடன் கூட்டிச் சிற்றவரைக் கிழங்குச்சாறு விட்டு நன்றாக இடித்துக் களி கிண்டவும். இதனை நல்லெண்ணெயுடன் 3 நாட்கள் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

செய்யான் கடிகள், தகண்டு கடிக, காணுக்கடிகள் முதலானவை தீரும்.

### 67. செவ்வட்டைக்கடி முதலான சகல கடிக்கும் நெல்லிக்காய் கெந்தக மருந்து

உடம்பதனிற் செவ்வட்டை கடித்துயெந்த
விடமான துள்ளங்கைப்போல்
படருகின்ற தற்குநெல்லிக் காய்கெந்த
கந்தானும் பலமுமொன்று
அடவுடனே சுத்திபண்ணிப் பொடியாக்கிப்
பனைவெல்ல மதனிலேதான்
நிடமுடைய குன்றியள வதைக்கூட்டி
நாற்பதுநாள் தின்றிடாயே 108

தின்னிரண்டு வேளையுந்தான் குணமாகு
மீதற்குப்பத் தியமுங்கேளு
வுண்ணுபுளிப் புங்கசப்பு மாகாது
வாயுவில்லா துறுமையான
நண்ணுசிறு பயறுமுருங் கைப்பிஞ்சு
பருப்புநெய்யு நயமாந்தஞ்சை
யண்ணல்சர பேந்திரமகா ராசனுண
ருச்சிதக்கெந் தகமருந்தே. 109

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் ஒரு பலம் எடுத்துப் பொடிபண்ணி ஒரு குன்றி நிறையெடுத்துப் பனைவெல்லத்துடன் கூட்டி 40 நாட்கள் காலையிலும் மாலையிலும் விழுங்கி வரவும்.

**பத்தியம் :-** புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும், கசப்புச் சுவையுள்ள பண்டங்களையும், வாயு பதார்த்தங்களையும் நீக்கிப் பச்சைப் பயறு, முருங்கைப்பிஞ்சு, பருப்பு நெய் முதலானவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளவும்.

செவ்வட்டைக் கடித்ததனுலேற்பட்ட உள்ளங்கைப் போல் படருகின்ற விஷத்தடிப்புகள் நீங்கும்.

### 68. செவ்வட்டைக்கடிக்கு நெல்லிக்காய் கெந்தக நெய்

நெல்லிக்காய் கெந்தகஞ்சேங் கொட்டைரச
மூன்றையுமே நெய்யிற்கூட்டி
ஒல்லியதீ யிட்டெரித்துப் பதத்தில்வடித்
தேயதைவைத் துக்கொண்டேதா
நல்லகண பதிக்கருகு சூடித்தேங்
காயுடைத்து நமஸ்கரித்து
வல்லபைம ணுளனேநீ யெனைக்காரு
மென்றுமண்ட லம்நீகொள்ளே. 110

கொள்ளுமொரு மண்டலந்தான் செவ்வட்டை
கடிதீருங் குணமின்னபொன்
றுள்ளுக்குத் தழுதாழை யிலைச்சாறு
முண்ணுமிக வோங்கிவீங்கிற்
றெள்ளிசங்கங் குப்பியிலைச் சாறுகுடி
கடியுந்தீ ரும்வாணர்க்
கள்ளியசெம் பொன்னுடை யளிக்குஞ்சர
பேந்திரனுணர் வதுவுமாமே. 111

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, சேராங்கொட்டை
,, பாதரஸம்

இம்மூன்றையும் நெய்யுடன் கூட்டி நன்ருக எரித்துப் பதத்தில் இறக்கவும். பிள்ளையாருக்கு அருகுசூடித் தேங்காயையுடைத்து ''வல்லபை மணுளனே நீயெனைக்காரும்'' என்று தோத்தரித்து 40 நாட்கள் உட்கொள்ளவும். செவ்வட்டைக் கடிகள் தீரும்.

2) தழுதாழை இலைச்சாற்றையும் உட்கொள்ளலாம். உடம்பு வீங்கும். சங்கங்குப்பியிலைச் சாற்றைப் பருகினால் அது நீங்கும்.

### 69. செவ்வட்டைக்கடிக்கு உத்தமதாளி மருந்து

உத்தமதா ளியுந்தேவ தாளிச்சாற்
வகையொன்றுக் குழக்குச்சாறு

முத்தநல் லெண்ணெயுரி தனிற்கலந்துப்
பதத்தில்வடித் துக்கொண்டேதே
சத்தனைகொள் செவ்வட்டைக் கடிதீரு
முத்தமதா ளியின்மருந்து
உத்தமவான் தஞ்சைசர போசிமஹா
ராசனுண ருசிதமாமே. 112

(இ-ள்.) உத்தமதாளிச்சாறு ஒரு உழக்கு
தேவதாளிச்சாறு ,,

நல்லெண்ணெய் ½ படியும் சேர்த்து ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்தில் இறக்கவும். இதில் ஒரு ஸ்பூனளவு எடுத்துப் பருகிவரச் செவ்வட்டைக் கடிகள் தீரும்.

### 70. செவ்வட்டைக் கடிக்குக் குறிஞ்சா மருந்து

பாலூரட்டின் குறிஞ்சாவே ரரைத்தஞ்சு
நாளுங்கொள் பண்பதாகச்
சாலவுஞ்செவ் வட்டைக்கடி தீருஞ்சிவ
கிருபையினாற் றஞ்சையையாள்
சீலன்றுள சேந்திரமால் பாலனனு
கூலன்கவிச் செல்வருக்கு
சேலிணங்கு விழிமாதர் லோலன்சர
பேந்திரனுணர் திண்ணந்தானே. 113

(இ-ள்.) பாற்குறிஞ்சாவேரை அரைத்து 5 நாட்கள் உட்கொள்ளவும். செவ்வட்டைக் கடிகள் தீரும்.

## 71. செவ்வட்டைக்கடிக்கு எலியாலங் கிழங்கு மருந்து

எலியாலங் கிழங்கையரைத் தேவந்நீ
ரிற்கலக்கி யேகொள்நீயும்
நலிவான செவ்வட்டைக் கடிவிடத்தால்
வரும்விதங்கள் நடுங்கியோடும்
பலவாவி கூபதடா கம்பொன்னி
சூழ்த்தஞ்சை பதியுணர்ந்த
எலியாலங் கிழங்காதி மருந்திதனை
யுறுதியுட னேகொள்வாயே. 114

(இ-ள்.) எலியாலங்கிழங்கு (காட்டாமணக்கம் வேர்) எடுத்து நன்ருக அரைத்து வெந்நீருடன் கலக்கி உட்கொள்ளச் செவ்வட்டைக்கடிகள் தீரும்.

## 72. செவ்வட்டைக்கடிக்கு புல்லுருவி அப்பம்

கானவிளா வின்மேலே புல்லுருவி
சோதிநாட் கடுகக்கொண்டு
மேனவிலு மதைமாவா யிடித்தப்பஞ்
சுட்டுத்தின் விஞ்சையாக
வூனமிகுஞ் செவ்வட்டைக் கடியில்வரும்
வருத்தமெல்லா மோடும்பாரிற்
தானதர்மம் வளர்ந்தோங்குந் தஞ்சைசர
பேந்திரனுணர் தயவதாமே. 115

(இ-ள்.) விளாமரத்தில் உண்டாகும் புல்லுருவியைச் சுவாதி நட்சத்திரத்தன்று எடுத்துக்கொண்டு காயவைத்து கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு (வெல்லம் சேர்த்து) அப்பம் சுட்டுத் தின்னவும்.

செவ்வட்டைக்கடிகள் தீரும்.

## 73. செவ்வட்டை, தகண்டு காறுக்கடிகள் உடம்பில் படநவதற்கு துருசு எண்ணெய்

துருசு நிர்விஷமிரண்டும் வகைக்கிரண்டு
வராகனெடை சொன்னதல்லால்
வருகெளரி பாஷாணம் வெள்ளைப்பா
ஷாணம்ரெண்டு வகைக்குத்தானே
சரியாக வராகனெடை நாலுநீர்
வெட்டிமுத்துத் தன்னிலேதா
னுரியிாதங் கழுஞ்சுதொழுக் கட்டைவேர்
வனமறையி னுடன்சொல்வேனே. 116

சொல்லிக்கொடி வேலிபா வட்டையின்ஞல்
வகைவேரின் ஞேல்வகைக்கு
வல்லபல மொன்றுயிலைக் கள்ளிச்சா
றுமுழக்கு வலுவதான
நல்லகற்ரு ழுஞ்சாறு முழக்குநல்
லெண்ணெயுரி நலமதாக
நல்லயெண்ணெ யொன்றையுமாத் திரமடுப்பி
லேத்தியதை நலமாய்க்காய்ச்சே. 117

காயச்சே பட்டைநாலை யும்மார்க்கப்
பொடிசெய்துக் கணத்திற்போடு
பாயமதாய்ப் பின்பிரண்டு சாற்றையும்வா
ரசமுதலாய்ப் பலமருந்தும்
நீயதையுந் தூளாக்கிப் போட்டுகரண்
டியிஞலே நேராய்த்தானே
தாயகமாய் துளாவியதின் பதங்கண்டு
யிறக்கியதைத் தான்வைப்பாயே. 118

வைத்துக்கொள் கலசமதிற் பன்ஞடை
தனைப்போட்டு வடிக்கட்டிக்கொண்
டுத்தவொரு காசளவு கொடுமறுநாள்
காசெடைதா னுமிரண்டு

நத்துவமாய்க் கொடுபின்பு வலுப்பார்த்தோர்
நாளுக்கு நாளுக்குத்தான்
சத்துவமாஞ் சிறுகரண்டி யெண்ணெய்கொள்ளு
மூன்றுநாள் சகத்திற்றானே. 119

சகத்தில்துரு சியினெண்ணெய்க் குணங்கேளு
செவ்வட்டைத் தகண்மற்ற
றுகுத்தகடி யுடம்பினிலே படருகின்ற
தெல்லாம்போஞ் சுத்தமாக
வகுத்திடுவே னிதற்குள்ளி மிளகுபீர்க்
கங்காயு மவரைக்காயு
மிகுத்தநெய்யு முருங்கைக்கா யிலைபுடலங்
காயிதுவும் மேற்சொல்வேனே. 120

சொல்லுகண்டங் கத்திரியின் வற்றல்நீர்
முள்ளியிலைச் சமதாக
நல்லசிறு வழுதலையின் வற்றலிது
வாகுமிதை நாடிக்கொள்ளு
தொல்லுலகிற் சிவபூசா துரந்தரனுந்
தஞ்சைநகர் துரைத்தனுந்
கல்லைப்பெண் ணுகவுஞ்செய் சரபேந்திர
பூபதிசெகற் கருத்திதாமே. 121

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | துருசு | 2 வராகனெடை |
| | நிர்விஷம் | 2 வராகனெடை |
| | கௌரீபாஷாணம் | 2 வராகனெடை |
| | வெள்ளைப்பாஷாணம் | 4 வராகனெடை |
| | நீரடிமுத்து | ½ படி |
| | பாதரஸம் | 1¼ வராகனெடை |
| | தொழுக்கட்டைவேர்த்தோல் | 1 பலம் |
| | கொடிவேலி வேர்த்தோல் | ,, |
| | வனமரை (கோரை) வேர்த்தோல் | ,, |
| | பாவட்டை வேர்த்தோல் | ,, |

| | |
|---|---|
| இலைக்கள்ளிச்சாறு | ஒரு உழக்கு |
| சோற்றுக்கற்றாழைச்சாறு | ,, |
| நல்லெண்ணெய் | ½ படி (2¼ சேர்) |

இவைகளுள் நல்லெண்ணெயை அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கும்போது, வேர்வகைகளைக் காயவைத்து இடித்த தூளையிட்டு, சாறுவகைகளைச் சேர்த்துப் பின்னர் ரசம் முதலான சரக்குகளைப் பொடிசெய்து அதனுடன் போட்டு ஒரு கரண்டியினால் துழாவிவரவும். தைலம் பதமானபின் அடுப்பின் மேலிருந்து இறக்கிப் பன்னாடையினால் வடிக்கட்டவும். இந்த எண்ணெயில் ஒரு காசளவெடுத்து முதல் நாள் கொடுக்கவும். இரண்டாம் நாள் 2 காசெடை உட்கொள்ளவும். இவ்வாறாகத் தினந்தோறும் ஒவ்வொரு காசெடை அதிகரித்துக்கொர்ண்டே ஒரு சிறு கரண்டியளவு ஆகும்வரை தேகவலுவறிந்து உட்கொள்ளக் கொடுக்கவும்.

செவ்வட்டைக் கடிகள், தகண்டு கடி முதலியவை கடித்து ஏற்பட்ட தடிப்புகள் தீரும்.

**பத்தியம்:** பூண்டு, பீர்க்கு, மிளகு, அவரைக்காய் நெய், முருங்கைக்காய், முருங்கையிலை, புடலங்காய் கண்டங்கத்திரி வற்றல், நீர்முள்ளியிலை, சிறுகத்தரி வற்றல் முதலியவைகளை வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும்.

### 74. செவ்வட்டைக்கடிக்குச் சின்னியிலை மருந்து

சின்னியிலை யெலுமிச்சங் காயளவு
மரைத்துமதை சீராந்தண்ணீர்
தண்ணீற்காற் படிகூட்டி யொருமண்ட
லங்கொள்ளுந் தானிதல்லா
லுன்னுதெருக் கம்பூவைத் தன்சிறுநீ
ரினிற்றுவைத்துக் கட்டிப்பாரு
சொன்னபடி செவ்வட்டைக் கடிதீருந்
தஞ்சைவிபு சொல்லிதாமே. 122

(இ-ள்) சின்னி இலையை ஒரு எலுமிச்சங்காய் அளவு எடுத்து நன்ருக அரைத்து ¼ படி தண்ணீருடன் கலந்து 40 நாளுக்கு உட்கொள்ளவும்.

மேலுக்கு: எருக்கம் பூவைத் தன் சிறுநீரில் அரைத்து கடித்த இடத்தில் கட்டவும். செவ்வட்டைக் கடிகள் தீரும்.

### 75 செவ்வட்டைக்கடி முதல் சராசர விடிந்திற்கும்

விபுலேதனிற் செவ்வட்டைக் கடிமுதலாய்ச்
சராசரத்தின் விடத்திற்கெல்லா
முபகார மாய்முனிவர் சொற்கார்போ
கவரிசி யுடன்கொடுவந்
திபமில்லா மற்சூரணஞ் செய்துகோ
மூத்திரம்விட் டேயரைத்துச்
சுபமான வுண்டைபண்ணிச் சராச
ரவிடமுஞ் சோர்ந்துபோமே. 123

(இ-ள்) கார்போ கவரிசியைக் கொண்டுவந்து சூரணஞ் செய்து, பசுவின் மூத்திரம் விட்டரைத்து. மாத்திரைகள் செய்து உட்கொள்ளச் செவ்வட்டை முதலான பற்பல விஷங்களுந் தீரும்.

### 76. செவ்வட்டைக்கடி முதல் சகல கடிக்கும் வல்லாதி லேகியம்

கல்லுரனி லிருநூறு சேங்கொட்டைகணக்கதா
யிட்டுருப்பா ணியாலதைக்
கெல்லிக்கெல் லிவிட்டே யதைத் தூள்செய்து
சேளொரு படியெள்ளும் நன்ருயிட்டு
நல்லபுட் டிக்கருப் புட்டியுமதில்
நன்மையா யிடித்திட்டேயுசிதமாய்ச்
சொல்லிய படியொன்றுந் தப்பாமலே
தூளதாக்கிக் கலசத்தில் வைத்திடே 124

வைத்துக்கொண்டு செவ்வட்டைக் கடிமுதல்
மற்றுமெந் தக்கடிக்குங் கழற்கொடி
யத்தனைக் கொடுவல்லா திலேகிய
மந்திசந் தியுங்கொண் டிடமுன்சொன்ன
குத்தமுள்ள கடிவிடமீன் றிடுங்
கூறிடும் படியொன்றும் பிசகிடாச்
சுத்தநெல் வயல்சூழுஞ் தஞ்சைநகர்
துரைசிகா மணியுணரு முறையிதே. 125

(இ-ள்.) ஒரு கல்லுரலில் 200 சேங்கொட்டைகளைச் சுத்திசெய்துபோட்டு, ஒரு இரும்புலக்கையினுல் இடித்து இரும்பாணியிஞல் கெல்லித் தூளாக்கவும். இதனுடன் ஒரு படி எள்ளைக் கூட்டிச் சரியெடை பனைவெல்லம் இட்டு இடித்து ஒரு கலசத்தில் பத்திரபடுத்தவும்.

இந்த லேகியத்தில் ஒரு கழற்சிக்கொட்டைப் பிரமாணம் எடுத்து செவ்வட்டை முதலான சகலவித கடிகளுக்கும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். குணம் ஆகும்.

### 77. செவ்வட்டைக் கடிக்கு நெல்லிக்காய் கெந்தக மருந்து

கடைந்திடுந் தயிரறு பதுதாழிகை
கண்டதி நெல்லிக்காய் கெந்தகங்கழங்
கடன்பொடி செய்துபோட் டுகலந்துமே
யுள்ளுக்குங் கொண்டுமேலுக்குஞ் செய்வகை
கடிவிடம் படருமிடந் தன்னிலே
கதவைமூடித் தனிவீட்டி லேயிருந்
திடுபிறந் தவண்ணஞ் சேலைதா னதுயிலா
மலேயிடக் கையிலே தானுமே. 126

ஙகயி லூரமத்தஞ் சாறு பிழிந்திடு
கணக்கதா யோர்க ழஞ்சுயி ரதத்தைப்
பய்ய வேயிட்டுத் தேய்த்திடு நீயதை
பாரிரு நான்கு நாளுக் கொருவிசை
அய்ய மில்லைசெவ் வட்டைக் கடிதீரு
மருமை நெல்லிக் காய்க்கந்தக மாமருந்
துய்ய வாதிசி வன்பதம் பூசைசெய்
துரைசர பேந்திர னருள தாகுமே. 127

(இ-ள்.) 60 நாழிகை சென்ற கட்டித்தயிர் சுமார் ½ எடுத்து அதனுடன் சுத்திசெய்த நெல்லிகாய்க் கெந்தகம் 1¼ வராகனெடை பொடித்துப்போட்டு நன்கு கலந்து உட் கொள்ளவும். இதனையே செவ்வட்டைக் கடித்த இடத்திலும் பூசவும்.

பின்னர் ஒரு தனித்த அறைக்குள் சென்று ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக இருந்து இடக்கையில் ஊமத்தை இலைச்சாறு பிழிந்து அதனுடன் சுத்தி செய்த பாதரசம் 1¼ வராகனெடையும் கூட்டி நன்ருக உடம்பு முழுவதிலும் பூசிக்கொண்டு, நன்கு ஊறியபின் ஸ்நானம் செய்யவும், இம்மாதிரி எட்டு நாட்களுக்கொருமுறை செய்யவும்.

செவ்வட்டைக் கடிகள் தீரும்.

## 78. செவ்வட்டைக்கடி முதலான கடிகளுக்கும் எட்டிக்கொட்டைத் தைலம்.

எட்டிக் கொட்டையழிஞ்சியின் கொட்டையு
மிதமாங் குன்றி பெருங் குருந்துமரப்
பட்டைலவைனப் பட்டையி வைந்தினிற்
பார்வகைக் கோர்கு றுணியுஞ் சேர்த்திடு
திட்ட மானனநீர் வெட்டி விரையது
சேர்த்துக் கொள்ளுநா ளுழியதனுடன்
குட்டந் தீர்க்கஞ் சேங்கொட்டை மிளகுடன்
கொடிவேலி வேருங்கா ரைவேருகுமே. 128

ஆகும்தீர் வெட்டி வேரெருக் கம்வேர்
மரும்பெரு மருந்துவேர் பட்டையுடன்
வாகுபெற்ற சிறுகுறிஞ் சாவேர்
வனத்தின் மேவும் பிராய்மர வேருடன்
தாகந் தீர்க்கும் விளாம்புற ணிநலஞ்
சாற்றும் பத்து வகையுஞ் சமனதா
யேக மாகவே லாமொக்கக் கூட்டிய
இதமதாக வோர் பண்டத்தி லிட்டிடே. 129

இட்டு பாலண்டத்தின் வேல்வாயை மூடியே
தேயப் பாண்டத்தின் மேல்வாயை மூடியே
திட்டமாஞ் சின்னப் பாத்திர மொன்றதைச்
சேர்த்திதற் குத்தக் கக்குழி வெட்டியே
யிட்டிடு நெற்பதர் முக்க லமுட
னினியகாட்டெரு முட்டையு டன்கலந்
தட்டி யொன்று மிலாமலே தீயிட்டு
வதி லிறங்கிடு மேதை லமதே. 130

தைல மானதெட் டிக்கொட்டை யாதியாந்
தைலத்தை யொருபாத் திரத்தில் வைத்து
வொயில் தான தைலம் பணவெடை
வொன்று மீய்ந்திடு வேலைக்கந் திசந்தி
நயமதாகவே கொண்டிடு பத்திய
தவிலு கைப்புப் புளிப்புந் தவிர்ந்திடு
பயமிலைச் செவ்வட்டைக்கடி தீருமே
பார்த்த ஞஞ்சர பேந்திய னருளிதே. 131

(இ-ள்.) எட்டிக்கொட்டை குன்றிமணி அழிஞ்சில்கொட்டை பெருங்குருத்துப்பட்டை இவைகளைச் சிறுகச் சிறுகத் துண்டித்து தனித்தனி ஒரு மரக்கால் எடுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| நீரடிமுத்துவிரை 4 படி | எருக்கம்வேர் |
| சுத்திசெய்த சேராங் | பெருமருந்துவேர்ப்பட்டை |
| மிளகு [கொட்டை | பிராயவேர் |

கொடிவேலி வேர்
காரைவேர்
நீரடி முத்தின்வேர்
சிறுகுறிஞ்சாவேர்
விளாம்பட்டையின்
[மேற்புறணி

இவைகளைச் சமனெடை (சுமார் 1 பலம்) எடுத்து ஒன்றிரண்டாக இடித்து முற்கூறிய 4 வகை துண்டுகளையுஞ் சேர்த்து ஒரு பெரிய பாண்டத்திலிட்டு, அப்பாண்டத்தின் அடியில் ஒரு துவாரமிடவும். பின்னர் பாண்டத்தின் வாய்க்குத் தக்கபடி ஒரு மடக்கையிட்டுச் சேலைமண் செய்யவும். பூமியில் மேற்சொன்ன பாண்டம் கொள்ளும் வண்ணம் குழி வெட்டி, அதனுள் ஒரு சிறிய பாத்திரத்தை வைத்துப் பெரும் பானையின் அடியிலுள்ள துவாரம் சிறிய பாத்திரத்தின் வாயின் மத்தியில் வரும் வண்ணம் வைக்கவும். பின்னர் பெரும்பானையைச் சுற்றிலும் 3 கலம் நெற்பதரும், வரளிகளையும் சிறுசிறு துண்டுகளாக்கிப் பாண்டத்தைச் சுற்றிலுமிட்டுப் புடம் இடவும்.

சிறிய பாத்திரத்தில் குழித்தைலம் இறங்கும். இத்தைலத்தில் ஒரு பணவெடையெடுத்து உட்கொள்ளவும்.

**பத்தியம்:** கசப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும். செவ்வட்டைக் கடிகள் தீரும்.

### 79. குரங்குக் கடிக்கு

வானரக் கடிக்கோர் மருந்தோ துவேன்
வாகையும்பனை யின்கிழங் குஞ்சரி
தானு மேயெடுத் தேபகப் பாலினிற்
ருனரைந்துக் கரைத்துள்ளுக் குக்கொடு
நீயணுக் கக்கடி வாயிலும் பூசு
நீங்கு மேகுரங் கின்கடி யானதுந்
தானதன் மமிகுஞ் சர பேந்திரன்
ருனுணர் வாகையாதி மருந்திதே. 13

(இ-ள்.) வாகைவேர் பனைக்கிழங்கு

இவ்விரண்டையுஞ் சமனெடுத்துப் பசுவின்பாலில் அரைத்துக் கரைத்துப் பருகவும். இதனையே கடிவாயிலும் இடவும். குரங்குக் கடிகள் தீரும்.

### 80. கீரிக்கடிக்கு அவுரியாதி மருந்து

அவுரி வேருமி லையு நறுக்கியே
யந்தச் சாற்றைப் பிழிந்தரைக் கால்படி
கவன மாகக் கொடுத்திடுள் ளுக்குமே
கடியின் வாயிலும்பூசிடி லக்குனம்
அவனி மேற்கீரி யின்கடி தீருமே
அவுரியாதி ம்ருந்திது வாகுங்காண்
தவமி குந்தம னக்கரு ணைநிதி
சரப பூபன ருள்மருந் தாகுமே. 133

(இ-ள்) அவுரிச்செடியின் வேரையும் இலையையும் பிடுங்கி இடித்துப் பிழிந்த சாறு ¼ படியெடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இச்சாற்றையே கடிவாயிலும் பூசவும். கீரிக் கடிகள் தீரும்

### 81. மூஞ்சூறு கடிக்குக் கொல்லாங்கோவைக் குழம்பு

வல்ல மூஞ்சூறுதானே கடித்திஅல்
வண்மை யாமருந் தொன்றுகே ளுண்மையாய்க்
கொல்லங் கோவைக் கிழங்கும்வெங் காயமுங்
குருந்தம் வேரழிஞ் சில்வேர் மிளகுடன்
நல்ல சாரணை வேரும்நெய் காசவேர்
நாட்டினிற் சென்னகர் பட்டை கலந்துடன்
வல்ல தாமிள கரணைவேர் கஸ்தூரி
மஞ்சள் பச்சையி லுப்பைப்பட் டையதே. 134

பட்டை யாம்பன் னிரண்டு வகையதும்
பதறி டாமற் சரிகூட்டி யேயரைத்
திட்டி டுநல்ல மையது போலவே
யினிய வெள்ளிநல் லெண்ணெயுஞ் சேர்த்துக்

டிட்டு மேலொரு துட்டிடை நக்கவும் [கொண்
மேயமூஞ் சுறு தன்கடி தீருமே
திட்டமாங் கொல்லன் கோவைக் குழம்பிது
செய்துபார் தஞ்சை மானுவு ணர்விதே 135

(இ-ள்)
கொல்லங்கோவைக்கிழங்கு
வெங்காயம்
குருந்தம்வேர்
அழிஞ்சில்வேர்
மிளகு
சாரணைவேர்
நெய்க்காசவேர்
சென்னகர்சட்டை
மிளகரணைவேர்
கஸ்தூரிமஞ்சள்
இலுப்பைப்பட்டை

இவைகளைச் சரியெடை எடுத்து ஒரு கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு நன்கு மைபோலரைத்து நல்லெண்ணெயுடனே குழப்பி ஒரு துட்டெடையெடுத்து உட்கொள்ளவும். மூஞ்சுறுக் கடிகள் தீரும்.

குறிப்பு:— 12 சரக்குகள் என்று செய்யுளில் கண்டு இருப்பினும் 11 சரக்குகளே உள்ளன.

### 82. சாரைக்கடிக்கு பச்சோந்தி நஸ்யம்

மாரி னில்வளர் கின்றநல் பெரும்
பாச்சோத் தியிலைச் சாற்றைப்பி ளிந்துகொண்
டேரு சாரைக் கடிவிட மானதுக்
கேநசி யஞ்செய வவ்விட மீளுமே
கூறும் பாச்சோத் தியினிசி யமிதின்
குணந் தெரியுஞ் சிவகிரு பைதன்னூற்
சீருஞ் செல்வ மிகுஞ்சர பேந்திரன்
றின முணர்ந்த வுசித நசியமெ. 136

(இ-ள்.) பெரும் பாச்சோத்தி இலைச்சாற்றைப் பிழிந்துகொண்டு சாரைக்கடி விஷத்திற்கு நஸ்யமாக இடவும். குணமாகும்.

### 83. பூரான் கடி, செய்யான் கடிக்கு மருந்து

ஒட்ட டையத்தைத் தண்ணீரி லேகரைத்
துரிமை யாக வரைச்சேர் குடித்திட
விட்டிடுஞ் செய்யான் பூரான் கடியது
மீளுஞாயறு முன்பனி போலவே
அட்ட திக்குடன் சத்ததீ வுமிந்தவன்
பத்தாறுதேச மன்னவர் போற்றிய
மட்டிலாப் புகழ் பெற்றிடும் மன்னவர்
மன்னனுஞ்சர பேந்திர னருளிதே. 137

(இ-ள்.) ஒட்டடையைத் தண்ணீரில் கசக்கி அதில் ½ சேர் எடுத்துக்கொடுக்கவும். செய்யான், பூரான் முதலியவைகளின் கடிகள் தீரும்.

### 84 பூரான் கடி, செய்யான் கடிக்கு மருந்து நஸ்யம்

வசம்பின் பூவை யரைத்துத்தண் ணீர்தனை
வார்த்தரைச் சேர்கொள்ளு மதைத்தானே நீ
நசியமுஞ் செய்துபார் பூரான் செய்யானும்
நாடி டுங்கடி மீளுமி துண்மையாய்த்
திசைகள் தீவாந்திர முதலன்பத் தாறு
தேசமன்னவர் போற்றுங் கிரீடியாம்
புசபல மிகுமன் னர்சிகா மணி
போசனுஞ் சரபேந்திர னருளிதே 138

(இ-ள்.) வசம்பின் பூவையரைத்துத் தண்ணீருடன் குழப்பி ½ சேர் உட்கொள்ளவும். இதனையே நஸ்யமாகவும் இடவும். பூரான், செய்யான் இவற்றின் கடிகள் மீளும்.

### 85. பெருச்சாளி கடிக்குத் திப்பிலியாதிப் பூச்சு

அப்ப மொக்கிய வம்பன் விடைபெருச்
சாளியின் கடிபூச் சொன்றுகேள்நல்
திப்பி லிபெருங் காயம் வசம்புடன்
சேரெலிப் புழுக்கை வாழையின் பழங்

குப்பை மேனிச்சா றிட்டரைத் துக்கடி
கொண்டவ வாயினிற் பூசிடத்தீருமே
திப்பிலி யாதிப் பூச்சுது தஞ்சையிற்
நீரனுஞ் சரபேந் திரனரு ளிதே 139

(இ-ள்.) திப்பிலி பெருங்காயம்
வசம்பு எலிப்புழுக்கை
வாழைப்பழம்

இவைகளைச் சமனெடுத்துக் குப்பைமேனிச்சாறு விட்டு நன்ருக அரைத்துப் பெருச்சாளிக் கடிவாயில் பூசிவிடவும்.

### 86. தேளுக்கு

தண்ணீர் தன்னி லமுழ்ந்துங் கழற்கொடி
தானெ டுத்துட் பருப்பை யெடுத்துவிட்
டிண்ண மான மெழுகதி லிட்டிடு
தேளுங் கொட்டவந் திட்டவர் தங்களுக்
கெண்ணு சிந்தையில் வாலையைத் தியானங்
ளேசெய்து வந்தக் காயை யெடுத்துமே
நண்ணு மூன்று திறந்தட விவிட
நன்மை யாகுந் தேள்கொட்டும் விடமதே. 140

கொட்டுந் தேள்விட மீளுமக் காயையுங்
கொடுத்தி டின்ன மொருவன்கை யிலதை
மட்டிலா விடமேறும் தையும்நீ
வாங்கிற் றண்ணியிற் போட்டிட மீளுமே
கஷ்ட மெத்தப் படுகின்ற தோர்மனுக்
காக வுந்தயை யாகித்தஞ்சை நகர்
சிஷ்ட ரைப்பரி பாலனஞ் செய்கின்ற
தீனனுஞ்சர பேந்திர னருளிதே. 141

(இ—ள்.) தண்ணீரில் முழுகக்கூடிய கழற்சிக் கொட்டையை எடுத்துக்கொண்டு அதில் ஒரு சிறு துவாரம்

இட்டு உள்ளிருக்கும் பருப்பை நீக்கிவிடவும். அதனுடன் மெழுகைச் செலுத்தி விடவும்.

தேள்கொட்டி வந்தவர்களின் கொட்டுவாயில் அம்பாளைத் தியானித்து மூன்று தடவை இக்கழற்சியைத் தடவிவிடவும்.

தேளின் விஷம் மீளும். அக்காயை இன்னொருவன் கையில் கொடுக்க அவனுக்கு அவ்விஷம் ஏறும். உடனே தண்ணீரில் போடவும்.

### 87. தேளுக்கு

காக்கண வேரைக் கிரகணத் தொடும்போது
கடுகவும் பிடுங்கி வீட்டில் வைத்துக்கோண்
டேக்கணத் திலுரைத் தேகடி வாயி
லிதமுடன் போட்டுள் ளுக்குங் கொடுத்திடு
வாக்கி ரண்டிலைத் தேள்விட மாறுமே
மனுவிஞ் ஞான நெறியறி விற்பன்னன
தாய்க்கு மிஞ்சு மன்புள்ள துவசமால்
தனயனுஞ்சர பேந்திர வருளிதே. 142

(இ-ள்.) காக்கண வேரைக் கிரகணம் தீண்டும் நாளன்று பிடுங்கிவந்து பத்திரப்படுத்தவும்.

இதனைத் தண்ணீர் விட்டுத் தேள்கொட்டின இடத்தில் போடுவதுடன் உள்ளுக்கும் கொடுக்கவும். தேள்விடங்கள் தீரும்.

### 88. புடையான் மண்டலிகளுக்கு

காவைச் சிறந்த மண்டலிதான்
கடித்துக் கருதி வந்தாக்கால்
கோவையி லையின்சா றுதனைக்
குறிப்பாய்ப் பிழிந்து வாலையிட

நீவை விரியன் குஞறும்
நீளும் புடையான் மண்டலிதான்
பாவைச் சிறத்த மொழியாளே
பறக்கும் விடம்பஞ் பதுபோலே. 143

(இ-ள்.) கோவையிலைச் சாற்றைப் பிழிந்து விரியன் புடையான், சலமண்டலி முதலான விஷகடிகளின் வாயில் துவாலையிடவும்.

### 89. பெருச்சாளிக் கடிக்கு

மூதுரையவர்கள் சொன்ன
மூஷிகம் பதினெட்டாலு
மேதமிட் டவர்கள் தங்கட்
கினியதோர் மருந்து சொல்வேன்
காதலர் கங்கைசூடுஞ்
சங்கர ஞணைமுந்நாள்
ஆதன மணியான் பாலி
லரைத்துளே யருந்திடாயே. 144

(இ-ள்.) இதன் பொருள் விளங்கவில்லை.

### 90. எலிகடிக்கு மருந்து

பணிகுடர் வகையு மீரெட்
பச்சையெள் தைலத்திட்டு
மணிமிள குடனே நெல்லி
யரிசியும் பொடிசெய்திட்டு
தணிவிலத் தழலின் வெந்த
யெண்ணெயுஞ் சற்றே நக்கி
வணிகர் தம் மெய்யிற்பூச
யெலவிட மாறுமென்றே. 145

(இ-ள்.) நல்லெண்ணெயில் மிளகு, நெல்லிப்பருப்பு இவ்விரண்டையும் பொடித்து அடுப்பின் மேலேற்றி வெந்தவுடனிறக்கி உட்கொண்டு, உடம்பின் மேலும் பூசவும். எலி கடிகள் தீரும்.

## 91. நாய் கடிக்கு மருந்து

மோர் குறுணி நன்னாரி யிலையின் வேரு
றுரனுப்புப் புகையுறையும் பச்சையெள்ளும்
சீர்த்தெழுசெந் நாயுருவி வேரும் வித்துஞ்
சேர்த்துயிவை கண்ணிலையின் சாற்றினாலே
நீர்க்கவரைத் துடன்பூசிற் வீங்குமாகில்
நெடுஞ்சுண்டை யிலையுப்புந் துவைத்துக்கட்ட
போக்கிரித்தான் சுணங்கனார் கடிப்புண் டார்க்குப்
பூச்சுமருந் துவனாகம் புதைத்துவைத்தார். 146

(இ-ள்.)

| | |
|---|---|
| நன்னாரிவேர் | பச்சை எள்ளு |
| நன்னாரி இலை | செந்நாயுருவிவேர் |
| இந்துப்பு | செந்நாயுருவிவித்து |
| ஒட்டடை | |

இவைகளைக் கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பசுவின்மோர் ஒரு மரக்காலுடன் குழப்பி மேலுக்குப் பூசவும். நாய்கடி விஷம் நீங்கும். அவ்விடம் வீங்கினால் சுண்டையிலை, உப்பு இவ்விரண்டையும் நசுக்கிக் கட்டவும். நாய்கடி விஷங்கள் தீரும்.

## 92. குரங்கு கடிக்கு

வானரத்தின் கடிதீரக் கொழுஞ்சிவேரை
வைரச்சுக் குடனரைத்து வளையப்பூசிக்
கானகத்தின் வீழியிலைச் தன்னிற்
கனமிளகின் பொடிகலந்து வெய்யிலில் வைத்து
மேனுரைத்த நுரைவாங்கிக் கடிவாய்பூசி
விழாத்தியிலை கொழுஞ்சியிலைத் துவைத்துப்
மூனலத்தின் வறுந்தாற்றி லொற்றிக்கட்ட [போட்டு
வொருகோடி குரங்கின்விட மொழிந்துபோமே.

(இ-ள்.) கொழுஞ்சி வேரையும், சுக்கையும் அம்மியில் வைத்தரைத்துப் பூசவும்.

2. வீழிஇலைச் சாற்றுடன் மிளகைக் கலந்து வெய்யிலில் வைக்க நுரை எழும்பும். அதனையும் கடிவாயில் பூசவும்.

3. விழாத்தியிலை, கொழுஞ்சியிலை இவைகளை வதக்கிக் கடிவாயில் கட்டினாலும், குரங்கின்கடி விஷங்கள் தீரும்.

**93 குரட்டை, செங்கண்ணன், புடையன் புணக்கெலி முதலான எலி கடிக்கு**

அருக் குரட்டை யுடனேசெங்
கண்ணன் புடையன் புணக்கெலியும்
பெருகக் கடித்தே யுடலெங்கும்
பிலாவின் விரைபோல் மிகத்திரண்டால்
எருக்கம் பாலை யேழுதுள்ளி
எடுத்துப் பனையின் வெல்லமுடன்
நறுக்கித் தின்ன நாளெட்டு
நன்றாய்ப் போங்கை கண்டதுவே. 148

(இ-ள்.) குரட்டை, செங்கண்ணன், புடையன், புணக்கெலி இவைகள் கடித்து உடல் எங்கும் பிலாவிரைப்போல் வீக்கம் கண்டால், எருக்கம்பால் 7 துளி எடுத்துப் பனை வெல்லத்துடன் பிசைந்து 8 நாட்கள் உட்கொள்ளவும். கடிகள் நீங்கும்.

**94. உதிரமண்டலி கடிக்கு**

எதிரிலாதவி லந்தையின் றம்பல
முதிரு முத்தெருக் கஞ்செவி மூலத்தின்
பதரி முற்றிய பாலையின் வேரது
முதிரமண்டலிக் குள்மருந் தொவ்வொன்றே. 149

(இ-ள்.) இலந்தைப்பழம் 2) முத்தெருக்கஞ்செவி வேர் (நிலக்கடம்பு) 3) முற்றியபாலைவேர் இவைகளில் ஏதேனும் ஒன்றை உட்கொள்ள உதிரமண்டலி கடி விஷம் நீங்கும்.

### 95. பெருஞ்செய்யான் கடிக்கு

பெருஞ் செய்யான்கடித் தெருக்கிற்
பிளவுவெத் திலைசுண்ணும்பு
அருந்தித்தம் பலத்தைக் கூட்டி
யாவயரையவரை நவ்வல்
திருந்துதூ தளையின் வேருஞ்
சிலமிள கரைத்துப்பாலி
லருந்திடப் பூசத்திரு 150
மனலது குளிருமன்றே.

(இ-ள்.) பெருஞ்செய்யான் கடியாகில் வெத்திலை, பாக்கு, சுண்ணும்பு இவைகளைப் போட்டுக்கொள்ளவும்.

2. ஆவாரை, அவரை, தூதுவேளை வேர், மிளகு இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்துச் சாப்பிட்டு, இதனையே மேலேயும் பூசவும். உஷ்ணம் சமனாகும்.

### 96. உதிரமண்டெலி கடிக்கு

மானே யுதிர மண்டெலிதான்
வாய்க்கக் கடித்துக் கருதிகொண்டா
லானை வணங்கி யிலைநீரி
லரைத்துக் கொடுக்க விஷமீளுந்
தேனே கேளா யதன்பூவைத்
தின்னக் கொடுக்க விடமேகுந்
தானேயிலையை ரைத்து நன்ருந் 151
தண்ணீர் தன்னி லருந்திடுமே.

(இ-ள்.) உதிரமண்டெலி கடித்தால் யானைவணங்கி இலையை நீர்விட்டரைத்துக் கொடுக்கவும். விஷம் தீரும். இதன் பூவையும் முன்போல் உட்கொள்ளவும்.

குறிப்பு: யானை வணங்கி என்பது பெருநெருஞ்சில்.

### 97. விரியன்கடிக்கு

விரியன்கடித்து வந்தக்கால்
மீட்கவந்த விடதாரி

அரிய தவசு முருங்கைதனை
யருந்திக் கசக்கிக் கடிவாயில்
பரிவாய்ப்பூச விடங்குதிக்கும்
பற்றும்பூசக் கனந்தீருந்
திருந்தக் கொடுக்கத் தானுள்ளே
தீராவிடமுந் தீர்ந்திடுமே. 152

(இ-ள்.) தவசு முருங்கையிலையைக் கசக்கிக் கடிவாயில் கட்டுவதுடன், அதனை உள்ளுக்கும் கொடுக்கவும். விரியன் விஷம் தீரும்.

### 98. தேளுக்குப் புகை

முதலை விட்டையும் பெருங்காயமும் நல்ல
முற்ற வேளையிலைச்சாறை விட்டரைத்
ததனை வெள்ளிய சீலையி லூட்டியே
யன்பு டனிழற் றன்னிலுலர்த்திக் கொண்

டிதனை யுந்திரி யாக்கி விளக்கினி
லேகொளுத் திப்புகையைக்கொளத் தேள்விட
மதுவுங் கொட்டிய வாயிலி லாமலு
மற்றிடுமிது கைகண்டதாகும். 153

(இ-ள்) முதலைவிட்டை பெருங்காயம்

இவ்விரண்டையும் வேளையிலைச்சாறுவிட்டு அரைத்து ஒரு சுத்தமான வெள்ளைத்துணியில் ஊட்டி, நிழலில் உலர்த்தி 1 அங்குல நீளமுள்ள திரிகளாகச் செய்து வைத்துக்கொண்டு வேண்டும்போது தேள்விடத்திற்கு இத் திரியைக் கொளுத்தி அதிலிருந்து எழும் புகையை உட் கொள்ளவும். (நாசியினால் முகரவும்) கொட்டிய இடத்தில் கூடவிஷம் இராது. கைகண்டது.

### 99. தேளுக்குக் குளிசம்

நிலக்கடம்பு வேரையருமலே
நீளமாகப் பிடுங்கி யுசிதமாய்ப்

பலத்திடுங் குளிசமாத் தேள்விடம்
பத்திடிலந்தக் குளிசத்தி னுலதை
வலுத்த கையிலெடுத்துத் தடவிடில்
வாங்கு மேகொட்டு வாயினிலுமதைச்
செலுத்த வைத்திடு மீண்டிடுத் தஞ்சையிற்
றீரனுஞ்சர பேந்திர னருளிதே. 154

(இ-ள்.) நிலக்கடம்பின் வேரை அருமல் பிடுங்கி, மோதிரம்போல் செய்து வைத்துக்கொள்ளவும். தேள் கொட்டி வருந்திஞல் இக்குளிசத்தைக் கொட்டுவாயில் வைத்துத் தடவவும். நெறிகள் தீரும்.

## 100. தேளுக்கு

முத்தெருக் கஞ்செடி வேரருமலே
முழுதிலும்பிடுங் கியந்த வேரையுஞ்
சத்துவக் குளிச மாடித் தேள்விடந்
தானே கொட்டிடிற் றடவியேவிட்டிடு
சற்று நேரந்திற் றேள்விட மீண்டிடுந்
தஞ்சை மானகர் தன்னை நீதியாய்
பொத்த செங்கோல் செலுத்துந் தயாநிதி
யும்பர் கோன்சர பேந்திர னருளிதே. 155

(இ-ள்.) முத்தெருக்கஞ்செவி வேரையும் முன்சொல்லியபடி வேரருமல் பிடுங்கிவந்து குளிசமாகச் செய்து வைத்துக் கொள்ளவும். தேள் கொட்டிவிட்டால் இக்குளிசந்தை கொட்டுவாயில் தடவவும். சிறிது நேரத்தில் தேள் விஷம் தீரும்.

குறிப்பு :- பொதுவாக முத்தெருக்கஞ் செடியும் நிலக் கடம்பும் ஒன்றேதான் என்ற எண்ணம் நிலவி வருகிறது.

## 101. தேளுக்குக் காநிலாத

செம்முருக்கம் விரைவாங்கி மென்றுதான்
செவிவலமறிந் தூதிடத் தேள்விடங்
கம்பிய பனி தானுமே சூரியன்
கண்ட தெப்படி யாகுமோ வப்படி

தம்மிலே பறந் தோடிடு முச்சுடர்
தரித்துக் கங்கையைச் சூடிடுமெம்பிரான்
றம்படி யார்தஞ் சைச்செங் கோல்செலுத்
தண்ணல்கோன் சரபேந்திர னருளிதே 156

(இ-ள்.) செம்முருக்கம் விரையை வாயிலிட்டு மென்று தேள்கொட்டி அவஸ்தைப்படுபவரின் காதில் ஊதவும். சூரியனைக்கண்ட பனிபோல் தேள் விஷங்கள் தீரும்.

## 102. தேளுக்குப் புகை

தேளதுகொட்டி திடுக்குடி லதற்குச்
செப்புவேன் நற்புகை யொன்று
வாளநற் பழமு மாறுநெய் கொட்டான்
வன்பழம் நாலுடன் மிளகுங்
கோளிலாப் பச்சைப் பாக்கள வரைத்துக்
குணமுடன் வெச்செனக் காய்ச்சி
நீளமா கியவெண் சீலையிற் ரோய்ந்து
நீயுலர்த் தியுந்திரி யாக்கே. 157

திரியது வாக்கி யெண்ணெயில் ரோய்த்துத்
தீயினிற் கொளுத்தியப் புகையும்
வரிசையா யந்தக் கறுக்கும்நா சியினில்
வகையுடன் பிடித்திற் றேளில்
நெறிவுறு விடமுங் கொட்டுவாய் தனிலு
மிரா துகை கண்டது மாகு
மரியயன்காணு விமலர்தாள் போற்று
மற்புத விபுவுணர் முறையே. 158

(இ-ள்.) வாழைப்பழம் 6 (?) மிளகு
பூவந்திப்பழம் 4

இவைகளைச்சேர்த்து அரைத்தவிழுது பச்சைப்பாக்குப் பிரமாணம் எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அனலில் வைத்துக்காய்ச்சி ஒரு மெல்லியதும் வெளுப்பானதுமான துணியில் தோய்த்துத் திரியாகச்செய்து நிழலில் உலர்த்தி

வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது ஒரு திரியை எண்ணெயில் தோய்த்துக்கொளுத்தி ஊதிவிட அதிலிருந்து புகையெழும்பும். இதனை நாசியினால் நுகரவும், தேள்விஷம் நெறிக்கட்டு முதலியவைகள் தீரும். கைகண்டது.

## 103. தேளுக்கு

எருக்கம்வேர் வாண மருந்துட னிரண்டு
மியல்புடன் சரிநிறை யாக
யெருக்கம் பால் விட்டு மையதுபோல
வேயரைத் துண்டைய தாக்கி
வருந்திய தேளுங் கொட்டிடில் தவந்நீர்
வார்த்துரை தேகடி வாயிற்
றிருத்தமாய்ப் பூசுத்தேள் விடமீளுஞ்
சீர்பெரு மானுவின் முறையே. 159

(இ-ள்.) எருக்கம் வேர் 1 பலம்
வாண மருத்து ,,

இவ்விரண்டையும் ஒரு கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாக மைபோல் அரைத்து மாத்திரைகளாகச் செய்யவும்.

தேள் கொட்டினால் இம்மாத்திரையை வெந்நீர்விட்டு உரைத்துக் கடிவாயில் பூசவும், தேள் விஷங்கள் தீரும்,

குறிப்பு: கெந்தகம், வெடியுப்பு, கரி ஆக மூன்றுஞ் சேர்ந்தது சாதாரண வாண மருந்து எனப்படும்.

## 104. தேளுக்கு மருந்து

பாக்குவெத் திலையை மென்னு நெய்க்கொட்டான்
பழமதை நறுக்கியேகூட
நாக்கினால் மென்னுசாரம தற்கு
நளிர்கடி வாயிலிற்பூச
தாக்கிடுங் கழற்சிக் காய்பருப் பரைத்துத்
தடவியே புகையதைக் காட்டு

தோக்கிடுந் தேளின் விடமது மீளுஞ்
சொல்லிய விபுவுணர் முறையே. 160

(இ-ள்.) பாக்கு, வெத்திலே, நெய்க்கொட்டான்பழம் (பூந்திக்கொட்டை) இவைகளை மென்று தின்னவும். இதன் சாரத்தைப் பூசவும்,

கழற்சிக்கொட்டைப் பருப்பை அரைத்துக் கொட்டு வாயில் தடவிப் புகை பிடிக்கவும். தேள் விஷம் தீரும்.

## 105. தேள்கடிக்குக் குளிசம்

சோமவா ரத்தின் காலமே சிறுகாஞ்
சோறியின் வேரரு மலேபிடுங்கி
நேமமாய்க் குளிச மாடியே வைத்து
நீடிய தேளது கொட்டில்
நாமுனுஞ் சொன்ன குளிசமேயெடுத்து
நம்பியே யிறக்கிடி லிறங்கும்
பூமகன் சரபேந் திரனுணர் முறையாம்
புனிதமாய்ச் செய்துநீ பாரே. 161

(இ-ள்) திங்கட்கிழமை காலேயில் சிறுகாஞ்சோறி வேரை அருமல் பிடுங்கிக் குளிசமாக்கி வைத்துக்கொள்ளவும். இக்குளிசத்தைத் தேள்கொட்டி அவஸ்தைப் படுபவரின் கொட்டுவாயில் வைத்து இறக்கவும். விஷம் தீரும்.

## 106. தேளுக்குப் பூச்சு

கார்த்திகைக் கிழங்கு நண்டினிேடு
கானக் குரங்கினின் விட்டை
சாத்திய பொன்னரிதாரமின் ஞன்குஞ்
சமனெருக் குஞ்ரெடிப் பாலே
வார்த்துமே கல்வத் தரைத்து மைப்போல
வகையுட னுண்டையுஞ் செய்து
பார்த்திடத் தேளின் விடமதுக் கெருக்கம்
பாடனி லுரைத்ததைப் பூசே. 162

(இ-ள்.) கலப்பைக்கிழங்கு காட்டுக்குரங்கின் விட்டை
நண்டின் ஓடு சுத்திசெய்த தாளகம்

இவைகளைச் சமனெடுத்து ஒரு கல்வத்திலிட்டு எருக்கம் பால்விட்டு நன்ருக அரைத்துச் சிறு சிறு மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

தேளின் விஷத்திற்கு ஒரு மாத்திரையை எருக்கம் பால்விட்டு இழைத்துக் கொட்டுவாயில் போடவும். குணம் உண்டாகும்.

### 107. தேளுக்குக் காதிலூாத மருந்து

தரணியிற் றேளுங் கொட்டியே வருத்தந்
தான்மிக வாகிவந் திடிலே
அருகம்வே ருப்பு மென்று பாசு
மாறியே செவியின் லூது
திருகுபெய் தேளின் விடமது மீளுஞ்
செய்வளஞ் சூழ்சென்னல் வளரு
முரமிகுந் தஞ்சை துரைசர பேந்திர
னுணர்த்திடு மூதிய மருந்தே 163

(இ-ள்.) அருகம் வேரையும் உப்பையும் சேர்த்து வாயிலிட்டு மென்று தேள்கொட்டி வந்தவரின் எதிர்செவி யில் ஊதவும். (வலதுப்புறம் கொட்டினுல் இடது செவியிலும் இடப்புறமாகில் வலது செவியிலும் ஊதவும்.)

### 108. தேளுக்குக் காதில் போட வேலை மருந்து

வல்லபூ மியினிற் றேளறு கொட்டி
வருத்தமாய் வருபவர் தமக்கு
நல்லவே ளையிலை யுப்புடன் கசக்கி
நாடியே வேறு பாகமதாய்
சொல்லிய படிக்கிக் காதினிற் குத்து
தொல்லைசெய் தேள்விட மீளும்
வல்லவன் றஞ்சைநகர் சரபேந்திரன்
வழுத்திய வேளையின் மருந்தே. 164

(இ-ள்.) நல்லவேளையிலையை உப்புடன் சேர்த்துக் கசக்கி வலதுபுறத்தில் தேள் கொட்டினுல் இடது காதிலும் இடது புறம் கொட்டினுல் வலது காதிலும் பிழியவும். தேள் விஷங்கள் தீரும்.

### 109. தேள் விஷத்திற்கு பூச்சு

உலகினிற் கோழிக் காரமுஞ் சங்கர
  னூரலு மெருக்கநற் பாலை
நலமுடன் கல்வத் திட்டரைத் துண்டை
  நண்புடன் செய்ததையுவர்த்தி
சலமுடன் றேளுங் கொட்டிய வாயிற்
  ருனதை யுரைத்துமே பூசி
வலுவுட னனலிற் காய்ச்சிட மீளு
  மன்னர்சர பேந்திர னருளே. 165

(இ—ள்.) கோழிக்காரம்
சங்கரனூரல் (சிவகரந்தை?)

இவற்றைக் கல்வத்திலிட்டு எருக்கப்பால் விட்டு நன்ருக அரைத்து உருண்டைகளாகச் செய்துகொள்ளவும். தேள் கொட்டிற்கு இம்மாத்திரையிலொன்றை எடுத்து தண்ணீருடன் இழைத்து மேலேபூசி அனலில் காய்ச்சவும். கொட்டும் விஷங்கள் தீரும்.

### 110. தேளுக்குக் குன்றியஞ்ஜனம்

காட்டின்வெண் குன்றி வேரைச் சிறுநீர்
  கடுகவே விட்டதை யுரைத்து
நாட்டினிற் றேளுங் கொட்டியே பதைத்து
  னண்டையில் வந்திடு பவர்க்கு
நாட்டமாங் கண்ணிற் கலிக்கமே போடு
  நளிருறுந் தேள்விட மீளும்
வாட்டாமிலாத விபுசர பேந்திரன்
  வழுத்திய குன்றியஞ் சனமே. 166

(இ-ள்) வெள்ளைக்குன்றிமணி வேரை உலகமறியாப் பிள்ளைகளின் சிறுநீர்விட்டு இழைத்துத் தேள் கொட்டி வந்திருப்பவர்களின் கண்களில் கலிக்கமாக இடவும். தேள் விஷங்கள் மீளும்.

### 111. தேளுக்குக் கட்டு மருந்து

தோக்கிய தேளுங் கொட்டிடி லதற்குச்
சொல்லுவேன் கானின் கோளுவேர்
பாக்குடன் றின்ன மேலு மேருது
பார்சிறு கீரையு முப்பு
முக்கமாய்க் கசக்கிக் கொட்டின வாயி
லுடனதை வைத்துமே கட்டு
தாக்கியே கொட்டும்வாய்விட மீளுஞ்
சரபபூ பதியுணர் முறையே. 167

(இ-ள்) காட்டுக்கோளுவேர், பாக்கு இவ்விரண்டை யும் மென்று சாப்பிட நெறி ஏருது.

சிறுகீரையையும் உப்பையும் கசக்கிக் கொட்டின வாயில் வைத்துக் கட்டவும். விஷந்திரும்.

### 112. தேளுக்குக் கட்டு மருந்து

பாகலி னிலையைக் கசக்கியே தேளும்
பதறியே கொட்டின வாயி
லூகமாய்க் கட்டுத் தேள்விட மீளு
முற்பன மிகுந்திடுந் தஞ்சை
வாகுட னுளுஞ் சரபபூ பதியு
மனமுணர்ந் துரைத்ததை நல்ல
பாகமாங் காரைக் குரிச்சி வேலப்பப்
பாவல னுரைதமிட் பாகவே. 168

(இ-ள்.) பாகல் இலையைக் கசக்கித் தேள் கொட்டிய இடத்தில் வைத்துக் கட்டவும். குணமுண்டாகும்.

### 113. தேளுக்குக் காதிற் குத்து மருந்து

மக்கள்கா லடிகள் படாதிடந் தனிலே
வளர்கின்ற வருகம்புல் லாதல்
லிக்குவ லயத்தின் வளர்கின்ற வேளை
யிலையுமா குதலிரண் டொன்றைப்
பக்குவமுள்ளி வசம்புடன் கூட்டி
பண்புட நறுக்யே தேளு
மிக்கவே கொட்டி வருபவர் தமக்கு
மிடவகை யோதவுங் கேளே. 169

ஓதுவேன் றேளும் வலப்புறங் கொட்டி
லுற்பன மாயிடப்பு றத்தில்
சாதகமான யிடப்புறங் கொட்டிற்
றப்பிலா வலப்புறந்தனிலே
யோதிய படிக்கிச் செவியினிற் பிழிய
வோடிடுந் தேள்விட மதுவும்
நீதியே மிகுந்த சரபபூ பதியும்
நிதமுணர் தேள்விட மருந்தே. 170

(இ-ள்.) ஜனங்கள் நடமாடாத இடத்திலிருக்கும் அருகம்புல்லையோ அல்லது வேளையிலையையோ ஏதேனும் ஒன்றைக் கொண்டுவந்து பூண்டு, வசம்பு இவைகளையுங் கூட்டி நசுக்கி வலது புறங் கொட்டினால் இடது காதிலும், இடதுபுறங் கொட்டினால் வலது செவியிலும் 4 சொட்டுகள் விடவும்.

### 114. தேளுக்கு

துடிப்புள்ள தேளுங் கொட்டியே மெத்தத்
துடித்தெரி வுற்றவர் தமக்கு
வடித்தசுண் ணும்பைப் புளியுடன் பிசைந்து
வளகொடு வாயினிற் கட்டு
மிடக்குள்ள தேனின் விடமது மீளு
மிச்சக மீதிலே கீர்த்தி

வடிப்பமாய் பெற்ற சரபபூ பதியு
மகிழ்ந்துரை தேள்விட மருந்தே. 171

(இ-ள்.) சுண்ணும்பு நீறு புளி

இவ்விரண்டையும் சரியெடையெடுத்துப் பிசைந்து கொட்டுவாயில் வைத்துக் கட்டவும். தேள் விஷங்கள் தீரும்.

### 115. தேளுக்குப் பூச்சு மருந்து

பத்திலாந் தேளுங் கொட்டியே மெத்தப்
பதைத்தவுந் னண்டையில் வந்தால்
வெத்திலே யுப்பு மரைத்துநன் ருக
வேகொட்டு வாயிலிற் றடவு
சுத்தமாய்த் தேளின் விடமதுமீளு
சொல்லிய வெத்திலே மருந்து
முத்தம புருட சிகாமணித் தஞ்சை
யுரசர பேந்திர னருளே. 172

(இ-ள்) வெத்திலேயையும், உப்பையும் நன்கு அரைத்துக் கொட்டுவாயில் தடவவும். தேள் விஷம் தீரும்.

### 116. தேளுக்குப் புகை

மயிலுடன் பூரான் கோழியி னெச்சம்
வளர்சீதா செங்கழு நீர்வேர்
இயலுட னின்ஞல் வகையதி லொன்றை
யிடருறு தேள்விட மதற்கு
நயமுடன் புகையைப் பிடிவிஷ மீளும்
நம்பினர்க் கருள்தயை மிகுந்த
அயில்படை யுடைய சரபபூ பதியு
மன்புட னுரைத்திடு முறையே. 173

(இ-ள்,) மயில் எச்சம் கோழியின் எச்சம்
பூரான் எச்சம் சீதாசெங்கழுநீர் வேர்

இவ்வகை மருந்துகளின் ஏதேனுமொன்றை எடுத்துத் தேள் கொட்டிய இடத்தில் படும்படி புகை பிடிக்கவும். குணமுண்டாகும்.

### 117. தேளுக்கு மஞ்சள் புகை

மட்டிலா விடமு மிகுற்றிடுதேளு
மதுவுனைக் கொட்டி வந்தக்
கொட்டுவா யினிலே மஞ்சளின் புகையைக்
கொடுமிகுஞ் சூடாய்த் தானே
அட்டியி லாமற் றேள்விட மீளு
மன்பன்பூ வுல்கினுக் கின்பன்
வட்டமா மதிள்சூழ் தஞ்சைமா நகரில்
வாழ்சர பேந்திர ளருளே. 174

(இ-ள்.) தேள் கொட்டி அதனால் வலியேற்பட்டால் அக்கொட்டு வாயில் மஞ்சளை நெருப்பிலிட்டுப் புகைத்து அப்புகை படும்படி காட்டவும் தேள் விஷங் குணமாகும்.

### 118. தேளுக்குப் புகை

சுரபியா மயிருங் கழுதையின் றலையின்
சூழ்ந்திடு மயிரும் வால் மயிரும்
முறையதி லொன்றை நெய்யுடன் கலந்து
முண்டிடு புகையதைப் பிடித்தால்
லுரமிகுந் தேளின் விடமது மீளு
முலகினிற் சிவகிரு பையினல்
வரமிகுந் தஞ்சை வாழ்சர பேந்திரன்
வழுதிய தேள்விடப் புகையே. 175

(இ-ள்.) பசுவின் உடலிலிருக்கும் மயிர்
கழுதையின் தலை மயிர்
கழுதையின் வால் மயிர்

இவற்றுள்ளே ஏதேனு மொன்றை நெய்யில் தோய்த்து நெருப்பிலிட்டுக் கொட்டுவாயில் புகைக்கவும். தேள் விடங்கள் தீரும்.

## 119. தேளுக்குப் புகை

வாகையின் வித்துப் பசுவினி றைச்சி
மாதளே வேரிவை மூன்றும்
மூகமா யெருக்கம் பாலினி லரைத்து
யுற்பன புகையதைப் பிடித்தா
லேகிடுந் தேளின் விடமது பரம
யீசநற் கருணையி னாலே
ஆகமநூல்க ளறிசர பேந்திர
னருளிய தேள்விடப் புகையே. 176

(இ-ள்.) வாகைவிதை மாதளேவேர்
பசுவின் இறைச்சி

இம்மூன்றையும் எருக்கம்பால் விட்டு நன்ருக அரைத்து அனலிலிட்டுத் தேளின் கொட்டுவாயில் புகைக்கவும். விஷங்கள் தீரும்.

## 120. நக, தந்த விடத்திற்குப் பூச்சு

மஞ்சளும் மருதம் பட்டையுங் குமிழ
மரத்து ... ... ... ... ...
யுஞ்சிக மீதிற் சிறுசெருப் படிவே
ருடன் ... ... ... ... ...
யுஞ்சொலு மஞ்சு வகை மருந் ததனே
யுத ... ... ... ... ...
சஞ்சலமுள்ள நகதந்த விடமுந்
தானறு மஞ்சளின் பூச்சே.

(இ-ள்.) மஞ்சள் சிறுசெருப்படி வேர்
மருதம்பட்டை ...........
குமிழமரவேர்

இவைகளேச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு நன்ருக் அரைத்து நகம், பற்கள் முதலானவைகளாலேற்பட்ட புண் களுக்கு இடவும்.

**121. உதிரமண்டெலிக்குக் கோவையிலை மருந்து**

உதிரமண் டெலிகடிச் கோர்மருந் துண்டு
வுண்மையா யிரைத்திடக் கேளு
சதிரமும் ரோமத் துவாரம தெல்லாஞ்
சற்றுவ மிரத்தம் பீறிடுமே
யதுக்கட வினிற் கோவையி னிலைச்சா
றுழக்கது வுண்டிடக் கொடுத்து
மதைக்கடி வாயின் மேலெல்லாம் பூசி
யவ்விலை பொட்டணமாக்கே. 178

பொட்டணமாகக் கட்டியே யதையெப்
போதுமு கந்துகொண் டிருநீ
யட்டியிலாம லுதிரமண் டெலியி
னதின்விட மீளுமில் லாவிட்டால்
விட்டிடு முப்பது நாழியிற் பிராணன்
வீணலச் சுறுக்கினிற் செய்யே
கட்டளை கொடுத்து நீதியைச் செலுத்துங்
கருணைகூறு விபுவரை யிதுவே. 179

(இ-ள்.) உதிரமண்டெலி கடித்தால் தேகமுழுதும் ஒவ்வொரு ரோமத்துவாரத்திலிருந்தும் இரத்தம் ஒழுகும். அதற்குக் கோவையிலைச்சாறு உழக்கு உட்கொள்ளவும். அதனைக் கடிவாயினும் பூசவும். கோவை இலையை கசக்கிப் பொட்டணம் கட்டி அதனை முகரவும். அப்படி இருந்தால் தான் குணம் உண்டாகும். இல்லாவிடில் 30 நாழிக்குள் பிராணன் போய்விடும். ஆகவே வெகு சீக்கிரம் செய்யவும்.

**122 விரியன் கடிக்கு மருந்து, துவலை, நஸ்யம்.**

விரியனுங் கடித்து மெத்தவும் வருத்த
மேகொண்டுன் னண்டையில் வந்தாற்
றருவினிற் படருஞ் சிறிகுறிஞ்சாவேர்
தனையரைத் தாவின்பால் தன்னி

லுறுதியாய்க் கணத்திற் கொடுத்திடு மதற்கு
மோதுவேன் றுவளைய தொன்று
கருவுடன் விடமூ மீறுமுன் ருனே
கனமிகு நாட்டினிற் சுக்கே. 180

சுக்குடன் புங்கம் விரைகழற் கோடி
தோன்றிய கோழியி னவரை
யுக்கின யிலுப்பைக் கட்டியோ டைந்து
மொண்ணுபோல் சரிநிறை யாகப்
பக்குவம் சிறுநீர் தன்னிலே யரைத்துப்
பார்சிறு நீரினிற் கரைத்து
உக்கிரமாகற் றுவளையு மிட்டு
வுடனதை நசிமுஞ் செய்யே. 181

நசியமுஞ் சலதாய்ச் செய்திட விரியன்
லால்வெகு கடிகளு மீளு
முசிதமாஞ் சோழ நாடதைச் செங்கோ
லறுநெறி தவறிடா தாளுஞ்
சசியணி பரம சிவனருள் பெற்றுத்
தஞ்சைமா நகரதை யாளுந்
தசரதன் பாலன் பலசர பேந்திரன்
ருனுணர்ந் திடுவிட மருந்தே 182

(இ-ள்.) விரியன் பாம்பு கடித்து உன் சமீபம் யாரோ னும் வந்தால். சிறுகுறிஞ்சா வேரைக் கொண்டுவந்து பசுவின் பால் விட்டரைத்து உட்கொள்ளக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

2) சுக்கு புங்கம் விதை
கழற்சிக்காய் கோழியாவரை
இலுப்பைப் புண்ணுக்கு

இவைகளை வகைக்குச் சமனெடுத்து உலகமறியாச் சிறு பிள்ளைகளின் சிறுநீரைவிட்டு நன்ருயரைத்துக் கடிவாயில் இடவும், இதில் ஒரு சொட்டெடுத்து நாசியிலும் நஸ்யம் செய்யவும்.

### 123. விரியன் கடிக்குத் தும்பை மருந்து

விரியனுங் கடித்து விடமது மீறில்
    விழுதியின் வேரதின் கூட
வரியதோர் தும்பை யடங்கலுந் துவைத்து
    யதிலுரி சாறது முப்புஞ்
சரியதாய் நாலு துட்டெடை கூட்டிச்
    சாப்பிட விடமது மீளுங்
கரிபரிசேனை சூழ்சர பேந்திரக்
    காவலனுரை தும்பை மருந்தே. 183

(இ-ள்.) விரியன் கடித்து விஷமேறினால், விழுதிவேர்ச் சாறு ½ படி. தும்பைச்சாறு ½ படி இவைகளுடன் உப்பு நாலு துட்டெடையிட்டுச் சாப்பிடவும். விஷங்கள் தீரும்.

### 124. விரியன் கடிக்கு உத்தாமணி மருந்து

பூவினின் விரியன் தீண்டிடி லதற்குப்
    பொருந்திய மருந்தது கேளு
ஆவிநற் பாலில் கொடிவேலீ வேரை
    யரைத்ததைக் குடித்திட மீளுந்
தாவிய பரியின் குலனற் றயவிற்
    றருமன் பலத்தினில் வீமன்
வாவினர் தஞ்சை யிற்சர பேந்திரன்
    வழுத்துமுத் தாமணி மருந்தே. 184

(இ-ள்.) பசுவின் பாலுடன் கொடிவேலி வேரைச் சேர்த்துக் கைபடாமலரைத்துக் குடிக்கவும். (சுமார் ½ கழற்சியளவு)

**குறிப்பு :** உத்தாமணி மருந்து என்ற பெயர் காணப் படுவது சரியல்ல எனத்தெரிகிறது.

### 125. விரியன் கடிக்குக் கஞ்சாங்கோரை மருந்து

அஞ்சிய விரிய னதுகடித் திட்டு
வலமலந் தேவரி லதற்கு
சஞ்சீவிக் கஞ்சாங் கோரையை நீரிற்
றுனரைத் தேகொடு மீளுந்
தஞ்சமென் றவர்க்குச் சகலபாக் கியமுந்
தானருள் சற்குண மேரு
தஞ்சையிற் சரபேந்தி ரனுணர் நற்கஞ்
சாங்கோரை மருந்திது வாமே. 185

(இ-ள்.) விரியன் கடித்திடில் கஞ்சாங்கோரையைச் சமூலமாக எடுத்து அரைத்து உட்கொள்ளக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

### 126. பேய்நாய் கடிக்குச் சுண்ணும்பு மருந்து

பேயது கொண்டு திரியும்நாய் கடிக்கிற்
பிசக்கிலாக் கல்லின்சுண் ணும்பிற்
றுயக யிலவம் பிசினத்தைச் சுட்டு
சாரித்து வக்கடி வாயில்
நீயதைப் பூசு நாய்கடி மீளு
நிர்ணயத் தஞ்சைமா னகரை
தாயமா யாண்டு நீதிகள் செலுத்தும்
நரபதி யுணர்கண்ண மருந்தே. 186

(இ-ள்.) வெறிநாய் கடித்தால், அதற்குக் கற்சுண்ணும்புடன், சுட்ட இலவம்பிசினைச் சேர்த்துத் தண்ணீர்விடடுக் குழைத்துக் கடிவாயில் வைக்கவும். விஷங்கள் மீளும்.

### 127. பேய்நாய் கடிக்கு எள்ளெண்ணெய்ப் பூச்சு

கள்ளபேய் நாயுங் கடித்திடி லதற்கு
கருதுவே ஞோர்மருந் துரிய
யெள்ளினெண் ணெயிற்சா ராயமுங் கூட்டி
யேகமாய்க் கலந்ததைக் கடிவா

யுள்ளூறப்பூசு நாய்விட மீளு
முற்பன விற்பன மிகுந்த
வள்ள ளிலுயர்ந் துரைசர பேந்திரன்
வழுத்திடு மெள்ளெண்ணெய்ப் பூச்சே. 187

(இ-ள்.) சுத்தமான எள்ளெண்ணெயுடன், சாராயத்தைக் கலந்து நன்கு குலுக்கிப் பேய் நாய் கடித்த இடம் முழுவதிலும் பூசவும். விஷங்கள் தீரும்.

## 128. பேய்நாய் கடிக்கு பேய்த்தும்பைச்சாறு பூச்சு

துட்டபேய் நாயுந் துடர்ந்தது கடித்துத்
துடித்துவுன் னண்டையில் வந்தால்
சட்டமாம் பேய்த்தும் பையிலேச் சாற்றில்
சாற்றுவெங் காரமு முரைத்து
திட்டமா யந்தக் கடிவிட மதனிற்
றிரமுடன் பூசிட மீளுஞ்
சட்டமாந் தஞ்சை நகர்சர பேந்திரன்
சாற்றிய பேய்த்தும்பைப் பூச்சே. 188

(இ-ள்.) வெறிநாய் கடித்த புண்ணுடன் உன்னிடம் வந்தால், பேய்தும்பைச் சாற்றுடன் வெங்காரத்தை உரைத்துக் கடிவாயில் பூசவும். குணமாகும்.

## 129. பேய்நாய் கடிக்கு நஸ்யம்

நிச்சயமாகப் பேய்கொண்ட நாயும்
நின்னையே கடித்திடி லதற்கு
பச்சைவெத் திலையொன் றிலுப்பையின் கட்டி
பகர்வசம் புடனேவூர்ச் சுக்கு
மிச்சையா யரைத்துப் பொட்டணங் கட்டி
யேநல் நஸ்யமுஞ் செய்நீ
சச்சிதா னந்தர் கிருபையே பெற்ற
சரபபூ பதியுரை யிதுவே. 189

(இ-ள்.) பேய்நாய் கடித்திடில் அதற்கு மூக்கிலிடும் மருந்தாவது.

ஒரு வெத்திலையுடன் அரப்பு, வசம்பு, சுக்கு இவைகளைத் தண்ணீர்விட்டு அரைத்து விழுதை வைத்து பொட்டணங் கட்டி 4 அல்லது 5 துளிகள் நஸ்யமிடவும். நாய்கடி விஷங்கள் தீரும்.

### 130. பேய்நாய் கடிக்கு ஆணைவேர் மருந்து

சளமிகுந் திடுபேய் நாயது கடிக்கில்
சாற்றுவே ரோர்மருந் ததற்கு
இளவெந் நீர்தனிற் காட்டிலா ணைவே
ரேயதை யரைத்துளுக் குக்கொள்
உளபடி யப்பேய் நாய்கடி மீளு
முக்கனி வழிந்துபாய் வயல்சூழ்
வளமிகுந் தஞ்சை நகர்சர பேந்திரன்
வழுத்திய முறையிது வாமே. 190

(இ-ள்.) வெதுவெதுப்பான வெந்நீர்விட்டு ஆணை வேரையெடுத்து அரைத்து உள்ளுக்கு உட்கொள்ளவும். வெறிநாய் கடிகள் நீங்கும்.

குறிப்பு: ஆணை—காட்டுக் கறிவேப்பிலை.

### 131. பேய்நாய் கடிக்குப் பூஷணி மருந்து

காசினி தனிலே பேய்கொண்ட நாயுங்
கடித்திடி லதற்குமோர் மருந்து
பூசினிக் காயின் சாறுடம் பெங்கும்
பூசிடு மதில்வளர் கின்ற
பூசினிப் பிஞ்சைக் கறியது சமைத்துப்
புசித்திட நாய்கடி மீளும்
வாசவனிக்கராப் வளருதென் றஞ்சை
வாழ்சர பேந்திரனருளே. 191

(இ-ள்.) பேய்நாய் கடித்தால், பூசணிக்காய்ச் சாற்றை உடம்பு முழுவதிலும் பூசிக்கொள்ளவும். பூசிணிப் பிஞ்சைக் கறியாகச் சமைத்து உட்கொள்ளவும். நாய்கடிகள் மீளும்.

## 132. பேய்நாய் கடிக்கு வாகைப்பட்டை மருந்து

வாசுது கெட்ட பேய்கொண்ட நாயு
    மதுகடித்திடிலட வியினில்
வாகையின் பட்டை யரைத்துநன் ருக
    வாழையின் பழத்தினிற் கொள்ளுப்
போகுநாய் விடங்கள் சிவகிரு பையினுல்
    புத்தியுஞ் சித்தியு முசித
நாகரீ கங்கள் மிகுசர பேந்திரன்
    நரபதி யுரைமருந் ததுவே. 192

(இ-ள்.) வெறிநாய் கடித்தால் காட்டு வாகைப் பட்டையைக் கொண்டு வந்து அரைத்து (ஒரு நெல்லிக்காய் அளவெடுத்து) வாழைப்பழத்துடன் உட்கொள்ளவும். நாய் விஷங்கள் தீரும்.

## 133. பேய்நாய் கடிக்கு மருந்து

முரண்டிடும் பேய்நாய் கடித்திடி லதற்கு
    மோ துவே னக்கடி வாயிற்
றிரண்டிடு நெய்யைக் காய்ச்சியே குற்றுத்
    தினமருந் தழிஞ்சிலின் வேர்ச்சா
றுரந்தா மூன்று பங்குநெய் யோர்பங்
    குறுதியாய்க் கலந்துளுக் குக்கொள்
பறந்திடும் நாயின் கடியது தஞ்சைப்
    புரத்தை யாள்விபு வுரையே. 193

(இ-ள்.) வெறி பிடித்த நாய் கடித்தால் அந்தக்கடி இடத்தில் காய்ச்சியை நெய்யைச் சூடாக விடவும்.

2. அழிஞ்கில்வேர்ச்சாறு 3 பங்கு
நெய 1 பங்கு

இவ்விரண்டையும் ஒன்று கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். நாய் கடிகள் தீரும்.

### 134. பேய்நாய் கடிக்குப் பூச்சு

வளமிலா நாயுங் கடித்திடி லதற்கு
வண்மையா மோர்மருந் துரைப்பேன்
மிளகுடன் கடுகு மதூரமுங் குப்பை
மேனியி னிலைரசத் தினிலே
வளமுட னரைத்துச் சுறுக்கினிற் பூசு
வன்கதிர் முன்பனி போல்போ
மளவிலாக்கீர்த்தி பெருசர பேந்திர
வண்ணம்சொல் லுச்சித மருந்தே. 194

(இ-ள்.) பேய்நாய் கடித்தால் அதிமதுரம்
மிளகு கடுகு

இம்மூன்று சரக்குகளையும் குப்பைமேனிச் சாறுவிட்டு நன்றாக அரைத்துக் கடிவாயில் பூசவும்,

### 135. நாய் கடிக்குப் பூச்சு

நக்கலு முன்னைக் கடித்திடு மாகில்
நல்விளாம் பட்டையை யரைத்து
சிக்கெனப்பூசு வாய்கடிவிடமுந்
தீருமிவ் வுலகினிற் கீர்த்தி
மிக்கவே மூவேழ் வள்ளலி னுயர்ந்த
மெய்தமிழா புகழ் பெற்ற
சர்க்கரை மொழியான் றஞ்சைமா நகர்வாழ்
சரபபூ பதிசொலு முறையே. 195

(இ-ள்.) விளாம்பட்டையை அரைத்துக் கடிவாயில் பூசவும். நாய்கடி விஷங்கள் தீரும்.

### 136. நாய்கடிக்கு புளிப் பூச்சு

கணங்கனு முன்னைத் துரத்தியே கடித்த
துக்கொரு மருந்துசொல் வேன்கேள்
மணங்கமழ் புளியம் புத்துட மண்ணு
மரைத்து மவ் வாயினிற்பூசு
வணங்கியே போரே னெனச்சொல்லி
வஞ்சக நெஞ்சக ரஞ்சு
நிணங்கமழ் வேலான் சரபபூ பதியு
நித்திய முணர்புளி மருந்தே 197

(இ-ள்.) நாய் கடித்த கடிவாயில் புளியையும் புத்து மண்ணையும் அரைத்துப் பூசவும். விஷங்கள் தீரும்.

### 137. பேய்நாய் கடிக்கு ஊமத்தைப் பூச்சு

குக்கலுங் கடித்துக் குளறியுன் னண்டைக்
கோவென வந்தழு திடிலே
பக்குவச் சுண்ணும் பதேனிலூ மத்தைப்
பண்ணிலைச் சாறதில் ரேகித்
துக்கடி வாயி லடிக்கடி பூசு
மோடிடுங் கதிர்முன் பனிபோல்
சக்கரவர்த்திச் சரபபூ பாலன்
ருனுண ருள்மத்தை மருந்தே. 197

(இ-ள்.) சுண்ணும்பை ஊமத்தையிலைச்சாறு விட்டு அரைத்துக் கடிவாயில் அடிக்கடி பூசவும். வெறிநாய் கடிகள் தீரும்.

### 138. நாய்கடிக்கு வசம்பாதிப் பூச்சு

சூரனுங் கடித்துக் கோவெனுஞ் சத்தத்
துடனுன் னண்டையில் வந்தால்
பாரினின் வசம்புங் கருங்கொடி வேரும்
பற்றிலா வுள்ளியு மரைத்து

நேரிடப்பூசு நாய்கடி மீளும்
நிர்ணய மாகவே தஞ்சைச்
சீருடனுளுஞ் சரபபூ பதியுஞ்
செப்பிய வசம்புட மருந்தே. 198

(இ-ள்.) வசம்பு, கருங்கொடிவேர், பூண்டு இவைகளைத் தண்ணீர்விட்டு அரைத்து நாய்கடி புண்ணில் பூசவும் விஷங்கள் தீரும்.

### 139. பேய்நாய் கடிக்குப் பேய்முசுட்டை மருந்து

நல்லெண்ணெய் தனிலே துட்டெடை யொன்று
நாற்பலம் பனைவெல்லந் தானும்
சல்லைபேய் முசுட்டைச் சாறுடன் கரைத்து
முண்மையாய்க் கொண்டுள் ளுக்கு
வல்லபமாயன் றிருவுப வாச
மாகவு மற்றநா ளதனிற்
சொல்லிய வீர மரத்துவேர்ப் பட்டைச்
சுருக்கனிற் சட்டமா யரையே. 199

சட்டமா மெலுமீச் சம்பழத் தளவு
தானரைத் திளவெந்நீர் தன்னில்
விட்டிடுவாயில் வாந்திய தாகு
மிருபது நாழிகை மட்டு
மட்டியில் லாமல் முருங்கையி னிலைச்சா
றதுவுமுப் பதுவுமில் லாமல்
யிட்டிடு யிந்தப் படிக்குமூன் றுவிசை
யெட்டுநா ளானதின் பிறகே. 200

எட்டுநாட் கப்பால் பூசினிக் காயு
மிராத்திரி வெள்ளெ ரிக்காயு
மிட்டிடு தினமும் விடமது யிருந்தால்
வீறிடும் நாய்நரி போல

மட்டிலா விடமு மிருக்குதென் றறிந்து
மறுபடி முன்சொல்லு மருந்தைச்
சட்டமா யிரண்டு நாள்முன்சொற் படிக்குத்
தான்கொடு விடமிது போமே. 201

விடமிலா திருந்தால் முன்புபூ சினிக்காய்
வெள்ளெரிக்காய் தின்ற போதே
யடவுட னிருக்கில் மறுபடி மருந்தை
யருந்திடா திருசிவ கிருபை
யுடவலு வதனுற் றஞ்சையை யாளு
முற்றம சரப பூபதியே
படியதில் மனிதர்க் காகவே யுரைத்த
பண்புபேய் முசுட்டையின் மருந்தே. 202

(இ-ள்.) நல்லெண்ணெய் ஒரு துட்டெடை எடுத்து அதனுடன் பனைவெல்லம் 4 பலம் கூட்டிப் பேய் முசுட்டைச் சாற்றுடன் குழப்பி உட்கொள்ளவும். அன்று ஆகாரமே சாப்பிடாமலிருந்து மறுநாள் வீரமரப்பட்டை ஒரு எலுமிச்சம் பழத்தளவு எடுத்து வெதுவெதுப்பான வெந்நீர் விட்டரைத்துக் குழப்பி உட்கொள்ள வாந்தியாகும். 20 நாழிகை கழித்து (அதாவது சாயங்காலம்) முருங்கையிலைச் சாற்றை உப்புச் சேர்க்காமல் அப்படியே பருகவும்.

இம்மாதிரி 3 தடவைகள் செய்து 8 நாட்கள் சென்றவுடன் பூசனிக்காயும், வெள்ளெரிக்காயும் உட்கொள்ளவும்.

நாய் விஷம் இருந்தால் நாய், நரிபோல ஊளையிடுவான். அப்படியிருந்தால் முன்சொன்ன மருந்தை மறுபடியும் கொடுக்கவும்.

பூசனிக்காயும், வெள்ளெரிக்காயும் வேண்டிய அளவு உட்கொண்டபோது வேறு விகாரங்கள் இல்லாமலிருந்தால் விஷம் நீங்கிவிட்டது என்று தெரிந்துகொள்ளவும்,

குறிப்பு :- வீரமரம்—விடத்தேரி மரம்.

## 140. பேய்நாய் கடிக்குக் குங்கிலியப் புகை

சங்கையில் லாத பேயது கொள்நாய்
தான்கடித் திடற்கடி வாயிற்
குங்கிலி யத்தைப் புகைகொடு பின்பு
கூறிடு வரகரி சியைத்தான்
அங்கியி லவித்து வுப்பிலா துண்ணு
வக்கடி மீண்டிடுஞ் சுருக்கில்
கங்கையைத் தரித்த கடவுளர் கிருபையைக்
கைக்கோளு மானுவின் முறையே. 203

(இ-ள்.) வெறிநாய் கடித்த இடத்தில் குங்கிலியப் புகை கொடுக்கவும். வரகரிசியை ஊறவைத்துப் பிட்டு போல் அவித்து, உப்புச் சேர்க்காமல் உட்கொள்ளவும், நாய்க்கடி விஷங்கள் தீரும்.

## 141. பேய் நாய், பேய்நரி கடிக்கு ஊமத்தை மருந்து

காட்டி னிற்றிரி யும்பேய் நாய்க
டித்திடி லதற்கொரு மருந்து
நாட்டிக மருளு மத்தையின் வித்தைத்
தானரை திடுமையைப் போல
வாட்டமிற் றேற்றான் விரைப்பி ரமாண
மன்புடன் வெல்லந் தன்னி
லூட்டிடு முதைய காலம தன்னி
லூற்பன மாவினில் வைத்தே. 204

மாவினில் வைத்து மருந்து சொடாவிட்டால்
வாந்திய தாகும தறிந்து
சாவ தானத்தோ டிருபது நாழி
தானதிற் மேற்றினை யரிசி
யாவது பாசிப் பயறுடன் கஞ்சி
யருந்திடு மருளினூ மத்தைப்
பாவக மருந்து தஞ்சையிற் சரப
பார்த்திப னிரைத்திடு முறையே. 205

(இ-ள்.) வெறிபிடித்த நாய் கடித்தால் ஊமத்தை வித்தை எடுத்து மைபோலரைத்துத் தேற்றாங்கொட்டைப் பிரமாணமுருட்டி வைத்துக்கொள்ளவும். இதனுடன் வெல்லம் சேர்த்து அரிசிமாவுடன் பொதிந்து காலை நேரத்தில் உட்கொள்ளவும். 2 நாழிகைகள் கழித்துத் தினையரிசிக் கஞ்சியோ அல்லது பாசிப்பயற்றங் கஞ்சியோ உட்கொள்ளக் கொடுக்கவும். மாவில் பொதிந்து கொடுக்காவிட்டால் வாந்தியாகும்,

## 142. பேய்நாய், பேய்நரி கடிக்கு

ஓடியே திரியும் பேய்நரி பேய்நா
யுன்னையே கடித்திடி லதற்கு
நாடிய கருவூ மத்தையி னிலையும்
நற்பனங் கட்டியுங் கூட்டி
வூடிய வுண்டை பண்ணியே வுண்ணு
முற்பன வாந்திய தானல்
வாடிய தண்ணீர்ப் பானையும் பத்து
யவன்றலை மேலிடுதானே. 206

தலையினி னீரை விட்டுமோர் சோறுந்
தானுண வாந்தியு நிற்கு
முலைவிலா வாந்தி யிலாவிடிற் றண்ணி
ரூற்றிடா திருவிடா மீளும்
பலமலர் கங்கை திங்களு மருகும்
பாம்புடன் கடுக்கையு மணிந்திவ்
வுலகெலாங் கார்க்குஞ் சிவன்செயல் பெற்ற
வுத்தம விபுவுரை முறையே. 207

(இ-ள்.) கருவூமத்தையிலையும், பனைவெல்லமும் கூட்டி நன்றாக அரைத்து மாத்திரையாக உருட்டி விழுங்கவும். வாந்தி ஏற்பட்டால் 10 பானை நிறையத் தண்ணீரைக் கொண்டுவந்து நோயாளியின் தலையில் கொட்டவும்.

பின்னர் மோர் சோறு உண்ணவும். வாந்தி நிற்கும். வாந்தி இல்லையெனில் தலையில் ஜலம் விடாதே, விஷங்கள் தீரும்.

### 143. நாய்கடிக்கு எருமைச் சாணி பூச்சு

தரணியிற் றிரியும் நாயுந்
தானது கடிவாய் தன்னி
லெருமைச்சா ணகந்தன்னை
யேயரைத் ததனிற் பூசு
திருகுநாய் விடமு மீளுஞ்
செயவளஞ் சூழுந்தஞ்சைப்
புரவலன் சரபதீரன்
புனிதமாயருளும் பூச்சே. 208

(இ-ள்.) வெறிநாய் கடித்த இடத்தில் அப்போதே யிட்ட ''எருமைச்சாணியை அரைத்துப்'' பூசவும். நாய் விஷங்கள் தீரும்.

### 144 நாய்கடிக்கு முதலைப்பால் பூச்சு

இதமில்லா நாயு முன்னை
யேகடி வாயதன்னில்
முதலையின் பல்ல தன்னை
முனிவுட னரைத்துப்பூசு
பதமதாம் விடமு மந்தப்
பரமனு ரருளினாலே
யதிபதி சரபபூ
ஸன்புட னுரைத்த பூச்சே. 209

(இ-ள்.) நாய் கடித்த இடத்தில் முதலையின் பல்லைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பூசவும். விஷங்கள் தீரும்.

### 145. நாய் கடிக்குப் புளியிலைக்கட்டு

பனிசெயு நாயுமுன்னைப்
பற்றியே கடித்தவாயிற்
புளியிலை வறுத்துவைத்து
பொற்புடன் கட்டத்தீரு
மளிகள்கீ தங்கள்பாடு
மற்புதத் துடவைசூழுங்
களிவுள தஞ்சை மாலு
கருத்துட னுணர்ந்தபூச்சே. 210

(இ-ள்.) புளி இலையை வறுத்து நாய்கடித்த இடத்தில் வைத்துக் கட்டவும். விஷம் தீரும்,

### 146. நாய்கடிக்கு வேளைவேர்ப் பூச்சு

துடிப்புள நாயுமுன்னைத்
துடர்ந்தது கடித்தவாயி
லுடுப்பு ராஞ்சியி நன்வேரு
முள்ளியும் வசம்பும் வாய்வின்
றுடிப்பறும் வேளை வேருந்
துரிதமா யரைத்துப்பூச
யிடக்குநாய் கடியுந்தீரு
மின்பமாம் பூச்சதாமே. 211

(இ-ள்.) நாய்கடித்த இடத்தில்
உடும்பிராஞ்சிவேர் வசம்பு
பூண்டு வேளைவேர்

இவைகளைச் சமனெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துப் பூசவும். நாய்கடிகள் தீரும்.

## 147. நாய்கடிக்குப் பருத்தியிலைக் கட்டு

கருத்திலா நாயுமுன்னைக்
கடித்திடி லந்தவாயிற்
பருத்தியி னிலைவறுத்துப்
பத்மதாய்க் கட்டமீளுந்
திருத்திய நீதிதன்னைச்
செலுத்திய விபுவுணர்ந்த
பருத்தியின் கட்டதன்னைப்
பண்புட நீசெய்வாயே. 212

(இ-ள்) பருத்தியிலையைப் பொன்னிறமாக வறுத்து இளஞ்சூடாக நாய்கடி வாயில் கட்டவும். விஷங்கள் தீரும்.

## 148. நாய்கடிக்குக் கருவேலிலைப் பூச்சு

துருசுட நாயுமுன்னைத்
துடர்ந்தது கடித்த வாயிற்
கருவேலி னிலைய தன்னைக்
கருவுமெக் கழுநீர் தன்னிற
துருசுட னரைத்துப் பூசு
சொல்லுநாய் விடமுமீளுந்
துரைசரபேந்திர னின்பாய்
சொல்லிய பூச்சதாமே. 213

(இ-ள்.) கருவேலம் இலையைக் கழுநீர் விட்டரைத்து நாய்கடித்த புண்ணில் பூசவும். விஷங்கள் தீரும்.

## 149. நாய்கடிக்குச் சுண்ணும்புப் பூச்சு

எண்ணுமல் நாயுமுன்னே
யேகடி வாயதன்னிற்
சுண்ணும்பும் புளியிரண்டுஞ்
சுறுக்குடன் பிசைந்துகட்ட

நன்ருக விடமுமீளும்
நரபதி யாத்துயர்ந்த
சுண்ணும்பி ஞதிப்பூச்சைத்
துரிதமாய்ச் செய்துபாரே. 214

(இ-ள்.) சுண்ணும்பு புளி இவ்விரண்டையும் வெகு சீக்கிரமாகப் பிசைந்து நாய் கடித்த புண்ணின் வாயில் வைத்து கட்டவும்.

## 150. நாய்கடிக்கு மருக்காரைக் கட்டு

சுறுக்காக வுன்னே வந்து
சுணகனுங் கடித்தவாயில்
மருக்காரை வேரின்ருேலே
வளமுடன் சீவித்தானே
யுருக்கமா யரைத்துச் சுண்ணும்
புடனதை யரைத்துக் கட்ட
வருக்கமாய் விடமுமீளு
மானுவின் முறையதாமே. 215

(இ-ள்.) நாய்கடித்த புண்ணின்வாயில், மருக்காரை வேரின் மேற்ருேலேச் சுண்ணும்புடன் சேர்த்து நன்ருக அரைத்துக் கட்டவும். விஷங்கள் தீரும்.

## 151. நாய்கடிக்கு ஒதியம்பட்டைக் கட்டு

வளமிலா நாய்கள் தானும்
வந்துனேக் கடிவாய் தன்னில்
மிளகிரண் டொதியம் பட்டை
மெய்ப்புட னரைத்துவைத்து
அளவுள துணியாலேதா
னக்கடிப் புண்ணிற்கட்டு
சளமுள புண்ணும் பேய்நாய்
தன்விட மாறுந்தானே. 216

(இ-ள்.) மிளகு, ஒதியம்பட்டை இவ்விரண்டையும் நன்கு அரைத்துக் கடிவாயில் வைத்துத் துணியினுல் கட்டி விடவும். இவ்வாறு இரண்டொரு நாள் செய்ய, நாய்கடி விஷங்கள் தீரும்.

### 152. நாய்கடிக்குத் தவசு முருங்கைக் கட்டு

அவனியில் நாயுமுன்னை
யலறவே கடித்தபுண்ணிற்
றவசியின் முருங்கையுள்ளி
தன்னுடன் வசம்புங் கூட்டி
நவமுடன் கறுக்கி நைய
நறுக்கிவெச் சோடுகொண்டு
கவுனமாய்ச் கட்டப்புண்ணுங்
கடிவிட மாறுந்தானே. 217

(இ-ள்.) தவசு முருங்கை வசம்பு பூண்டு

இம்மூன்றையுஞ் சமனெடுத்து நன்ருக அரைத்து நாய் கடி வாயிலிட்டு, ஒரு ஒட்டை மேலே வைத்து. ஒரு துணியினுல் கட்டவும்.

### 153. நாய்கடிக்கு நல்லெண்ணெய் பூச்சு

சல்லயப் பேய்நாயுன்னைத்
தான்கடித் திடிலதற்கு
நல்லெண்ணெய் தன்னிலேசா
ராயமுங் குழப்பியிட்டால்
நல்லதா மெந்தப்பேயி
ஞய்கடி மீளுந்தஞ்சை
வல்லமை யாகவாளு
மன்னர்கோ னருளிதாமே. 218

(இ-ள்.) நல்லெண்ணெய், சாராயம் இவ்விரண்டையும் சரி எடையிட்டுக் குழப்பிப் பேய்நாய் கடித்த இடத்தில் போடவும்.

### 154. நாய் கடிக்குப் பேய்த்தும்பைப் பூச்சு

நாய் துடர்த் துன்னையுந்தா
நகைபடக் கடிக்குமாகிற்
பேய்த் தும்பைச் சாறதன்னிற்
பேசுவெங் காரந்தன்னை
வாய்த்துதென் றுரைத்துப் பூசு
வளமதாம் விடமுமன்பிற்
ருய்புகழ் பெற்றுவா ழுஞ்
சரபபூபன் சொல்லாமே. 219

(இ-ள்.) பேய்த்தும்பைச் சாற்றில் வெங்காரத்தை உரைத்து நாய் கடித்த புண்ணில் பூசவும். விஷம் தீரும்.

### 155. எலிகடிக்கு ஊமத்தை மருந்து

காஞ்செலியென் ரேரெலியுண் டதுகடித்தால்
தேகமெல்லாங் கழற்சிக்காய் போற்
ரேஞ்சு புடைக்குத்துக்கு மருந்துவுன்மத்
தையிலையுஞ் சொகுச தான
வாஞ்சைமிகு சிறுபயறு மரைத்துப்பசு
வின்னெய்யில் வயணமாய்க்கொள்
போஞ்சகல யெலிகடியுந் தஞ்சைசர
பேந்திரனுணர் புனிதமாமே. 220

(இ-ள்.) காஞ்செலி கடித்தால் தேக முழுவதும் கழற்சிக்காய் போல் தடிப்புகள் உண்டாகி வலியுண்டாகும்.

ஊமத்தையிலை சிறுபயறு

இவ்விரண்டையும் அரைத்துப் பசுவின் நெய்யுடன் குழப்பி உட்கொள்ளவும். எலிகடிகள் தீரும்.

## 156. எலிகடிக்கு கசப்பு மருந்து

அரிகண்ட னென்னுமெலி கடித்தாலே
வாய்வீங்கி யப்புப்பாயும்
வரிசையுள செவிகேளா திருக்குமிதற்
குத்தானோர் மருந்துகேளு
பாவையுப்புக் கடுகுமிள குங்கோரோ
சனை நாலும் பங்கிடாகச்
சரிகூட்டிப் பொடிசெய்து நெய்யதனிற்
குழப்பியதைத் தான்கொள்வாயே. 221

(இ-ள்.) அரிகண்டன் என்ற வகை எலி கடித்தால் கடித்த இடம் வீங்கி, நீர் வடியும். காது கேட்காது.

| | |
|---|---|
| உப்பு | மிளகு |
| கடுகு | கோரோசனை |

இவைகளை சரியெடை எடுத்துச் சூரணித்து நெய்யுடன் குழப்பி உட்கொள்ளவும். எலிகடிகள் தீரும்.

## 157. எலிகடிக்கு புருவெச்ச மருந்து

உத்தார னென்னுமெலி கடித்தாலே
கண்ணினுட வெளியுந்தோற்று
துத்தேக மெங்குங்கொப் பளிக்குஞ்செவி
யுங்கேளா துறுமையாக
வித்தார வெதுப்புவரு மிதற்குமருந்
தொன்றுபுரு வெச்சத்தோடே
சத்தான கால(வ)ட்டை யிரண்டுமரைத்
தேதேனிற் றுன் கொள்வாயே. 222

(இ-ள்.) உத்தாரன் என்ற வகை எலி கடித்தால் கண் பார்வை குறைவடையும், தேகம் முழுவதும் கொப்புளம் உண்டாகும். காது கேட்காது, இவைகட்கு

புருவெச்சம் காவட்டை

இவ்விரண்டையும் அரைத்துத் தேனுடன் குழப்பி உட்கொள்ளவும்.

### 158. எலிகடிக்கு

எலிகடிக்கு வாயறிந்து காரம்வைத்துப்
புண்ணாக்கி யிடுமருந்து
வலுபொருச லப்பட்டை தனையத்திக்கா
யளவரைத்து ஆவிநெய்யில்
நலமாக வஞ்சுநாட் கொள்ளுயெலி
கடிவிடமும் நடுங்கியோடும்
யேலுபொரு சலப்பட்டை மருந்திதுவு
முண்விடமு மேநாடாதே. 223

நாடாது பதினெட்டு யெலியின்விட
முந்தீரும் நலமதான
சேடரதி பர்துதிக்குஞ் சிவபாதம்
பூசனைசெய் தீரன்சோழ
நாடாளுந் துரைதஞ்சை நகர்க்கதிபன்
ராசாதி ராசநீதி
யூடாதி யதினுணர்வு மறிந்துசர
பேந்திரன ருளுசிதந்தானே. 224

(இ-ள்.) எலி கடித்த இடத்தில் காரம் (சுண்ணாம்பு முதலானவை) வைத்துப் புண்ணாக்கவும். பொருசல் ? பட்டையைத் தண்ணீர்விட்டரைத்து அத்திக்காயளவு எடுத்துப் பசுவின் நெய்யுடன் குழப்பி 5 நாட்கள் உட்கொள்ளவும். எலிகடிகள் தீரும்.

### 159 எலிகடிக்கு மருந்து

கானில்வே லிப்பருத்திச் சாற்றையுங்கொள்
மேலுக்கிங் கருத்தாய்ப் பூசுன்
மேனிதனி லெலிகடித்த விடந்தீருந்
தேகத்தின் வித மறிந்துத்

தானதைக் கொள் சகலயெலி கடிவிடம்
போகுமிது தப்பா திப்பார்
வானவர்கோ னன்னவளர் சரபேந்திர
னுணர்ந்ததிந்த வையந்தானே. 225

(இ-ள்.) வேலிப் பருத்திச் சாற்றை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவும்.

### 160. எலிகடிக்கு அமுக்கிரா மருந்து

சிகரிகடித் திடிலமுக்கிரு வேரையரைத்
தேவெகுநாட் சென்றநல்ல
வகையுள்ள காடிதனிற் கொள்ளெலியின்
கடிதீரும் வளமாஞ்சந்திர
நிகரொள்வேற் கையிலேந்தும் விபுதஞ்சை
நகராளும் நிருபனெண்ணுப்
பகைவருக்கு மார்பரணி சரபபூப
தியுணர்ந்த பண்பதாமே. 226

(இ-ள்.) அமுக்கிரா வேரை அரைத்து வெகுநாட் சென்ற காடியில் குழைத்து உட்கொள்ளவும். எலி கடிகள் தீரும்.

### 161. எலி கடிக்குப் பெருங்காய மருந்து

ஆகுகடிக் கோர்மருந்து பெருங்காய
மோர்களஞ்சு மன்பதான
வாகுளசீந் திற்றண்டும் வெத்திலைச்சாற்
தனிலரைத்து வண்மையாய்க்கொள்
ளேகும்பதி னெட்டுயெலி கடிவிடமுங்
கதிரவன்முன் னின்பனிபோல்
ஆகமபு ராணகலைக் கியானமறி
சரபேந்திர னருளிதாமே. 227

(இ-ள்-) பெருங்காயம் 1¼ வராகனெடை எடுத்துச் சீந்திற்கொடியும் சரி எடை எடுத்துச் சூரணித்து வெத்திலைச் சாறு விட்டரைத்து உட்கொள்ளவும், 18 விதமான எலி கடிகளும் தீரும்.

### 162. எலி கடிக்கு புங்கம்பட்டை மருந்து

அங்கமதிற் சிக்ரிகடித் தவனிதனில்
வருத்தமுற்ரு லவிழ்தங்கேளு
புங்கம்பட் டையையொரு நாள்முழுது
மோரி லூறப் போட்டுவைத்து
சங்கடம்ப டாமலந்தப் புங்கம்பட்
டைமருந்தைத் தானேநீயும்
பங்கமிலா மலிறுத்துக் கொள்குஞ்சா
யசத்தியதாம் பாரிற்ருனே. 228

பாரில் சத்தி யாகியபின் னேநீயு
முண்ணும்வகைப் பத்தியங்கேள்
நேரிடுப்பு மாத்திரம்கூட் டிக்கொண்டு
புசியன்று நேரதாகும்
சீருலவு பந்துசன சேகரன்சற்
புருடசிகா மணியொன்மேரு
தாகுலவும் புயன்வாணர் போற்றிவளர்
சரபேந்திரன் றன்சொல்லாமே. 229

(இ-ள்.) புங்கம்பட்டையைக் கொண்டுவந்து ஒருநாள் முழுவதும் மோரில் ஊறப்போட்டு இம்மோரை இறுத்துப் பருகவும். வாந்தி எடுக்கும். அன்று உப்புமாத்திரம் கூட்டிக் கொண்டு சாதம் சாப்பிடவும். எலி விஷங்கள் தீரும்.

### 163. எலி கடிக்குத் தவசு முருங்கை மருந்து

மேட்டிலுரை யெலியதுவுக் கடிவிடத்துக்
கோர்மருந்து விளம்பக் கேண்மோ
காட்டின்முருங் கையின்வேரை யொருமுள்ளிக்
காயளவு கல்வந்தன்னி

லோட்டியவரைத் திரையளவிந் துப்புமதிற்
கலந்துநன்ரு யொன்றதாக்கி
வாட்டமிலா வாமணக்கி யெண்ணெயொரு
காசெடையு மதனிற் கூட்டே. 230

கூட்டியுண்டு பார்மூவா ரெலிகடியு
மறுப்பத்தியங் கொளும்வகை கேள்
நாட்டின்வாய் வுரிகரப்பா னில்லாத
தாயுண்ணுனு நலமதாகும்
பாடினிசை கற்பனைக ளுச்சிதநல்
லறிவுபெரு பாக்கியசாலி
தாட்டிகங்கள் மிகுதஞ்சை மானுசர
பேந்திர னுணர் தன்மைதானே. 231

(இ-ள்.) காட்டுமுருங்கை வேரை ஒரு முள்ளிக்காயள வெடுத்து கல்வத்திலிட்டு நன்ருகவரைத்து, அதனுடன் சரியளவு இந்துப்புச் சேர்த்து ஆமணக்கெண்ணெய் ஒரு வராகனெடையும் விட்டு உட்கொள்ளவும்.

18வித எலி கடிகளும் தீரும்.

**பத்தியம் :** வாயு பதார்த்தங்களையும், கரப்பான் பதார்தங்களையும் நீக்கவும்.

### 164. எலி கடிக்குக் காட்டாமணக்கு மருந்து

காட்டிலாம ணக்கினுட பருப்புபத்து
பசுவின்பால் கல்வத்திலிட்டு
வாட்டாமிலா தரைத்துக்கொட்டைப் பாக்களவு
மூன்றுநாள் வகையாய்க்கொள்ளு
முட்டிதற்குக் கடும்பத்திய முன்புடனே
புளிப்பொன்று மேவாகது
மேட்டெலியினுடனேபதி னெட்டெலியின்
கடிவிடமு மீளுந்தானே. 232

(இ-ள்.) காட்டாமணக்கம் பருப்பு எண்ணிக்கையில் பத்து எடுத்துக் கல்வத்திலிட்டிப் பசுவின்பால் விட்டரைத்துக் கொட்டைபாக்களவெடுத்து 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம் :** உப்பு, புளி முதலானவற்றை நீக்கிக் கடும் பத்தியமாயிருக்கவும்.

### 165. எலி கடிக்குக் கொன்றையிலை மருந்து

வண்டயெலி கடிவிடத்துக் கோர்மருந்து
சொல்வேன்கேள் வகையதான
தண்டலையின் கொன்றையிலைச் சாறுமரைப்
படிபசும்பால் தனிற்டிக்கால்
ரெண்டையுமொன் ருய்க்கலக்கிக் கொள்மூன்று
நாள்பத்தியம் நீயுங்கேளு
மொண்டுகுளத் துத்தண்ணீர் புதுப்பாண்ட
மதிறசமைத்து முண்டிடாயே. 233

ஆய;புதுப் பாண்டமதி லுப்புப்புளிப்
புப்புகையி லையும்நீதள்ளிப்
தஎயகமா யுண்ணுபத் தியமுறிந்தா
லுடம்பெங்குந் தானேவீங்கிப்
போயுனக்குத் துன்பமுண்டா மொன்பதுநாள்
பத்தியங்கள் பொறுபத்தாளுள்
காயுவெந்நீர் விட்டுவாம ணக்கினெண்ணெய்
தேய்த்துமுழு கரப்புப் போட்டே. 234

போட்டுமுழு குப்புமாத்தி ரம்வறுத்து
நன்ருகப் புசித்துபத்து
நாட்டள்ளி யப்புரமெல் லாங்கூட்டிக்
கொள்விடமும் நலிந்தே யோடும்
ஆட்டரவம் பூண்டுபுலித் தோலுடுத்தி
யம்பலத்தி லாடுமீசன்
நாட்டிகநன் பதம்பணியுந் தஞ்சையில்வாழ்
சரபேந்திரன் றன்சொல்லாமே. 235

(இ-ள்.) கொன்றையிலேச்சாறு $\frac{1}{2}$ படி பசுவின்பால் $\frac{1}{4}$ படி இவ்விரண்டையும் ஒன்ருய்க் கலந்து 3 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

ஒரு புதுப்பாண்டத்தில் குளத்து ஜலத்தை எடுத்து அதில் சாதம் சமைத்துச் சாப்பிடவும். தினந்தோறும் புது பாண்டம் உபயோகிக்கவும்.

**பத்தியம் :** உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பண்டங்களையும் புகையிலையையும் நீக்கிவிடவும்.

பத்தியம் பிடிக்காவிட்டால் உடல் வீங்கும். இவ்வாறு 9 நாட்கள் பத்தியமிருந்து 10-வது நாளன்று ஆமணக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் முழுகவும். உப்பை வறுத்து 10 நாட்களுக்குக் கூட்டவும். பின்னர் எல்லாவற்றையும் உபயோகிக்கலாம். எலி விஷங்கள் தீரும்.

### 166. எலி கடிக்கு எலியாலங்கிழங்கு மருந்து

எலியாங் கிழங்குமரைத் திடுவிழுது
மோர்பெரிய யெலுமிச்சங்கா
யிலுஞ்சரியா யெள்ளினுட புண்ணுக்கு
மவ்வளவே யிரண்டுமொன்ருய்
நலியாமற் பிசைந்துபிட்டாய்ச் சுட்டுநன்ருய்
மூன்றுநாள் நாடிகொள்ளு
பலமாக வாறுனு ளுப்பில்லாப்
பத்தியங்கள் பிடித்திடாயே. 236

பிடித்தேழா னுளுப்பை வறுத்துண்ணு
யெட்டேநாள் பின்புதானே
வடித்தகஞ்சி யைத்தேய்த்து மூழ்குப்புப்
புளிகூட்டு வகையதாகத்

துடித்தொன்றுஞ் செய்யாதே நலமாகு
மெலிவிடமுஞ் சொன்னேம்நம்பி
அடுத்தவருக் கன்புசெய்யுஞ் சரபபூ
தியுமுணர்ந்த வருளதாமே. 237

(இ-ள்.) காட்டாமணக்கம் கிழங்கு அரைத்த விழுது எலுமிச்சைப் பிரமாணம். அதற்குச் சரியளவு எள்ளுப் பிண்ணுக்கு இவ்விரண்டையும் ஒன்று கலந்து பிட்டாகச் சுட்டு 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம் :** 6 நாட்களுக்கு உப்புச் சேர்க்காமலிருந்து 7-வது நாள் உப்பை வறுத்துக் கூட்டவும். 8-வது நாளன்று வடித்த கஞ்சியைத் தேய்த்துக்கொண்டு மூழ்கவும். உப்பு, புளி இவைகளையும் கூட்டவும். எலி விஷங்கள் தீரும்.

### 167. எலி கடிக்கு முருங்கையிலை மருந்து

எலியதுவு மேல்விழுந்து வுனைக்கடிக்கி
லதற்குமுருங் கையிலைதன்னை
சலியாம லொருகடுக்கா யளவரைத்துப்
பழந்தண்ணீர் தன்னிலேதான்
நலமாகக் கொள்மூன்று நாள்மாத்து
பழஞ்சோற்றை நாடிக்கொள்ளு
சலமான எலிகடியின் விடந்தீரும்
விபுவுணர்ந்த தன்மைதானே. 238

(இ-ள்.) முருங்கையிலையை அரைத்து ஒரு கடுக்காய் அளவு எடுத்து இரண்டு மூன்றுநாள் சேமித்திருந்த தண்ணீரில் குழப்பி உட்கொள்ளவும். பழையமுதும் சாப்பிடலாம். 3 நாட்களுள் எலிகடிகள் தீரும்.

### 168. எலி கடிக்கு கரிசலாங்கண்ணி மருந்து

மோ தகந்தனை முகரும்விக்ன
மூர்த்தியேறிய சிகரியுங்

காத கத்துடன் மேல்விழுந்து
கடித்ததுக்குமே யோர்மருந்
தோதுவேன்கரி சலாங்கண்ணியி
னுற்றசாறுமெள் ளெண்ணெயும்
வீதமா யிதைச் சரியதாகவு
மேயெரித்திடு நீயதே. 239

எரித்து மக்கடி வாயதன்னிலே
யெருமைச் சாணிய தப்பியே
உரைத்திடும்படி பெரிய யிட்டிடு
மோடிடு மெலியின்விட
வறுத்த முமறுங் கங்கை சூடிய
வாதிநாத்ர் தன்கிருபையாற்
றிருக்கள் நிர்த்தமிடுந்திரள்புய
செல்வ மானுவின் முறையதே. 240

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கரிசலாங்கண்ணிச்சாறு | ½ சேர் |
| | எள்ளெண்ணெய் | ½ சேர் |

இவ்விரண்டையும் எரித்து வைத்துக்கொள்ளவும். எலி கடித்த இடத்தில் எருமைச் சாணியை அப்பி அதனுள் ஷை எண்ணெய்ச் சூட்டுடன் விடவும். எலி கடி விஷங்கள் தீரும்.

### 169. எலி கடிக்கு அழிஞ்சில் வேர்ப்பட்டைப் பூச்சு

துட்டவாகுபற் பட்டிடக் கடித்
துன்னையும்வெகு வாயவருத்
திட்டிடிலதுக் கடவியி னழிஞ்
சில்வேர் பட்டையு முற்றலாய்
சட்ட மாவுலிங் கைவேர்ப் பட்டையுஞ்
சரிய தாகநி றுத்துமே
விட்டு சுத்தவர காலிமூத்திர
மீதரைத்து வடித்திடே. 241

வடித்து மக்கடி வாயதன்னிலே
வளையமாகவே பூசிடப்
புடைத்த வீக்கமும் விடமு மேகிடும்
போசராசனு மரசனும்
படிக்குள் கீர்த்தி மிகுந்திடும் நல
பாக்கிய யோக்கிய சிலாக்கிய
னடுத்த வர்க்கருள் சரப பூபனு
மாய்ந்துணர்ந்தது மாகுமே 242

(இ–ள்.) மூஞ்சுறு, எலி முதலானவை உன்னைக் கடித்தால், அதற்கு முற்றலான அழிஞ்சில் வேர்ப்பட்டை 1 பலம், மாவலிங்கம்வேர்ப்பட்டை 1 பலமும் நிறுத்தெடுத்து ஆட்டு மூத்திரத்துடன் அரைத்துக் கடிவாயைச் சுற்றிலும் பூசவும். வீக்கம், விஷம் முதலானவை தீரும்.

### 170. எலி கடிக்கு ஊமத்தை மருந்து

வாலு முற்றெலி யுங்கடித்திடில்
வாயிலுண் ணோர் மருந்துகேள்
கோலமுற்றவுன் மத்தையின்செடிக்
குள்ளிளங் காயரைத்துமே
நாலு காசெடை தேன் குழப்பியுண்
நாடிடா தெலி விடமுமே
சீலமுமாஞ் சர பேந்திர பூபதி
செய்யுன்மத்தை மருந்திதே. 243

(இ–ள்) இள ஊமத்தங்காயை அரைத்த விழுதுடன் தேன் 4 காசெடை விட்டுக் குழப்பி உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 171. எலி கடிக்கு நாவல்வேர் மருந்து

நாவலின்மரத் தின்வடக்குவேர்
நாட்கள் மூன்று வாப்பாலிலே
பாவகத்துட னூறவைத்துவப்
பாலினலரைத் தேகொளு

தாவி யோடி யெலியின் விடமது
தானறுஞ் சிவகிருபையால்
பூவி நீதிசெலுத்திடுஞ் சர
பேந்திரன் சொல்லு முறையிதே; 244

(இ-ள்.) நாவல் மரத்தின் வடக்கே போகும் வேரை வெட்டிக்கொண்டுவந்து 3 நாட்கள் பசுவின் பாலில் ஊற வைத்து அப்பாலிலேயே அரைத்து உட்கொள்ளவும். எலிக் கடி விஷங்கள் தீரும்.

### 172. எலி கடிக்கு ஆமணக்குவேர் மருந்து

ஆண்டு மூன்றுமே சென்றிடும் நல்
லாமணக்கின் வேருடனேமூன்
றாண்டு சென்ற பருத்தியின் வடக்
கதனில்போற வேர்வாசமு
மூண்ட பீர்க்கம்வே ரிலையிந் நாலையு
முற்பனப்பசுப் பாலிலே
வேண்டியே யரைத் துண்டிடப் பொல்லா
வெலியி னின்விடந் தீருமே. 245

(இ-ள்.) 3 ஆண்டுகள் சென்ற ஆமணக்கஞ்செடியின் வேரை எடுத்துக்கொண்டு அதனுடன் 3 ஆண்டுகள் சென்ற பருத்தியின் வடக்கே போகிற வேரையும், பீர்க்கம் வேர், பீர்க்கம் இலை இவைகளையும் பசுவின்பால் விட்டரைத்து உட்கொள்ளவும். எலி கடிகள் தீரும்.

### 173. எலி கடிக்கு ஈத்தின்னி வெளவால் மருந்து

சாத்திரத்தினி லுற்றிடும்படி
தான்சொலவே னெலி விடமதுக்
கீத்தின்னி வெளவால் பூசினிப் பூவுள்
ளியும்வசம்பிதின் கூடவே

சாத்து நல்லவுன் மத்தை வித்தையுஞ்
சரிய தாகநெய் தன்னிலே
வாத்த ரைத்துக்கொ ளெலிவிடங் கடி
வாயிலு மத்தைப் பூசிடே. 246

பூசி பத்திய மாயிருக்கிடிற்
போகு மவ்வெலி கடிவிடம்
மாசு மற்றிடு கைலை மேவிடும்
வாதி சங்கரன் பாதமி
தேசு மாமலர் சூடு ராசசி
காமணிச்ச ரபேந்திரன்
நேச மாகவே சொல்லுமிம்முறை
நீயிதைச் செய்து பார்த்திடே. 247

(இ-ள்.) ஈந்தின்னி வௌவால் — வசம்பு
பூசினிப்பூ — ஊமத்தை விதை
பூண்டு

இவைகளைச் சரியெடை எடுத்து நெய்விட்டரைத்து உட்கொள்ளவும். எலி கடித்த புண்ணிலும் பூசவும். பத்தியமாக இருக்கவும்.

### 174. எலி கடிக்குப் புண்ணுக்கிலை மருந்து

கள்ளெலி கடிக்குப்புண் ணுக்கிலை
கறுத்த பூனையி னெச்சமும்
வெள்ளை யாட்டுப் பாலதனை யுத்தியாய்
விட்டரைத்து நன்றாகவே
கொள்ளு மூன்றுநாள் பத்தியம்புளி
கூட்டிடா தரையுப்பு மாஞ்
சள்ளை செய்யெலி விடமு மறுமிது
சரப பூபதி யருளிதே. 248

(இ-ள்.) புண்ணுக்கிலை கரும்பூனையின் எச்சம்
இவ்விரண்டையுஞ் சரியளவெடுத்து வெள்ளாட்டுப்

பால்விட்டு நன்ருகவரைத்து 3 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

**பத்தியம் :** புளி சேர்க்கக்கூடாது. அரைவாசி உப்பு கூட்டிக்கொள்ளலாம்.

எலி விஷங்கள் தீரும்.

**குறிப்பு :** குன்றியளவு மாத்திரைகளாக உருட்டி உட்கொள்ளவும்.

### 175. எலி கடிக்குப் பீநாறிப்பட்டை மருந்து

சாமமீதிலே மெலியுந்
    தானுனைக் கடித்திடிற்
பீமரப் பட்டையை யரைத்துப்
    பின்னிள வெந்நீர்தனில்
நேம மாய்க்க லந்துள்ளுக்கும்
    நீகொள் மூன்று நாளுமே
யாமி துக்கு மேவெந்நீரு
    மானசோறு முண்டிட. 249

உப்பு கைப்பு டன்புளிப்பு
    மொன்றுனக்கு மாகிடா
தப்ப லேயெலி விடங்க
    டானறு நற்சீர்மிகுஞ்
செப்பமாந்தஞ் சாபுரிசெங்
    கோல் செலுத்து தீரனு
மொப்புட னுணர்ந்து ரைத்து
    துண்மையாம ருந்திதே. 250

(இ.ள்.) பீநாறிப்பட்டையை அரைத்து வெதுவெதுப்பான வெந்நீருடன் குழப்பி உள்ளுக்கு 3 நாட்கள் உட்கொள்ளவும்.

குறிப்பு : வெந்நீர் சாதம் மாத்திரமே உட்கொண்டு உப்பு, கசப்பு, புளிப்பு முதலான சுவைகளுள்ள பண்டங் களைத் தள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 176. எலி கடிக்குக் காக்கண வேர் மருந்து

காரெலி கடித்திடிற்
கறுத்தகாக்க ணம்வேரை
ஒரெலுமிச்சங் காயள
வும்மரைத்துப் பூருவ
நீரினிற் கலக்கிக் கொள்ள
நேமமாய்வ யிறுபோம்
பாரிதற்கு வாந்தியும்
பலபலென்ன வாகுமே. 251

ஆகும் வாந்தி பிராந்தியு
மதற்கு மோருஞ் சோறுணு
போகிடுமெ லிவிஷம்
புரந்தராதி பர்கள் பணி
வாகுளச தாசிவன்
வரத்தினுலே வச்சிர
தேகனிந்திர போகயோக
தீரமான ருளிதே. 252

(இ-ள்.) காரெலி கடித்தால், கறுனம நிறமுள்ள காக்கரட்டான் வேரையரைத்த விழுது எலுமிச்சங்காய்ப் பிரமாணமெடுத்துப் பழந்தண்ணீருடன் குழப்பி உட்கொள்ள வும்.

நன்கு பேதியாகும். வாந்தியும் ஏற்படும். இவை அதிகமாகில் மோர் சாதம் சாப்பிடவும். எலி விஷங்கள் தீரும்.

### 177. எலி கடிக்கு எருக்கும்பால் மருந்து

அல்லிலெ யெலிகடித்த
துக்கிரைப்பு வந்திடில்
வெல்லமிரண் டுண்டையினின்
மீதெருக்கம் பாலைவார்த்
தொல்லையில்லா மற்குழைத்துண்
டைசெய்தேற்றான் வித்துபோல்
வல்லவுண்டை யொன்றுணு நீ
வாதிகாலந் தன்னிலே. 253

காலமேயோ ருண்டைகொள்
கணக்க தேழுநாளிலே
சாலவுமெ லிவிஷங்கள்
தானறுமி ரைப்புப்போ
மாலமுண்ட கண்டர்பாத
மற்சனைசெய் தேயருள்
ஞாலமீது வாழுந்தஞ்சை
நரபதி யருளிதே. 254

(இ-ள்) வெல்லம் 2 உருண்டைகளெத்து இடித்துப் பாகுபோல் வைத்து ஒரு குழி செய்து அதனுள் எருக்கம் பாலை விட்டுத் தேற்றாங்கொட்டைப் பிரமாணம் உருட்டி அதிகாலையில் உட்கொள்ளவும். இவ்வாறு 7 நாட்கள் சாப்பிட எலி விஷங்களும் அதனாலேற்பட்ட இரைப்பும் தீரும்.

### 178. எலி கடிக்கு விளாம்பட்டை மருந்து

விள்ளுவே னெலிகடி
விடமதற்கு மோர்மருந்
தெள்ளியவிளாம்பட்டை
பிடிரெண்டு டனே நல்ல

வெள்ளை யின்று வரை யினின்
மேலிலை யொருபிடி
அள்ளியேதண் ணீரைவிட்ட
ரைத்திடுநன் ருகவே. 255

அரைத்திரண்டு படிதண்ணீர
திற்கலந்தெ ரியிடு
சுருக்கமாய்ப டியரைக்கால்
சுண்டும்போது முண்டிடு
உரத்திடுக்க டிவிடங்க
ளுரைவிட்டு மோடிடும்
கரத்திலேயெ ழிலிபூண்ட
காவலன ருளிதே. 256

(இ-ள்.) விளாம்பட்டை 2 பிடியுடன்
வெள்ளைத் துவரையின் இலை ஒரு பிடி

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து 2 படி சுத்த ஜலத்துடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி அரைக்கால் படியாகக் காய்ச்சி வடிகட்டிப் பருகவும். எலி கடி விஷங்கள் தீரும்.

### 179. எலி கடிக்கு முகட்டெலி நெய்

ஏதமில்லா தெலிகடி
யிரைப்பதற்கு நெய்சொல்வேன்
சரதகமு கட்டெலி
தனையுரித்து வக்குட
லேதையு மெடுத்ததற்
குள்ளேவைக்கு மருந்
தோதுவேன்வ சம்புமிள
கும்மசம தாகமே. 257

தாக மிஞ்சு வெள்வெங்காயத்
தன்னுட நல் வேளைவேர்
வேகமாஞ்சித் திரமூலி
வேருமாறு வகையதும்
பாகமாக வேயொரு
பாக்களவ ரைத்தெலாம்
வாகுளவ யிற்றிலேயும்
வைத்துமெள்ளத் தைத்திடே. 258

தைத்தரைப்ப டிநெய்விட்டுத்
தானதைப் பொரித்துமே,
வைத்தொருகி ளிஞ்சிநெய்யு
மக்கறியு முண்டிடு
யித்தையெட்டு நாட்புசித்
திடுவெந்நீருஞ் சோறுமுண்
பத்தியமுப் பும்புளிப்பும்
பார்த்திடாத ருந்திடே. 259

இருந்திடிளங் கீரையும்பொ
றிமாதூவி யுண்ணுநீ
பறந்திடு மெலிவிடங்கள்
பாரினிலில் லாமலே
வுரத்திடுகு லவுதோளு
முற்றிடுந்தஞ் சாபுரி
புரந்தரன்ச ரபதீர
பூபதிய ருளுதே 260

(இ-ள்) முகட்டெலியை எடுத்து மேலே இருக்கும் மயிரையும் வால், கால் முதலியவைகளை நீக்கி வயிற்றைக் கீறி உள்ளிருக்கும் குடலேயும் நீக்கவும்.

| | |
|---|---|
| வசம்பு | ஓமம் |
| மிளகு | பூண்டு |
| நல்லவேளை வேர் | சித்திரமூலவேர் |

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து அந்த எலியின் வயிற்றிற்குள் திணித்து நன்ருகத் தைத்துவிடவும், பின்னர். ஒரு இருப்பு சட்டியில் ½ படி சுத்த நெய்விட்டு அதில், எலியையிட்டுப் பொரிக்கவும். கருக்க வறுக்கவும். இந்த கரியையும் ஒரு கிளிஞ்சில் நெய்யையும் சாப்பிடவும். இவ்வாறு 8 நாட்கள் புசிக்கவும்.

**பத்தியம் :** வெந்நீர் சாதம் மாத்திரமே உட்கொள்ளவும். உப்பு, புளிப்பு இவைகளைத் தள்ளிவிடவும். இளங் கீரையுடன் பொரிமாவு தூவி சாப்பிடவும். குணம் உண்டாகும்.

### 180. எலி கடிக்கு அடப்பம்பூ மருந்து

இடக்கெலி கடித்துனக்
கிரைப்புவந்த காலேயி
லடப்பம்பூவு டனேகா
ணழிஞ்சில்வேரின் பட்டையுந்
திடத்துடன ரைத்ததைச்
சிறந்த கொட்டைப்பாக்கள
வடிப்பாமாம்வெள் ளாட்டுப்பாலில்
வாங்குயெட்டு நாளுமே. 261

எட்டுநாள்வி டாமலேகோள்
ளெலிவிடங்கள் மீளுமே
சட்டமாய்பு கையிலேயுந்
தள்ளுவாய்வென் பதெலா
மட்டதிக்குந் தீவுதீவாந்
திரவெலாம்பு கழ்ந்திடுஞ்
சிட்டபரி பாலனஞ்செய்
தீரன்மானு முறையதே. 262

(இ-ள்.) அடப்பம்பூ (வாதுமைப்பூ)
அழிஞ்சில்வேர்ப்பட்டை

இவைகளைக் கொட்டைப் பாக்களவெடுத்து அரைத்து வெள்ளாட்டுப்பாலில் குழப்பி 8 நாட்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :** புகையிலையை நீக்கவும்.

எலி கடித்ததனுலேற்பட்ட இரைப்புகள் நீங்கும்.

### 181. எலி கடிக்கு

எலிகடித் துனக்குமீளை
யிருமலும்வந் துற்றிடில்
சொல்தண்ணீர்மிட் டான்கிழங்கு
சுப்பிரகோவை மூலமும்
வலுவதான வவுரிவேர்வ
சம்புடன்வெங் காயமும்
நலமதாகச் சரிநிறை
நகர்த்திடம்மி தன்னிலே 263

அம்மிமீத ரைத்துவே
ரகுலபாக்கின் மாத்திரஞ்
செம்மையாம்வர காலிப்பாலிற்
நின்றுமூன்று நாளுமே
கம்மிடுமி ரைப்புமீளைக்
கதிரவன்முன் பனியதா
மம்மெலிப்ப டுவனுக்கு
மதையுமேலும் பூசிடே. 264

(இ-ள்.) தண்ணீர்விட்டான்கிழங்கு வசம்பு
கோவைக்கிழங்கு வெங்காயம்
அவுரிவேர்

இவைகளைச் சமனெடை எடுத்து அம்மியில் வைத்து அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவெடுத்து வெள்ளாட்டுப்பாலில் 3 நாட்கள் உட்கொள்ளவும். எலி கடித்ததினால் ஏற்பட்ட இரைப்புகள் தீரும்.

### 182. எலி கடிக்கு அவரிவேர் மருந்து

அவுரிவேர் மல்லிகைவே ரையுமுலர்த்தி
யதையிடித்தே வடியுங்கட்டி
நவமிகுமா வின்பாலி னில்மூன்று
நாளுண்ணெ லிவிடமீளுந்
தவளுவில்ல யீலவேலா யுதங்கையிற்கொள்
சரபபூ பதிதின முணர்ந்து
கவனமாயு ரைத்தவவுரி வேர்மருந்தை
கருத்துட னிதுசெய்து பாரே. 265

(இ-ள்.) அவுரிவேர் மல்லிகைவேர்

இவ்விரண்டையும் சமெனடுத்து உலர்த்திச் சூரணஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் வெருகடி அளவெடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ள எலி விஷங்கள் தீரும்

### 183. எலி கடிக்கு புன்முருங்கைவேர் மருந்து

புன்முருங் கையின்வேர் வேளையின் வேரும்
பொருத்துமெள் ளெண்ணெயி லரைத்து
நினைவுட னேகடுக் காயள வுண்ணு
நின்னையே கடியெலி விடமு
முனையது கெட்டு மீன்றிடு தலமுமு
சிதமுமி ரசிதமு மிலகும்
வனமது மிகுந்த தஞ்சையம் பதியாள்
வள்ளலு முணர்ந்திடு முறையே. 266

(இ-ள்.) புன்முருங்கைவேர் வேளைவேர் இவ்விரண்டையும் நல்லெண்ணெயுடன் அரைத்துக் கடுக்காய் பிரமாணம் உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 184. எலி கடிக்குப் பேய்ச்சுரை மோர்

நேரது யில்லா யெலியுனைக் கடிக்கில்
நிகழ்த்துவே னோர்மருந் ததற்கு
மோரையும் பேயின் சுரைக்குடுக் கையிலே
முன்னுதா னூறவும் வைத்து
சாரமாய் மூன்று நாளதைக் கொள்ள
தன்னிலே வாந்திய தாகும்
பாரதற் குத்தான் மோருடன் சோறும்
பண்புட னடிக்கடி யுண்ணே. 267

உண்ணிட வாந்தி யுடன்வில கிடுமே
விற்பன யெலிவிட மீளும்
வண்ணமாம் பேய்ச்சுரை மோர்மருந் தீதுவு
மங்களி யிங்கித மிகுந்த
நண்ணிய மக்கட் காகவே சித்தர்
நவின்றிடும் மிம்முறை தன்னைப்
பண்ணைசூழ் தஞ்சை சரபபூ பதியும்
பார்த்துணர்ந் தெலிவிட மருந்தே. 268

(இ-ள்) பேய்ச்சுரைக் குடுக்கைக்குள் (பசுவின்) மோரை ஊற்றி 3 நாள் வைக்கவும். இதனை 3 நாட்களுக்கு உட்கொள்ள வாந்தியாகும். அதற்கு மோர் சாதம் சாப்பிடவும். வாந்தி நிற்கும். எலி விஷங்கள் தீரும்.

### 185. எலிகடிக்கு மருந்து

சாரணைக் கிழங்கும் பெருமருள் கிழங்குந்
தப்பிலாக் கொடிவேலி வேரும்

நேரிடு புளியம் பிரண்டைக்கி ழங்குடன்
நெடியதோர் பிரண்டைவே ரைந்துஞ்
சாறது கண்டவு லர்த்திச்சூ ரணித்துத்
தண்மிகு மோரினிற் குடிக்கக்
காரெலி விடமு மீண்டிடுந் தஞ்சைக்
காவல னுரையெலி மருந்தே. 269

(இ-ள்)

| | |
|---|---|
| புளியம்பிரண்டைக்கிழங்கு (நரளை) | பிரண்டைவேர் |
| சாரணைக்கிழங்கு | மருளங்கிழங்கு |
| கொடிவேலிவேர் | |

இவைகளைக் சிறுசிறு துண்டுகளாக வெட்டி நிழலில் உலரவைக்கவும். பின்னர் இதையிடித்து வஸ்திரகாயஞ் செய்து மோருடன் கலக்கிக் குடிக்கவும். எலி விடங்கள் தீரும்.

**குறிப்பு:** இதற்கே "பஞ்சாச்சினிக் சூரணம்" என்றும் பெயர்.

## 186. எலி கடிக்கு

கருவேலம் பட்டை நறுக்கிநா ழுழி
கடத்துநீர் விட்டதைக் காய்ச்சி
யெரிபதப் பாகி லதிலுழக் கிறுத்து
யெள்ளெண்ணெய் காசெடை விட்டுக்
குருபதம் போற்றிக் கொள்ளெலி விடமுங்
குணமதாஞ் சிவகிரு பையினாற்
றரைதனை யாளுஞ் சரபபூ பாலன்
ருனுணர் காரெலி மருந்தே, 270

(இ-ள்.) கருவேலம்பட்டையைக் கொண்டுவந்து சிறு சிறு துண்டுகளாக்கி (1சேர்) எடுத்து அதனுடன் 4 படி சுத்த ஜலம் விட்டு நன்ருகக் காய்ச்சவும். எட்டிலொன்ருக வற்றியபின்பு இதனை இறுத்து நல்லெண்ணெய் ஒரு காசெடை விட்டு உட்கொள்ளவும் எலி விஷங்கள் நீரும்.

### 187. எலிகடிக்குத் தவசு முருங்கை மருந்து

அவமிலா யெலியுங் கடித்துக் கொன்று
அவுடதஞ் சொல்லவுங் கேளு
தவசியின் முருங்கை யிலையரைத் தாவின்
றன்னுட பாலிலே நித்யங்
கவனமாய் மூன்றுநாளுமே யாதி
காலமே கொண்டிட யெலியி
நவ்விட மீளுந் தஞ்சையாள் சரப
நரபதி யருளிது வாமே. 271

(இ-ள்.) தவசு முருங்கையிலையை அரைத்து ஒரு சுண்டைக்காய் அளவெடுத்துப் பசுவின் பாலுடன் குழப்பி 3 நாட்கள் அதிகாலையில் குடிக்கவும். எலி விடங்கள் தீரும்.

### 188. எலி கடிக்கு

ஆதிவாரத்திற் பிள்ளையார் வைத்து
வன்புடன் பூசையும் பண்ணி
சோதிநா யகனே காரெனை யென்று
துப்புள கல்லுப்புங் கூட்டி
நீதமாய் வெகுநாட் சென்றகா டியிலே
நீகொளு மெலிவிட மீளு
மாதவர் சொன்ன முறைகளைச் சரப
மன்னவ னுணர்ந்துசொல் முறையே. 272

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமையன்று பிள்ளையார் பூஜை செய்து 'ஜோதி நாயகனே! என்னைக்காரும்' என்று வணங்கி கல்லுப்பை வெகுநாட்சென்ற காடியுடன் கூட்டி உட் கொள்ள எலி விஷங்கள் தீரும்.

### 189. எலி கடிக்குக் குப்பைமேனிப் பூச்சு

தப்பியே யெலியு மேல்விழுந் துன்னைத்
தான்கடித் திடில்மருந் ததுகேள்

குப்பையின் மேனியிலையதை யரைத்துக்
கொண்டந்தக் கடிவிடமதனி
லொப்புடன் வைத்துப் பொறுக்கவுஞ் கட்ட
வுடனரு குடனேவெங் காய
மொப்புள வசம்பு மூன்றுமே யரைத்து
மேடனிற் பூசிடு தானே, 273

பூசுயிப் படிக்கு மூன்றுநா டானும
புனிதமா யெலிவிட மீளுங்
காசியிற் கங்கா தீரமு மாடிக்
கடவுளர் பதமதைப் பனிந்து
தேசமீ துள்ள தீரமு மாடிச்
செயம்பெரு துரைசர பேந்திரன்
கேசமா யுணர்ந்த யெலிவிடப் பூச்சை
நிச்சய மாகவு மெண்ணே. 274

(இ-ள்.) எலி கடித்த இடத்தில் குப்பைமேனியிலையை அரைத்துக் கட்டவும். எரிச்சல் ஏற்படும். எரிச்சல் பொறுக்க முடியாது போனல்,

அருகு
வசம்பு
வெங்காயம்

இம்மூன்றையுஞ் சமனெடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்து அதன்மேல் பூசவும். இவ்வாறு 3 நாட்கள் உபயோகிக்க எலி விஷங்கள் தீரும்.

### 190. எலி கடிக்கு அழிஞ்சில் சூரணம்

வீட்டினில் மேட்டி லிருந்தெலி கடிக்கில்
விளம்புவே ஞோர்மருந் ததற்கு
காட்டினின் முருங்கை வேரதின் பட்டை
கனமிகு மழிஞ்சிலின் பட்டை

நாட்டினின் வெள்ளைச் சாறணை வேரும்
நாமுரை மூன்றையுங் காயப்
போட்டுசூ ரணித்து வடியது கட்டிப்
பொருந்தவே கொளும்வகை கேளே. 275

கொள்ளு வெந்நீரி லாகுத வலது
குணமுள தேன்றனி லாதல்
உள்ளினிற் கொள்ளு யிதற்குநீ பத்திய
முப்புடன் புளியதுந் தள்ளு
தெள்ளிய நூல் டன்னையா ராய்ந்து
சிவபத மாச்சனை செய்யும்
வள்ளலி லுயர்ந்த சரபபூ பாலன்
வழுத்திய வழிஞ்சிலின் பொடியே. 276

(இ-ள்.) காட்டுமுருங்கை வேர்ப்பட்டை
அழிஞ்சில்பட்டை
வெள்ளைச்சாறணை வேர்

இம்மூன்றையும் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வெயிலில் காயவைத்து நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தை வெந்நீரிலோ, தேனிலோ மூன்று விரல் கொள்ளுமளவு எடுத்து உட்கொள்ளவும்.

**பத்தியம்** : உப்பு, புளிப்பு முதலிய சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

எலிகடி விஷம் நீங்கும்.

**191. எலி கடிக்கு எருக்கம்வேர் எண்ணெய்**

குடுகுடுன் ருேடுமெலியது கடிக்கிற
கூறுவே ஞேர்மருந் ததற்கு
அடவியின் வெள்ளை யெருக்கம்வேர் வடக்கே
யதிலுறும் வேரதைச்சீவித்

திடமதா முள்ளி வசம்புட நறுக்கிச்
சேர்த்துநல் லெண்ணெயி லெரித்து
அடவுட னிரண்டு வேளையும்நக்க
வவ்வெலி கடிவிட மறுமே. 277

(இ-ள்.) வடக்கே செல்லும் வெள்ளெருக்கம் வேரை எடுத்து அதன்மேல் தோலையுரித்து அதனுடன். வெள்ளைப் பூண்டு, வசம்பு இவைகளையும் சேர்த்து நல்லெண்ணெயுடன் எரித்துப் பதத்திலிறக்கி காலை, மாலை இரு வேளைகளிலும் காலஞ் எடை அளவெடுத்து உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

## 192. எலி கடிக்குக் கார்த்திகைக் கிழங்கெண்ணெய்

சரசரென்றோடு மெலியது கடிக்கிற்
சாற்றுவே னோர்மருந் ததற்கு
உரதமாங் கார்த்திகைக் கிழங்குபொன் முகட்டை
யுறுமதன் வெருளி வசம்பு
முருகுளபச்சைப் பூரமொட் டடையு
முற்பன யெலியின்பா ஷாண
முறையெழு வகையும் வேப்பெண்ணெய் தனிலே
யூறவைத் தடுப்பினி லேத்தே 278

ஏத்தியே யெரித்தோர் காசெடைகால
மேகொளு பத்தியமாக
சாத்திர படிக்கி முனிவர்கள் சொன்ன
தைத்தின முணர்ந்துணர்ந்த தெழிலா
லாத்தியைச் சூடுஞ் சிவபத மதனி
லர்ச்சனை செய்தருள் மிகுந்த
கீர்த்தியே பெற்ற சரபபூ பாலன்
செப்பிய யெலிவிடந் தனையே.

(இ-ள்) சுத்திசெய்த கார்த்திகைக்கிழங்கு
பொன்முகட்டைவேர் எலிப்பாஷாணம்

ஒட்டனட பச்சைப்பூரம்(சுத்தி
வசம்பு பூண்டு [யானது)

இவைகளை வகைக்கு ($\frac{1}{2}$ வராகனெடை) வீதமெடுத்து வேப்பெண்ணெய் 1 சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். இதில் ஓர் காசெடை எடுத்து காலையில் உட்கொள்ளவும். நன்கு பேதியாகும்.

**குறிப்பு:** புளிப்பு, உப்பு, கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும். புழுங்கலரிசி நொய் சேர்த்துக் கஞ்சி வைத்துப்பால் கூட்டி உட்கொள்ளவும். இம்மருத்தை அதி ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும்.

### 193. எலி கடிக்குத் தேவதாளி எண்ணெய்

தேவதா ளிப்பூண் டெட்டுடன் வசம்புஞ்
சிறந்திடு நாரத்தை வேருங்
காவினின் முருங்கை வேர்சூரை வேருங்
கணக்கதாய்ச் சரிநிறை கூட்டி
நாவுரை யாமணக் கெண்ணெயிற் பிசைந்து
ஞாயறு முன்புடம் வைத்து
தேவனைத் தியானித் திரண்டுநாட் சென்று
செங்கையா லெடுத்திட தனையே 280

எடுத்து துட்டெடையுங் காலமே கால
மேகொளு யெலிவிடந் தீருங்
கடக்கரி மீதீ லேறியே நளினக்
கையினிற் குழலது கொண்டு
வடிப்பமாய்ச் சத்த மெழும்பிடப் புலியை
வதைத்துகாஞ் சனக்குடை கொடுக்குந்
திடத்துள தஞ்சைச் சரப்பூ பாலன்
செப்பிய யெலிகடி மருந்தே. 281

(இ-ள்.) தேவதாளிவேர் நாரத்தைவேர்
பூண்டு 8 பல்லு முருங்கைவேர்
சூரைவேர் வசம்பு

இவைகளைச் சரிநிறை (வகைக்கு 1 வராகனெடை) வீத மெடுத்து, நன்ருக இடித்து ஆமணக்கெண்ணெயுடன் குழப்பிச் சூரியபுடம் இடவும்.

2 நாட்கள் சென்றபின் ஒரு துட்டெடை எடுத்துக் காலே நேரத்தில் உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 194. எலி கடிக்கு வீழிவேர் மருந்து

கள்ளெலி யுன்னைக் கடித்திடி லதற்குக்
கருதுவே ஞேர்மருந் துசித
வுள்ளியும் வசம்பும் வீழிவேர் மூன்று
முடனதைத் தூளதா யரைத்து
அள்ளியே சிரசு முதலுடம் பெங்கு
மதைத்துவ ளையுமிடு மெலியி
னுள்ளுறு விடமுந் தீர்ந்திடும் விபுவு
முணர்ந்திடும் வீழிவேர் பூச்சே. 282

(இ-ள்.) பூண்டு வீழிவேர்
வசம்பு

இம்மூன்றையும் சரியெடை எடுத்து இடித்துச் சூர்ணஞ் செய்து, தண்ணீர்விட்டுக் குழப்பித் தலைமுதல் கால்வரை துவளையாக இடவும். எலி விஷங்கள் தீரும்.

### 195. எலிகடிக்குத் துவளை

சங்கையி லாலெலி யதுவுங்க டித்திடி
லேதுவளை யொன்றுசாத் தக்கேண்மோ
சங்கிலையாவது பேயின்பீர்க்
கிலையா வதுவிளா தனிலையான

துங்குணு மாம்மூன் றிலொரு யிலையரைத்
துவத்துவ ளையிடு சுருக்கினிற்ருன்
பங்கம் செய்யெலி விஷமுந் தீரு
மிதுதஞ்சை விபுபகர்ந்த தாமே. 283

(இ-ள்.) சங்கிலையோ, அல்லது பேய்ப்பீர்க்கிலையோ அல்லது விளா இலையோ. எது கிடைக்கின்றதோ அதைக் கொண்டுவந்து தண்ணீர்விட்டு நன்ருக அரைத்து உடம்பில் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யவும். எலிவிடங்கள் தீரும்.

### 196. எலிகடிக்கு மிதிபாகல் இலை நஸ்யம்

சதிசெய் யெலியுனைக் கடிக்கில் நசியமொன்று
வுண்மை யுடன்சாற் றக்கேண்மா
மிதிபாக லிலையுட னேயுள்ளி வசம்பும்
நறுக்கி விளம்புஞ் சாற்றிற்
பதமுட னேநசி யஞ்செய லிவிட
மும்போகும் வெகுபண்பாந் தஞ்சை
பதிசர பேந்தி ரமணியுணர்ந்த
நசிய மிதுபார்நீ தானே. 284

(இ-ள்.) எலிகடிக்கில், மிதிபாகலிலையுடன், பூண்டு வசம்பு இவைகளைக் கூட்டி ஒரு வெள்ளைத் துணியில் வைத்து, மூக்கில் 2 சொட்டுகள் விழும்படி ஊற்றவும். எலி விஷங்கள் தீரும்.

### 197. எலிகடிக்குப் பீர்க்கம் விரை எண்ணெய்

சொல்லு மெலிகடித் திடிலுள் ளுக்குக்
கொளெண்ணெ யொன்று சொகுசாதன
நல்ல பீர்க்கம் விரையும் பலமிரு
பதுவும் பருப்பன் ஞளிலாக்கி

வல்ல வூமத்தை வேரென்று மிளகுடன்
சித்தா மணக்கம் வேரும்
நல்ல யெண்ண யுடனெரித் துநக்க
யெலிகடி விடமும் நகர்ந்து போமே. 285

(இ-ள்.) பீர்க்கம் விதை 20 பலம் மிளமு 1 பலம்
ஊமத்தம் வேர் 1 ,, சிற்ருமணக்கம்வேர் 1 பலம்

இவைகளை இடித்து 20 சேர் நல்லெண்ணெயுடன் கலந்து அடுப்பின்மேல் வைத்துப் பதமாகக் காய்ச்சி இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு சிறுகரண்டியள வெடுத்து உட்கொள்ள எலிகடி விஷங்கள் தீரும்.

குறிப்பு: இம்மருந்தைக் குறைந்த அளவிலும் செய்து கொள்ளலாம்.

### 198 எலிகடிக்கு வேலிப்பருத்தி மருந்து

அவுரி வேருடன் வேலிப் பருத்திவேர்
வீழிவே ரதுகள் மூன்றுங்
கவன மாய்ச்சரி கூட்டிவெண் கோழிக்
காரமதிற் கருத்தாய்ச் சேர்த்து
நவமா மெள்ளெண் ணெய்தனி லெரித்து
விட நஞ்சு மேற்கொண்ட போதே
தவரா மற்கொள்ளுமே லுந்துவ ளையிடு
யெலிவிட முந்துவிழுந்து போமே. 286

(இ-ள்.) அவுரிவேர் வேலிப்பருத்திவேர்
வீழிவேர்

இவைகளைச் சரிஎடை (1 வராகனெடை) எடுத்து வெள்ளைக் கோழிக்காரம் (1 வராகனெடையும்) சேர்த்து நல்லெண்ணெய் 1 சேருடன் சேர்த்து எரித்து வைத்துக் கொள்ளவும். இத்தைலத்தை எலிகடித்த இடத்திலும் தடவி, உள்ளுக்கும் சாப்பிடவும். எலி விஷங்கள் தீரும்.

### 199. எலிகடிக்குக் கோடகசாலை எண்ணெய்

கோடாக சாலையும் விஷ்ணுகி ராந்திசிவ
ஞர்வேம்பு கோவை வீழி
காடனிற் செந்நா யுருவிநற் கையான்
றகரைபுன் குருந்து சங்கு
மோடுவெட் பாலை யிலைபதி மூன்றுஞ்
சரியாக முழுவி வேருங்
காடனில் மல்லிகை வெள்வேலி லுப்பையு
டனேதிரு ருகள்ளி வேரே. 287

கள்ளிமூக் குரட்டை நொச்சில் முக்கிரா
மிளகர ணைகறகூ ரைவேர்
விள்ளும் விளாபிரண் டையுகாய் பதிறைலும்
வகைக்குச் சரிவேருங் கூட்டி
வெள்ளிய கொன்னைப் பட்டைவில் வப்பத்
திரிப்பிலி யுந்தான் கோட்ட
முள்ளிக டுக்கா யுஞ்செங்க ழுநீருஞ்
சீரகமு மொக்கக் கூட்டே. 288

அஞ்சிச ரிநிறை யாகவெள் ளெண்ணெய்
தனிலே தானதை யெரித்து
வஞ்சயெ லிகடி விஷத்திற் கொருதுட்டி
னிடையள வுமாத்திரங் கொள்ளு
சஞ்சீவி யாங்கோ டகசாலை யினெண்ணெ
யெலிவிடங் கள்தானே தீரும்
அஞ்செல னவடைந் தவரையா தரிக்குஞ்
சராபந் திரனரு ளதாமே. 289

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கோடகசாலை | விஷ்ணுக்கிராந்தி |
| | சிவனார்வேம்பு | கோவை |
| | வீழிவேர் | செந்நாயுருவிவேர் |
| | கையாந்தகரை | புங்கம்வேர் |
| | சங்கு | வெட்பாலையிலை |
| | காட்டுமல்லிகை | வெள்வேல் |

| | |
|---|---|
| இலுப்பைவேர் | திருகுகள்ளிவேர் |
| மூக்கரட்டைவேர் | நொச்சிவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | மிளகரணைவேர் |
| கற்சூரைவேர் | விளா |
| பிரண்டைவேர் | உகா வேர் |
| கொன்னைபாட்டை | வில்வப்பத்திரி |
| திப்பிலி | கோஷ்டம் |
| பூண்டு | கடுக்காய்த்தோல் |
| செங்கழுநீர்க்கிழங்கு | சீரகம் |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து நன்ருக இடித்து நல்லெண்ணெயுடன் (3 சேர்) கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துச் சிவந்த பதத்தில் இறக்கி வடிக்கவும். இந்த எண்ணெயில் ஒரு துட்டெடை எடுத்து உட்கொள்ளவும். எலி கடித்ததனுலேற்பட்ட விஷங்கள் தீரும்.

**200. எலி கடிக்கு மருதம்பட்டைப் பொங்கல்**

மருதம் வேர்பட் டையைத்தா னீர்தனி
லேயூற வைத்துவச் சாற்றில்தான்
யொருபிடி நெல்லரி சிதனைப் பொங்கி
யேமூன்று நாளின் டுபாரு
யெரிவு யெலிமுத லானகடி விடமு
மீளுஞ் சிவனெழில் பதத்தில்
மருவு மலரற் சனைசெய் சரபோஜி
மகராசன் வருள தாமே.

(இ-ள்.) மருதம் வேர்ப்பட்டையைச் சிதைத்துத் தண்ணீரில் ஊறப்போட்டுத் தெளிவை யிறுத்து அதனுடன் ஒரு பிடி அரிசியிட்டு அடுப்பின் மேலேற்றிப் பொங்கலாகச் செய்யவும். கஞ்சியை வடிக்கக்கூடாது.

இவ்வாறு 3 நாட்கள் உட்கொள்ளவும். எலி விடங்கள் தீரும்.

## 201. எலி கடிக்கு ஆடுதீண்டாப்பாளை மருந்து

ஆடுதின்னுப் பாளைவே ரெருக்கம்வேர்
பெருமருந்து மழுக்கிரா வேர்
நாடும்வேலிப் பருத்திவேர் பெருங்காய
மிளகு நவிலு சுக்குந்
தேடும்வகைக் கோர்கழஞ்சு மரைத்துநன்ரு
மெள்ளெண்ணெய் சேர்த்துக்கொண்டு
வோடுமெலி கடியதற்கு மேலுக்கும்
பூசியதை யுண்ணுவாயே. 291

உண்டுபார் மூன்றுநாள் பன்னிரண்டே
லிவிடமும் போகும் பத்தியம்
பண்ணுபுகை யிலைபுளியுந் தவிர்வாய்வுஞ்
சேர்ந்ததுற்ற பதார்த்தந் தள்ளு
வண்ணப்பிர பந்தங்கள் சொற்கவிஞர்
தாமறியும் வள்ள லெங்கள்
ளண்ணல்சர போசிரா சரதிராச
னுணர்ந்த அருமருந்தே. 292

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | ஆடுதீண்டாப்பாளைவேர் | வேலிப்பருத்திவேர் |
| | எருக்கம்வேர் | பெருங்காயம் |
| | பெருமருந்துவேர் | மிளகு |
| | அமுக்கிராக்கிழங்கு | சுக்கு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துத் தூளாக்கி நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து எலி கடியில் புண்ணிவிட்டு, உள்ளுக்கும் சாப்பிடவும். இவ்வாறு 3 நாட்கள் உட்கொள்ள 12 வித எலி கடிகளும் தீரும்.

**பத்தியம்:—** புளி, புகையிலை, வாயு பதார்த்தங்கள் இவைகளை நீக்கவும்.

### 202. எலி கடிக்கு இலவம்பட்டை மருந்து

கலகலன வெங்குமோ டித்திரியு
மெலியுந்தான் கடிக்கில் நல்ல
இலவம்பட் டையரைத்துப் பாலுடனே
குடித்திடந்த எலிவிடந்தான்
நலராசா ளியைக்கண்ட கொக்கதுபோல்
பதைத்துவிடல் நாடிடாது
அலங்கலணி திருமார்பன் சவாயிசர
பேந்திரனரு ளன்பதாமே. 293

(இ-ள்.) இலவம்பட்டையை (சுமார் 1 பலம்) எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்துப் பருகவும். எலிவிடங்கள் "ராசாளியைக்கண்ட கொக்குப்போல்" தீரும்.

### 203. எலி கடிக்கு நாவற்பட்டைக் குடிநீர்

பாவயெலி யுனைக்கடித்து விடமேறி
லதற்கவிழ்தம் பகரக் கேண்மோ
நாவல்பட் டையைநறுக்கி நீரதனி
லூறவைத்து நசுக்கிநன்கு
யாவலுட னரைத்துப்போட் டச்சாற்றில்
தானேநீ யருந்திப்பாரு
தாவியெலி கடிவிடமும் பறந்தோடும்
விபுவுணர்ந்த தண்மருந்தே. 294

(இ-ள்.) நாவற்பட்டையை (1 பலம்) எடுத்து சிதைத்துத் தண்ணீரிலூறவைத்து நன்குக அரைத்து உட்கொள்ள எலி விஷங்கள் தீரும்.

### 204. எலி கடிக்குப் பிராய்க் குடிநீர்

முற்ற பிராய் மரத்தோலை நறுக்கியே
நற்பசுவின் மூத்திரத்திலே
நற்றுவமா யூறவைத்து மூன்றுநா
ளந்திசந்தி நயமாய்க்கொள்ள

பற்றுமெலி கடிவிடமுங் கதிரவனைக்
கண்டதொரு பனிபோ லோடுந்
நற்றிறறை யுள்ளசவாய் சரபேந்தி
ரபூப னவில் மருந்தே. 295

(இ-ள்.) பிராய் மரத்தோலை நசுக்கி (1 பலம்) எடுத்துப் பசுவின் மூத்திரம்விட்டு ஊறவைத்து 3 நாட்கள் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 205. எலி கடிக்குச் சாரைப்பாம்பு மருந்து

எலிகடியின் விடமதற்கு முற்றினசா
ரைப்பாம்பை யேயடித்துச்
சொலுதோலை வுரித்துவயிற் றைப்பீறி
யதினிணத்தைத் துரிசாய்வாங்கி
நல்கத்தி ரிக்காயில் நாலுகீத்
தைநிணற்றண் ணுளிற்சட்டி
யிலையுமிடா மல்பொரித் துண்ணுவிட
மீளுமது யின்னங்கேளே. 296

இன்னங்கேள் சட்டிதனில் நெய்வார்த்து
சாரையுட லிரைச்சி தன்னைச்
சின்னதாய்த் துண்டாடிப் போட்டெரித்துக்
கருகினபோ தெடுத்ததைத்தான்
னுன்னிதமாய் நாலுதுண்டு வுண்ணுநா
லஞ்சுநா ளுறுதியாக
சின்னபின்ன பட்டெலியின் விடந்தீருந்
தஞ்சைவிபு செப்பும் வாறே. 297

(இ-ள்.) சாரைப் பாம்பையடித்து அதன் தோலை உரித்துவிட்டு அதன் வயிற்றைக்கீறி அதன் கொழுப்பை ஒரு சட்டியிலிட்டு அதனுடன் கத்திரிக்காய் கீத்து 4 போட்டு வதக்கி சாப்பிடவும்.

(2) ஒரு புதுச்சட்டியில் நெய்விட்டு அதில் சாரைப் பாம்பின் இறைச்சியைப்போட்டு நன்ருக கருக வைத்து அதில் 4 துண்டுகள் சாப்பிடவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்கள் செய்ய எலி விஷங்கள் தீரும்.

### 206. எலி கடிக்குப் பூவந்திவேர் மருந்து

பூவந்தி யின்வடக்குப் போரவேர்
பாக்களவும் போட்டரைத்து
வாவலுடன் பழம்பீச்சான் கட்டியுட
னரப்பொடியு மகாமூன்றுந்
தாவெருமையிற் றயிறினிலே குழப்பியே
மூன்றுநாட் டானேகொள்ளு
பாவகன்முன் பஞ்சதுபோல் பறக்குமெலி
விடகடியும் பார்நீ தானே. 298

(இ-ள்.) பூவந்தி மரத்தின் வடக்கு நோக்கிப்போகும் வேரை அரைத்து விழுது ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்து அதனுடன்,

பீச்சாங்கட்டி அரப்பொடி

இவற்றையுங்கூட்டி எருமைத் தயிரில் குழப்பி 3 நாட்கள் உட்கொள்ளவும்.

### 207. எலிகடிக்கு மூழ்க முத்தெருக்கஞ்செவி எண்ணெய்

ஆகுகடி விடத்திற்கு மூழ்கயெண்ணெ
யொன்றதுகே ளன்பதாக
வாகுளமுற் றெருக்கின்செவி வேர்வட்டத்
திருப்பெரு மருந்துவேருந்
தாகந்தீர் விளாவேர்வே லிப்பருத்திப்
பேய்ப்பீர்க்கத் தனுடவேரு
மாகும்வெள்ளைப் பூவுள்நி லக்கடம்புன்
மத்தைவே ராகயேழே. 299

ஆகவேழ் வகைவேரும் விளாவினிலே
யுடனுன்மத் தையிலேச்சாற்றில்
நேகவரைத் தேபாம்புக் கண்டமுள்ளி
வசம்புமதி நேரேகூட்டி
வாகுபெறும் நெய்யுடனே யெண்ணெயுமே
சரிகூட்டிவடுப்பிலேத்தி
யேகவனித் தேயெரித்து தைலபதத்
தினிற்குங்கி லியத்திடுடே. 300

துங்கிலியத் தோடேமஞ்ச ளிதுவிரண்டும்
பொடிசெய்துக் கொண்டுதூவி
பொங்கமுடன் வடித்துமிதை மூன்றுநாள்
முழுகவிடம் போகுங்கண்டாய்
மங்களகல் யாணகுண வம்பிகைதன்
னிடப்பாக மயேசர் பாத
முங்கவன மாகவுமர்ச் சனைசெய்யுஞ்
சரபேந்திரன் முறையிதாமே 301

(இ-ள்.) முத்தெருக்கஞ்செவி வேர்
வட்டத்திருப்பி வேர்
பெருமருந்துவேர்
விளாவேர்
வேலிப்பருத்திவேர்
பேய்ப்பீர்க்கம் வேர்
வெள்ளைநிறப் பூவுள்ள நிலக்கடம்பின் வேர்
ஊமத்தை வேர்

இவைகளைச் சமனெடுத்து விளாவிலேச் சாறுவிட்டு நன்ருக அரைக்கவும். பின்னர் ஊமத்தையிலேச் சாறு விட்டு அரைத்துக்கொண்டு, அதனுடன்

பாம்புக்கண்டம் வசம்பு
பூண்டு

இவைகளையும் ஒன்றுகூட்டி, பசுவின் நெய் நல்லெண்ணெய் இவ்விரண்டையும் சேர்த்து அதனுடன் குழப்பி

அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து, இறக்குந் தருவாயில் குங்கிலியம், மஞ்சள் இவ்விரண்டையும் தூள் செய்து தூவி இறக்கி வடிகட்டவும். இத்தைலத்தினுல் 3 நாட்கள் தலை முழுகவும். எலி விஷங்கள் தீரும்.

**குறிப்பு :** கல்கம் ஒரு பலத்திற்கு எண்ணெய் நெய்க் கலவை ஒரு சேர் கூட்டவும்.

### 208. எலி கடிக்கு வேலிப்பருத்தி மருந்து

வேலிப்பருத் தியினிலையிங் கொழுந்துமரைத்
    தாப்பாலில் வெந்நீராதல்
ஏலுடனே கொள்மூன்று நாளிலெலி
    கடிவிடமு மேருங்காரி
ஆலமுண்ட கண்டர்பத மனுதினமு
    மறவாதர்ச் சனைகள் செய்பூ
பாலன்றுள சேந்திரனருள் சரபேந்திர
    பூபதியும் பகர்மருந்தே 302

(இ-ள்.) வேலிப்பருத்தியிலை
வேலிப்பருத்திக்கொழுந்து

இவ்விரண்டையும் கழற்சிக்காயளவெடுத்துப் பசுவின் பாலிலோ, வெந்நீரிலோ 3 நாட்கள் உட்கொள்ளவும். எலி கடி விடங்கள் தீரும்.

### 209. எலி கடிக்கு வேலிப்பருத்தி மருந்து (கடிவாயிலிட)

எலிகடித்த வாயதனில் வேலிப்பருத்
    தியினிலையி லெருக்கம்பாலை
வலுவுடனே யூட்டிமே லிற்போடக்
    கடிவிடமு மற்றுப் போகுங்
கலகலெனுங் கலின்மாவிற் பவனிவருஞ்
    சரபேந்திரன் கற்றுணர்ந்த

பலநூலி னிருந்ததனிற் கைகண்ட
முறையிதெனிப் பகரலாமே. 303

(இ-ள்.) வேலிப்பருத்தியிலையில் எருக்கம்பாலைத் தடவி எலி கடிப் புண்ணின் மேலிடவும். விஷங்கள் தீரும்.

**210. எலி கடிக்கு வாந்திக்குப் பேய்ப் பீர்க்கோட்டின்றாள்**

சிகரிகடித் திடும்வீச்சுத் திற்கோருச்
சிதமருந்து செப்பக்கேண்மோ
பகரும்பேய்ப் பீர்க்கோட்டின் றாளுமா
மணக்கினிலை பாரிரண்டும்
வகைசரியா யரைத்துத்தண்ணீ ரிற்கலந்து
வுண்டிடவும் வாந்தியாகுந்
தகைவான வீக்கமெலாம் போமெலியின்
விடமௌவே சாற்றலாமே. 304

(இ-ள்) எலி கடியினாலேற்பட்ட வீக்கத்திற்குப் பேய்ப்பீர்க்கம் ஓட்டின் தூள், ஆமணக்கிலை இவ்விரண்டையும் சரி எடையெடுத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து உட்கொள்ளவும்.

2 அல்லது 3 முறை வாந்தியாகி வீக்கங்கள் தீரும். எலி விஷங்கள் தீரும்.

**211. எலி கடிக்குப் பீர்க்கம் நெய்**

துடிப்பான யெலிகடித்த விடமதுக்கு
மோர்மருந்து சொலவுங்கேண்மோ
புடிப்பீர்க்கம் வேருமூ மத்தைவே
ரும்நறுக்கிப் போட்டுநெய்யில்
திடத்துடனே யெரித்துவடித் தேகுடிக்க
யெலிவிடமுந் தீருங்கண்டாய்
படித்தவர்களுக் கன்புசெய்யுஞ் சரபேந்திர
னருளியசொற் படியிதாமே. 305

(இ-ள்.) பீர்க்கம்வேர் ஊமத்தைவேர்

இவ்விரண்டையும் நறுக்கி நெய்யுடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றிச் சிவக்க எரித்து வடிகட்டி உட்கொள்ள எலி விஷங்கள் தீரும்.

## 212. எலி கடிக்குக் கொடிவேலிக் குடிநீர்

கொடிவேலி வேர்ப்பட்டை யரைத்திளவெந்
நீர் தனிலே குழப்பியேதான்
அடவாக மூன்றுநா ளுள்ளுக்குங்
கொண்டுமே லதையும்பூசு
நடமாடு மெலிவிடமு மூன்றுநா
ளதிற்றீரும் நலமாந் தஞ்சைப்
படியாளுஞ் சரபோசி ராசாதி
ராசனுணர் பண்மருந்தே. 306

(இ-ள்.) (½ சுண்டையளவு) கொடிவேலிவேர்ப் பட்டையைக் கைபடாமலரைத்து இளஞ்சூடுள்ள வெந்நீருடன் கலக்கி மூன்று நாட்கள் உட்கொண்டு. கடிவாயிலும் பூசவும். எலி விஷங்கள் தீரும்.

## 213. எலி கடிக்குப் பருத்தியிலை மருந்து

பருத்தியிலைச் சாறுசம னெள்ளெண்ணெ
யிற்கலந்து பரிவாகத்தான்
திருத்தமுடன் மூன்றுநா ளுங்கொண்டு
மதைநசியஞ் செய்துபாரு
பொருக்கமுடி யாயெலியின் கடிவிடமுந்
தீருமிது புனிதமான
தருக்கள்பல சூழ்த்தஞ்சைச் சரபேந்திர
னருளிதெனச் சாற்றலாமே 307

(இ-ள்.) பருத்தியிலைச்சாறு ஒரு ஸ்பூன்
சுத்தமான எள்ளெண்ணெய் ,,

இவ்விரண்டையும் சமனெடுத்துக் குலுக்கி மூன்று நாட்கள் நஸ்யமாக இடவும். எலி கடியினுலேற்பட்ட விஷங்கள் தீரும்.

### 214. எலி கடிக்குக் காக்கணம்வேர் மருந்து

காக்கணம்வேர் நன்ருக கல்வத்தி
லிட்டரைத்துக் காடிதன்னி
லேகலக்கி மூன்றுநாட் கொண்டுபா
ரெலிவிடமும் நில்லாதோடு
மாக்கள்தா னமீரண்ய தானமன்ன
தானமிக வருளுந்தஞ்சை
கோககவிஞர் தாமறியுஞ் சரபேந்திர
னிர்ணயித்த குணமருந்தே. 308

(இ-ள்.) காக்கணம் வேரைக் கொண்டுவந்து ஒரு கல்லத்திலிட்டுக் காடிவிட்டு நன்ருக அரைத்து மூன்று நாட்கள் பருகவும். எலி விஷங்கள் தீரும்.

குறிப்பு :— வெள்ளைக் காக்கணம் வேர் எடுத்துக் கொள்ளவும். இம்மருத்து பேதியாகுந் தன்மையுடையது.

### 215. எலி கடிக்குக் கோங்கிலவு மருந்து

தாங்கமுடி யாதயெலி கடிவிடத்துக்
கோர்மருந்து சாற்றக்கேண்மோ
கோங்கிலை விளாவினிலை யிரண்டுஞ்சமன்
சேர்த்திடித்துக் கொள்ளஞ்சேநா
ளேங்குமெலி கடிதீரு முக்கனிதேன்
பாய்வயல்சூ ழெழிலொந் தஞ்சை
பாங்குடனே யாளுஞ்சர போசிமகா
ராசனுரை பாரிதாமே. 309

(இ-ள்.) கோங்கிலவன் இலை விளா இலை

இவ்விரண்டையுஞ் சமன் சேர்த்து இடித்துச் சாறு பிழிந்து 5 நாட்கள் உட்கொள்ளவும். எலி விஷங்கள் தீரும்.

### 216. எலி கடிக்கு இலுப்பைப் புண்ணாக்கு மருந்து

வலுத்தயெலி கடித்திடிலே யதுக்கவிழ்த
மொன்றுசொல்வேன் எகையதாக
யிலுப்பைப்புண் ணாக்கதனை பசுவின்பா
லினிவரைத்து மேகொள்நீதான்
சிலுக்குமெலி கடிவிடமு மூன்றுநா
டன்னிலேதான் றீரும்நல்ல
பலக்கடமா னக்களிறிற் பவனிவருஞ்
சரபேந்திரன் பகர்மருந்தே. 310

(இ-ள்.) இலுப்பைப் புண்ணாக்கை (அரப்பு) ஒரு வராகனெடையளவெடுத்துப் பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்து உட்கொள்ளவும். மூன்று நாட்கள் சாப்பிட எலி கடி விஷங்கள் தீரும்.

### 217. எலி கடிக்கு மஞ்சள் குடிநீர்

நஞ்சுயெலி கடிவிடத்துக் குபாயமருந்
தொன்று சொல்வே னூட்டிலுள்ள
மஞ்சளைக்கா டியிலரைத்து மூன்றுநாட்
கொண்டுபார் வலிமையாக
மிஞ்சுமெலி விடந்தீருஞ் சத்குணசம்
பன்னமிகு வுவேகனானேன்
றஞ்சநகர் தனையாளுஞ் சரபேந்திர
னுணர்ந்ததெனச் சாற்றலாமே. 311

(இ-ள்.) மஞ்சளைக் காடிவிட்டரைத்து ஒரு சுண்டைக் காயளவெடுத்து 3 நாட்கள் காலை நேரங்களில் உட்கொள்ளவும் எலி விஷங்கள் தீரும்.

## 218. எலி கடிக்கு வாழைப்பழ மருந்து

கனிந்தகரு வாழையுட பழமதனைப்
பாலினிலே கரைத்துவுண்ணு
தினந்தானு மூன்றதற்குக் கசப்பொன்றுந்
தவிர்த்துவிடு செப்பதைக்கேள்
அனந்தலிலே கடித்தயெலி கடிமீளுந்
தப்பாம வருந்தவத்தோர்
மனதுகந்த முறையிதுவே தஞ்சைவிபு
நிட்சயித்த மருந்திதாமே.

(இ-ள்.) கருவாழையின் பழத்தைப் பசுவின் பாலினில் குழப்பி மூன்று நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம்:** தினந்தோறும் கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

## 219. எலி கடிக்கு முடக்கொத்தானிலை மருந்து

முடக்கொத்தா னிலையதனை யரைத்துநன்றாய்
மோர்தனிலே கரைத்துக்கொள் மூன்றுநாளுந்
துடிப்பான கசப்புபதார்த் தத்தைத்தள்ளு
தூங்கெலியின் கடிமுதலாய்த் தீருங்கண்டாய்
கடக்கரியின் மீதேறி வயிள்வாள்தன்னை
கைக்கொண்டு பவனிவருங் கர்ணனென்கோன்
வழப்பமுள்ள தஞ்சைசர பேந்திரசிந்தா
மணிசரபேந் திரனுணர்ந்த மருந்ததாமே. 313

(இ-ள்.) முடக்கொத்தான் இலையை அரைத்து (ஒரு சுண்டை அளவு எடுத்துப்) பசுவின் மோருடன் குழப்பி மூன்று நாட்கள் அருந்தவும்.

**பத்தியம்:** கைப்புச் சுவையுள்ள பண்டங்களை நீக்கி விடவும். தூங்கெலி விஷங்களும் நீங்கும்.

## 220. எலி கடிக்கு அழிஞ்சில்வேர் மருந்து

துடியெலியின் கடிவிடத்திற் கோர்மருந்து
சொல்லுகிறேன் கானகத்தி னழிஞ்சிவேருங்
குடசப்பா லையின்வேருஞ் சரியதாகக்
கூட்டியரைத் தோர்கொட்டைப் பாக்கின்
திடமான வரகாலி யாட்டுப்பாலிற் [மாத்திரந்
சிறந்ததோர் பொங்கியொரு பாக்கின் மாத்திர
மடவுடனே யச்சோற்றைக் குழித்துமுன்சொல்
லம்மருந்தை மூடியுண்ணு மூன்றுநாளே. 313

நாளதுமூன் றிதையுண்ணு புளிப்புகைப்பு
நாடாதே பச்சைநீர் தனையுண்ணுதே
நீளுமெலி கடிவிடமும் பறக்குமந்த
நிமிஷத்திற் சமுயங்க ளுங்கொள்ளாதே
பாளைகமழ் சோலைகள்சூழ் தஞ்சையாளும்
பார்த்திபனிச் சோழவள நாடன்வெற்றி
வாளதுகைக் கொள்ளுசர பேந்திரசிந்தா
மணிவுணர்ந்த வழிஞ்சிவேர் மருந்ததாமே. 315

(இ-ள்.) அழிஞ்சில்வேர் குடசப்பாலைவேர்

இவ்விரண்டின் விழுதும் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவெடுத்து ஆட்டுப்பாலில் குழப்பி அடுப்பின்மேல் ஏற்றிக் கொதிக்கவைத்து ஒரு கொட்டைப்பாக்களவானபின் இதனை சாதத்தினுள் பொதித்து உருட்டி உட்கொள்ளவும். இவ்வாறு மூன்று நாட்கள் உபயோகித்துப் புளிப்பு கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்குவதுடன் குளிர்ந்த தண்ணீரையும் தள்ளிவிடவும் எலிகடி விஷங்கள் தீரும்.

## 221. எலி கடிக்கு வேலை நசியம்

நல்லவே லையுமுள்ளி வசம்புங்கூட்டி
நறுக்கியே யந்திசந்தி மூன்றுதுள்ளி

நல்லமையாய் நசியஞ்செய் யெலிவிடந்தான்
நாடாது கதிரவன்முன் பனிபோலோடுங்
கல்லேயும்பெண் ணுக்கியந்த வகிலிசாபங்
கடத்திவித்து கஜேந்திரனேக் கார்த்துமேநற்
வல்லமைகள் பெற்றுதஞ்ச நகரில்வாழு
மகராசன் சரபேந்திர னருளிதாமே 316

(இ-ள்.) நல்லவேளே பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் நன்ருக நசுக்கி ஒரு சிறிய வெள்ளேத் துணியில் மூட்டையாகக் கட்டிக் காலேயிலும் மாலேயிலும் மும்மூன்று சொட்டுகள் வீதம் இரு நாசிகளிலும் நஸ்யம் இடவும்(பிழியவும்). எலி விஷங்கள் தீரும்.

## 222. எலி கடிக்கு வேலிப்பருத்தி மருந்து

வேலியுட பருத்திசமூ லமுமரைத்து
வெள்ளாட்டுப் பாலிலுண்ண மூன்று நாள்தான்
வேலேயுப்புப் புளிப்புப்புகை யிலேயாகாது
வென்மைதுவ ரையையரைத்துத் துவையல்
ஏலுடனே கொள்ளுமறு பத்தியஞ்செ [பண்ணி
யெலிவிடங்கள் பதினெட்டுந் தீருங்கண்டாய்
சீலமிகுந் தஞ்சைநகர் செங்கோல்நீதி
செலுத்துசர பேந்திரனரு ளருமருந்தே. 317

(இ-ள்.) வேலிப்பருத்தியைச் சமூலமாக எடுத்து நன்ருக அரைத்து வெள்ளாட்டுப்பாலுடன் மூன்று நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம் :** புளிப்பு, உப்பு. புகையிலே முதலியவைகளே நீக்கிவிடவும். துவரம்பருப்புத் துவையல் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறே மறு 3 நாட்களும் பத்தியமாக இருக்கவும்.

### 223. எலி கடிக்கு வாகை விதைச் சூரணம்

வாகைவிதைப் பொடிசெய்து தேனதனில்
வகையாக வாறுநா ளுண்டுபாரு
போகுமெலி கடிவிடத்தி னிரைப்புமீளை
புலிகண்ட மானதுபோல் பறந்தேயோடுந்
தாகமுள்ள புளிப்புப்புந் தள்ளிப்போடு
தப்பாதவ் விடந்தீரு வாணருக்கு
நாகமணங் கனகமருள் சரபபூப
நன்ருக வுணர்வாகைச் சூரணமாமே. 318

(இ-ள்.) வாகைவிதையை இடித்துச் சூரணஞ்செய்து தேனுடன் (ஒரு மூவிரல் கொள்ளுமளவு) குழைத்து உட்கொள்ளவும். இவ்வாறு ஆறு நாட்கள் செய்ய எலி கடியினுலேற்பட்ட இரைப்பு, ஈளை முதலானவை தீரும்.

**பத்தியம் :** புளிப்பு, உப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

### 224. எலி கடிக்கு

எந்தயெலி கடித்துவிடங் கடுகமீறி
யேறிடினு மதற்குமோர் மருந்துகேளு
மெந்தொன்றிக் கிழங்கோரெ லுமிச்சங்காய்
விதமளவு மரைத்தோர்கோ ழியின்வயிற்றில்
அந்தமுடன் வைத்தவித்தக் கறியுங்கூட
வந்திசந்தி மூன்றிநா ளுண்டாயானுல்
சந்திரன்முன் இருள்போல வகலுந்தஞ்சை
சரபோசி மகராச னருளிதாமே. 319

(இ-ள்) மெந்தொன்னிக் கிழங்கை (கலப்பைக்கிழங்கு) ஒரு எலுமிச்சங்காய் அளவு எடுத்து நன்ருக அரைத்துவந்து ஒரு சேவலைக்கொண்டு அதை வயிற்றைக்கீறி அதற்குள் வைத்துத் தைத்துவிடவும். கால், தலை, சிறகு முதலானவை களை நீக்கிவிடவும். பின்னர் இதை வேட்டில்வைத்து மூடி

அவிக்கவும். நன்கு வெந்தவுடன் இதை இறக்கி வைத்துக் கொண்டு காலையிலும் மாலையிலுமாக மூன்று நாட்கள் சாப் பிடவும். எலி விஷங்கள் தீரும்.

### 226. எலி கடிக்கு முருங்கை மருந்து

முருங்கைச்சாறது துட்டி டையும்மாவ லிங்கைமுற்றச்
சாறதுட் டிடையோர் கரண்டியெண்ணெய்
யுரைமூன்றுங் கலந்துநீ மூன்றுநாட் கொளுப்பு
டனேபுளிப் பொன்றுமு னக்கரகாது
தரணிதனி லருள்மிகுந்த கங்காதீரந் தனிலாடி
யனேக சிவஸ்தலஞ் சேவித்து
வருந்தஞ்சை நகராதி பதியாமெங் கள்மகா
ராசன்சர பேந்திரனுணர் மருந்தே 320

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | முருங்கைச்சாறு | 1 துட்டெடை |
| | மாவலிங்கச்சாறு | ,, |
| | நல்லெண்ணெய் | ,, |

இம்மூன்றையும் குலுக்கிக் காலை நேரங்களில் 3 நாட் களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம்:** உப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும் நீக்கிவிடவும். எலி விஷங்கள் தீரும்.

### 226. எலி கடிக்கு நந்தியாவட்டையிலை மருந்து

நந்தியா வட்டையிலை விழுதுதானு
நன்றான யெலுமிச்சங் காயின்மாத்திரஞ்
சந்தநல் லெண்ணெயினிற் குழப்பியேதான்
சதிரான ரவிதனிலே வைத்தெடுத்து
தந்திரமா யுண்மூன்று நாளுந்தானே
சாகாத்துப் புப்புளிப்புந் தள்ளுபத்திய
முந்திரமாய் செய்யெலிழன் விடமுந்தீரு
முத்தமவான் சரபேந்திர னருளிதாமே. 321

(இ-ள்) நந்தியாவட்டையிலே அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காய் பிரமானமெடுத்து நல்லெண்ணெயுடன் குழப்பி வெயிலில் வைத்து 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம்:** உப்பு, புளிப்பு முதலிய சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

எலி விஷங்கள் தீரும்.

### 227. எலிகடிக்கு கழற்சிவேர் மருந்து

கழற்சிவேர் தனையரைத்துப் பாக்கின் மாத்திரங்
காசினியெள் ளெண்ணெய்தனிற் புரட்டியுந்தான்
வளப்பமுட னேமூன்று நாளுங்கொள்ளு
மாளாத யெலிவிடமு மற்றுப்போகுந்
துளையடுக்கிப் பரியேறி நடத்தியந்தத்
துகள்பொழுதை மறைக்கவுஞ்செய் துளசபூபன்
வளமகிழ்சத் புத்ரன்சர பேந்திரபூப
னுற்பனமா யுணர்ந்தகழற் சியின்மருந்தே. 322

(இ-ள்.) கழற்சிவேரைத் தண்ணீர்விட்டரைத்து ஒரு பாக்களவெடுத்து எள்ளெண்ணெயில் தோய்த்துக் காலை நேரத்தில் 3 நாட்கள் உட்கொள்ளவும். எலி விஷங்கள் நீங்கும்.

### 228. எலிகடிக்கு புருவெச்ச மருந்து

தப்பியே யெலிகடித்துத்
தலைகனத் துடம்பிலெங்குங்
கொப்புள மாகத்தோன்றிற்
குறும்புரு வெச்சத்தோடே
ஒப்பெரும் பாவட்டைத்தோ
லிலையிவை யுலர்த்திச்சேர
மெப்பொடி யாக்கிநெய்யில்
குழைத்துடன் விழுங்கநன்றே. 323

(இ-ள்.) எலிகடித்து அதனால் தலைபாரம் ஏற்பட்டு உடம்பு முழுவதும் கொப்புளமுண்டாகில்

புருவெச்சம் பாவட்டைத்தோல்
பாவட்டையிலை

இவைகளை உலர்த்திச் சூரணஞ் செய்து வைத்துக் கொண்டு ஒரு வெருகடியளவெடுத்து நெய்யில் குழைத்து உட்கொள்ளவும்.

### 229. எலிகடிக்கு வன்மரைச் சூரணம்

வன்மரைக்கொலுஞ் சிறுபயறும்
வரளஉலர்த்திப் பொடிசெய்து
மென்மை நறுநெய் யுடன்கூட்டி
மேவிப்பத்து நாள்விழுங்கப்
நன்மை யெலியின் பற்பட்டு
பொருமிக் கழலைபோன்றது போய்
நன்மை யேயதி யுடம்பெல்லாம்
நஞ்சு மமுத மாய்விடுமே. 324

இ-ள். *வன மரைக்கோல் சிறுபயறு

இவ்விரண்டையும் நன்கு உலர்த்திச் சூரணஞ் செய்து வைத்துக்கொண்டு, அதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து பசுவின் நெய்யுடன் கூட்டி 10 நாட்கள் உட்கொள்ளவும்.

### 230. சிறுபாம்புக் கடிக்கு வேப்பிலை மருந்து

சித்திரக விடமதற்கு மோர்மருந்து
செப்புகிறேன் வேப்பிலைவெங் காரங்கூட்டி

*வனமரை—முதிரை அதாவது இரட்டைப்பருப்பு விதைகளான அவரை, கொள், மொச்சை, காராமணி முதலியன. இவ்விடத்தில் கொள்ளை உபயோகிக்கவும்.

வைத்தரைத்து நெய்யுடனே கலந்துதின்ன
வகையான சிறுபாம்பு கடியுமல்லாமல்
பத்மவிஷ மண்டலத்தின் கடியுந்தீரும்
பரமசிவன் கிருபையினுற் றஞ்சையாளுந்
நித்தியகல் யாணகுண சரபபூப
ணிதமுணர்ந்த வேப்பிலையின் மருந்ததாமே 325

(இ-ள்) வேப்பிலை வெங்காரம்

இவ்விரண்டையும் அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டரைத்து நெய்யுடன் கூட்டி உட்கொள்ளச் சிறு பாம்பு கடிகள், பத்மவிஷம், மண்டலி கடிகள் முதலானவை தீரும்.

## 231. சகல விஷக் கடிக்கும் தலைச்சுருளி வேராதிச் சூரணம்

சகலவிட கடிக்குமோர் சூரணங்கேள்
தலைச்சுருளி வேரழிஞ்சி வேரின்பட்டை
அகமகிழ்சீந் திற்கொடியின் றன்வேர்ப்பட்டை
அவுரிவேர்ப் பட்டைபேய்ப் பீர்க்கம்வேரும்
வகையான குப்பைமேனி கொல்லன்கோ
வைக்கிழங்கு மிளகறணை வேரின்பட்டை
துகைவீழி வேருடனே வகைகள்பத்துஞ்
சொன்னபடி சமனுக யிடித்துக்கொள்ளே. 326

கொண்டுசூ ரணம்பண்ணி வடியுங்கட்டிக்
கொண்டுசூ ரணமிரண்டு படிக்குத்தானு
முண்டிடுவெத் திலையிலறு பதையுலர்த்தி
முன்போலச் சூரணித்துக் கூடப்போட்டு
பண்டைநேர் வாளமுட நாபிரண்டில்
பார்வைக்கும் புளியம்விரை சரிபொடித்து
கண்டதூ ளதைக்கூடப் போட்டுநன்ருய்க்
கலந்துபுதுக் கலசமதில் வைத்துக்கொள்ளே. 227

வைத்துக்கொள் ளேவரையெந்த விடங்கள்தொட்டு
வந்தாலும் வெருகடிப்பிர மாணந்தானும்
பத்தியமாய்க் கொடுயெந்த விடமுந்தீரும்
பலவாவி நதிகள்தடா கங்கள்சூழு
மித்தரணி தன்னைமனு நீதிதப்பா
தேயாளு மபிமான கர்த்தர்கற்ற
வித்வசனர்க் கனுகூலன் சரபபூபன்
விசயனிர ணயித்ததொரு விடமருந்தே 328

(இ-ள்.) தலைச்சுருளிவேர் (பொன்முசுட்டை)
அழிஞ்சில்வேர்ப்பட்டை
சீந்திற்வேர்ப்பட்டை
அவுரிவேர்ப்பட்டை
இண்டம்வேர்ப்பட்டை
பேய்ப்பீர்க்கம்வேர்
குப்பைமேனி
கொல்லங்கோவை
மிளகரணைவேர்ப்பட்டை
வீழிவேர்

இவைகளை வகைக்குச் சரியெடை எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்ட சூரணம் 2 படி எடுத்துக்கொள்ளவும. இதனுடன் 60 வெத்திலை நறுக்கி உலர்த்திச் சூரணித்துக் கலந்து கொள்ளவும். பின்னர்.

சுத்திசெய்த நேர்வாளம் 1 புளியம் விதையளவு
,, நாபி ,,

எடுத்துச் சூரணித்து எல்லாவற்றையும் ஒன்று கூட்டி ஒரு புதுக்கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

எவ்வித விஷங்களானாலும் இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளக் கொடுக்கவும்.

**பத்தியம்:—** புளிப்பு, கைப்புச் சுவையுள்ள பண்டங் களை நீக்கவும்.

### 232. சகல சர்ப்ப விஷங்களுக்கும் சஞ்சீவினிச் சூரணம்

ஸகலசர்ப்ப விடங்களுக்கு முசிதமான
சஞ்ஜீவி னிச்சூரண மொன்றுசொல்வேன்
அகத்திப்பேய்க் கொம்மட்டிக் காட்டுமல்லி
யழிஞ்சில்நுணா நிலவேம்பு நிலயாவாரை
சுகவில்வ பாதிரிவெள் ளெருக்கு மொச்சை
துய்யவெள்ளைச் சாறணைப்பேய்ப் பீர்க்குபுங்கு
மகமகிழும் வெட்பூலா குப்பைமேனி
யாடுதின்னாப் பாளைபெரு மருந்துதானே. 329

மருந்துபேய்ப் புடலும்பேய்ச் சுரைபாவட்டை
வல்லமுக்கா வேளைகருஞ் செம்பைதானு
மெருக்குமுள்ளிக் கத்திரிவே லிப்பருத்தி
யீஞ்சுதலைச் சுருளிபேய்ப் பாகலோடே
கருகருங்காக் கைக்கோவை யவுரிவெள்வேல்
கனத்தக்ழற் கொடியா தெண்டைதன்னே
டுருத்துசத்திச் சாரணையிம் முப்பத்தாறு
மூலவே ரினிப்பட் டைசொல்வேனே. 330

வகைநாவல் பூவந்தி குடசுப்பாலை
மருக்காரை முள்முருக்கு வேம்புகாரை
தகைவான கோரைமூக் கெட்டும்பட்டை
சாந்தமிகு மமுக்கிராப் பாம்புக்கோவை
துகைநாகச் சாத்துடனே கிழங்கு மூன்றுஞ்
சொற்கடுகு புத்தமரிவி ரையினோடே
சகமீதில் வளராரை வீரைகள் மூன்றுஞ்
சாற்றும்வகை நாற்பத்தொன் பதுவுமாமே. 331

ஆகும்வகை சரிநிறையாய் நீழலுலர்த்தி
யாதையிடித்து நன்ருக வடியுங்கட்டி
வேகமுறும் பேய்ச்சுரைக்காய்க் குடுக்கைதன்னில்
விட்டடைத்து வைத்துக்கொள் விடங்கள் தீண்டு
வேகடுக வெருகடிச்சூ ரணத்தைநீயும்
வெந்நீரி லாதல்பழங் காடியாதல்
வாகுடனே கொடுவிஷமு மாறுஞ்சித்தர்
வகையிதைத்தஞ் சையிமானு வுணர்ந்ததாமே. 332

(இ-ள்.)

| | |
|---|---|
| அகத்திவேர்ப்பட்டை | ஆதண்டை |
| காட்டுமல்லிவேர்ப்பட்டை | பேய்க்கொமட்டிவேர்ப்பட்டை |
| நுணவேர்ப்பட்டை | நிலவேம்பு |
| நிலையாவாரைவேர்ப்பட்டை | அழிஞ்சில்வேர்ப்பட்டை |
| பாதிரிவேர்ப்பட்டை | வில்வவேர்ப்பட்டை |
| மொச்சைவேர்ப்பட்டை | வெள்ளெருக்கு வேர்ப்பட்டை |
| பேய்ப்பீர்க்குவேர்ப்பட்டை | வெள்ளைச்சாரணை |
| வெட்பூலாவேர்ப்பட்டை | புங்கம்வேர்ப்பட்டை |
| ஆடுதீண்டாப்பாளை | குப்பைமேனி |
| வேர்ப்பட்டை | பெருமருந்து வேர்ப்பட்டை |
| பேய்ப்புடல் வேர்ப்பட்டை | பேய்ச்சுரை வேர்ப்பட்டை |
| பாவட்டை வேர்ப்பட்டை | முக்காளை வேர்ப்பட்டை |
| கருஞ்செம்பைவேர்ப்பட்டை | எருக்குவேர்ப்பட்டை |
| முள்ளுக்கத்திரி வேர்ப் | வேலிப்பருத்திவேர்ப் |
| பட்டை | சத்திச்சாறணை [பட்டை |
| பொன்முசுட்டை வேர்ப் | பேய்ப்பாகல் வேர்ப்பட்டை |
| பட்டை | அவுரிவேர்ப்பட்டை |
| கருங்காக்கைகோவை | கழற்சிவேர்ப்பட்டை |
| வெள்வேல் | ஈஞ்சு |

இவைகளை சரியெடை எடுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| நாகப்பட்டை | பூவந்தி |
| குடசப்பாலை | மருக்காரை |

| | |
|---|---|
| மூள்முருக்கு | வேம்பு |
| காரை | கோரைமூக்கு |
| அமுக்கிராக்கிழங்கு | பாம்புக்கோவை |
| நாகாசாத்துக் கிழங்கு | கடுகு |
| பித்தமரி விரை | ஆரைவிதை |

இவைகளையும் சமனெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்தவும். இவைகளையிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்யவும். இதனைப் பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீரிலோ அல்லது பழங்காடியிலோ உட்கொள்ளவும். பற்பல விஷங்களும் தீரும்.

**குறிப்பு:** இம்முறையில் காணப்படும் சில மருந்துகளின் விவரங்கள் தெரியவில்லை.

### 233. விஷத்திற்குப் பேய்ச்சுரைவேர் உருண்டை

இன்னமொன்று பேய்ச்சுரைவே ராவிநீரா
லேயரைத்துண்டைகள்செய்து வைத்துக்கொண்டு
வுன்னைவிடந் தீண்டிலதுக் காவிநீரி
னுடனரைத்துக் கொள்ளுமுடம் பெங்குந்தானே
சொன்னபடி துவளையிடுவிட மெல்லம்போஞ்
சுப்ரதீ பக்குரிசில் தஞ்சையாளு
மன்னவர்க்கே சரிசரபோ சேந்திரசிந்தா
மணியுணர்ந்த பேய்ச்சுரைவே ருண்டையாமே.333

(இ-ள்) பேய்ச்சுரை வேரைக் காயவைத்து ஆவிநீர் விட்டு நன்ருகவரைத்து உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். விடந்தீண்டியவருக்கு இம்மாத்திரையில் ஒன்றை எடுத்து ஆவி நீருடன் இழைத்துப் போடவும். விஷங்கள் தீரும்.

## 234. ஸர்ப்ப விஷத்திற்கு மஞ்சளாதி மருந்து

சஞ்சலம் செய்யும் பாம்பது கடிக்கிற்
றூன்சொல் வேனுச் சிதமருந்து
மஞ்சளுங் கோஷ்டஞ் சரிநிறையாக
வாவின்பால் விட்டதைக் காய்ச்சி
யுஞ்சல தாகக் கொடுவிட மீளு
முகிதமாந் தஞ்சன்மா நகரை
விஞ்சையா யாண்டு நீதிதப் பாத
விபுவுணர் மஞ்சளின் மருந்தே. 334

(இ-ள்.) மஞ்சள் கோஷ்டம்

இவ்விரண்டையுஞ் சமனெடையெடுத்துச் சூரணித்து பசுவின் பாலுடன் போட்டுக் காய்ச்சி உட்கொள்ளவும். விஷங்கள் தீரும்.

## 235. பாம்புகடி விஷத்திற்குக் கெந்தக உருண்டை

கெந்தக மிரதந் துத்தம்வெங் காரங்
கேடிலா மஞ்சளி னோடு
மைந்துமே சரியா யரைத்துமே குன்றி
மாத்திர மாத்திரை பண்ணி
யந்தமா நிழலு லர்த்தியே வைத்து
வர்வது கடித்துவந் திடிலே
சிந்தனேவேறு செயாமலோ ருண்டை
சிறுநீரிற் கரைத்துணு தானே. 335

உண்ணுவம் மருந்து கொடுத்தபின் சிறுநீ
ருங்கொடு விடக்கடி மீளும்
பண்ணு பத்திய மூமூன்றுநாள் நன்ரும்
பாரிது கெந்தக வுண்டை
வண்ணமா மிரத கெசதுர கங்கள்
வன்மைப தாதிகள் சூழ
மண்ணலாந் தஞ்சை சரபபூ பதியு
மன்புட னுணர்விட மருந்தே. 336

(இ-ள்) சுத்திசெய்த பாதரசம்
,, நெல்லிக்காய்க் கெந்தகம்
,, துத்தம்
பொரித்த வெங்காரம் மஞ்சள்

இவைகளைச் சரியெடை எடுத்துச் சுத்தஜலம் விட்டு நன்ருக அரைத்துக் குன்றிநிகர் மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்து பத்திரப்படுத்தவும்.

பாம்பு கடித்து வந்தால் இம்மாத்திரையிலொன்றை எடுத்துச் சிறு குழந்தையின் மூத்திரம் விட்டுக் கரைத்துக் கொடுத்து, சிறுநீரும் பருகக் கொடுக்கவும். விஷங்கள் தீரும்.

**பத்தியம்:** 3 நாட்களுக்குப் புளி, புகையிலே, கைப்பு இவைகளை நீக்கிவிடவும்.

### 236. விட கடிக்கு பேய்ச்சுரை மருந்து

பாந்தளின் கடிக்கு மோர்மருந் துரைப்பேன்
பகருபேய்ச் சுரையிலைக் கொடிவேர்
சேர்த்து சமூலம ரைத்துத்தண்ணீரிற்
சேர்த்துமே வுண்டிட வுனக்கும்
வாந்தியா முடனே யெக்கடி விடமும்
வாங்கிடுஞ் சிவகிரு பையினல்
வேந்தயில் வேலான் சரபபூ பதியு
மெழிலுட னுணர்விட மருந்தே. 337

(இ-ள்.) பாந்தள் பாம்புக் கடித்தால் பேய்ச்சுரை இலையைக் கொடி, வேர் முதலானவைகளைச் சமூலமாக எடுத்துத் தண்ணீர்விட்டரைத்து உட்கொள்ளவும். வாந்தியாகும். எவ்வித பாம்புக்கடி விஷங்களுந் தீரும்.

### 237. விடக்கடிக்கு வெள்ளைக்குன்றி வேர் மருந்து

சள்ளைசெய் யரவுந் தானுனைத் தீண்டிற்
சாற்றுவே னுசிதமா மருந்து
வெள்ளையின் குன்றி வேர்வசம் பிரண்டும்
வெகுசுருக் காகவே யரைந்து
கொள்ளுமுள் ளுக்கும் நாட்டினிற் சின்னக்
கொட்டையின் பாக்கின் மாத்திர
முள்ளவக் கடியு மீண்டிடு மானு
வுணர்விட மருந்திது வாமே. 338

(இ-ள்.) வெள்ளைக்குன்றிமணிவேர் வசம்பு இவ்விரண்டையும் சமனெடுத்து நன்றாக அரைத்துச் சிறு கொட்டைப்பாக்களவு உட்கொள்ளவும். பாம்புகடி விஷங்கள் தீரும்.

### 238 விஷம், பிசாசு, காமாலை, உளமாந்தம், மயக்கம், முயலகன் முதலியவைகளுக்கு கூவிளை வேராதி உருண்டை

கூவிள வேர்பெருங் காயம்வெள் ளுள்ளி
குணமிகுங் கடுகுநாய் விட்டை
யாவதைந் திற்சரி யாய்ச்சிறு நீரி
லரைத்துண்டை செய்ததையுலர்த்தி
காவில்வாழ் வில்வ யிலைரசத் தனிலே
கண்ணினி லஞ்சன மிடவும்
போவது வியாதி வாயினின் வெருவல்
போகுங்கட் செவிவிட மதுமே. 339

விடமது மீளுங் பிசாசுசெய் ருஷ்டும்
விலகிடுங் கண்ணின்கா மாலை
ருடனுள மாந்த முயலகன் குலைப்பு
மூரதை விட்டுமோ டிடுமே

நடனம தாடிக் காளியை வென்ற
நாயகன் றில்லையம் பலவ
ருடபதம் பூசித் தருள்பெருந் தஞ்சை
யுற்பன விபுவுணர் முறையே. 340

(இ-ள்-) வில்வவேர் கடுகு
பெருங்காயம் நாய்விட்டை
வெள்ளைப்பூண்டு

இச்சரக்குகளைச் சரியெடை எடுத்துக் குழந்தையின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்துச் சிறுசிறு மாத்திரையாக உருட்டி வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது வில்வ இலைச்சாற்றில் உரைத்துக் கண்களில் அஞ்சனமாக இடவும்.

வாய் உளரல், பாம்புவிஷம், பேய்ப்பிசாசு செய்கைகள் காமாலை, உளமாந்தம், முயல்வலி முதலானவைகள் தீரும்.

## 239. விஷம், வாய்வெருவல், உளமாந்தம், பிசாசு காமாலை, மயக்கம், முயலகனுக்குப் புகை

சொல்லியவியாதிக் கோர்புகை யுள்ளித்
தோல்சரு குடனேநாய் விட்டை
வல்லதோர் பசுக்கொம் பினிற்சிராய் கடுகு
வசம்புட னேபெருங் காயந்
துல்லிய தேவ தாரம்வேப் பம்விற்
றுடன்றலை மயிறலையோடு
வில்லைபோ லெட்டிக் கொட்டை பன்னென்று
மேசரி யாகவே கூட்டே. 341

சரியதாய்க்கூட்டி நெருப்பினிற் போட்டு
தான்புகை யிடுமந்தி சந்தி
இரண்டது வேளை மூன்றுநாட் புகையை
யேபிடி விஷமும் பித்தத்தால்

வருமயக் கங்கள் பிதற்றுத லற்று
வாய்கள்பே சாதிருப் பவரே
புரந்தர நிகராய் தஞ்சைவாழ் சரப
பூபதி மானுணர் முறையே. 342

| | |
|---|---|
| (இ-ள்.) உள்ளித்தோல் | சரகு(வாழை) |
| பசுமாட்டுக் | நாய்விட்டை |
| கொம்பின்சிருய் | கடுகு |
| வசம்பு | பெருங்காயம் |
| தேவதாரம் | வேப்பங்சொட்டை |
| தலைமயிர் | எட்டிக்கொட்டை |

இவைகளைச் சரியெடை எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி இடித்து வைத்துக்கொள்ளவும். வேண்டும் போது இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்து நெருப்பில் இட்டுப் புகைக்கவும். இவ்வாறு 3 நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் கடி விஷத்தில் காட்டவும். விஷங்கள் தீரும். வாய் பிதற்றல், பேசாமலிருத்தல் முதலானவை தீரும்.

## 240. சன்னிப்பாம்பு, பேய், உளமாந்தை, முயலகன் காமாலைகளுக்கு அஞ்ஜனம்,

குப்பையின் மேனித் தோலிரு கழஞ்சு
குணமிகு வெந்தயங் கழஞ்சு
தப்பிலா செப்பு பொடியொரு கழஞ்சு
தன்னுடன் றுருசனாக் கழஞ்சு
வொப்பிலா துத்த மதுவரைக் கழஞ்சு
மோரைந்தும் புளியிலைச் சாற்றில்
மெய்ப்புட னரைத்து வுண்டைய தாக்கி
வெகுபத னங்களாய் வையே. 343

பதனமாய் வைத்துச் சன்னிக்கு மகத்திப்
பழுப்பினி லிடுவிட மதற்கு
இதமுள சாறணைச் சாற்றினி லிடுபேய்க்
கிடுகையான் றகரையின் சாற்றில்

விதனமா முளைமாந் தத்துக்கு முலைப்பால்
மீதுரைத் திடுமுய லகனுக்
கௌஷத மெலுமிச் சம்பழச் சாற்றி
லதையுரைத் திடுகண்ணிற் ருனே. 344

இடுகண்ணிற் காமா லைக்குமி நீரி
லேயிடு வாய்பிதற் றதலுக்
கிடுதும்பைச் சாற்றி லஞ்சன மிடவு
மேமுன் சொல்லிய வியாதி
யுடுபதி முன்னின் பனியெனப் பறக்கு
மோதிய முனிவர்க ளுரைத்த
படியிது தஞ்சைச் சரபபூ பதியும்
பார்த்துண ரஞ்சன மிதுவே. 345

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | குப்பைமேனித்தோல் | 2 கழஞ்சு |
| | வெந்தயம் | 2 ,, |
| | சுத்திசெய்த செப்புப்பொடி | 1 ,, |
| | சுத்திசெய்த துருசு | ½ ,, |
| | சுத்திசெய்த துத்தம் | ½ ,, |

இவைகளைப் புளியிலைச் சாற்றில் (ஒரு நாள் முழுவதும்) அரைத்து மாத்திரையாக்கவும்.

சன்னியானல் அகத்திப் பழுப்புச் சாற்றில் அஞ்ஜனம் இடவும். விஷங்களால் தீண்டப்பட்டால் சாறணைச் சாற்றிவிடவும். பேய், பிசாசுகளானல் கையாந்தகரைச் சாற்றில் இடவும். உளமாந்தைக்கு முலைப்பாலிலிடவும்.

முயலகன் வலிப்பாகில் எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்து அஞ்ஜனமிடவும்.

காமாலைக்கு உமிழ் நீரிலும், வாய் பிதற்றலுக்குத் தும்பைச்சாற்றிலும் உறைத்துப் போடவும். மேற்கூறிய நோய்கள் தீரும்.

## 241. விஷம் மண்டைக்கேறினல் "காலந்தவிழ்த்தான்" அஞ்ஜனம்

குக்கிலுந் துத்தத் துருசியுஞ் சரியாய்
கூட்டிப்பேய்த் தும்பையின் சாற்றில்
பக்குவமான கல்வம் தனிலே
பதமுட வரைத்துண்டை யாக்கி
தக்கதோர் நிழலத னிலதையு லர்த்தித்
தானதைக் கைவசப் படுத்தி
இக்குவ லயத்தில் விடமது மண்டைக்
கேறிடி னும்வகை கேளே. 346

வகையது கேளு வாதிமூ லத்தின்
வாகன மாங்கலு முனேயு
மகமதில் மினேந்து பேய்த்தும்பைச் சாற்றி
லதைச்சிறு பயறினம் மாத்திரம்
நகம்படா துரைத்து யிரண்டுகண் ணினிலும்
நாடியே போட்டிட மீளுஞ்
சகமதி லிவ்வஞ் சனமுங்கா லந்தவிழ்த்
தானெனப் பெயரது வாமே. 347

(இ-ள்.) குக்கில் சுத்திசெய்த துத்தம்
சுத்திசெய்த துருசு

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுப் பேய்த் தும்பைச்சாறுவிட்டு நன்ருக அரைத்து மாத்திரைகள் செய்து வைத்துக்கொள்ளவும். நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விஷம் தீண்டி அது மண்டைக்கு ஏறினலும் இம்மாத்திரையைப் பேய்த்தும்பைச் சாற்றில் நகம் படாமலுரைத்துச் சிறு பயறளவெடுத்து இரு கண்களிலும் இடவும். விஷம் மீளும்.

## 242. விடக்கடிக்கு மருக்காரைப் பழவுண்டை

வனமருக் காரைப் பழமுடன் வெள்ளை
வர்ணமாம் புருவினி நெச்சம்
தினிசிரண்டதுவுஞ் சரிநிறை யாகத்
தீர்க்கமாங் கறுத்தவெள் ளாட்டி
னுனிதமாம் பாலி வரைத்துமே கழற்சி
யுண்டையுஞ் செய்ததை யுலர்த்தி
நினைவுட னுருண் டதையுமே யிளவெந்
நீர்தனிற் கொண்டிடுள் ளுக்கே. 348

உள்ளத்திற் கொடுத்து மூக்கினி னசிய
முஞ்செய் நீ வெகுசுருக் காக
வுள்ளதூர் விடங்கள் விலகுமுன் மத்த
மோடிடுங் கதிர்முனின் பணிபோல்
புள்ளுவா வியதண் டலைவனஞ் சூழும்
புனிதமாந் தஞ்சைமா னகர்வாழ்
வள்ளலுஞ் சரபோ சேந்திர பூபன்
வழுத்திய கட்செவி மருந்தே. 349

(இ-ள்.) காட்டு மருக்காரைப்பழம்
வெள்ளை நிறமுள்ள புருவின் எச்சம்

ஆக இவ்விரண்டையும் சமனெடுத்துக் கறுப்பு நிறம் உள்ள வெள்ளாட்டுப் பாலில் விட்டு நன்ருக அரைத்துக் கழற்சிப் பிரமாணமுள்ள உருண்டைகளாக உருட்டி பத்திரப் படுத்தவும்.

விஷந்தீண்டினுல் இம்மாத்திரையிலொன்றை எடுத்து வெதுவெதுப்பான வெந்நீருடன் உள்ளுக்குக் கொடுக்கவும். இதையே நஸ்யமும் இடவும். விஷங்கள் பைத்தியம் முதலானவை நீங்கும்.

### 243. விடக்கடி, வீக்கத்திற்கு உப்பிலி வேர்ப்பூச்சு

உப்பிலி வேருங் கிளாமர வித்து
முள்ளியும் வசம்பிவை நாலு
மொப்பிலா யெலுமிச் சம்பழச் சாற்றி
லுறுமையா கவுமதை யரைத்து
யெப்படிப் பட்ட விடகடி வீக்க
மெங்கிருந் தாலுமே யங்கே
தப்பவிடாமற் பூசிடக் குணமாந்
தஞ்சையின் மானுவிந் பூச்சே. 350

| | |
|---|---|
| (இ-ள்.) உப்பிலாங்கொடிவேர் | கிளாமரத்தின் வித்து |
| பூண்டு | வசம்பு |

இச்சரக்குகளை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்து விடம் தீண்டிய வீக்கம் எங்கிருந்தாலும் அங்கு பூசிவிடவும்.

### 244. கொம்பேறி மூக்கனுக்கு அவுரியாதி நஸ்யம்

அவுரியி னிலையு முருவியி னிலையு
மதுயிரண் டையுஞ்சரி நறுக்கிக்
கவனமாய்ச் சாற்றைக் கொம்பேறி மூக்கன்
கடித்திடி லுடனசி யஞ்செய்
தவடிடா மலுங்கடி விடமது மீளுஞ்
சார்பிலேர் ருரைத்திடும் மருந்தை
யவனியை யாளுஞ் சரபபூ பதியு
மன்புட னுணர்நசி யம்மே. 351

| | |
|---|---|
| (இ-ள்.) அவுரியிலை | நாயுருவியிலை |

இரண்டையுஞ் சமனெடுத்து நறுக்கிச் சாறுபிழிந்து கொம்பேறி மூக்கன் கடித்த நோயாளியின் மூக்கிலிட்டு ஊதவும். பாம்புகடி விஷங்கள் தீரும்.

### 245. விடக்கடி, தேள், நண்டுவாக்கலிக்கு மூஞ்சூறு எண்ணெய்

ஒருபடி வேப்பெண் ணெயி லொரு பிடியுப்
பொருபிடி யரப்புமே போட்டு
வொருநல மூஞ்சு றடித்துமே பிச்சு
மந்தயெண் ணெய்தனிற் போட்டு
மருத்தொரு வோட்டால் மூடிமண் செய்து
வைபுடம் பூமியிற் ருனே
அரவது கடித்து வருமவனுக்கு
மன்புடன் பணவெடை கொடுமே. 352

கொடுவொரு பணவி னெடையெண்ணெய் தனிலே
குணமதா மரவதின் கடியின்
விடமறு நண்டு வாக்கலி தேளு
மேவியே கொட்டிடி லதற்குந்
திடமுள யெண்ணெ யரைப்பண வெடையீ
தேள்நண்டு வாக்கலி கடித்த
கடிவிட மதுக்கா மெனச்சர பேந்திரன்
கருத்துட னிச்சயித் ததுவே. 353

(இ-ள்.) ஒருபடி வேப்பெண்ணெயில் ஒருபிடி உப்பும் ஒருபிடி அரப்பும் இட்டு அதனுடன் ஒரு மூஞ்சூறை அடித்துப்போட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்குத் தக்கபடி சில் இட்டுச் சீலேமண் செய்து பூமிக்குள் புதைத்து வைத்து விடவும்.

இந்த எண்ணெயில் ஒரு பணவெடையெடுத்துப் பாம்பு கடித்து வந்தவனுக்குக் கொடுக்கவும்.

தேள், நண்டுவாக்கலி முதலியவை கொட்டி வருபவனுக்கு இதில் ½ பணவெடையெடுத்துக் கொடுக்கவும். குணமாகும்.

### 246. பாம்பு கடிக்குச் சுக்குப் பொடி நஸ்யம்

சக்கரி கடித்துத் தலையதுக் கேறிற்
றான் சொல்வேன் சுக்குடனசியஞ்
சுக்கதைக் கொணர்ந்து கத்தியினாலே
தோலையும் போக்கியே நறுக்கித்
தக்கதோர் கொடியின் கள்ளிநற் பாலிற்
றனொரு மாதமு மூற
வைக்கவ னமதா யெடுத்ததை நிழலில்
வைத்துலர்த் திடுமதன் பிறகே 354

அதின்பிற கெருக்கம் பாலிலோர் மாத
மப்படி யூறவே வைத்துப்
பதனமா யெடுத்து முன்புபோ லுலர்த்திப்
பண்புள கல்வமீ தரைத்து
யிதமுடன் வத்திர காயமும் பண்ணி
யேயதை மூங்கிலின் குழலில்
அதையுமே பதனம் பண்ணியும் வைத்து
மப்புறஞ் செய்வகை கேளே. 355

வகையது கேளு விடமது கடித்து
வந்தவர் தமையகு கழைந்து
குகையுள கொருக்கால் குழையதில் மாடைக்
கூறிய சூரணம் வைத்துச்
சிகையினி லேற மூக்கினில் வைத்தட்
சணத்தினி லூதிட விடமும்
பகலவன் முன்னே பனியெனப் பறக்கும்
பாரிது விபுசொலு முறையே. 356

(இ-ள்.) சுக்கைக் கொண்டுவந்து கத்தியினால் அதன் தோலைச் சீவிப் பின்பு சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொடிக்கள்ளிப்பாலில் ஒரு மாதம் ஊறவைக்கவும். பின்னர் சுக்குத் துண்டுகளை நிழலில் உலர்த்தவும்.

இம்மாதிரி எருக்கம்பாலில் ஒரு மாதம் ஊறவைத்து எடுத்து, நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து மூங்கில் குழலில அடைத்து வைத்துக்கொள்ளவும்.

பாம்பு விஷம் தீண்டப்பட்டவனை அருகில் அழைத்து இச்சூரணத்தில் ½ வராகனெடையளவு ஒரு கொருக்காத் தட்டைக் குழாய்க்குள்ளிட்டு மூக்கில் வைத்து ஊதிவிடவும்.

### 247, விடம் மண்டைக்கேறினால் பிர்மரந்திரத்தில் தேய்க்க

இரதமு மயில்துத் தமும்நல மாமனோ
சிலைநிர் விஷமுடன் கெந்தி
அரிதாரம் பால்துத் தமும் வெள்ளை யின்பா
ஷாணமுங் கௌரிபா ஷாண
முறைவகை யானயொன் பதுமா டையொன்
றுமே யெடுத்தெலுமிச்ச
முருபழச் சாற்றி னுலுநா ழிகையு
முறுதியா யுரைத்திடு தானே. 357

அரைத்தபின் குப்பை மேனியின் சாற்றி
லரைத்திடு விரண்டுநா ழிகையும்
வுரைத்திடு முண்டை பணிநிழ லுலர்த்தி
யுறுதியாய்க் கைவசப் படுத்தி
சிரத்தினில் விடமு மேறிடிற் பிரமரந்
திரந்தனிற் கீரியோருண்டை
வருத்தமாற் றேய்க்க யேறின விடமும்
வாங்கிடு மிதுவிபு வுரையே. 358

(இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | வெள்ளைப்பாஷாணம் | சுத்திசெய்த | தாளகம் |
| ,, | பாதரஸம் | ,, | மனோசிலை |
| ,, | கௌரிபாஷாணம் | ,, | நிர்விஷம் |
| ,, | பால்துத்தம் | ,, | மயில் |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | ,, | [துத்தம் |

இவைகளை வகைக்கு ½ வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 4 நாழிகை நன்ருகவரைத்துக் காயவைத்து மறுபடியும் குப்பைமேனிச் சாறுவிட்டு 2 நாழிகை அரைத்து மிளகளவுள்ள மாத்திரை களாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

விடந் தீண்டியவனின் தலையில் குடோரியிட்டு ஒரு மாத்திரையைத் தூள்செய்து நன்ருகத் தேய்க்கவும். விஷம் இறங்கும்.

### 248. பாம்பு கடிக்குத் திப்பிலியாதி மருந்து

திப்பிலி மிளகு தேன்றயிர் வெண்ணெய்
செங்கழு நீர்சுக்கு கோஷ்டந்
தப்பிலா விந்துப் புடனேயொன் பதுவுஞ்
சரிநிறை யாகவே யரைத்து
வொப்புடன் கொள்ளு மரவதின் கடியு
மோடிடுஞ் சிவகிரு பையினுல்
அற்புதத் தஞ்சை விபுசர பேந்திர
னனுமதி யாமிந்ந முறையே. 359

(இ-ள்.) திப்பிலி செங்கழுநீர்க் கிழங்கு
மிளகு சுக்கு
தேன் கோஷ்டம்
தயிர் இந்துப்பு
வெண்ணெய்

இவைகளைச் சரியெடை யெடுத்து நன்ருகவரைத்து உட் கொள்ளப் பாம்புகடி தீரும்.

### 249 பாம்பு கடிக்கு மிளகு அஞ்ஜனம், நஸ்ய மருந்து

வாகையின் பூச்சாற் றினில்வெள்ளை மிளகு
வளமுட னெவ்வொரு நாளைக்
கேகவ னத்தோ டுறவும் வைத்துக்
கிளறியே விட்டதை யெடுத்துச்

சாகமா நிழ லுலர்த்தியிப் படியே
தாளெரு யெழுவிசை தானும்
வாகுடன் முன்சொற் படியதை யுலர்த்தி
வைத்திடு கைவசந் தானே. 36)

வசமதில் வைத்துப் பாம்பது கடித்து
வந்திடு பவர்க்குமிம் மிளகை
யிசைவுள கண்ணி லஞ்சனஞ் செய்மூக்
கினிலிந்த மிளகைத் தானே
நசியமுஞ் செய்துள் ளுக்குமே கொள்ளு
நல்லபாம் பினின்விடந் தீருஞ்
சசியணி பரம சிவனருள் பெற்ற
சரபபூ பதியுரை யிதுவே. 361

(இ-ள்.) வாகைப்பூச் சாற்றில் வெள்ளைமிளகை முழுகும்படி போட்டுவைக்கவும். இவ்வாறு தினந்தோறும் கிண்டிக்கொண்டே வரவேண்டும். சாறுவற்றிய பின்னர் மிளகை நன்ருக நிழலில் உலர்த்தவும். மறுபடியும் வாகைப் பூச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தவும். இவ்வாறு 7 தடவைகள் செய்யவும்.

இம்மிளகைத் தண்ணீரிலிழைத்துப் பாம்பு கடியுண்டவனின் கண்களில் அஞ்ஜனமாக இடவும். இம்மிளகைச் சூரணித்து மூக்கிலும் நஸ்யமாக இடவும். நல்லபாம்பின் விஷம் தீரும்.

### 250. பாம்பு கடிக்கு கிரந்தி தகர மருந்து

கிரந்தியின் றகரம் பலமது வொன்று
கேடிலா கோட்டமும் பலமொன்
றிரண்டையுந் தேனி லரைத்துமே கொள்ள
யிடர்செயுந் தட்சகன் ருனு
முரண்டுசெய் ததுவுங் கடிக்கினு மீளு
முனிவர்க ளோதிய மருந்தைத்

திரண்டழ குள்ள சரபபூ பதியுஞ்
செப்பிய கடிவிட மருந்தே. 362

(இ-ள்.) உயர்ந்த கோஷ்டம் 1 பலம்
கிரந்தி நகரம் 1 பலம்

இவ்விரண்டையும் இடித்து கல்வத்திலிட்டுத் தேனில் குழைத்து உட்கொள்ளவும். பாம்பு கடிகள் தீரும்.

## 251. விடக்கடிக்குப் பொன்முசுட்டை மருந்து

பொன்முசுட் டையின்சா றன்னிலேயந்தப்
மொன்முசுட் டையினுட வேரை
யன்புட னரைத்துக் குழப்பியே கொள்ளு
யந்தபொன் முசுட்டையின் மருந்தை
சின்மய மான சிவகிரு பையினுற்
றீந்திடும் பாம்புட விடமுந்
தன்மமே மிகுந்த தஞ்சைவாழ் சரபச்
சக்கிர வர்த்திதன் முறையே. 363

(இ-ள்.) பொன்முசுட்டைச் சாற்றில் பொன்முசுட்டை வேரை அரைத்துச் குழப்பி உட்கொள்ளப் பாம்பு விஷம் தீரும்.

## 252. விடக்கடிக்கு, சன்னிபாதத்திற்குச் சுக்கு அஞ்ஜனம்

சுக்குமேற் புறணி வீசியே போட்டு
தூயசெவ் வாய்க்கிழ மையிலே
பக்குவச் சதிரக் கள்ளியில் வைத்துப்
பத்துநாள் சென்றபின் னெடுத்து
தக்கதோர் நிழலு லர்த்தியே முலேப்பா
டன்னிலே யுரைத்துமே கண்ணி
னுக்குள்ளே போடு சன்னிபா தங்க
ளொடுவர வின்கடி யறுமே 364

(இ-ள்.) சுக்கின் மேல்தோலை நீக்கிவிட்டு, சதுரக்கள்ளி யின் கட்டையில் துவாரமிட்டுச் செவ்வாய்க்கிழமையன்று உள்ளே வைக்கவும். சதுரக்கள்ளிக் கட்டையினுலேயே ஆப்பிடவும் 10 நாட்கள் சென்றபின்பு அதையெடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் இழைத் துக் கண்களில் இடவும்.

பாம்புக்கடி விஷம் சன்னிபாதம் முதலானவை தீரும்.

### 253. விடக்கடிக்கு

பாம்பது கடிக்கிற் காட்டினிற் பச்சைப்
பாம்பையு மடித்ததை யுலர்த்தி
நாம்புகல் படிபேய்ப் பீர்க்கம்வே ரிரண்டு
நலமுடன் றூளது செய்து
மேர்படு சீரை வடியது கொண்டு
மேபிளம் பிடிமதி யாரி
தீம்பிலா மூக்கி லேத்திட விடமுந்
தீர்ந்திடு மிதுவிபு வுரையே. 365

(இ-ள்.) பச்சைப் பாம்பை அடித்து சிறு சிறு துண்டு களாக்கி நன்ருக உலரப்போடவும். இதற்குச் சரியளவு பேய்ப்பீர்க்கம் வேரைக் கொண்டுவந்து காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து சேர்த்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் ($\frac{1}{2}$ வராகனெடை எடுத்து) நஸ்யமிடவும்.

### 254. விடக்கடிக்கு

காட்டினின் முருங்கைத் தலைச்சுடு வள்ளி
கள்ளிநன் முருங்கைவெட் பாலை
நாட்டினின் வேம்புஞ் சிறுகுறிஞ்சாவும்
நல்லவெள் ளறுகுகாய் வேளை
வாட்டமில் சிறுகாஞ் சோறியுட னழிஞ்சில்
வரிக்கோவைக் கிழங்குவச் கணைவேர்
வேட்டினின் குப்பை மேனியும் நல்ல
மிளகுசா றணையுமே கூட்டே. 366

கூட்டிடு வாடுதின் ருதபா ளேயும்நற்
குணமருக் காரையும் பதினேழ்
தாட்டிக வேரு மோர்கிழங் குடனே
சரிபதி னெட்டுள வகைகள்
கூட்டியே சரியாய் தூள்செய்து வடியுங்
கொண்டுவுன் கைவசப்படுத்தி
ஆட்டர வங்க ளதுகடித் திடலே
வப்பழங் காடியிற் ருனே. 367

காடியிலாவ தல்லது தண்ணீர்
கலக்கியே கொடுவிட மீளுந்
தேடுயித் தூளை யற்பிசி மாதஞ்
சேர்ந்தவா தித்தவா ரத்தில்
நாடிய குறுவை யரிசியும் பொங்கி
நளிவுடன் கொதிக்குமப் போது
போடதிற் றூளை வெருகடி தானும்
பொங்கியே யிறக்கிடு வாயே. 368

பொங்கியே சோற்றைப் பசுவினெய் வெல்லம்
போட்டதைப் புசியெட்டு நாளும்
வங்கண மாகக் காலையிற்ருனே
வாழியி னுப்புடன் புளிப்புஞ்
சங்கட மான புகையிலை தள்ளுச்
சரமுனைக் கடித்திடு பாம்பும்
பங்கமாய் புதுபழங் கடியது மீளும்
பாரதை யாள்விபு வுரையே. 369

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | காட்டு முருங்கை | தலைச்சுடுவள்ளி |
| | கள்ளி | முருங்கை |
| | வெட்பாலை | வேம்பு |
| | சிறுகுறிஞ்சா | வெள்ளறுகு |
| | காய்வேளை | சிறுகாஞ்சோறி |
| | அழிஞ்சில் | வரிக்கோவைக்கிழங்கு |
| | வக்கணைவேர் | குப்பைமேனி |

| | |
|---|---|
| சாறணைக்கிழங்கு | ஆடுதீண்டாப்பாளை |
| மருக்காரை | மிளகு |

முதலான சரக்குகளைச் சிறுசிறு துண்டுகளாக்கி நிழலில் உலர்த்திக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு பத்திரப்படுத்தவும். பாம்பு கடித்து வந்தால் இச்சூரணத்தில் சுமார் ½ பலமளவெடுத்து நாட்சென்ற காடியிலோ அல்லது தண்ணீரிலோ உட்கொள்ளக் கொடுக்கவும். பாம்பு, மற்ற விஷ ஜந்துக்களோ கடித்து நாட்பட்ட விஷமானால்,

ஐப்பசி மாதம் ஞாயிற்றுக்கிழமையன்று குறுவை அரிசியை உலையிலிட்டுக் கொதிக்கும்போது அதனுடன் மூவிரல் கொள்ளும் அளவு இச்சூரணத்தைப் போட்டு இறக்கவும். இச்சோற்றைப் பசுநெய், வெல்லம் முதலியவைகளைச் சேர்த்து 8 நாட்கள் இவ்வாறே சாப்பிடவும். காலை வேளையில் சாப்பிட நல்லது.

**பத்தியம்:** உப்பு, புளிப்பு, புகையிலை முதலானவைகளை நீக்கவும்.

## 255. விடக்கடிக்கு நெய்கொட்டான்பழ மருந்து

அடவினெய்க் கொட்டான் பழமது பத்து
மதுடன்வா ளம்விரை பத்துந்
திடமுடனிரண்டை வேப்பெண்ணெய் தனிலே
சேர்த்தரை மையது போல
கடமுள விருப்புச் சிமிழிலே வைத்துக்
கையினிற் பத்திரப் படுத்தி
விடமது தீண்டி லொருபயறு மாத்திர
மேகொடுத் திடுமுண்ணத் தானே. 370

உண்ணிடி லதற்கு முகத்தினி லனத்த
லும்வரில் மருந்ததை நிறுத்து
அன்றுபோய் மறுநாள் சூடதா யிருந்தா
லன்புள பச்சையின் பயறும்

நண்ணிய பச்சை யரிசியும் பாலும்
நட்புள கஞ்சிகாய்ச் சியுங்கொ
ளுண்ணிய சூடு மிலாதிருந் திடிலே
வொருபிர யோகஞ்சொல் வேனே. 371

சொல்லுவேன் காட்டி லாவரந் தழையைத்
துவைத்ததிற் வண்ணிய யூத்தி
வல்லப மாயொரு சீரதாய்த் தண்ணீர்
வார்த்துமே கொடுகுண மாகும்
பல்லிய முழங்கக் கசமதி லேறிப்
பவனிவந் திடுசர பேந்திரன்
தொல்லுல கத்தொர்க் காகவே யுணர்ந்து
தொகுத்துரைத் திடுமருந் தாமே. 372

(இ-ள்.) நெய்கொட்டான் பழம் (பூவந்தி) 10
சுத்திசெய்த நேர்வாள விதை 10

இவ்விரண்டையும் வேப்பெண்ணெய் விட்டு மெழு போலரைத்து ஒரு இரும்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

விஷந் தீண்டி வந்தவர்களுக்கு இதில் ஒரு பயறளவு எடுத்து உட்கொள்ளக் கொடுக்கவும். உடம்பில் அனத்தல் கண்டால் மருந்தை நிறுத்தவும். அன்றுபோய் மறுநாளும் அனத்தல் இருந்தால் பச்சைப்பயறு, பச்சரிசி, பசுவின் பால் இவைகளைக் கூட்டிக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மறுநாளும் இருந்தால், காட்டு ஆவாரந்தழையை தண்ணீர் சேர்த்து இடித்துப் பிழிந்த சாறுடன் தண்ணீர் சேர்த்துக் கொடுத்தால் அனத்தல் நின்றுவிடும்.

குறிப்பு : இம்மருந்து பேதியாகும் குணமுள்ளது.

## 256. விடக்கடிக்குச் சிறுநீர் மருந்து

அரவது கடிக்கி லதற்கொரு மருந்து
வன்புட னேதவுங் கேளு
பரவையி னுப்போர் சிறங்கையு மெடுத்து
பாவையர் காண்சிறு நீரில்

புருட னு மெனிலே பெண்சிறு நீரிற்
போட்டந்த வுப்பைத் தானே
கருவுடன் மூன்று விசைவடிக் கட்டிக்
கடுகவே கொடுவிட மறுமே. 373

(இ-ள்.) இந்துப்பை ஸ்திரீயின் மூத்திரத்தில் கரைத்து மூன்றுதடவை வடிகட்டிக் கொடுக்கவும். இம்மருந்தைப் புருடனுக்குக் கொடுக்கவும். பாம்பு கடிகள் தீரும். ஸ்திரீ களுக்காகில் புருடன் மூத்திரத்தில் கொடுக்கவும்.

## 257. பாம்பு விடத்திற்குத் தேரன் பாடல்

கரியமிளகு பெருங்காயம்
கழலார் குன்றிக் கழலரிசி
அரிய சலத்து நீர் வார்த்து
வனிய மூக்கி லிடுவீராய்
பெரிய கழலுங் கருநாகம்
பேணுமூக்கன் மற்றுமுள்ள
அரிய விஷங்கள் தீராதாகில்
யானுந் தேர னல்லேனே. 374

(இ-ள்.) கரியமிளகு பெருங்காயம்
குன்றிப்பருப்பு கழற்கொடிப்பருப்பு

இவைகளைத் தண்ணீர் விட்டு நன்முக இழைத்து மூக்கில் நஸ்யம் இடவும். கருநாகம் பேணுமூக்கன் முதலான விஷங்கள் தீரும்.

## 258. கண்ணீற் புழுவெட்டுக்கு அஞ்ஜனம்

புதுமை யாஞ்சட்டி யினிலெருக் கம்பால்
போதவுந் தடவிவைத் துலர்த்தி
யதனிலேறிருநா மப்பாலைப் பாலை
யன்புடன் தடவிப்பின் புலர்த்தி

யிதமுள பசுவின் நெய்யதிற் விளக்கை
யேத்திச் சட்டிமைப் பற்றும்
பதமறிந் தெடுத்துமை யதையெடுத்துப்பால்
செயும் வகையது நீகேளே. 375

வகையது துத்த மிரண்டுபங் கெடுபின்
வளமுள துருசுவோர் பங்குந்
துகையுடன் கூட்டி நெய்யினி லரைத்து
தொகுத்துவைத் திடுசிமி ழதனில்
அகமகிழ் கண்ணிலஞ் சாறுநாட் போட
வக்கண்ணிற் புழுவெட்டு மாறிச்
சுகமதா யுதிர்ந்த மயிரது முளைக்குந்
துரைசர பேந்திர னருளே. 376

(இ-ள்.) ஒரு புது வாணயில் எருக்கம்பாலைத் தடவி உலர்த்தவும். பின்னர் திருநாமப்பாலையின் பாலை அதன் மேல் தடவவும். நன்கு காய்ந்தபின்,

மூன்று செங்கற் கற்களை அடுப்புபோல் அடுக்கி அதன் மேல் பால் தடவிய சட்டியைக் கவிழ்த்து அதற்குள் நெய் விளக்கு வைக்கவும். சுமார் 3 மணி நேரம் விளக்கை வைத்து மைப்பற்ற வைக்கவும். பின்பு ஒரு மூங்கிற்சிம்பால் ஒட்டியிருக்கும் கரியைச் சுரண்டி எடுத்து இரு மடங்கு துத்தம், துருசு ஒரு பங்கும் இட்டு நெய்விட்டுக் குழைத்து ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இம்மையைக் கண்களில் ஐந்தாறு நாட்கள் போட்டுக் கொண்டுவரப் புழு வெட்டினால் உதிர்ந்த மயிர் முளைக்கும். புழுவெட்டும் தீரும்.

## 259. தலையில், கண்ணில் புழுவெட்டுக்கு மை

மெல்லிய சீலையிற் வெள்ளெருக் கம்பால்
விட்டதைப் புளிச்சிராய் போட்டு
வல்லப மாய்ச்சுட் டதைப்பசு வெண்ணெய்
வளமுடன் கலந்ததை வைத்து

நல்லநற் கையாந் தகரையின் சாற்றை
நாடியதோர் புதிதுளச் சட்டி
யில்லதைத் தடவி நெய்யினில் மையை
யேத்தியே யெடுத்திடு வாயே. 377

எடுத்து முன்சொன்ன மையையு மிதையு
மெலுமிச்சம் பழத்துட சாற்றை
விடுத்தரைத் ததனை பின்புமே நல்ல
வெங்கலக் களிம்பினி லரைத்து
வடைத்திடு சிமிழிற் றலையினிற் கண்ணி
லடவிலாப் புழுவெட்டு மிருந்தால்
வடிப்பமாய்ப் போடுப் புழுவெட்டுப் போகு
மயிரது வளர்ந்திடுந் தானே. 378

(இ-ள்.) ஒரு மெல்லிய துணியை எடுத்து அதில் வெள்ளெருக்கம்பாலைத் துவைத்துக் காயவைத்துப் புளியஞ்சிராய்த் தணலிட்டுக் கரியாக்கவும். அதைப்பசுவின் வெண்ணெயுடன் குழைத்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியில் கையாந்தகரைச் சாற்றைத்தடவிக் காயவைத்து, அதில் நெய்விளக்கேற்றி மைப்பற்ற வைக்கவும். பின்னர் இக்கரியைச் சுரண்டி இதனுடன் முன் சொன்ன மருந்தையுஞ் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு வெங்கலப் பாத்திரத்தில் நன்கு களிம்பேறும் வண்ணம் அரைக்கவும். இக்களிம்பைப் பத்திரப்படுத்தித் தலையிலோ அல்லது கண்ணிலோ ஏற்படும் புழுவெட்டிற்குத் தடவவும். புழுவெட்டுகள் தீரும். மயிரும் வளரும்.

### 260. புழு வெட்டிற்கு

தலையினிற் கண்ணில் மயிர்புழு வெட்டுத்
தானிருந் திடிலந்த விடத்தி
லிலவுமுள் ளிட்டுக் கீறிக்கோ ரோசனை
யுறுதியாய் மூன்றுநாட் டேய்க்க

பலமுறு மயிரும் வளருமப்புழுவும்
பற்றஞ் செல்வமு மிகுந்த
நலம்பெருந் தஞ்சை சரபபூ பால
னன்புட னுணர்மருந் தாமே. 379

(இ-ள்.) தலையில் அல்லது கண்ணில் புழுவெட்டு இருந்தால் அந்த இடத்தை இலவு முள்ளினால் கீறிக் கோரோசனையைத் தூள்செய்து தேய்க்கவும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும். மயிர் வளரும், புழுவுஞ்சாகும்.

## 261. தலையில், கண்ணில் புழுவெட்டுக்குத் துத்தமை

துத்தமுந் துருசு சரிசம னெடுத்
துரிதமா யிளவறுப் பாக
இத்தையும் வறுத்துப் பொடிசெய்து வாப்பா
லினும்பச்சைப் பாலினிற் போட்டு
சத்துவ மாகக் கடைந்த வெண் ணெயுமே
தானெடுத் தேசெம்பு தன்னால்
வைத்தே யரைத்ததை யுமேகுழம் பாக்கி
வழித்தொரு சிமிழினில் வையே. 380

சிமிழினில் வைத்த மையதை யெடுத்துத்
தினமந்தி சந்தியுந்தானே
அமைபுழு வெட்டி னால்மயி ருதிர்த
லக்கண்ணின் புழுவெட்டுத் தினவு
மிமைமயி ருதிர்த லிதுவெலாந் தீரு
மிடுமூன்று நாலுநா டனக்கு
செமிபிற வளையம் போடிதைத் தானே
தீர்ந்திடும் புழுவதின் வெட்டே. 381

(இ-ள்.) துத்தம், துருசு இவ்விரண்டையுஞ் சரிசம னெடுத்து பொன்வறுவலாக வறுத்துப் பொடிசெய்து பசுவின்பாலில் போட்டு அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து ஒரு செப்புப் பாத்திரத்தில் இட்டுக் குழம்பாக்கி

ஒரு சிமிழில் பத்திரப்படுத்தித் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் புழுவெட்டில் போடவும்.

அரிப்பு, மயிர் உதிர்தல் முதலானவை தீரும். 3 அல்லது 4 நாட்கள் பிறவளையம் இடவும். புழு வெட்டுகள் தீரும்.

### 262 கண்டமாலை, வண்டுக்கடி, பித்தம், வாயு இவைகளுக்கு வேப்பநாக்கு மருந்து

தண்டபாணி யிநல் வேப்பநாக் கதனைத்
தான்கொளு பத்துநா டனக்கு
கண்டமா லைகளு மறுமுடம் பெங்குங்
கதித்துமே படர்ந்திடும் பொல்லா
வண்டுடகடியு முதிர்ந்திடும் பித்தம்
வாய்வறு மிதுசித்தர் மூலி
கொண்டிடுந் தஞ்சை வாழ்சர பேந்திரன்
குணமுட னுணர்மருந் திதுவே. 382

(இ-ள்.) வேப்பம் நாக்கை (ஈர்க்கு) 10 நாட்களுக்கு விடாமல் உட்கொள்ளக் கண்டமாலை, உடம்பு வீக்கம் வண்டுகடிகள், பித்தம், வாயு முதலான நோய்கள் நீங்கும்.

### 263. வண்டுகடி செய்யான் கடிக்குப் பாலொடுவிவேர் மருந்து

பாலொடு வியின்வே ரரைத்தொரு சின்னப்
பாக்கள விளவெந்நீர் தனிலே
சாலவேமூன்று நாளந்தி சந்தி
தான்கொளு முப்பிலாப் பத்திய
மோலஞ்செய் வண்டு கடிசெய்யான் கடியு
மோடிடுங் கைகண்ட முறையை
ஞாலம தாளுஞ் சரப பூபால
நட்புட னுணர் மருந் திதுவே. 383

(இ-ள்.) பாலொடுவியின் வேரையரைத்து ஒரு சிறிய பாக்களவெடுத்து வெந்நீருடன் காலையிலும் மாலையிலுமாக 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம் :** உப்புச்சேர்க்காமல் பத்தியமாயிருக்கவும். வண்டுகடி, செய்யான்கடி இவைகள் தீரும்.

### 264. வண்டுகடிக்குத் தகரை விரைப்பூச்சு

தகரைவிரை பலமொன்று யெருமையின்மோ
    ரிலூறத் தானே வைத்துற்
றகுமுள்ளி மிளகுமா லாத்திக்கர்ப்பூ
    ரமுடனே தானே மூன்றும்
வகையொன்றுக் கோர்காசி னெடையதிற்பா
    தியுங்கூட்டு வசம்பு தானும்
புகலுமிதெ லாமரைத்து யெருமையுட
    புளிமோரிற் போட்டிடாயே. 384

போட்டுமதைக் குழப்புவண்டு கடிகண்ட
    விடந்தனிலே பூசுமூன்று
நாட்டனக்கு நிராத்திரிக்கும் பூசியரப்
    பிட்டுக்குளி நலமாமந்த
வாட்டுமரிப் புந்தீர்த்து கடிபடரு
    விடமெல்லாம் வாங்கிப் போகுந்
தாட்டிகமாந் தஞ்சைசர பேந்திர ணுணர்
    வண்டுகடி தன்பூச் சாமே. 385

(இ-ள்.) தகரைவிரை 1 பலம் எடுத்து எருமைமோர் விட்டூறவைத்து,

உள்ளிப்பூண்டு    கற்பூரம்
மிளகு

இம்மூன்றும் வகைக்கு ஒரு காசெடை

வசம்பு $\frac{1}{2}$ கா்செடை

இவைகளையும் புளித்த எருமைத் தயிரில் அரைத்துக் குழப்பி வண்டு கடியிருக்கும் இடத்தில் பூசவும். 3 நாட்கள் பகலிலும் இரவிலும் பூசி அரப்புத் தேய்த்துக் குளிக்கவும். அரிப்புகள் கடி முதலானவை நீங்கும்.

### 265. வண்டுகடிக்கு அவுரிப் பூச்சு மருந்து

அவுரி குப்பைமேனி சிறுகாஞ் சோறியும்
வேளையி லையது டன்கூட
நவநா யுருவி சமூலமும் வேப்பங்
கொட்டை யுடனற் கடுக்கா
யிவையே முஞ்சமன் கூட்டித்தண் ணீர்விட்
டரைத்துளுக் குமேகொள் மேலுங்
கவன முடன் பூசிரவிதனி லிந்து
சாய ரகைஷகண் டவாறே. 386

கண்ட வாறே யெருமைச் சாணி
யிட்டுக் குளித்துவிடு கசடதான
வண்டுகடி மூன்று நாளதிற் றீருங்
கசப்பே யென்றுமா காமல்தா
னுண்டிடு வாய்வு பதார்த்தங்க ளொன்றுங்
கூட்டா தேயுசித மான்
தண்டரணி யாளு மெங்கள் துரைசர
பேநதிர னுணர்ந்த தானிதாமே. 387

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | அவுரி | குப்பைமேனி |
| | வேளையிலை | சிறுகாஞ்சொறிவேர் |
| | நாயுருவி சமூலம் | வேப்பங்கொட்டை |
| | கடுக்காய்த்தோல் | |

இவைகளைச் சமனெடை யெடுத்துத் தண்ணீர் விட்டரைத்து உட்கொண்டு, கடிவாயின் மேலேயும், உடம்பிலும் பூசிக்கொண்டு வெயிலில் இருந்து அன்று சாயங்

காலம் எருமைச்சாணி தேய்த்துக்கொண்டு குளித்துவிடவும். 3 நாட்களுள் வண்டு கடிகள் தீரும்.

**பத்தியம் :—** கசப்புப் பதார்த்தங்களை நீக்கிவிடவும். வாயுவை அதிகரிக்கச் செய்யும் பதார்த்தங்களையும் தள்ளவும்.

## 266. வண்டுகடிக்குத் தினையரிசியுய்யல்

துடியான மருள்நூறு கொண்டுவந்து
மேயதையுந் துவைத்த சாறு
வடிகொண்டு விலைவைத்து வொருசேரை
தினையரிசி வளமாய்ப் போட்டிப்
படிபொங்கித் தினயைுய்யல் மூன்றுநா
டிண்ணிதற்குப் பத்தியங் கேள்
கடலுப்புப் புளிப்புகையி னிலைபாக்கு
வெத்திலையுங் கண் பாராதே. 388

பாராதே மூன்றுநா டனக்குமறு
பத்தியமும் பண்ணிதற்குத்
தூறுசெயும் வண்டுகடி சறகுதிர்ந்தாப்
போலுதிருஞ் சுயம்பிரகாச
நேரான பரமசிவன் கிருபையினா
லுலகாளும் நிருபன் வெற்றித்
தாருலவுங் குலவுபுஜன் சரபோசி
ராசேந்திரன் றனுரை தானே. 389

(இ-ள்) மருள் சமூலம் 100 கொடுத்து அவைகளை இடித்துப் பிழிந்த சாற்றை வடிகட்டி ஒரு வாணாயில் விட்டு அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து அதில் தினையரிசி ஒரு சேரை (உள்ளங்கை கொள்ளும் அளவு) போட்டுப் பொங்கல் செய்யவும். இதனை 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம் :—** கடலுப்பு, புளி, புகையிலை, வெத்திலை பாக்கு முதலியவை ஒன்றுங்கூடாது. மறுமூன்று நாட்களும் இவ்வாறே இருக்கவும் வண்டுகடிகள் உதிர்ந்துவிடும்.

### 267. வண்டுகடிக்குத் தகரைவிதைப் பூச்சு

தகரை விதை யரைப்படியை யெருக்கம்பா
லிநனையத் தானேபோட்டு
பகலிலெடுத் ததைநிழலி லுலர்த்திநிலா
வாரைதனைப் பார்சமூலம்
வகையுடனே துவைத்துவந்தச் சாறதனிலூ
றப்போட்டு மருகாலுந்தான்
றகைவுடனே நிழலுலர்த்தி யேகையாந்
தகரைச்சாற் தனிலேபோடே. 390

போட்டுமதை மறுபடியு மெடுத்துநிழ
லுவர்த்தியிதன் பிறகுதானே
வாட்டமிலா யெலுமிச்சம் பழச்சாறு
விட்டுகல்வ மதில்மைப் போலே
போட்டியரைத் ததைவண்டு கடிபடர்ந்த
தினவதிலுஞ் சேரறிந்து
தாட்டிகமா யஞ்சாறு நாட்பூசு
வண்டுகடி தானும்போமே. 391

(இ-ள்) தகரைவிரை ½ படி எடுத்து அது முழுகும்படி எருக்கம்போல் விடவும் நிழலில் உலரவைக்கவும்.

நிலாவாரையைச் சமூலமாகப் பிடுங்கிக் கல்லுரலிலிட்டு இடித்துச் சாறுபிழிந்து மறுபடியும் ஊறவைக்கவும்.

இதையும் நிழலில் உலரவைத்து கையாந்தகரைச் சாறுவிட்டு முன்போல் ஊறவைத்து நிழலில் உலர்த்த-வும். கடைசியில் இதைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக அரைத்து வண்டு கடியின் மேல் பூசவும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் பூச வண்டு கடிகள் தீரும்.

### 268. வண்டுகடிக்குத் தினையுப்பயல்

மலையெழுகான் கொண்டுவந்து யிடித்துவந்தச்
சாறதனை வடிக்கட்டிக்கொண்
டுலைவைத்து வாய்த்ததினை யரிசியதிற்
போட்டு சமைத் துண்ணும்போது
நல் பசுவின் னெய்பாலும் பனைவெல்லங்
கூட்டுபுளி நட்பைத் தள்ளு
வுலை வண்டு கடிமீளுந் தஞ்சைசர
பேந்திரனு ணரும் மருந்தே. 392

(இ-ள்.) மலையெழுகான் பச்சிலையைக் கொண்டுவந்து இடித்துச் சாறுபிழிந்து வடிக்கட்டிக்கொண்டு அடுப்பின் மேல் வைத்து அதில் தினயைரிசியைப் பசுவின்நெய், பசுவின் பால் பனைவெல்லம் இவைகளை வேண்டிய அளவு சேர்த்துக் கொள்ளவும். புளியை நீக்கவும். வண்டுகடிகள் தீரும்.

### 269. கடிவிகாரங்கள், குஷ்டங்களுக்கு ஆவாரம் பூப்பூச்சும், புகையும்.

ஆவாரம்பூ மொட்டதையுங் கொண்டுவந்து
வதனுடைய வரும்பெடுத்து
தாவிவளர் சிறுவிளாங்கா யளவுமரைத்
தெருமைற் றயிரைக் கட்டி
நீவளமாய் தூக்கியந்தச் சற்றதனை
முன்னளவாய் நிறுத்தி ரண்டு
மாவலுடன் ரேகித்துக் கடிவிகா
ரத்தில்தட வதனைத்தானே. 393

தடவிரெண்டு நாழிகையு மிகுந்துகுழி
கெல்லி யெருத் தானடுக்கி
யடவுடனே நெருப்பிட்டப் புகையைக் கடி
விகாரத்தி லந்திசந்தி
திடமுடனே மூன்றுநாட் பிடிபுழுவு
முதிர்ந்து கடி சீராம்வண்டு

கடிகுட்டங் காணாத கடிபடரும்
விடமறுமே கருத்தாய்ச் செய்யே, 394

(இ-ள்.) ஆவாரம்பூ, மொட்டு இவைகளைக்கொண்டு வந்து, அதனுள்ளிருக்கும் அரும்பை நீக்கிவிட்டு அம்மியின் மேல் வைத்துச்சிறு விளாங்காயளவு அரைத்து வைத்துக் கொள்ளவும். எருமைத் தயிரை ஒரு துணியில் வைத்து மூட்டையாகக் கட்டித் தொங்கவிடவும். பின்னர் நன்றாகப் பிழிந்து அந்தச் சக்கையை விளாங்காயளவு எடுத்து நிறுத்து முன் விழுதையுங்கூட்டிப் பிசைந்து கடி விகாரத்தில் தடவவும். 2 நாழிகைகள் சென்றபின் ஒரு சிறு குழிதோண்டி அதில் எருவையடுக்கி மேற்சொன்ன மருந்தையிட்டு அதிலிருந்து எழும்பும் புகையைக் காலையிலும் மாலையிலும் பிடிக்கவும், 3 நாட்களுள் புழுக்கள் உதிர்ந்து வண்டு கடிகள் தீரும். காணாக்கடி விஷமும் தீரும். குஷ்டமும் சீராகும்.

### 270. காணாக்கடிக்குச் சாம்பல் வாழைக்கச்சல் கறி

........காணாக் கடிக்கிச் சாமம்
பலின் வாழையதனிற் சின்னக்
கச்சலதைப் பசுமோ லவித்திரண்டு
வேளையுமக் கறியைக் கூட்டு
மிச்சையுடன் பத்துநா டனிற்கடிவி
காரமறு மெழிலாந் தஞ்சை
யச்சுதனுஞ் சகலசன ரெட்சகனு
முணர்ந்து ரைத்தவரு ளதாமே. 395

(இ-ள்.) சாம்பல் வாழைக் கச்சலைக் கொண்டு சிறு சிறு துண்டுகளாக்கிப் பசுவின் மோரில் அவித்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும், 10 நாட்களுக்குள் காணுக்கடிகள் மாறும்.

**271. காணுக்கடிக்கு புளிநரளைக்கிழங்குப் பூச்சு**

புளிநரளைக் கிழங்குமைஞ் சிலைவயிர
 வன்கிழங்கு புதுமையான
வளமுடைய சிறுகுறட்டைக் கிழங்குமப்
 பைங்கிழங்கு வன்மையான
தெளிவான சிற்றவரங் கிழங்குடனே
 கிழங்கைந்துஞ் செழிப்பதான
கனிவான நன்னாரி பாலொடுவி
 பெருமருந்தின் கதித்தவேரே. 396

கதித்தசத்திச் சாறணைகோ ழியினவரை
 கொடிவேலிவேர் ரணக்காயாறு
முதிக்கின்ற யீரவெங் காயமுடன்
 பன்னிரண்டு முசிதமான
மதிக்கின்ற நொச்சிநல்ல வேளைமணித்
 தக்காளிச்சாறு வகைக்குழக்குத்
துதிகுக்கில் கால்பணமு மிதுவெல்லா
 மம்மிதனி லேயரைத் துக்கொள்வாயே. 397

கொண்டுயெள் ளெண்ணெய்த னிற்கலந்து
 காணாத கடிக்குந் தினவு
கண்டவிடங் களற்சொரிந்து தடவியிருந்
 தேகுளிநீ கடியுந் தீரு
மண்டலத்திற் கோதண்ட சரராமன்
 றுளசேந்திர மால்சேய் பாச்சொற்
றண்டமிழின் சுவையறியுஞ் சரபேந்திர
 னருளியபூச் சதுவுமாமே. 398

| | |
|---|---|
| (இ-ள்) புளிநரளைக்கிழங்கு | அப்பைக்கோவைக்கிழங்கு |
| குறட்டைக்கிழங்கு | நன்னாரிவேர் |
| சிற்றவரங்கிழங்கு | சத்திச்சாறணைவேர் |
| வைரவன்கிழங்கு | பெருமருந்துவேர் |

ஈரவெங்காயம் பாலொடுவிவேர்
கோளியாவாரைவேர் கொடிவேலிவேர்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

நொச்சிச்சாறு நல்லவேளைச்சாறு
மணித்தக்காளிச்சாறு

இவைகள் வகைக்கு 1 உழக்கு
சுத்திசெய்த குக்கில் ¼ பணவெடை

இவைகளையெல்லாம் அம்மியில்வைத்து ஷை சாறு களை விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். பின்னர் இக் கல்கத்தை நல்லெண்ணெயுடன் கலந்து காணுக்கடி இருக்குமிடங்களில் சொரிந்து நன்றாக தடவி ஊறவைக் கவும். பின்னர் குளிர்ந்த ஜலத்தில் குளிக்கவும். கடி வகைகள் தீரும்.

## 272. கடிவிகார வீக்கத்திற்குக் கஷாயம்

சங்குகுப்பை மேனியுத்த மதாளி
கள்ளியுடன் தழுதாழைவேர்
சங்கையுட னைந்துவேர் சமனுழமண்
ணழியது தானுங்கூட்டி
வங்கணமாய்ப் பதக்குநீர் தனிற்காய்ச்சிக்
கடிவீக்க மதனிற்றனே
யுங்கவன மாகபுதைத் திடுவீக்க
மறுமிதுவு முண்மைதானே. 399

(இ-ள்.) சங்கங்குப்பி குப்பைமேனி
உத்தாமணி கள்ளி
தழுதாழைவேர்

இவைகள் வகைக்கு 1 பலம் இடித்து உழமண் சின்னப்படி ½ யும் சேர்த்து 2 மரக்கால் சுத்தஜலம் விட்டு நன்றாகக் காய்ச்சிக் கடிவீக்கத்தின் மேல் ஊற்றவும். விஷங்கள் தீரும்.

### 273. காணுக்கடிக்குக் கிளாவேர் மருந்தும், பூச்சும்.

வடக்கேபோகுஞ் சிறுகிளா வேர்ப்பட்டை
    புறணிதனை வாவின்பாலில்
மிடுக்குடனே யரைத்துள்ளுக்குங் கொடுத்துமதைத்
    தானேநீ மேலும்பூசு
துடிப்புளகா ணுக்கடியு மீளுஞ்சிவ
    கிருபையினுற் றுலங்குங் கீர்த்தி
வடித்த புகழ் பெருசரபேந் திரனுணர்ந்த
    கிளாவேரின் மருந்தும் பூச்சே. 400

(இ-ள்.) வடக்குநோக்கிச் செல்லும் சிறுகிளாவின் வேரைக்கொண்டுவந்து அதன் மேற்பட்டையைச்சிதைத்-துப் பசுவின்பால் விட்டரைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலும் பூசவும். காணுக்கடிகள் தீரும்.

### 274. நண்டுவாய்க்கலிக் கெட்டிற்குப் பசுமஞ்சள் பூச்சு

நண்டுவாய்க் கலிகடித்தி டிலதற்குப்
    பசுமஞ்சள் நன்ருகத் தான்
கொண்டுபின்னைக் கொட்டையள வரைத்துளுக்குங்
    கொடுமந்தக் கொட்டுவாயி
லண்டிவிடப் பூசுகுண மாங்கடவுள்
    கிருபையினு லவனியாளு
மண்டலாதி பதிசரபேந் திரனுமுணர்ந்
    தமஞ்சள் மருந்தும்பூச்சே. 401

(இ-ள்.) நண்டுவாய்க்கலி கடித்தால் அதற்குப் பசு மஞ்சள் அரைத்த விழுது ஒரு பின்னைக் கொட்டையளவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்துக் கொட்டுவாயிலும் பூசவும் கடிவிஷம் தீரும்.

275. நண்டுவாக்கலிக் கடிக்கு மருந்தும் பூச்சும்.

கடிணைப்புறக் கிழங்குள்ளி வசம்புஞ்சிறு
நீர்வார்த்துக் கலந்தி டித்து
கொடுவுளுக்குந் துவாலையிடு மேலுக்கு
மடிக்குமடிக் குந்தா னன்று
யுடனே நண்டு வாய்க்கலி விடந்தீருஞ்
சிவகிருபை யுற்றதஞ்சைப்
படியாளுஞ் சரபேந்திர னுணர்ந்த திந்த
விடமருந்தும் பத்துமாமே. 402

இவைகளைச் சிறு குழந்தைகளின் சிறுநீர் நன்றாக இடித்து, பின்னர் அரைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசவும், நண்டுவாய்க்கலி விஷங்கள் தீரும்.

276. அறணைக்கடிக்குச் சாரணை மருந்தும் பூச்சும்

அடவிதனிற் சாரணைச மூலமுள்ளி
வசம்புடனே யாகமூன்றுந்
திடமுடைய சிறுநீரிற் றுவைத்துள்ளுக்குங்
கொடுத்துமதைத் தேகந்தன்னி
லிடுநன்றாய்த் துவாலையுமே யறணைகடி
யுடன்மீளு மிப்பார் தன்னிற்
றுடியான மதகரியிற் பவனிவருந்
தஞ்சைவிபு சொல்மருந்தே. 403

(இ-ள்.) சாரணைச்சமூலம் வெள்ளைப்பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் சிறு குழந்தைகளின் சிறுநீர் விட்டுத் துவைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலேயும் போட அரணைக் கடிகள் நீங்கும்.

## 277. புழுக்கடி, வண்டுகடிக்குக் காட்டுமல்லிமை மருந்து

காட்டுமல்லி கைச்செடிச மூலமுமே
சூரணித்துக் கனலில் வைத்த
சூட்டிளவெந் நீரிலொரு மண்டலங்கொள்
புழுக்கடியுந் தும்பி வண்டும்
வாட்டுகடி மீளுஞ்சோ டசமாக
தானமருள் மன்னர் மன்ன
நாட்டுமனி தர்க்காக வுணர்ந்துணர்ந்து
நிச்சயித்த நன்மருந்தே. 404

(இ-ள்.) காட்டுமல்லிகைச் செடியைச் சமூலமாகக் கொண்டுவந்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து, வெதுவெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும். புழுக்கடிகள் தும்பி, வண்டுகடிகள் முதலானவைகள் தீரும்.

## 278. அறணைக்கடிக்கு மருந்துகள்

பொடுதலையுப் புடன்மிளகு மரைத்துக்கொட்டைப்
பாக்களவும் புசித்தாயானு
லடவுடனே யறணைகடி மீளுமீ
ளாதாகி லழிஞ்சிற்பட்டை
வடிவுடைய கோழியினீ ரலிரண்டு
மரைத்து முன்போல் வளமாயுண்ணு
துடியறணைக் கடிமீளுந் தஞ்சைசர
பேந்திரனுணர் சுகமருந்தே. 405

(இ-ள்.) பொடுதலை உப்பு
மிளகு

இம்மூன்றையும் தண்ணீர் விட்டரைத்து ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து உட்கொண்டால் அறணைக்கடிகள் மீளும்

2) அழிஞ்சில்பட்டை     கோழியின் ஈரல்

இவ்விரண்டையுஞ் சமனெடுத்துக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டாலும் அரணைக்கடிகள் நீங்கும்.

### 279. எரிமண்டலி கடிக்கு நீர்ப்பூலாவேர் மருந்து

எரியுமண் டெலிகடித்தா லதற்குநீர்ப்
    பூலாவே ரெழில்வசம்புஞ்
சரியுள்ளி கூட்டியரைத் துள்ளுக்குங்
    கொடுமதையுந் தப்பாமற்று
னெரிகடிவா யிலுந்தடவு சிவகிருபை
    யதனுலே யிதமாந் தஞ்சை
புரவலனுஞ் சரபேந்திர னுணர்ந்தநீர்ப்
    பூலாவேர் புகல்மருந்தே. 406

(இ-ள்.) எரிமண்டெலி கடித்தால் அதற்கு நீர்ப்பூலா வேர், வசம்பு, பூண்டு இம்மூன்றையும் சரியெடுத்து நன்றாக அரைத்து உள்ளுக்குங்கொடுத்து மேலும் பூசவும். கடி விஷங்கள் தீரும்.

### 280. உதிரமண்டலி கடிக்கு நீர்ப்பூலாவேர் மருந்து (வேறு)

உதிரமண் டெலிகடித்தால் நீர்ப்பூலா
    வேர்வசம்பு வுள்ளிகூட்டிச்
சதிருடனே யரைத்துளுக்குங் கொடுமந்த
    விடந்தீருந் தப்பாமற் றுன்
அதிரதருஞ் சமரதரு மன்தர்தா
    மகாதிகட வாயச்சூழும்
பதிசிம்மா சனபதியாஞ் சரபேந்திர
    பூபதியும் பகர்மருந்தே. 407

(இ-ள்.) நீர்ப்பூலாவேர்     வசம்பு
    பூண்டு

இம்மூன்றையும் நன்றாய் அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவெடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். உதிர மண்டலி கடி விஷங்கள் தீரும்.

### 281, தேளுக்கு வெள்ளெருக்கம்வேர் மருந்து

கொள்ளித்தே ளதுகொட்டி விடமேறி
சோர்ந்துநிலை குலைந்துவந்தால்
வெள்ளெருக்கம் வேரதனைக் கொண்டுவந்து
தண்ணீரை விட்டரைத்து
சள்ளைசெய்யுங் கடிவாயிற் றடவிடத்தேள்
விடமீளுந் தப்பாமற்றான்
வள்ளலெழு மூவரிலு முயர்ந்தசர
பேந்திரனுணர் மருந்திதாமே. 408

(இ-ள்.) தேள்கொட்டி அதனால் சோர்வுற்று வந்தால் வெள்ளெருக்கம் வேரைத் தண்ணீர் விட்டரைத்துக் கடிவாயில் தடவவும். குணமாகும்.

### 282. காணாக்கடி, அரிப்பு தடிப்புக்கு எட்டிவேர் மருந்து

கஷ்டமது செய்காணாக் கடியரிப்புத்
தண்டிப்புக் கண்டபேர்க்கு
எட்டியின்வேர்ப் பட்டைபொடி செய்துவொரு
சிறங்கையுமெள் ளெண்ணெய் தன்னில்
விட்டுமதை மூன்றுநா ளூறவைத்துத்
தடவிகுளி.மேலுந்தானே
அட்டியில்லாம லஞ்சாறு குளியதனிற்
கடியென்ப தகன்றுபோமே. 409

(இ-ள்). காணாக்கடிகளுக்கு எட்டிவேர்ப் பட்டையைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து ஒரு சிறங்கையெடுத்து நல்லெண்ணெயுடன் குழப்பி 3 நாட்கள் வைத்திருந்து

உடம்பு முழுவதிலும் தடவிக்கொண்டு குளிக்கவும். 5 அல்லது 6 தடவை குளித்தால் அரிப்பு, தடிப்பு முதலியவை தீரும்.

### 283. காணாக்கடிக்கு லேகியம்

நேத்திரத்தால் காணுத கடிரோக
மதற்குமொரு லேகியங்கேளு
சாத்துக்கொடி வேலிவேர் நீர்ப்புங்கம்
பட்டையுடன் சங்கம்வேரு
மேத்தகள்ளக் குன்றியின்வேர் முத்தக்கா
சுடனையில் வேரின்பட்டை
சேத்துயிந்த றுவகையு மிருநாழி
நெல்லெடைதான் செப்பக்கேளே. 410

செப்புபசுக் கோமியந்தூ ணியிற்போட்டு
நன்ருகச் சிறுதீயிட்டு
வொப்புடனே யிருநாழி யாய்க்காய்ச்சி
கற்கமிந் துப்புசுக்கு
திப்பிலியுஞ் சவுக்காரந் துவுர்ச்சிகையு
மிளகுகருஞ் சீரகத்தோ
டுப்புளசீ ரகம்வசம்பு யிருவேலி
யுடனதி மதுரந்தானே. 411

அதிமதுரம் பெருங்காயங் கள்ளக்குன்றி
வேரும்நெய் தற்கிழங்கு
முதிர்கோஷ்டஞ் சங்கம்வேர் கிராம்புடனே
நல்லசிறு மூலகந்தோ
டுதியீச்சங் குருத்துகொடி வேலிபவ
ரிலாமிச்சந் துய்யவேரோ
டிதுயெழுமூன் றுவகைக்கோர் நாற்கழஞ்சுந்
தூள்செய்து மிட்டிடாயே. 412

இட்டிடாப் பொடிபழங்கிட் டஞ்சுக்கு
மூன்றுவகைக் கியல்பதாகச்
சட்டமுடன் வகையொன்றுக் குரிதூளுந்
துவர்கடுக்காய் றன்றூள் நாழி
திட்டகையா ந் தகரைமரு தம்பட்டை
வகைக்குச்சாறு சேருழக்கும்
விட்டிடெள்ளி னெண்ணெய்து கூடலே
கியமாகு மிதமாய்த்தானே. 413

இதமான கோமியத்தோ டெண்ணெய்சில
விட்டுச்சா றிரண்டும்விட்டுச்
சதமான கற்கமதிற் சிலதைவறுத்
துந்தூளுந் தானேபோட்டு
விதமான முற்றூலும் போட்டுயெரித்
தேநல்ல மெழுகுபக்குவப்
பதமான தறிந்துக்கிள றிப்பின்புக்
கீழிறங்கிப் பகரக்கேளே. 414

பகரக்கே ளாதிபரா பரைதேவி
வாலையுட பாதம் போற்றி
வாகையுடைய லேகியமதிற் ரேர்பாக்கி
னளவுங்கொள் மண்டலந்தான்
சகலகடி ரோகமறுங் கதிரவன்முன்
பனிப்போலத் தானேவாண
ரகமகிழ வருள் சரபேந் திரனுணரும்
விடலேகிய மாகுந்தானே. 415

| | |
|---|---|
| (இ-ள்.) கொடிவேலிவேர் | நீர்புங்கம்பட்டை |
| சங்கம்வேர் | குன்றிவேர் |
| கோரைக்கிழங்கு | ஆயில்யமரவேர்ப்பட்டை |

இவைகளைச் சிதைத்த துண்டுகள் வகைக்கு 12 பலம் வீதமெடுத்து 4 மரக்கால் பசுமூத்திரத்திலிட்டு அடுப்பின் மேலே வைத்துச் சிறுகச்சிறுக எரித்து 2 படியாக்கிக் கொள்ளவும். இதனுடன்,

| | |
|---|---|
| இந்துப்பு | சுக்கு |
| திப்பிலி | சவுக்காரம் |
| பிஞ்சுக் கடுக்காய்த்தோல் | மிளகு |
| கருஞ்சீரகம் | சீரகம் |
| வசம்பு | வெட்டிவேர் |
| அதிமதுரம் | பெருங்காயம் |
| குன்றிவேர் | நெய்தற்கிழங்கு |
| கோஷ்டம் | சங்கம்வேர் |
| கிராம்பு | சிறுமூலாம் (திப்பிலி) |
| ஈச்சங்குருத்து | கொடிவேலிவேர் |
| இலாமிச்சம்வேர் | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து வறுக்க வேண்டியவைகளை வறுத்து இடித்து வைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| சுத்திசெய்த அரப்பொடி | பழகிய கிட்டம் |
| சுக்கு | |

இம்மூன்று சரக்குகளின் சூரணம் ½ படியும்

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | 1 படி |
| கையாந்தகரைச்சாறு | 1 உழக்கு |
| மருதம்பட்டைச்சாறு | 1 உழக்கு |
| எள்ளெண்ணெய் | 1 உழக்கும் |

விட்டு குழப்பி அடுப்பின் மேலேற்றி மெழுகு பதத்தில் லேகியம்போல் செய்துகொள்ளவும்.

இதனை ஒரு ஜாடியில் பத்திரப்படுத்தித் தேவியைத் தோத்தரித்துத் தினமும் ஒரு பாக்களவெடுத்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) உட்கொள்ளவும். சகல கடிவிஷங்களும் தீரும்.

## 284. எலிகடிக்குச் சாறடை ரொட்டி

ஒருபிடி யரிசிமுத்தச் சாரடைவே
　　ருடனரைத்தோ டடைகட்டுச்

சுரபிநெய்ய தனிற்றோய்த்த தைத்தின்னு
துடர்பதினெட்டெலிவிடமுந்
துருசினில் மீளுமூன்று னாற்றின்னு
சொல்முந்தக் காசுரொட்டித்
தருகாத லந்தன்சரப பூபதியுந்
தானுணருச் சிதபருந்தே. 416

(இ-ள்) ஒருபிடி பச்சையரிசியுடன் முற்றிய சாரணை வேர் இரண்டையும் சேர்த்துத் தண்ணீர் விட்டூறவைத்து நன்றாக அரைத்து அடை தட்டிச் சாப்பிடவும். பசுவின் நெய்யில் தோய்த்து உட்கொள்ளவும், 18 வித எலிகடி களும் 3 நாட்களுள் தீரும்.

## 285 வண்டுகடிக்கு இரதாதி மருந்து

இரதங்கெந்த கம்வகைக்கோர் கழஞ்சுதானு
மேகெளரி பாஷாணங் காற்கழஞ்சு
மரிதான வெங்ளைப்பா ஷாணந்தானு
மரைக்கழஞ்சு யெருக்கம்வேர்ப் பட்டையோடே
அரளிவேர்ப் பட்டையோ ரொன்றுக்குத்தா
னதிரண்டும் வகைக்கோர்பரக் களவரைத்து
துரிசாக முன்மருந்து மரைத்துயெல்லாஞ்
சொல்லெள்ளி னெண்ணெயதிற் கலந்து
கொள்ளே, 417

கலந்துகூ ரியபுடமாய் வைத்துக்கொண்டு
காலமே மோருஞ்சோ ரசனம்பண்ணி
வலுத்தகடி விடம்படரு விடம்படரு மிடங்கள்
வளமாக விட்டிரவி தனிலிருந்து
சொலுங்கடிகை யிருபதுக்குமேலரப்புத்
தொட்டிட்டுக் குளிரவியின் வைத்தநீரின்
நலந்தனிலுப் பும்புளிப்புந் தள்ளுபொல்லாச்
சண்டிசெய்யும் வண்டுகடி தானும்போமே. 418

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த பாதரசம் | 40 குன்றிநிறை |
| | ,, கெந்தகம் | 40 ,, |
| | ,, கௌரிபாஷாணம் | 10 ,, |
| | ,, வெள்ளைப்பாஷாணம் | 20 ,, |
| | எருக்கம்வேர்ப்பட்டை | 1 பாக்களவு |
| | அரளிவேர்ப்பட்டை | 1 பாக்களவு |

இவைகள் எல்லாவற்றையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் குழைத்துக் கொண்டு சூரிய புடமிடவும். பின்னர் காலையில் மோர் சாதம் சாப்பிட்டு எங்கெங்கு கடி படர்ந்திருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த எண்ணெயைத் தடவி வெயிலில் சிறிது நேரம் இருந்தபின் 20 நாழிகைகள் (சுமார் 8 மணி நேரம் சென்றபின்) இருந்து பின்னர் சாப்பிட்டு, வெயிலில் வைத்திருந்த தண்ணீர்விட்டுக் குளிக்கவும்.

**பத்தியம் :** உப்பையும், புளியையும் நீக்கிவிடவும்.

### 286. கடிவிடத்திற்குப் புங்கம் வேர்ப்பட்டை மருந்து

சங்கையிலாக் கடிவிடமு முடம்பிலொங்குந்
தான்படரில் வீக்கமது தான்கொண்டாலும்
புங்கம்வேர் பொடிசெய்து தேனிற்றானே
போதெட்டு நாட்கொண்டு புளிப்புந்தள்ளு
சங்கடஞ்செய் கடிவிடங்க ளெல்லாந்தீருந்
தப்பாம லிப்பாரில் மனுவிஞ்ஞான
முங்கவன மாயுணர்ந்து தஞ்சையாளு
முத்தமவான் சரபேந்திர னுணர்ததாமே. 419

(இ—ள்.) விஷகடியினால் உடம்பெங்கும் வீக்கம் ஏற்பட்டால் புங்கம் வேர்ப்பட்டையைத் தூள்செய்து மூவிரல் எடுத்துத் தேனுடன் குழைத்து 8 நாட்கள் உட்கொள்ளவும். எலிகடி விடங்கள் தீரும்.

**பத்தியம் :** புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

## 287. கடிக்கும் சந்நிக்கும் அஞ்சனம்

சுக்குதிப் பிலிமிளகும் வசம்பு மேயிந்
 துப்புகொ ந்த ளங்காய்வெங் காயத்தோடே
யொக்கவோ ரேழுவகை மருந்திற் ருனே
 யொவ்வொரு வராகனெடை நிறுத்துக்கொண்டு
பக்குவமா மெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
 பலத்தகல்வத் தினில்மைப்போ லரைத்துக்
 கொண்டு
சக்கியமாய்க் கயிறுபண்ணி நிழலுலர்த்தித்
 தான்வைத்து வஞ்சனங்கண் டன்னிற்போடே. 420

போட்டிடவே குதிவைலி திருக்கைகுத்தல்
 பொல்லாத சன்னிவிட கடியிதெல்லா
மோட்டும்நல்ல தாதாவைக் கண்டவாண
 ருட குறைவு நீங்கிசெல்வ முற்ருப்போல
நாட்டில்புகழ் பெற்றுசோ டச தானங்கள்
 நல்கியந்த ணர்க்குவெகு நன்மைபெற்ற
பாட்டினிசை யறிந்திலங்கு சரபபூபன்
 பார்த்துணர்ந்த நல்லவஞ்ச னமுமாமே. 421

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுக்கு | திப்பிலி |
| | மிளகு | வசம்பு |
| | இந்துப்பு | கொத்தளங்காய் |
| | வெங்காயம் | (சமுத்திராப்பழம்) |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துச் சூரணித்துக் கல்வந்தனில் இட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்ருக அரைத்து, நீண்ட மாத்திரையாகச்செய்து கொள்ளவும். இதனை நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தண்ணீரில் இழைத்துக் கண்களில் அஞ்சனமாக இடவும்.

குதிரைவலி (இழுப்பு), திருக்கைமீன் குத்தி ஏற்பட்ட விரணங்கள், சன்னி, விஷகடி முதலானவை தீரும். கைகண்ட மருந்து.

**288. கடி, வயிற்றுவலி, கவுசை, வெப்புப்பாவை சொறி, குஷ்டம், சிவந்த குஷ்டம், உள்மூலத்திற்குச் சேங்கொட்டைத் தைலம்.**

சேங்கொட்டை யைம்பதுசெவ் வலாங்கொட்டைச்
 செபபுமுன்போ லன்பதுமா மகிழம்வித்தும்
பாங்குவிளா மாவிலங்கை கள்ளியாயிற்
 பட்டை நுணப் பட்டையிந்த வாறிலுந்தா
னுங்கமுட னிடித்ததூள் வகையொன்றுக்கு
 மதுவுமொரு நாழி யிதுவுமல்லா
லோங்கு செம்மண்வளர் வேம்புமன்னி
 லுற்றவயி ரத்தூளும் வகையொன்றுக்கே. 422

வகைக்குநா ழியதுந் தகரைவித்து
 மாம்பூவு மிதிரண்டில் வகைக்குநாழி
திகழ்கொன்றை பூவுங்கா யும்நாழி
 சேருமெருக் கிலைசிலது மெல்லந்தானே
துகையாக்கி யொருமிடா வி னிலேயிட்டு
 துய்யதயிற(ல) மிறங்கிப் பரணிதன்னில்
வகையாகப் பதனமாய் வைத்துநல்ல
 வாழையுட பழந்தனிலே தடவித்தின்னே. 423

தடவிரண்டு வேளையுந்தான் றின்னுபத்தியந்
 தானென்று மாகாது நீருஞ்சோறு
அடவாகத் தின்னேயின் வலுவறிந்து
 மதுக்குத்தீர் வியாதிகடி விடம்வயிற்றிற்
றுடியான வலிகவுசை வெப்புப்பாவைச்
 சொறிகுட்டஞ் சிவந்தகுட்ட முள்ளின்மூலம்
படிகின்ற துந்தீரும் புறநீர்கோர்வை
 பற்றினல் காசெடையுங் கெண்ணெய்தானே. 424

புங்கெண்ணெ யிற்றயிலம் பணவெடை தான்
 போட்டுண்ணு மிதற்குப்பத் தியமுங்கேளு
உங்குறது கோழியாண் மூஞ்சுறுந்தா
 னுற்றகோழி யின்முட்டை யுடைத்துவெள்ளை

சங்கையுள்ள கருவுடனெ வுப்புமஞ்சள்
தானரைத்து வயிற்றினிலே பூசிப்பாரு
பங்கஞ்செய் புர நீர்கோர் வையுமேதீரும்
பாஞ்சால புருஷவிபு வுணர்ந்ததாமே. 425

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சேங்கொட்டை சுத்திசெய்தது | 50 |
| | செவ்வாலங்கொட்டை | 50 |
| | மகிழம்விதைத்தூள் பெரியபடி | 1 |
| | விளாம்பட்டைத்தூள் | ,, |
| | மாவலிங்கம்பட்டைத்தூள் | ,, |
| | கள்ளிப்பட்டைத்தூள் | ,, |
| | ஆயில்யம்பட்டைத்தூள் | ,, |
| | நுணாப்பட்டைத்தூள் | ,, |

செம்மண் பிரதேசத்தில் வளர்ந்த வேப்ப மரத்தின் மத்தியில் காணப்படும் வைரத்தின் தூள் பெரியபடி

| | | |
|---|---|---|
| தகரைவிதை | சின்னபடி | $\frac{1}{2}$ |
| மாம்பூ | ,, | |
| கொன்றைப்பூ | பெரியபடி | 1 |
| கொன்றைக்காய் | ,, | |

இவைகளை ஒன்ருக்கி' எருக்கிலை 10 அல்லது 15 எடுத்துப் பிய்த்துப்போட்டு ஒரு துவாரமுள்ள பெரும் பானைதனிலிட்டுச் சீலைமண்செய்து காய்ந்தபின் புடமிட்டுக் குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும்.

இத்தைலத்தைப் பத்திரப்படுத்தி வாழைப்பழத்தில் தடவி உட்கொள்ளவும். தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு, வெந்நீர் சாதம் மாத்திரமே உட்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள் :-**

விஷகடிகள், வயிற்றுவலி, கவுசை, வெப்புப்பாவை சொறி, குஷ்டம், சிவந்த குஷ்டம், மூலம் முதலியவை.

ஜலதோஷம் ஏற்படில் புங்கெண்ணெய் ஒரு காசெடை (32 குன்றி) எடுத்து இந்தத் தைலம் ஒரு பணவெடை ($3\frac{1}{2}$ குன்றி) சேர்த்துப் பருகவும்.

கோழி, ஆண் மூஞ்சூறு கோழிமுட்டை வெள்ளைக்கரு உப்பு, மஞ்சள் இவைகளை நன்ருக அரைத்து வயிற்றில் பூசவும். புறநீர்க்கோர்வை தீரும்.

### 289. புழுக்கடி, வண்டுகடிக்குப் பூச்சு

வண்டுபுழு யெக்கடிக்கும் பூசவுந்தான்
மருந்தொன்று சேவகனார் கிழங்குதன்னில்
ரெண்டுபாக் களவரைத்து நேர்வாளந்தா
னிசமாக யிருபதுமா லம்பால்விட்டு
கண்டிதமாய் மைப்போல வரைத்துப்பூசு
காணுத கடிமுதலாய்த் தீரும்வந்து
அண்டினர்கள் கலியசுற்று மும்பர்கோமா
னழகைசர பேந்திரனுணர் பூச்சதாமே. 426

(இ-ள்.) சேவகனார்கிழங்கு 2 பாக்களவு
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 20 எண்ணிக்கையில்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஆலம்பால் விட்டு நன்ருகவரைத்து வண்டு, புழுக்கடி, காணுக்கடி முதலியவை களுக்குப் பூசவும். அவை தீரும்.

### 290. கடிவிடங்களுக்குப் பூச்சு

எருக்கம்பா லாழாக்கு வுழக்கு யெண்ணெய்
யிதிற்சிவந்த அலரிவேர்ப் பட்டைசற்றும்
முருக்கமூடன் போட்டிரவி தனிலேவைத்து
வொருநாள்விட் டொருநாளுந் தடவிக்கொண்டு
அரப்பிட்டு வெய்யினினீ ரன்னிலேதா
னடவாகக் குளிர்மோருந் தயிருங்கூட்டு
உரைத்தபடி பிசகாமற் கடிரோகங்க
ளுடனேடும் விபுவுணர்ந்த உண்மைப்பூச்சே. 427

(இ-ள்.) எருக்கம்பால் 1 ஆழாக்கு
நல்லெண்ணெய் ½ ,,

இதனுடன் செவ்வரளி வேர்ப்பட்டையைச் சிதைத்துப் போட்டுச் சூரிய புடமிட்டு ஒருநாள் விட்டு ஒருநாள் உடம்பில் தேய்த்துக்கொண்டு அரப்புத் தேய்த்துக்கொண்டு வெய்யிலில் வைத்திருந்த தண்ணீரில் குளிக்கவும்.

**பத்தியம் :—** மோர், தயிர் இவைகளை வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும்.

### 291. சகல கடிக்குத் தைலம்

சகலகடிக் குற்றயில மொன்றுசொல்வேன்
சமூலஞ்கி வனர்வேம்பு விளாம்பொருக்கு
வகைவில்வப் பொருக்குபுளி யம்பொருக்கு
வண்மைவேப் பம்பொருக்கு நாலதாகும்
புகழ்திருக் கள்ளியுட சிராயுந் தேக்கின்
பொருந்தூசிரா யிரண்டுவண்டு கொல்லிப்பட்டை
தகுபுரசம் பட்டையுட னழிஞ்சிப்பட்டை
தாவிவளர் காஞ்சிரையின் பட்டைநாலே. 428

பட்டையுடன் கொடிவேலி வேருமொன்று
பாரிலெட்டிக் கொட்டையொன்று மீது .....
திட்டகெரு டக்கொடிச மூலங்கானிற்
றிகழும்நில வாகையுஞ்ச மூலமூன்று
சட்சமுடன் பதினறு வகையொன்றுக்குந்
தானேயிரு வதுபலமும் நிறுத்துக்கொள்ளு
கெட்டிநீர் விஷங்குந்தி ருக்கங்கோஷ்டங்
கெந்தகத்தோ டேநாலு வகைக்குந்தானே. 429

வகையொன்றுக் கிரண்டுபல மெல்லாங்கூட்டி
வல்லபெரும் பானைதனிற் போட்டுத்தானே
அகமகிழற் றயிலமது யிறக்கிக்கொண்டு
ஆயிபரா பரையுடைய பாதம்போற்றி

சகலகடி விடங்களுக்குங் கொடுத்தாயாஞற்
றப்பாம லகன்றுவிடு மிப்பார் தன்னில்
இகல்வேந்த ரையும்வேண்டுத் தஞ்சையாளு
மினியசர பேந்திரனிற் ணயித்ததாமே. 430

(இ-ள்.)

| | |
|---|---|
| சிவஞர்வேம்பு | விளாம்பொருக்கு* |
| வில்வப்பொருக்கு | புளியம்பொருக்கு |
| வேப்பம்பொருக்கு | திருகுகள்ளிச்சிராய் |
| வண்டுகொல்லிப்பட்டை | தேக்குச்சிராய் |
| புரசம்பட்டை | அழிஞ்சில் பட்டை |
| எட்டிமரப்பட்டை | கொடிவேலிவேர் |
| எட்டிக்கொட்டை | கெருடக்கொடிசமூலம் |
| நிலவாகைச்சமூலம் | |

இவ்வகைச்சரக்குகளை வகைக்கு 20 பலம் வீதம் எடுத்து அதனுடன்,

| | |
|---|---|
| நிர்விஷம் | குந்துருக்கம் |
| கோஷ்டம் | நெல்லிக்காய் செந்தகம் |

இவைகளை வகைக்கு 2 பலங்கள் வீதமெடுத்து எல்லாவற்றையும் நன்ருக உலர்த்தி ஒன்றிரண்டாக இடித்து ஒரு துவாரமுள்ள பெரும்பானையிலிட்டு, குழியில் புதைத்து எரு அடுக்கிக் குழித்தைலம் இறக்கிக்கொள்ளவும்.

இத்தைலத்தைப் பத்திரப்படுத்தி சகலவித விஷக்கடிகளுக்கும் (ஒரு பணவெடை எடுத்துச் சர்க்கரையுடன் கூட்டி) உள்ளுக்குக் கொடுக்கவும். விஷகடிகள் தீரும்.

## 292. வண்டுகடி முதலான கடிக்குச் சூரணம்

கருஞ்சூரை வேர்ப்பட்டை பலமேரவொன்று
கருதுசெங்க தாரிவேர்ப் பட்டை சீவி
திருந்தநிழ லுலர்த்தின தூள் பலமொன்றுஞ்
செப்புகொடி வேலிவேர்ப் பட்டைதானு

*பொருக்கு என்பது மேற்புரணியமாகும்.

மருமையுள னுலுகழஞ் செடுத்துக்கொள்ளு
மானகருஞ் சீரகமுங் காசுக்கட்டி
யுரைவகைக்குக் கழஞ்சுரெண்டு சாதிப்பத்திரி
யோர்கழஞ்சு சாதிக்கா யுங்கழஞ்சே. 431

செய்யுவகை யெல்லாம்நீ வறுத்துக்கொண்டு
சீராகப் பொடியாக்கி வடிகட்டிக்கொண்
டிப்படியே புதுப்பாண்டந் தனிலேவைத்து
யித்தரணி மனுக்குகடி யணுகினுலே
தப்பிலா வெருகடிதூள் தேனிற்கொள்ளு
தானிரண்டு வேளையரை மண்டலந்தான்
உப்பதுகூட் டிக்கொள்ளு புளியுந்தள்ளு
முடன்பழஞ்சோறு புகையிலேயுந் தள்ளுதள்ளே 432

தள்ளியரை மண்டலமுங் கொள்வியாதி
தன்னுடைய வலுவறிந்து மதிகமுங்கொள்
சள்ளை ◦செய்யும் வண்டுகடி முதலாய்த் தீருஞ்
சங்கரனுர் பூஜைசெய்து தவமேபெற்றுப்
பிள்ளைபந்து கனமரபு மதிகமான
பேர்பெற்று மந்தநா டனிலே மூவேழ்
வள்ளலெனச் சொற்கேட்டோங் கண்டதில்லை
மணிக்கண்ணுல் கண்டவிபு வருளிதாமே. 433

| | | |
|---|---|---|
| இ-ள்.) | கருஞ்சூரை வேர்ப்பட்டை | 1 பலம் |
| | செங்கதாரி வேர்ப்பட்டைச் சூரணம் | 1 ,, |
| | கொடிவேலி வேர்ப்பட்டை | $\frac{1}{2}$ ,, |
| | கருஞ்சீரகம் | $\frac{1}{4}$ ,, |
| | காசுக்கட்டி | $\frac{1}{4}$ ,, |
| | சாதிப்பத்திரி | $1\frac{1}{4}$ வராகனெடை |
| | சாதிக்காய் | $1\frac{1}{4}$ ,, |

இவைகளைத் தனியே எடுத்துப் பொன்வறுவலாக வறுத்துச் சூரணித்துப் புதுப்பாண்டத்தில் வைத்துக் கொள்ளவும்.

விஷ கடிகளுக்கு இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளும் அளவெடுத்துத் தேனில் தினம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளச்சொல்லவும். இவ்வாறு 20 நாட்கள் சாப் பிடவும்.

**பத்தியம் :—** உப்புச் சேர்த்துக் கொள்ளலாம். புளி புகையிலை, பழையது இவைகளைத் தள்ளவும். வண்டுகடி முதலானவைகளும் தீரும்.

## 293. கடிரோகத்திற்குக் கெருடப்பச்சைச் சூரணம்

கருடபச்சை சமூலஞ்சங் கம்வேரோடே
கழற்சிவேர் மூன்றுஞ்சமன் சூரணித்துச்
சரியாக வெருகடிதூ ளிரண்டுவேளை
தானுண்டு வெந்நீருந் தானுங்கொள்ளு
பரிவாக விதற்கிச்சாப் பத்தியஞ்செய்
பாரில்மனுக் குற்றபல கடியுந்தீரும்
அரிதான சிவபூஜை செய்துதஞ்சைக்
கரசன்சர பேந்திரனுணர் விடமருந்தே. 434

(இ-ள்) கருடப்பச்சை (பெருமருந்து) சமூலம்
சங்கம்வேர் கழற்சிவேர்

இவைகள் வகைக்கு ஒரு பல வீதமெடுத்து உலர்த்திச் சூரணித்துத் தினமும் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துக் காலையிலும் மாலையிலும் வெந்நீருடன் உட்கொள்ளவும்.

**பத்தியம் :—** இச்சாப் பத்தியம்.
பற்பல விஷங்களும் தீரும்.

## 294. பல கடிக்கும் கோபுரந்தாங்கி மருந்து

பலகடிக்குக் கோபுரந்தாங் கியிலைதன்னில்
பண்பாக வொருபிடிதல் வசம்புந்தானும்
நலமான புளியம்விரை யளவுமுள்ளி
நாலுதிரி யுங்கூட்டி யரைத்துக்கொண்டு

சொலுமுருண்டை மூன்ருக்கி விழுங்கு வெந்நீர்
சோறுண்ணு மற்ருென்று மாகாதாகா
துலேகடியுந் தீருதஞ்சை நகரையாளு
முற்றமவான் சரபேந்திர னருளிதானே 435

(இ–ள்.) கோபுரந்தாங்கியிலே ஒரு பிடி
வசம்பு புளியங்கொட்டைப் பிரமாணம்
உள்ளிப்பூண்டு நாலு பல்லு

இவைகளைச் சமனெடை எடுத்து நன்ருக அரைத்து விழுதாக்கி மூன்று பங்குகளாக்கி வெந்நீருடன் சாப்பிடவும்

வெந்நீர் சாதம் சாப்பிடவும். வேருென்றும் ஆகாது.

### 295. கடிவிரணத்திற்குப் பூச்சு

சம்பூரப் பழச்சாற்றில் செழுமலர்க்கொன்
றையிலேதனே யரைத்துமூன் றதுநாட்பூசு
வம்புசெய்துக் குதறிகடி யாறுமுள்ளி
வசம்பிரண்டு மரைத்துதின வதனிற்பூசு
அம்பிகைதன் னருளாலே யாறிப்போகு
மஞ்சாறு நாடதனிற் றப்பாமற்ருன்
உம்பர்கோ னற்றஞ்ச நகரையாளு
முலகபதி சரபேந்திர னருளிதாமே. 436

(இ-ள்)

1. எலுமிச்சம்பழச் சாறுவிட்டுச் செலுமலர்க் கொன்றையிலேயை அரைத்து மூன்று நாட்கள் விஷகடி விரணத்தில் பூசவும்.

2. பூண்டு, வசம்பு இவ்விரண்டையும் அரைத்து அரிப்பு இருக்குமிடத்தில் பூசவும்.

3. 5 அல்லது 6 நாட்களுள் நிச்சயமாகக் குதறியிருந்த விரணங்களாலும் ஆறிவிடும்.

## 296. கடிரோகத்திற்கு கெந்தகாதி மருந்து

சுத்தமுள்ள கெந்தகத்தைப் பாலதன்னிற்
சுத்திபண்ணி யிரண்டுதிறம் வைத்துக்கொண்டு
பத்தியுடன் வேப்பிலையைக் கொண்டுவந்து
பண் ான நிழலுலர்த்தி யீடித்துக்கொண்டு
சத்துவமாய் நாலுபலங் கூட்டிரெண்டுஞ்
சாரித்து வெருகடிப்பிர மாணந்தேனில்
பத்து நாட் குழைத்துண்ணு புளியுமாகா
பத்தியஞ்செய் வெந்நீரு ு சோறுமுண்ணே. 437

உண்ணுபின்பு வொருவேளை பாலுஞ்சோறு
முண்டிரண்டு வேளைவெந்நீர் சோறுங்கொள்ளு
கண்ணுமுடம் பினிற்காணுக் கடியுவண்டு
கடியதுவுங் கதிரவன்முன் பனிபோலோடும்
வண்ணப்பிர பந்ததமிழ் பாடுகின்ற
வாணர்கலி நிர்தூளி யாகப்ே ாக்கி
உண்ணுஞ்சோ ருடையகங் கனகமீயு
முந்தவிபு மானுவுணர் கடிமருந்தே. 438

(இ-ள்.) நெல்லிக்காய்க் கெந்தகத்தைப் பசுவின் பாலில் இரண்டு தடவை சுத்திசெய்து வைத்துக்கொள்ளவும்.

வேப்பிலையை நிழலில் காயவைத்து இடித்து சூரணம் 4 பலம் எடுத்து, அதனுடன் கெந்தகத்தை (4 பலம்)ச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். விஷகடி உள்ளவர்கள் இதில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனில் குழைத்து 10 நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம் :** புளி உதவாது. வெந்நீர் சாதம் சாப்பிடவும். மறு பத்து நாட்களில் 1 வேளை பாலுஞ் சாதமும் மற்ற இரண்டு வேளை வெந்நீர் சாதமும் தினந்தோறும் சாப்பிடவும்.

உடம்பில் காணப்படும் காணுக்கடிகள், வண்டுகடிகள் முதலானவை நீங்கும்.

### 297. கடிரோகத்திற்குக் கொடிவேலிவேர் சேர்த்த பொங்கல்

ஆதித்த வாரமதிற் கொடிவேலிவே
ரதையரைத்துப் போட்டுவெள் ளாட்டுப்பாலிற்
நீதில்லா நெற்பச்சை யரிசிபோட்
தீயிட்டுப் பொங்கிரண்டு வேளைகாணக்
கோதிலாக் கடவுளர்க்கு நைவேத்யந்தான்
கொடுத்துண்ணு மூன்றுநாளாறுவேளை
பேதித்துப் போங்கொடியவிடமுங்கெட்டுப்
பேசாமற் போமிதுவுஞ் செய்துபாரே. 439

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிவேலி வேரைப் பிடுங்கிக் கொண்டுவந்து தண்ணிர் விட்டு நன்ருக அரைத்து. வெள்ளாட்டுப் பாலுடன் குழப்பி, அதில் பச்சரிசியைப்போட்டுக் கொதிக்க வைக்கவும். பொங்கலான பின் இதனைக் கடவுளுக்கு நிவேதனம்செய்து காலையிலும் சாயங்காலத்திலும் உட்கொள்ளவும். இவ்வாறு 3 நாட்கள் 6 வேளை சாப்பிட எப்பேர்பட்ட விஷங்களும் தீரும்.

### 298. காணுக்கடியினுல் சொறி. தடிப்பிற்குத் துருசு மருந்து

ஒருகுன்றிப் பிரமாணந் துருசுதன்னை
யுற்றவெற்றிலையதனிற் றடவிற்ருனே
கடுவாக மூன்றுநா ளுண்ணுகுக்கி
கழியுமிள கினீருஞ் சோறுமுண்ணு
வருகாணுக் கடிசொறியுத் தடிப்புமாறும்
வாய்மைபெரு தஞ்சைதுள சேந்திரபூபன்
றருபுதல்வன் சரபோசி ராசராசன்
ருனுணர்ந்த துருசியுட மருந்திதாமே. 440

(இ-ள்.) ஒரு குன்றிநிறை துருசைத் தண்ணீரில் குழைத்து வெத்திலையில் தடவி 3 நாட்கள் சாப்பிடவும். வயிறுபேதி உண்டாகும். மிளகுரசமிட்டுச் சாப்பிடவும்.

காணுக்கடிகள், சொறிகள், தடிப்பு முதலானவைகள் தீரும்.

குறிப்பு :— துருசை மோரிலிட்டுச் சுத்தி செய்து கொள்ளவும்.

### 299. விடகடிக்கு அம்மான் பச்சரிசியிலை மருந்து

அம்மான்பச் சரிசியிலே யுலர்த்திக்கொண்டு
யரைத்துமைப்போ லாகவுமே கொட்டைப்பாக்கி
நம்மாத்திரம் வெந்நீரிற் கரைத்துக்கொள்ளு
யகட்டதிற்சீ தமுங்கழியுங் குளிதண்ணிரி
லும்மோருஞ் சோமுண்ணு மூன்றுநாளு
முற்றகடி ரோகமெல்லாந் தீரும்பாரு
பெம்மானென் கோன்சரபபூபனுய்ந்த
போமம்மான் பச்சரிசியிலேமருந்தே. 441

(இ-ள்) அம்மான் பச்சரிசியிலேயை ஆய்ந்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு வேண்டும்போது வெந்நீருடன் சேர்த்து நன்ருக அரைத்துக் கொட்டைப்பாக்களவு எடுத்து வெந்நீருடன் குழப்பி பருகவும்.

சீதக்கழிச்சலெடுக்கும் குளிர்ந்த தண்ணீர் அல்லது மோர்இவைகளில் ஏதேனும் ஒன்றைச்சேர்த்து 3 நாட்கள் சாப்பிடவும். கடிவகைகள் தீரும்.

### 300. சகல கடி ரோகத்திற்கும் மருந்து

சகலகடி விடத்திற்கு மோர்மருந்து
சாற்றுதி பிலிநாலுண் மிளகுமஞ்சும்
வகைகள்ளிக் கொழுந்ததுவும் நாலுமூன்ருேர்
மண்டலங்கொளிச்சாபத் தியங்களாக
அகந்தனிலு பாதிக்குங் கடிகளெல்லா
மற்றுப்போஞ் சிவகருணை யதனுற்றஞ்சை
இகலில்லா துரைசரபேந்திரனுணர்ந்த
திம்மருந்தை நன்மருந்தாயெண்ணிச்செய்யே. 442

| | | |
|---|---|---|
| (இ-ள்.) திப்பிலி | 4 | எண்ணிக்கையில் |
| மிளகு | 5 | ,, |
| கள்ளிக்கொழுந்து | 12 | ,, |

இவைகளை அம்மியின்மேல் வைத்து நன்றாகவரைத்து 40 நாட்கள் உட்கொள்ளவும்.

விஷகடிகள் அனைத்துந்தீரும். இச்சாபத்தியமாக இருக்கவும்.

**குறிப்பு:—** இது விரேசன குணமுள்ள மருந்தாகை யால் நிதானித்து உபயோகிக்கவும்.

### 301. வண்டுகடி முதலான சகல கடிக்கும் பிராய்வேர் மருந்து

வடக்கேபோம் பிராய்மரத்தின் வேரதன்னை
வாய்பேசா மல்வெட்டி வந்துமேல்தோ
லடவாகவுலர்த்தித்தூ ளாக்கிக்கொண்டு
யருந்துபதி னைந்துநாளிரண்டுவேளை
துடியான கைப்புபுளிப் பதனைத்தள்ளு
சுரும்பினோடு சகலகடி படர்வதெல்லாங்
கடிதோடும் புலிகண்ட மானைப்போல
கனமிகுந்த தஞ்சைவிபு வுணர்மருந்தே. 443

(இ—ள்) பிராய் மரத்தின் வடக்கு நோக்கிப் போகும் வேரை வாய்பேசாமல் வெட்டிக்கொண்டுவந்து மேல்த் தோலைச்சீவி நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த வைத்துக்கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையிலும் மாலையிலுமாக 15 நாட்கள் (வெந்நீருடன்) உட்கொள்ள வும்.

**பத்தியம் :** காப்பு, புளிப்பு முதலிய பதார்த்தங்களைத் தள்ளவும்.

சகலகடி விஷங்களும், படர்தாமரையும் தீரும்.

## 202 கடி குணத்தினுல் கால், கை வீங்கில். புண்ணுகில் அதற்கு வேதுங் கட்ட மருந்தும்

சுடிக்குண மதினுலுடம்பினி லாதல்
கரல்கையிலாகுதல் வீங்கி
லடவியில் சங்கங் குப்பியுங் கோழி
யவரைசின் னியிலேயு மவுரி
துடியஞ்சிலே யைந்திலேயுடனே
சுப்பிர முருங்கையின் பட்டை
திடமுடன்வகைக்கு நாலுதுட்டெடையுஞ்
செப்பியவுள்ளிப்பூண் டிரண்டே 444

இதுவெல்லா மொருபா னேயினிலேபோட்டு
மிசைந்ததண் ணீரதை விட்டு
பதமுடன்காய்ச்சி வீங்கின விடத்தில்
பக்குவ வேதும் பிடிநீ
யிதைபினு மிடித்தோர் பர்னேயில்வேடு
பிட்டுபுட்டவியலா யவித்து
விதமுள புண்ணிற் கட்டிடக் கடியு
லேகிடும் புண்ணும் போமே. 445

(இ-ள்) சங்கங்கப்பியிலே அவுரியிலே
கோழியவரையிலே அழிஞ்சில் இலே
சின்னியிலே

இவைகளுடன்

| | | |
|---|---|---|
| முருங்கைப்பட்டை | 4 | துட்டெடை |
| உள்ளிப்பூண்டு | 2 | ,, |

இவ்விரண்டையும் சிதைத்து ஒகு பானையிலிட்டுத் தண்ணிர்விட்டுக் கஷாயம் செய்யவும் இதன் ஆவியை விசகடியினால் வீங்கின இடத்தில் பிடிக்கவும். மீதமுள்ள சரக்குகளே ஒரு பானேயிலிட்டு வெள்ளைத் துணியினால் வேடுகட்டி அதன் மேல்மூடி இட்டுப் புட்டவியலாக்கிப் புண்ணில்வைத்துக் கட்ட்வும். புண்களும் ஆறும்.

## 303. கடி ரோகத்திற்குக் கொடிக்கள்ளி மருந்து

கொடிக்கள்ளிக் கொழுந்து மிரண்டுதிப் பிலியுங்
குணமுட னொன்தின் மிளகும்
வடிப்பமாய் மூன்றுங் கூட்டியே நன்றாய்
வாயினால் மென்றதைத் தின்னு
திடத்துடன் மற்றா நாளதற் கிரட்டி
தினமறு நாளுக்கு நாளுங்
கடத்துட னெட்டுப் பத்துநாள் மட்டுங்
கனபுளிப் பதைத்தவிர்த் திடுமே. 446

புளிப்பதைத் தள்ளி யுப்பதைக் கூட்டிப்
போசனஞ் செய்திடு வாய்வும்
வளர்த்திடு பதார்த்தந் தள்ளிடு தண்ணீர்
வார்த்துமேல் குளித்திடு பொல்லா
வளிபெருங் கடிகண் ணாலுங்கா ணாத
தனைத்தையு மகற்றிடும் நெஞ்சக்
கவிப்புள தஞ்சை நகர்சர பேந்திரக்
காவல லுணர்கடி மருந்தே. 447

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கொடிக்கள்ளிக் கொழுந்து | 2 |
| | திப்பிலி | 1 |
| | மிளகு | 3 |

இம்மூன்றையும் சேர்ந்து வாயிலிட்டு நன்றாக மென்று தின்னவும்.

மறுநாள் இதைப்போலிரு மடங்கு உட்கொள்ளவும். மூன்றாவது நாள் இன்னும் இரண்டு பங்கு அதிகமாக்கவும். இவ்வாறு எட்டு அல்லது பத்து தினங்கள் உட்கொள்ளவும்.

புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும். உப்பு சேர்த்துக்கொள்ளலாம். வாயு பதார்த்தங்களை நீக்கவும். பச்சை ஜலத்தில் ஸ்நானம் செய்யலாம். வண்டுகடி காணுக் கடிகள் தீரும்.

**குறிப்பு:—** இது பேதியாகும் குணமுள்ள மருந்தாகை யால் நிதானித்து உபயோகிக்கவும்.

### 304. சகல கடி ரோகத்திற்கும் புட்டு

பேருவின் சிவனார் வேம்புவேர் சங்கம்
வேரதின் பட்டைவெள் ளறுகு
பாரினி லழிஞ்சிப் பட்டையும் பிராய்வேர்ப்
பட்டையி னைந்தையு முலர்த்தி
சீருட னிடித்துப் பானையிற் போட்டுச்
சோதிற் றண்ணியுங் குறுணி
வாரதின் வாயின் வேடது கட்டி
யையடுப் பினிலதைத் தானே. 448

அடுப்பிலில் வைத்துச் சிகப்பரி சியின்மா
வதிலுமோர் நாழியும் வைத்து
திடத்துடன் பிட்டாய்ச் சுட்டுநல் வெல்லஞ்
சேர்த்துணு மூன்றுநா டனக்கு
துடிப்புள சகல கடியது மீளுஞ்
சோழமண் டலமதை யாண்டு
வடிப்பமாஞ் சகல தானமு செய்யு
மன்னவன் மானுவின் முறையே. 449

(இ-ள்.) சிவனார்வேம்புவேர் சங்கம்வேர்ப்பட்டை
வெள்ளறுகு அழிஞ்சில்பட்டை
பிராய்வேர்பட்டை

இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி இடித்து ஒரு பானையிலிட்டு, ஒரு மரக்கால் சுத்த ஜலம் விட்டு அதன் வாய்க்கு வேடுகட்டி அடுப்பின்மேல் வைக்கவும். வேட்டில் சிகப்பு அரிசிமாவை (சின்னப்படி 1) வைத்து பிட்டாக்கி நல்ல வெல்லம் சேர்த்து 3 நாட்கள் சாப்பிடவும். சகல கடி விஷங்களுந் தீரும்.

### 305. காணாக்கடி புண்ணுக்கு வெள்ளைப்பூச்சு மருந்து

கண்ணினாற் காணாக் கடியினாற் கையிற்
காலுடம் பெங்கினி லாதல்

புண்ணது வாகில் மருந்துவெள் ளையுடன்
புகழுஞ்சீ தாரியுந் தானும்
வண்ணமாய் மூன்று வராகனி னெடையும்
வாவிநெய் யதனிற்சா ரித்து
எண்ணிடி ரசமுங் கால்வரா கனெடை
யேயரைத் திடுஞ்சலம் விட்டே. 450

சலமதை விட்டுக் கல்வம தனிலே
தானரை மையது போல
நவமுள சிமிழில் வழித்ததை வைத்து
நாட்டினின் மனிதர்கள் கடியா
லுலைபுண்ணில் பூசநாளுக்கு நாளு
முற்றிடும் புண்ணது மாறுஞ்
சலஞ்சல மூறுஞ் செயவளஞ் சூழ்ந்த
தஞ்சைமா னகர்விபு வருளே. 451

(இ-ள்.) மரத்துவெள்ளை அதாவது
வெள்ளைக்குங்கிலியம் 3 வராகனெடை

சீதாரி 3 ,,

இவ்விரண்டையும் பசுவின் நெய்விட்டு நன்றாக அரைத்து பின்னர் தண்ணீர் சேர்த்து மைபோல் அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதனை விஷக்கடி விரணத்தில் பூசிவரப் புண்கள் மாறும்.

### 306. பலகடி படர்தாமரைக்குத் தைலம்

பலகடி படர்தா மரைக்குமோர் தைலம்
பகருவேன் கள்ளியின் பட்டை
நலமுள தேங்கா யோடுமே விளாம்பு
ரணியிவை மூன்றுமே பதக்குப்
பலபெரு மருந்துப் பட்டையுங் குன்றிப்
பருப்புடன் கழற்கொடிப் பருப்பு
மிலையுள சிறுகுறிஞ் சியினுட வேரு
மிதின்கொடி வகையது நான்கே. 452

வகையது நான்கி லோர்வகை குருணி
வனக்கொடி வேலியின் பட்டை
துகையுடன் குறுணி நானாழி யிதெல்லாந்
துப்புள பானையி லிட்டு
அகமது மகிழுற் றயிலம திறக்கி
யுளவுமோர் துட்டெடை யுண்ண
பகைசெயுங் கடியும் படருதா மரையும்
பறந்திடு மிதுவிபு வுரையே. 453

(இ-ள்.) கள்ளிப்பட்டை தேங்காயோடு
விளாம்புரணி

இவைகள் வகைக்கு 2 மரக்கால்

பெருமருந்துப்பட்டை குன்றிப்பருப்பு
கழற்சிப்பருப்பு சிறுகுறிஞ்சாவேர்
சிறுகுறிஞ்சாக்கொடி

இவைகளும் வகைக்கு 1 மரக்கால்

கொடிவேலி வேர்ப்பட்டை 1½ மரக்கால்

இவைகளைச் சிறுசிறு துண்டுகளாக்கி ஒரு பெரும்பானையிலிட்டுக் குழித்தைலமாய் இறக்கிக் கொள்ளவும்.

இத்தைலத்தில் ஒரு துட்டெடை எடுத்து உட்கொள்ளப் படர்தாமரை நீங்கும்.

307. காணாக்கடி, புதுக்கடி, பழங்கடிக்கு

நந்தனக் கொன்றை வேரதின் பட்டை
நம்பிராய் வேருடன் பட்டை
இந்தயி ரண்டு பட்டையு முலர்த்தி
யிடித்துநன் றாய்வடிக் கட்டி

சுந்தர நெல்லிக் கெந்தகம் பலமொன்
றுமிரதம் பணவெடை யதுமா
யிந்தவி ரண்டு மத்திமுன் றூளு
மியல்பதாஞ் சட்டியிற் போடே 454

போட்டுவெண் பசுவின் கோமிய மதன்மேல்
பொருத்தவே யொருவிரற் கனமாய்
தாட்டிக மாய்விட் டூறிமூன் றதுநாள்
தானதின் வானதின் பிறகு
நாட்டமாய் வெருக டிப்பிர மாணம்
நாடியே யிரண்டுவே ளையுமுண்
வாட்டிரு நாற்பத் தெட்டு தோற்கடியும்
வளர்புதுக் கடியது மறுமே 455

(இ-ள்.) கொன்றைவேர்ப்பட்டை பிராய்வேர்ப்பட்டை

இவ்விரண்டையுஞ் சமனெடுத்து நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணஞ்செய்து வஸ்திரகாயஞ்செய்யவும். ஒரு கல்வத்தில்

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | 3 குன்றியும் |
| ,, நெல்லிக்காய்கெந்தகம் | 1 பலமும் |

இட்டு நன்றாக அரைக்கக் கஜ்ஜலியாகும். இதனுடன் முன்தூளைச் சேர்த்து, ஒரு சட்டிதனிலிட்டு வெள்ளைநிறப்பசுமாட்டு மூத்திரம் மருந்துகளுக்கு மேல் ஒரு விரல் வரும் அளவும் விட்டு 3 நாட்கள் ஊறவைக்கவும்.

நன்றாக நிழலில் உலரவைத்துப் பத்திரப்படுத்தி மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தினமும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். 48 வித தோல் வியாதிகளும் விஷக்கடிகளும் தீரும்.

### 308. முளைக்கடிகைக்கு மருந்து

முளைக்கடி கைக்கு வுச்சித மருந்து
மொழின்றேன் கௌரிபா டாணம்
வளர்ந்துரி சியுடன் கௌரிபா டாணம்
வகையதுக் கோர்வராக னெடை
இளங்கொடிக் காலின் வெத்திலைச் சாற்றி
லேயரைத் துண்டையும் பண்ணி
சளஞ்செயு முளையிற் போட்டிடு விபரந்
தான்சொல்வேன் வெத்திலைச் சாறே. 456

வெத்திலை குப்பை மேனியுங் கானில்
வேலியின் பருத்தியிம் மூன்றி
லுத்திடுஞ் சாற்றி லொன்றுவிட் டரைத்து
லோதிய சீரைமுக் களவாய்
நத்தியே கிழித்தச் சீரையி லூட்டி
நடுமுலை யதனிலே போடு
மத்திடு முளையுஞ் செத்தது வீழு
மப்புணின் வாய்குழி யாமே 457

ஆமதற் கெண்ணெய்ச் சீரையொன் றுண்டு
வதுசொல்வேன் நல்லெண்ணெய் படிகால்
நேமமாம் வெண்குங் கிலியமு முள்ளி
நேர்சி வனாருட வேம்பு
வாமவேம் பாடம் பட்டையி னுடனே
வன்கொடி வேலிவே ரைந்து
மாமதைப் போட்டு யெரித்தெண்ணெய் பதத்தில்
வடித்திடோர் கலசம தனிலே 458

கலசம தனிலே யெண்ணெயை வைத்துக்
கலிங்கபா லந்தனிற் தேய்த்து
சலஞ்செயுங் குழிவா யதனிலே போடு
தசையது வளர்ந்துபுண் ணாறுந்
துலைந்திடுங் கடிகை யுண்மைகை கண்ட
துமிது களையின்முற் றுதிறும்

நலமுள வயல்சூழ் தஞ்சைவாழ் சரப
நரபதி யுணர்விட மருந்தே 459

(இ-ள்.) சுத்திசெய்த கௌரீபாஷாணம் 1 வராகனெடை
,, துருசு 1 வராகனெடை

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு இளம் வெற்றிலையின் சாறுவிட்டு நன்றாக அரைத்து உருண்டைகள் செய்து விஷக்கடியினாலுண்டான முளையில் போடவும்.

2) வெற்றிலைச்சாறு குப்பைமேனிச்சாறு
வேலிப்பருத்திச்சாறு

இம்மூன்றிலேதேனும் ஒரு சாற்றை ஒரு சுத்தமான சீலையிலூட்டி முளையின்மேல் போடலாம். முளை செத்து விழும். அப்புண்ணின் வாய்க்கு

நல்லெண்ணெய் ¼ கால் படி
வெண்குங்கிலியம்
உள்ளி
சிவனார்வேம்பு
வேம்பாரம்பட்டை
கொடிவேலி வேர்

இவைகளை வகைக்கு ½ வராகனெடை எடுத்துச் சூரணித்துப்போட்டு எரித்துப் பக்குவத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையுச்சியிலும் புண்ணின் வாயிலும் இடவும். குழிப்புண்கள் தூர்ந்து விடும். கைகண்டது.

### 309. கடியினால் வீங்கினத்திற்குப் பூச்சு

காலினிற் கடித்த விடமது மீறிக்
கதித்துமெய் காலது வீங்கில்
மேலினிற் பூசப் பாம்பதன் சட்டை
மெய்ப்புடன் சட்டியிற் கறுக்கிக்

கோலமா மணக்கி வெண்ணெயிற் குழைத்துக்
குணமுடன் பத்துநாட் பூசு
மேலிடு விடமூ மிறங்கிடுந் தக்கோர்
விபரமா யுணர்முறை யிதுவே 460

(இ-ள்.) காலில் விடந்தீண்டி அதனால் விஷம் அதிகமாகி உடம்பு வீங்கினால்

நல்ல பாம்பின் சட்டையை ஒரு சட்டியிலிட்டுக் கறுக்கி ஆமணக்கெண்ணெய் விட்டுக் குழைத்து 10 நாட்கள் புண் மேலிடவும். விஷங்கள் தீரும்.

310. கடிவிடஞ், சூலை, புண், குட்டத்திற்குப் புகை

துருசியுஞ் சாதி லிங்கமும் நாபி
தொட்டிபா ஷாணம தோடு
அரிதாரங் கௌரீபா ஷாணமும் வெண்பா
ஷாணமுந் துடிநவ சாரம்
அருமை வங்காளப் பச்சையொன் பதுவு
மளவுமொவ் வோர்வராக னெடை
இரதமுங்காரி னியமும் வகைக்கு
யிரண்டது விராக னெடையே 461

இரண்டதிற்காரி னியம்ம துருக்கி
யிரதமுங் கூடவே யிட்டுத்
தரணியிற் சாய்த்து யெடுத்துமுன் சொன்ன
தையெலா மெருக்கம்பால் விட்டு
துருசுட னரைத்துக் கையினா லொன்ப
துண்டையும் பண்ணியே யுலர்த்தி
யுரியதோர் புளியஞ் சிராயண விட்டு
யுடனதின் புகைபிடித் திடுமே 462

புகையது பிடித்துற் றயிறுடஞ் சோறும்
புசிகுளிர்ந் திடுதண்ணீர் கூட்டு
வகையுள மேலுங் குளித்திடு பறக்கும்
வனப்புள வெத்திலை தின்னு

நகையுள வாயிற் றாக்கினால் வெல்லந்
தானதை மென்றுமிழ்ந் திடுநீ
சுகமதா முப்பு மிடாதமாங் கொட்டைத்
துப்புற மென்றுமிழ்ந் திடுமே 463

இடுபுகை யதுவு மொவ்வொரு வேளைக்
கேயிடு தீருநோய் கேளு
கடிவிட மெதுவுஞ் சூலைபுண் குஷ்டங்
காணும்நோ யற்றிடு மிதற்கு
படியதிற் பதினா றுன்னித் தானம்
பண்ணியே தன்மமும் புகழுந்
துடியுடன் பெற்ற துரைசர பேந்திரன்
சுகமாக முணர்விடம் புகையே 464

(இ-ள்.) சுத்திசெய்த தொட்டிப்பாஷாணம்
,, கௌரீபாஷாணம்
,, வெள்ளைப்பாஷாணம்
,, வங்காளப்பச்சை
,, சாதிலிங்கம் சுத்திசெய்த அரிதாரம்
,, துருசு
,, நாபி
பொரித்த நவசாரம்
இவைகள் வகைக்கு 1 வராகனெடை
சுத்திசெய்த பாதரசம் 2 வராகனெடை
,, காரீயம் 2 வராகனெடை

காரீயத்தை ஒரு சட்டியிலிட்டு அனலின்மேல் வைத்து உருக்கிப் பாதரசத்தைச் சேர்த்துத் தொந்தித்துப் பூமியில் விட்டுவிடவும். பின்னர் முன்கூட்டிய சரக்குகளுடன் இதையும் சேர்த்து ஒரு கல்வத்திலிட்டு எருக்கம்பால்விட்டு நன்றாக மையாகும்வரை அரைக்கவும். 9 உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொண்டு புளியம்புராணி அனலில் ஒரு உருண்டையை யிட்டுப் புகைக்கவும். விஷக்கடியுள்ள இடத்தில் இப்புகையைப் பிடிக்கவும்.

தயிர்சாதம் சாப்பிட்டுக் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்யவும். வெற்றிலை சீவல் போட்டுக்கொள்ளலாம். வாயில் உப்புகை தாக்கினால் வெல்லத்தைமென்று உமிழ்ந்து விடவும்.

உப்புச் சேர்க்காத மாங்கொட்டை உபயோகிக்கவும். இப்புகை மருந்தை ஒரு நாளைக்கு ஒரு தடவை புகைக்கவும். சூலை, புண், குஷ்டம் முதலான ரோகங்கள் தீரும்.

### 311 கடிரோகத்திற்குத் தைலம்

திருகுகள்ளிப் பெருக்கு டன்விளாம் பொருக்குச்
சேர்கழற் சிப்பருப் பதுவு
மறுவறு குன்றிப் பருப்புவரகாலி
வலப்புழுக் கையுடன் றகரை
விரைமுதிற் றேங்காய் றிருகலு மழிஞ்சில்
விரைசிவ னாருட வேம்பு
முற்கொடி வேலி வேர்மிள கரணை
யுற்றிடும் வேர்பதி னொன்றே 465

பதினோரு மருந்துஞ் சமனது கூட்டிப்
பானையி லிட்டுவாட் டதனி
னுதரம்விட் டகலும் புழுக்கையிற் றனலிட்
டுற்பனற் றயிலம திறக்கி
இதனுட னுள்ளுக் கொருவரா கனெடை
யேபுசி கடியிலும் பூசு
மிதைப்புணுங் கண்ட யிடத்திலும் பூசு
மிதற்குமெக் கடியகன் றிடுமே 466

கடியுமே யகலும் புளிபுகை யிலையுங்
கைப்பது தள்ளு வாய்வதுவுந்
துடிபதார்த் தங்கள் தள்ளிடு கடிகள்
துப்புற யகலுமே யிந்தப்

படியத விரண்ய கெற்பதா னங்கள்
பாவையர் கன்னிகா தான
முடனிர சிதயா னைத்திரள் தான
மும்மருள் விபவுனர் முறையே 467

(இ-ள்.)

| | |
|---|---|
| திருகுகள்ளிப்பெருக்கு | தேங்காய்த்திருகல் |
| விளாம்பொருக்கு | அழிஞ்சில்விதை |
| கழற்சிப்பருப்பு | சிவனார்வேம்பு |
| குன்றிப்பருப்பு | கொடிவேலிவேர் |
| வெள்ளாட்டுப்புழுக்கை | மிளகரணை |
| தகரைவிதை | |

இவைகளைச் சமனளவெடுத்து இடித்து ஒரு பானையில் இட்டு ஆட்டெருத்தணல் இட்டுக் குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும். இதில் வராகனெடை எடுத்து உட்கொள்வதுடன், கடிவாயிலும் பூசவும். எவ்வித கடிவகைகளும் தீரும்.

பத்தியம்: புளி, புகையிலை, கசப்புப் பண்டங்கள், வாயு பதார்த்தங்கள் முதலானவைகளை நீக்கவும்.

## 312. வண்டுகடியால் கைகால்களில் சிராய்போல் கிளம்பினதற்கு மருந்து

வண்டு கடியாற் கைகள்கா லதனிலே
மரச்சிராய் போற்கிளம் பினதற்
குண்டொரு மருந்து கட்டுக்கொ டியிலை
யிலுற்பன காடியை வார்த்து
கண்டவே வேக வைத்ததைக் கட்டு
சொற்படி யேழுநாடனக்கு
முண்டியே முன்சொ லிலையதை யரைத்து
மூன்றுநாட் பூசிடப் போமே. 468

(இ-ள்.) கட்டுக்கொடியிலையில் காடி வார்த்து அடுப்பின் மேலேற்றி வேகவைத்து 7 நாட்கள் சாப்பிடவும். இதையே நன்றாக அரைத்து 3 நாட்கள் மேலேயும் பூசவும். மரச்சிராய் போல் கிளம்பின வண்டுகடிகள் தீரும்.

### 313. கடியினால் கால்கை சொரப்புகளுக்குக் குடிநீர்

காலுடன் கையுஞ் சொரப்பதா யிருந்தால்
கணக்கெழு குறுணிநீ ரதன்னிற்
கோலமா மரசம் பட்டையுந் தூணி
கொண்டுவெந் நீரிலே போட்டுச்
சாலமுந் நாழியாய்க் காய்ச்சியந் நீரை
தான்குடி யிரண்டுவே ளையுமே
யேலதாய் மூன்று முறையுமொன் பதுனா
ளேகுடித் தள்ளிடு கைப்பே 469

கைப்புடன் புளிப்புந் தள்ளுயிந் நீரைக்
கனலிலே தானேவைத் துண்ணு
வெப்புள வாயு வென்பதெல் லாந்தள்
விமலனார் கிருபையி னாலே
தப்பிலாக் கடியின் சொரப்பது மீளுஞ்
சத்திய நீதியாற் றஞ்சை
மெய்ப்புட னாளுஞ் சரப பூபதியு
மிகவுணர்ந் திடுகுடி நீரே 470

(இ-ள்.) அரசம்பட்டைத்தூள் 2 மரக்கால் எடுத்து 7 மரக்கால் சுத்த ஜலத்தில் போட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு நாழியாகுமட்டும் எரித்து காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். இம்மருந்தை 9 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

பத்தியம் : கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புளிப்புப் பண்டங்களையும் நீக்கிவிடவும். வெந்நீர் பருகவும்.

### 314. கடிபடர்ந்த இடத்தில் பூச்சு மருந்து

தேங்கனிக் கொட்டாங் கச்சியின் கரியுஞ்
சீருள கருத்தகுங் கிலியம்
பாங்குட னிரண்டுஞ் சரியதாய்ச் சேர்த்துப்
பண்புள வம்மியிற் பொடித்து
மோங்குமா மணக்கி னெண்ணெயிற் குழப்பி
யுற்றவேக் கடிபட ரிடத்தி
லாங்கதைப் பூசு விடமது மீளு
மற்புத மானுசொல் முறையே 471

(இ-ள்.)கொட்டாங்கச்சிக்கரி
கருங்குங்கிலியம்

இவ்விரண்டையும் சரியளவெடுத்துச் சூரணஞ் செய்து ஆமணக்கெண்ணெயில் குழப்பி விஷக்கடி வீக்கமுள்ள இடங்களில் போடவும். விஷங்கள் தீரும்.

### 315. கடிரோகத்திற்குப் புழுவிற்குக் கட்டுமருந்து

காவளை வேரு மிலையுள்ளி வசம்புங்
கருதிய சிறுநீர் வார்த்து
ஆவலாய் நைய நறுக்கியுங் கட்டியே
யதைவிடிந் துடனவிழ்த்த திடுநீ
ஆவிய திழந்தோர் புழுவிழுந் தாலத
னக்கடி விடமகன் றிடுமே
பூவுலக் கிறைவர் போற்றிய தஞ்சைப்
புரவலன் மானுவின் முறையே 472

(இ-ள்.) காய்வேளைவேர் பூண்டு
காய்வேளைஇலை வசம்பு

இவைகளை உலகமறியாப் பிள்ளையின் சிறுநீர்விட்டு நசுக்கி இரவில் கடி இருக்குமிடத்தில் வைத்துக் கட்டிக் காலை வேளையில் அவிழ்த்து விடவும். புழுக்களும் சாகும்.

### 316. குழந்தைகள் கைகாலினில் கடிவந்ததற்கும் தினவிற்கும்

*சந்ததி கால்கை தணிற்கடி வகத்தாற்*
*சதிசெயுந் தினவது மிகுந்தால்*
*சுந்தரச் சேவக னார்க்கிழங் குடனே*
*சொல்லுநேர் வாளமுட் பருப்பு*
*யிந்தயி ரண்டுமா லம்பால் தனைவார்த்*
*தேயரைத் தப்போதப் பதைக்கி*
*முந்தவே பூசிக் குளித்திட மீளு*
*மூன்றுநா டதனிலே தானே.* 473

*(இ-ள்.)* விஷக்கடியினால் அரிப்பு அதிகமானால்
சேவகனார்க்கிழங்கு
தேர்வாளப்பருப்பு

இவ்விரண்டையும் ஆலம்பால் விட்டு வேண்டும் போது அப்போதைக்கப்போது அரைத்து லேசாகப் பூசிக் குளிக்கவும். *3* நாட்களுள் கடி விஷங்கள் மீளும்.

### 317. கடிவகத்தால் மயிர் புழுவிற்குப் பூச்சுமருந்து

*குஞ்சியிற் புழுவின் கடிவகந் தனக்குக்*
*கூறுவேன் றகரையின் விரையு*
*மிஞ்சிடா துழக்குப் பொடிசெய்து முற்றல்*
*மேவிய தெங்கயனிற் றிருக*
*லஞ்சிடா திட்டு யெருக்கநற் பாலி*
*லாழாக்கு வார்த்தைப் பிசைந்து*
*சஞ்சல மில்லாச் சட்டியி லிட்டுத்*
*தானதை வண்டது கட்டே.* 474

*கட்டியே நிலமி டாவினிற் றானே*
*கருத்துடன் மூன்றுநாட் புதைத்து*
*சட்டியை நாலாநா டனிலெடுத் துத்தான்*
*பிசைந்ததைத் தலை தனிலே*

வொட்டிய பொல்லாக் கடிவகந் தனிலே
யொண்ட யடிக்கடி பூசத்
திட்டமா யாதி சிவன்கிரு பையினாற்
றீர்ந்திடு மிதுவிபு வுரையே. 475

(இ-ள்.) தலையில் ஏற்படும் புழுவெட்டிற்குத் தகரை விதை ஒரு உழக்கு எடுத்துச் சூரணஞ்செய்து முற்றின தேங்காயைத் திருகிப் பாலைப் பிழிந்து அதனுடன் எருக்கம் பால் ஒரு ஆழாக்குச் சேர்த்துப் பிசைந்து ஒரு பானைதனில் இட்டு, வாயை ஒரு வெள்ளைத் துணியினால் கட்டி வேறு சட்டிக்கொண்டு மூடி, 3 நாட்கள் பூமியில் புதைத்து 4-வது நாளெடுத்துப் பிசைந்து தலையில் உண்டாகும் புழுவெட்டில் பூசவும். அவைகள் தீரும்.

318. தலையினிற் கடிவகப்புழு விழக் கட்டுமருந்து

இலுப்பையின் புண்ணாக் கும்புற்றான் சோறு
மிதைச்சிறு நீரதை வார்த்து
வலுத்துமே யரைத்து நிரம்பவும் பூசி
வண்மைமே லாவிரை விரையை
நலத்துடன் றுவைத்துற் றலையினி லிட்டு
நாளது மூன்றுமே கட்டி
கலைத்திடா தவிழ்க்கப் புழுவிழுங் கடியுங்
கதிரவன் முன்பனி யாமே. 476

(இ-ள்.) இலுப்பைப் புண்ணாக்கு
புற்றான்சோறு

இவ்விரண்டையும் உலகமறியாச் சிறு பிள்ளைகளின் மூத்திரத்தை விட்டு நன்றாக அரைத்துப் புழுக் கடியில் பூசவும். பின்னர் ஆவாரை விரையை அரைத்துக் கட்டிவிடவும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்யவும். புழுக் கடிகள் தீரும்.

### 319. கடிவகத்திற்குப் பூச்சு மருந்து

கடிவக மதற்கு நாட்டினி னெள்ளைக்
கழுவியே ரவியினி லுலர்த்தி
வடிவுள சட்டி யிட்டெருக்கம்பால்
வாருமெள்ளப் புதைந்திட லூத்தித்
துடியுள ரவியினி லுலர்த்தியே நன்றாய்ச்
சொல்லெருக் கம்விற கிட்டு
மடவுடன் கறுக வறுத்துமே பொடிசெய்
தகைசெயும் வகைதனைக் கேளே. 477

வகையது கேளு யெள்ளிணெண் ணெயுமே
வளமுட னெடுத்ததைத் தடவி
தகைவுள பொடியை மேலுமே போட்டுத்
தான்குளி மூன்றுசா மத்தில்
சகமதி லொக்கக் கடிவக மகலுஞ்
சச்சிதா னந்தனார் கிருபை
யகமதிற் பெற்ற சரபபூ பால
னன்புட னுணர்விடப் பூச்சே 478

(இ-ள்.) கடிவகத்திற்கு எள் ¼ படியை எடுத்துத் தண்ணீரில் கழுவி வெயிலில் உலர்த்தவும். பின்னர் ஒரு சட்டியை நன்றாகக் கழுவி அதிலிட்டு எள் நன்றாக மூழ்கும்வரை எருக்கம்பாலை ஊற்றி வெயிலில் வைத்துக் காய்ந்தபின் எருக்கம் விறகினால் கறுப்பாகும் வரை எரித்துப் பொடி செய்யவும்.

நோயாளி நல்லெண்ணெய் இந்தத் தூளை போட்டுத் தேய்த்துக்கொண்டு குளிக்கவும். மூன்று ஜாமத்திற்குள் விஷக் கடிகள் தீரும்.

### 320. நஞ்சு தின்றவர்க்கு மாத்து மருந்து

நஞ்சைத் தின்ற வர்க்குமோர் மருந்து
நவிலுவே னுண்மைய தாகச்
சஞ்சல மில்லாக் கருவேலம் பட்டை
தன்னையே துவைத்துகா டியிலி

லுஞ்சல தாகக் கலந்துமே கொடுக்க
வுடனேயன் னஞ்செலாந் தீருந்
தஞ்சைமா நகரை நீதியோடாளுஞ்
சரபபூ பதியுணர் மருந்தே. 479

(இ-ள்.) கருவேலம்பட்டையை எடுத்துச் சிதைத்துக் காடியுடன் அரைத்துக் கொடுக்கவும். நஞ்சுகள் முறியும்.

### 321. நஞ்சுக்கும் எட்டிக்கும் மாத்து மருந்து

தண்ணியி லூணான் கொழுந்ததை யரைத்துத்
தான்கொடு நஞ்சுகள் மீளும்
வண்ணகத் தரிப்பிஞ் சதைப்பழந் தண்ணீர்
வார்த்தரைத் தேகரைத் துக்கொள்
தின்னிட யெட்டி யதற்குமோர் மாத்து
செப்புவேன் நாவலின் பட்டை
நிண்ணய மாக வரைத்துமே கொடுக்க
நீங்கிடு மெட்டியின் விடமே. 480

(இ-ள்.) ஊணாங்கொழுந்தை அரைத்து உள்ளுக்குக் கொடுக்க நஞ்சுகள் மீளும்.

2. கத்திரிப் பிஞ்சைப் பழந்தண்ணீருடன் அரைத்துப் பச்சையாகவே உட்கொள்ளவும்.

3. எட்டி விஷத்திற்கு நாவல்பட்டையைச் சிதைத்து நன்றாக அரைத்து உட்கொண்டால் அது மாத்து மருந்தாகும்.

### 322. எருக்கம்பாலுக்கும், ஒட்டடைக்கும் மாத்து

எருக்கினின் பாலை யுண்டவர் தமக்கு
இளநீரைக் குடித்திட மீளுந்
திருக்குள வொட்டடை யுண்டிடில் வெண்ணெய்
தின்றிடு மதுவுமில் லாட்டால்

எருக்கம் பசரி யரைத்ததோர் விழுதை
வண்மையாய்க் கொடுத்திட மீளுஞ்
சர்க்கரை மொழியான் சரபபூ பதியுந்
தானுண ரொட்டடை மாத்தே. 481

(இ-ள்.) எருக்கம்பாலைத் தின்றவர்க்கு இளநீரைப் பருகக் கொடுத்தல் மாத்தாகும்.

ஒட்டடையை உண்டவர்களுக்கு வெண்ணெய் அல்லது பசரி விழுது இவற்றில் ஏதோனுமொன்றைக் கொடுக்கவும்.

## 323. ஊமத்தை கழுதை வண்டு, அவுரி இவைகளுக்கு மாத்து

தாமரைக் கிழங்கு மலதெலு மிச்சஞ்
சாறதுங் கொடுத்திடு பொல்லா
வூமத்தை தின்ற விடமது மீளு
முலைந்திடு கழுதையின் வண்டு
தாமதைத் தின்றால் சங்கம்வேர்ப் பட்டை
தானரைத் தேகொடு குணமாம்
வூமியி னவுரிக் கேகடுக் காயைப்
பொற்புள காடியி லீடுமென். 482

(இ-ள்.) ஊமத்தை விஷத்திற்குத் தாமரைக்கிழங்கு அல்லது எலுமிச்சம்பழச் சாற்றைக் கொடுக்கவும். கழுதை வண்டையுட்கொண்ட விஷத்திற்குச் சங்கம் வேர்ப் பட்டையயரைத்துக் கொடுக்கவும்.

அவுரி நஞ்சுக்குக் கடுக்காயைக் காடியில் அரைத்துக் கொடுக்க மாத்தாகும்.

## 324. குன்றிக்கும் பச்சை நாபிக்கும் மாத்து

கானதிற் குன்றி தின்றிடி லதற்குக்
கருதுவேன் சுக்கதை யரைத்து
நீளய மாகக் கொடுவிட மீளும்
நேரிலா பச்சை நாபிக்கித்
தானில வம்பிசி னரைத்ததைக் கொடுநீ
தப்பிலா பருத்தியின் பிஞ்சு
மானதை யரைத்து யிரண்டதி லொன்றை
வகையுடன் கொடுவிட மறுமே. 483

விடமது மீண்டால் விட்டிடு மருந்தை
விடமிருந் திடிற்பசு வின்பா
லடவுடன் சேர்த்து மயிரின்மா ணிக்க
மற்புத கர்ப்பூர மிரண்டுந்
திடமிலா தரைத்துங் கொடுமிலா விட்டாற்
சிறுகீரை வேரையு மரைத்துக்
கொடுபச்சை நாபி விடமது மீளுங்
குணமிரு மானுவின் முறையே. 484

*(இ-ள்.)* குன்றிமணியைத் தின்ற விஷத்திற்குச் சுக்கை அரைத்துக் கொடுக்கவும்.

பச்சைநாபியைத் தின்றால் இலவம் பிஞ்சினை அரைத்தோ அல்லது பருத்திப் பிஞ்சை அரைத்தோ உட்கொள்ளவும். விஷம் நீங்கிவிட்டால் மருந்தை நிறுத்தவும். இல்லாவிடில்,

2. பசுவின் பால்விட்டு அரைத்த மயிர்மாணிக்க விழுதுடன் கற்பூரத்தைச் சேர்த்து உட்கொள்ளவும்.

3. சிறுகீரை வேரையரைத்தும் உட்கொள்ளலாம். நாபி விஷங்கள் தீரும்.

## 325. எவ்வித நஞ்சுகளுக்கும், எலுமிச்சம்விதை தின்றதிற்கும் மாற்று

எந்த நஞ்சுக்குந் தண்டது சிவந்த
 எழில்மிகு நாயுறு வியையுஞ்
சுந்தரமான பசுவிநற் பாலிற்
 றோணவு மரைத்துவெந் நீரிற்
றந்திட மீளும் புளிப்புள யெலுமிச்
 சம்விரை தின்றிடி லதற்கு
விந்தையாங் கையாந் தகரையை யரைத்து
 விழுங்கிடற் றீருமவ் விடமே. 485

(இ-ள்.) எவ்வித தாவர விஷங்களுக்கும் சிவந்த நாயுறுவியைப் பசுவின் பாலுடன் அரைத்துக் கொடுத்து வெந்நீர் பருகக் கொடுக்கவும்.

2. புளிப்புள்ள எலுமிச்சம் விரைகளை சாப்பிட்ட விஷத்திற்குக் கையாந்தகரை இலையை அரைத்து விழுங்கவும்.

## 326. சேங்கொட்டைக்குக் குன்றிப் பருப்புக்கு மாத்து

பாரினிற் சேங்கொட் டையைத்தின்னிற் புரசம்
 பட்டையை யரைத்துக்கா டியினிற்
சீருடன் குடிக்கப் பலவிட மீளுஞ்
 சிற்றகத் தியினிலை தன்னைச்
சாரமாங் காடி தனிலரைத் துண்ணத்
 தப்பியே குன்றியின் பருப்பைக்
கூரெள்ளி ணெண்ணெ யுடன்குடி விடமுங்
 குலைந்திடு மிதுகைகண்ட துவே. 486

(இ-ள்.) சேங்கொட்டை விஷத்திற்குப் புரசம் பட்டையைக்காடி விட்டரைத்து உட்கொள்ளவும்.

2. குன்றிப்பருப்பு விஷத்திற்குச் சிற்றகத்தி இலையைக் காடிவிட்டரைத்து எள்ளெண்ணெயுடன் குடிக்கவும்.

## 327. கற்பூரத்திற்குங் கள்ளிப் பாலுக்கும் மாற்று

எண்ணெயி னுடனே வாசகற் பூர
மேகலந் தேகுடித் திடிலே
வண்ணமாங் கையாந் தகரையின் சாற்றை
வளமுடன் குடிவிட மீளு
முண்ணிடுங் கள்ளிப் பாலதின் விடத்துக்
கோதுவே னாவரை யிலைச்சாறு
நண்ணியே கொள்ளக் கள்ளியின் விடத்தை
நகர்ந்திடு முன்மைய தாமே. 487

*(இ-ள்.)* நல்லெண்ணெயுடன் கற்பூரஞ் சேர்த்துக் குடித்த விஷமாகில் அதற்கு கையாந்தகரைச் சாற்றைக் குடிக்க விஷம் மீளும்.

கள்ளிப்பால் விஷத்திற்கு ஆவாரையிலைச் சாற்றைப் பருகவும்.

## 328. பேய்ப்பீர்க்கங் காய்க்கும் சுண்ணாம்பிற்கும் மாற்று

கசடுபேய்ப் பீர்க்கங் காயதைத் தின்றாற்
கருதுவேன் கோரையின் மூல
மிசைவுள குடிநீர் வைத்ததைக் கொள்ளு
மிடருறு விடமது மீளும்
வசமிலாச் சுண்ணாம் பதைத்தின்னிற் சீந்தில்
வன்கொடி மென்றிடத் தீரும்
பசையுள பாடா ணமதையுந் தின்றால்
பருத்தியின் காய்ரச முண்ணே. 488

இரதமுஞ் சிரசி லேறிடி லதற்கு
மெழில் பெரும் பூசனிக் காயின்
வருரச முழக்கில் சீனியைப் போட்டுண்
மற்றுமோர் மாத்துநெல் லிக்காய்

தருரச மிளநீ ருங்கழ னீருஞ்
சாற்றுமிம் மூன்றையுங் கலந்து
கருவுடன் மூன்று நாளதுங் கொள்ளு
கருதுவே ளின்னமோர் வேதே. 489

வேது வுன்மத் தையிலிலை கழற்சி
விடுமிலை பருத்தியி னிலையுஞ்
சாதக மான தண்ணியிற் காய்ச்சித்
தான்விட்டு நெய்தலைக் கிட்டு
மோதுவெந் நீரில் மூழ்கிடு மிதெல்லா
முசிதமாம் ரசமதின் மாற்று
பூதலத் தரசர் போற்றிடுஞ் சரப
பூபதி யுணர்ரச மாற்றே. 490

(இ-ள்.) பேய்ப் பீர்க்கங்காயைத் தின்றால் அதற்கு மாற்றாகக் கோரைக் கிழங்கைக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

2. சுண்ணாம்பைச் சாப்பிட்டு வாய் வெந்து விட்டால் சீந்திற்கொடியை வாயிலடக்கி மென்று தின்னவும்.

3. பாஷாணத்தைச் சாப்பிட்ட விஷத்திற்குப் பருத்திக்காய் ரசத்தை உட்கொள்ளவும்.

4. பாதரச விஷத்திற்குப் பெரும்பூசணிக்காய்ச்சாறு ஒரு உழக்கு எடுத்து சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவும்.

(b) நெல்லிக்காய்ச்சாறு
இளநீர்
அரிசி கழுவிய நீர்

இம்மூன்றையும் ஒன்று கலந்து மூன்று நாட்கள் உட்கொள்ளவும்.

(c) வேது:
ஊமத்தையிலை

கழற்சியிலை
பருத்தியிலை

இம்மூன்றையும் தண்ணீர்விட்டுக் கஷாயம் (வெந்நீர்) வைத்துத் தலைக்கு நெய்யைத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்யவும். இரசத்தினாலேற்பட்ட விஷங்கள் தீரும்.

### 329. நஞ்சுக்கும், பாஷாணத்திற்கும், சேங்கொட்டைக்கும் மாற்று

நஞ்சது தின்றால் முருங்கையி னிலையை
நலமுள காடியி லரைத்து
மிஞ்சிடா மற்கொள் வாந்தியா கியுமவ்
விடமது மீளும்பா ஷாண
வஞ்சக விடத்துக் கோவையி னிலைச்சாறு
வளமுடன் கொள்ளுசேங் கொட்டைக்
கஞ்சிடா சேவ கனார்கிழங் குண்ணு
அற்புத மானுவி னருளே. *491*

(இ-ள்.) நஞ்சை உண்டவர்க்கு (தாவர விஷம்) முருங்கையிலையைக் காடி விட்டரைத்து உட்கொண்டால் அவை வாந்தியாகி விஷங்கள் தீரும்.

பாஷாணத்தினால் ஏற்பட்ட நஞ்சுக்குக் கோவையிலைச் சாற்றை உட்கொள்ளவும்.

சேங்கொட்டை விஷத்திற்குச் சேவகனார்க் கிழங்கை அரைத்து உட்கொள்ளவும்.

### 330. எட்டிக்கும், சேங்கொட்டைக்கும் மாற்று

எட்டியைத் தின்றால் நாவலி னிலைச்சா
ரிதமுடன் கொடுத்துடம் புக்குஞ்
சட்டமாய்ப் பிடித்துத் திமிரது மிடுநீ
சதிருடன் மீண்டிடுந் துற்சேங்

கொட்டைய துக்கு முழக்குவா நெய்யிது
கூட்டிடா ழக்குதின் மிளகுந்
திட்டமாய் நுணுக்கிப் போட்டதைக் கொள்ள
சேங்கொட்டை விடமது மறுமே. 492

(இ-ள்.) எட்டிவிதையைத் தின்ற விஷத்திற்கு நாவல் இலைச்சாறு உட்கொள்ளவும். உடம்புத் திமிர் (தனுர் வாதம்) தீரும்.

சேங்கொட்டை விஷத்திற்குப் பசுவின் நெய் ஒரு உழக்குடன் மிளகு ஒரு ஆழாக்கு நுணுக்கியிட்டு உட்கொண்டு, மேலும் பூசவும்.

**331. ஊமத்தை, கள்ளிப்பால், அரளிக்கு மாற்று**

தப்பியே ஊமத் தையதைத் தின்றா
றாமரைக் கிழங்கையுந் தின்னு
செப்பிய கிழங்கை யரைத்துடம் பெங்குந்
திமிரிட மவ்விட மீளுந்
துப்பிலா கள்ளிக் கறலிக்குங் கடுக்காய்
றூளதைத் தின்றிட மீளு
மொப்பிலாற் றஞ்சைச் சரபபூ பால
லுண்மையா யுணர்விட மாற்றே. 493

(இ-ள்.) ஊமத்தை விதை, ஊமத்தங்காய் இவைகளின் விஷத்திற்குத் தாமரைக் கிழங்கை உட்கொள்ளவும். இதனை அரைத்து உடம்பிலும் பூசிக்கொள்ளவும்.

கள்ளியின் விஷத்திற்குக் கடுக்காய்த்தூள் மாற்றாகும்.

**332. எருக்கிலை, கழுதைவண்டு நெல்லின் வேருக்கு மாற்று**

எருக்கிலை தின்றாற் கழுதைப்பால் பச்சரிசி
யுந்தின்ன விடமது மீளுங்
கர்த்தப வண்டைத் தின்றிடிற் கொள்ளுங்
சுடலினுப் புடனரைத் துக்கொள்

உரைத்த தல்லாற் சங்கம் பழச்சாறு
முட்கொளு மவ்விட மீளும்
வருத்தமாம் நெல்லின்வே ரைத்தின்றால்
அளவிலா மிச்சம்வே ருண்ணே. 494

(இ-ள்.) எருக்கிலையை உட்கொண்டுவிட்டால் கழுதைப்பால், பச்சரிசி இவற்றில் ஏதேனுமொன்றை சாப்பிட விஷங்கள் தீரும்.

கழுதை வண்டை உட்கொண்டு விஷமித்து விட்டால் கொள்ளுடன் கடலுப்பைச் சேர்த்துத் தின்னவும். அல்லது சங்கம்பழச்சாற்றைப் பருகவும்.

நெல்லின் வேரையுட்கொண்ட விஷத்திற்கு விளாமிச்சம் வேரை உண்ணவும்.

### 333. பச்சைநாபி, மாவலிங்கைக்கு மாற்று

பச்சைநாபி யையுந்தின் றிடில தற்கும்
பண்புள சீரக மரைத்து
உச்சிதமான தயிரினிற் குடித்த
வுடனே நாபியின் விடமறுமே
நச்சுமாவு லிங்கைத் தின்றிடிற் சிறுநீர்
நயமதாய்க் கொள்விட மீளுஞ்
சச்சிதா நந்தர் கிருபையைப் பெற்ற
சரபபூ பதியுணர் முறையே. 495

(இ-ள்.) பச்சை நாபியை உட்கொண்டால் அதற்குச் சீரகத்தைத் தயிரில் அரைத்துக்கொடுக்கவும்.

மாவிலிங்கை விஷத்திற்கு உலகமறியாப் பிள்ளையின் சிறுநீரைப் பருகவும்.

## 334. சேவகனார் கிழங்கு, காஞ்சிரை, கழுதைவண்டுக்கு மாற்று

சேவக னார்கிழங் குண்டிடில் மாற்று
செப்புவே னுச்சித மாக
வாவலாற் றூது வளையின்வேர்க் காடி
யதிலரைத் துண்ணுகாஞ் சிரைக்கு
நாவலின் பட்டைத் துவைத்தக் காடியி
னாற்கொளு கழுதைவண் டுண்டால்
தாவிய சங்கம் வேரதைக் காடி
தனிலரைத் துணுவிப வுரையே. 496

(இ-ள்.) சேவகனார்க் கிழங்கை உண்டதற்குத் தூது வேளை வேரைக் காடியில் அரைத்துப் பருகவும்.

எட்டிவிதைக்கு நாகப்பட்டையைச் சிதைத்துக் காடியுடன் பருகவும். விஷம் முறியும்.

கழுதை வண்டை உட்கொண்ட விஷத்திற்குச் சங்கம் வேரைக் காடியுடன் அரைத்துக் குடிக்கவும். விஷம் முறியும்.

## 335. அரளி வேருக்கு பல நஞ்சுக்கு

துடவையி னலரி வேரதைத் தின்றாற்
றுப்புள பருத்தியின் வேரை
யடவுள காடி யதிலரைத் துண்ணு
மல்லது பலவிட முண்டால்
திடபுளி யரணை வேரைநீர் விட்டுத்
திடமுட னரைத்துக்கொள் ளின்னந்
துடியுள மாவின் பருப்பைத் தயிறிற்
றுரிதமா யரைத்துநீ யுண்ணே. 497

உண்ணிடி தல்லாற் சிறுகீரை வேரு
முற்றபொன் னாங்காணி வேரும்
நண்ணிய தேங்காய்ப் பாலிலே கலந்து
நாட்டினின் இலுப்பையின் பட்டை
அண்ணுமே கறந்த பாலினிற் றுவைத்து
மதைக்கொளு நஞ்செலாந் தீரும்.
பண்ணிய தவத்தாற் பலன்பெறு சரப
பார்த்திப னுரைத்திடு மாற்றே. 498

(இ-ள்.) அரளிவேரைத் தின்ற விஷத்திற்குப் பருத்தி வேரைக் காடியிலரைத்து உட்கொள்ளவும்.

தெரியாத ஏதேனும் விஷத்தை உட்கொண்டதாகச் சந்தேகப்பட்டால், புளியரணை வேரைத் தண்ணீர்விட்டு உட்கொள்ளவும்.

2. மாம்பருப்பைத் தயிர்விட்டு அரைத்துச் சாப்பிடலாம்.

3. சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர் இவ்விரண்டையும் தேங்காய்ப் பாலுடன் துவைத்து உட்கொள்ளவும்.

4. இலுப்பைப் பட்டையை அப்போதே கறந்த பாலுடன் துவைத்துப் பருகவும். நஞ்சுகள் தீரும்.

### 336. கழுதை வண்டுக்கு மாற்று

வேசரி வண்டுக் கத்தியி னிலையை
விழும்புற வரைத்துக்கொள் ளலது
ஆசையாம் நாவல் கொட்டையை யரைத்து
மாவிநற் பாலிலே யுண்ணு

பாசமாய் முன்சொல் நாவலி னுடைய
பட்டையை யரைத்துவாப் பால்மோ
ரேசடு தியினி லெதகப் படினு
மிதமுடன் கொள்விட மறுமே. 499

(இ-ள்.) கழுதை வண்டை உட்கொண்டவர்கள் அத்தியிலையை அரைத்துச் சுண்டைக்காயளவு சாப்பிட்டால் விஷம் முறியும்.

2. நாவல் கொட்டையைப் பசுவின் பாலுடன் அரைத்துக் குடிக்கவும்.

3. நாவல் பட்டையைப் பசுவின் பாலிலோ அல்லது மோரிலோ எது கிடைக்கின்றதோ அதில் அரைத்துப் பருகவும். விஷம் தீரும்.

### 337. ஸகல நச்சுக்கும்

சகல நஞ்சுக்கு மவுரி கொமட்டி
மாதளை நல்லமா தளைமூன்றில்
வகையுள இலையைச் சமனதாய்க் காடி
வார்த்தரைத் துட்கொள் மீளுந்
தகைவுள ஸமய மதுக்குமிம் மூன்றிற்
றான்கிடைத் திடுயிலை யதனை
சுகமதாய்க் கொடுநஞ் சதுவெலா மகலுந்
துரைசர பேந்திர னருவே. 500

(இ-ள்.) எவ்வித விஷங்களை உட்கொண்டாலும் அவுரி, கொமட்டி, மாதளை, நல்ல மாதளை இவைகளைச் சமனெடுத்துக் காடி வார்த்தரைத்து உட்கொள்ளவும். அல்லது மேற்கூறிய இலைகளைக் கிடைத்த அளவு அப்படியே சாப்பிடவும். நஞ்சுகள் முறியும்.

பாசமாய் முன்சொல் நாவலி னுடைய
பட்டையை யரைத்துவாப் பால்மோ
ரேசடு நியினி லெதகப் படினு
மிதழுடன் கொள்விட மறுமே. 499

(இ-ள்.) கழுதை வண்டை உட்கொண்டவர்கள் அத்தியிலையை அரைத்துச் சுண்டைக்காயளவு சாப்பிட்டால் விஷம் முறியும்.

2. நாவல் கொட்டையைப் பசுவின் பாலுடன் அரைத்துக் குடிக்கவும்.

3. நாவல் பட்டையைப் பசுவின் பாலிலோ அல்லது மோரிலோ எது கிடைக்கின்றதோ அதில் அரைத்துப் பருகவும். விஷம் தீரும்.

### 337. ஸகல நச்சுக்கும்

சகல நஞ்சுக்கு மவுரி கொமட்டி
மாதளை நல்லமா தளைமூன்றில்
வகையுள இலையைச் சமனதாய்க் காடி
வார்த்தரைத் துட்கொள் மீளுந்
தகைவுள ஸமய மதுக்குமிம் மூன்றிற்
றான்கிடைத் திடுயிலை யதனை
சுகமதாய்க் கொடுநஞ் சதுவெலா மகலுந்
துரைசர பேந்திர னருவே. 500

(இ-ள்.) எவ்வித விஷங்களை உட்கொண்டாலும் அவுரி, கொமட்டி, மாதளை, நல்ல மாதளை இவைகளைச் சமனெடுத்துக் காடி வார்த்தரைத்து உட்கொள்ளவும். அல்லது மேற்கூறிய இலைகளைக் கிடைத்த அளவு அப்படியே சாப்பிடவும். நஞ்சுகள் முறியும்.

## 339. எண்ணெய்ச்சோறு தின்றதற்கு

எண்ணெயுஞ் சோறுந் தின்றிடி லவர்க்கு
விளாமிச்சம் வேரதை யரைத்து
வுண்ணது தீரு மெட்டிதின் றவர்க்கு
மோங்கிய நாவலின் கொட்டை
வண்ணவப் பட்டை யிரண்டையுங் காடி
வார்த்தரைத்துத் துக்கொளுந நசிய
முண்ணிடு மிளகும் வெத்திலை மென்று
முடனேநீ நசியமுஞ் செய்யே.

(இ-ள்.) எண்ணைச் சாதம் சாப்பிட்டு விஷமித்தவர்களுக்கு, விளாமிச்சம் வேரை அரைத்துக் கொடுக்கவும்.

எட்டி விஷத்திற்கு நாவல் கொட்டை, நாகப்பட்டை இவ்விரண்டையுங் காடி விட்டரைத்து உட்கொள்வதுடன் மிளகு, வெற்றிலை இரண்டையும் நசுக்கி நசியமிடவும் தீரும்.

## 340. பதினெட்டு நஞ்சுகளுக்கு மாற்று

பத்துடனெட்டு நஞ்சுக்கு மாற்று
பருத்தியி னிலைரச மதினிற்
சத்துவப் பழம்புளி யைக்கரைத் தருந்து
தந்திலை யகப்படா காலை
நத்து லமான பொடுதலைச் சாறு
நாழி தேங் கிளநீரும்நாழி
யுத்திடக் கலந்து கொள்பதி னெட்டு
வுற்பன நஞ்செலா மறுமே. 504

(இ-ள்.) 18 வித விஷங்களுக்கும் பருத்தியிலை ரசத்தில் பழைய புளியைக் கரைத்து உட்கொள்ளவும்.

| | |
|---|---|
| 2. பொடுதலையிலைச்சாறு | 1 நாழி |
| இளநீர் | 1 நாழி |

இவ்விரண்டையும் கலந்து உட்கொள்ளக் குணமாகும்.

## 341. எட்டிக்கு, சேவகனார் கிழங்குக்கு, தேன், நெய், ஊமத்தைவிடம், சதிரக்கள்ளிவிடம் முதலானவைகளும் மாற்று

எட்டியைத் தின்றால் மாற்றது நாவ
லினியசேவு கன்கிழங் கிற்குத்
திட்டமாம் நரளைக் கிழங்குடன் சுக்கு
தேனுக்கும் நெய்க்குமே மாற்று
சட்டமா மூங்கி லிலையுன்மத் தைக்குத்
தாமரைச் சுருள்புளி யாகும்
மட்டிலா சதுரக் கள்ளிக்கு மாற்று
மாவரை விரையும்வே ராமே. 505

(இ-ள்.)

| | |
|---|---|
| எட்டிக்கு மாற்று | - நாகப்பட்டை |
| சேவகனார்க்கிழங்கிற்கு மாற்று | - நரளைக்கிழங்குடன் சுக்கைச் சேர்த்து உட்கொள்ளவும் |
| தேனுக்கும் நெய்க்கும் மாற்று | - மூங்கிலை |
| ஊமத்தைக்கு மாற்று | - தாமரையிலைச்சுருள், புளி |
| சதுரக்கள்ளிக்கு | - ஆவரைவிரை, ஆவரைவேர் |

இவைகளைத் தண்ணீர்விட்டரைத்துச் சாப்பிடவும்.

## 342. எருக்கு, அரளி, கழுதைவண்டு, குன்றி முதலானவைகளுக்கு மாற்று

எருக்கு மாற்று எள்ளுசர்க் கரையு
மொழிலலரி யுமதைத் தின்றாற்
றிருக்கி பால் கடுக்காய்க் கழுதைவண் டுக்குச்
சேர்த்திடு சங்கநற் பழத்தை
உருக்க நெல் வேரு தின்றிடிற் காடி
யுற்பன குன்றிக்குச் சுன்றி
லுரத்திடு நாபிக் கவரையின் கொட்டை
யுடனேநெய் மாற்றது வாமே. 506

(இ-ள்.)

எருக்கு மாற்று - எள்ளும் சர்க்கரையும் ஆகும்

அரளிக்கு - பால்கடுக்காய்

கழுதை வண்டுக்கு - சங்கம்பழத்தைச் சேர்க்கவும்

நெல்லின்வேருக்குக் - காடியும்

குண்டுமணிவிஷத்திற்கு - சுக்கும்

நாபிக்கு - அவரைவிதை, நெய்

இவைகளையும் உட்கொள்ளவும்.

### முடிவுரை

சாலிய வாகன மாயிரத்தெழுநூற்
றன்பது கலியுக வாப்த
நாலு மாயிரத்தி யொன்பது நூறும்
நவிலிரு பத்தியொன் பதுவும்
மேலினுஞ் சர்வ சித்தியிற் சித்திரை
விளங்கிய முப்பதாந் தேதி
வேலைசூழ் புவியி லுயர்ந்திடுந் தஞ்சை
விபுசர பேந்திர னருளே. 507

அருளினா லய்யாக் கண்வரோ தனயனு
மன்புட னுரைத்திடு படிக்கு
தரணியின் விடங்கள் யாவுமே மீளத்
தக்க தாய்முக் கியவா
வரமிகுந் திடுகா ரைக்குறிச் சியினில்
வளரும்வே லாயுதக் கவிஞன்
னுரைமிகு மைஞ்ஞூற் றய்யஞ்சு
யுரைத்திடு விடமகல் நூலே. 508

சாலிவாஹன 1750. (கி. பி. 1828 மே மாதம்)

கலியுகாப்தம் 4929

சர்வஜித் வருஷம் சித்திரை மாதம் 30-ந்தேதி காரைக்குறிச்சி அய்யாக்கண்ணு பிள்ளை குமாரர் வேலாயுதக் கவிஞரால் இந்த விடநூல் எழுதி முடிக்கப்பட்டது.